# அகராதிக் கலை

டாக்டர் தா. வே. வீராசாமி

# அகராதிக் கலை

# அகராதிக் கலை

டாக்டர் தா. வே. வீராசாமி
பேராசிரியர்-தலைவர்
தொகுப்பியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் 613 001

விற்பனை உரிமை

தமிழ்ப் புத்தகாலயம்
58, டி.பி.கோயில் தெரு, N.K.T.பெண்கள் பள்ளி எதிரில்
திருவல்லிக்கேணி, சென்னை-600 005

அகராதிக் கலை

முதல் பதிப்பு அக்டோபர் 1989
உரிமை பதிவு : ஆசிரியர்

விலை ரூ. 18-00
பக்கங்கள் : 188 (184 + IV)

விற்பனை உரிமை
தமிழ்ப் புத்தகாலயம்
சென்னை 600 005

கதிரவன் அச்சகம்
14, எல். பி ரோடு
திருவான்மியூர்
சென்னை 600 041

# அணிமுகம்

நாளும் நாளும் அறிவைப் பெருக்கிக் கொள்ள ஆர்வம் பெருகி வருகிறது. அறிவு வளர்க்கும் செவிலியாக ஒவ்வொரு மொழியும் விளங்குகிறது. தமிழ் மக்கள் தங்கள் அறிவைப் பல துறையில் வளர்த்து வருகின்றனர். ஆயினும் அவர்கள் அறிவு உரம் பெறவும் வளம் பெறவும் தமிழ் மொழி உதவும் நிலையில் உயாததப் பெற்றுள்ளதா எனற கேள்வியை இன்னும் அறிஞா உலகம் கேட்ட வண்ணம் உள்ளது. தாய் மொழி வழியே கல்வி பெறும் போது தான் தானாகச் சிந்திக்கும் ஆற்றல் பெருகும் என்பது கல்வி உலகம் கண்ட உண்மை. அவ்வுண்மையை வலுப் படுத்தும் வகையில் எதிர்கால ஆக்கங்களுக்குரிய பணிகளைத் தொடர்ந்து செய்தல் வேண்டும். அவற்றில் அடிப் படைப் பணியாகத் தமிழ் மொழியின் வளத்திற்கு உர மூட்டும் செயல்களை இடைவிடாது இயற்றுதல் நலம் தரும். தமிழ் மொழியை—அதில் காணும் சிந்தனைச் செல்வத்தைத தெளிவாக அறிந்து கலக்கமின்றி நேரிடையாக வெளிப்படுத்தும் ஆற்றலை மக்கள் பெற வேண்டும் எனில் தமிழ்ச் சொல்லின பொருளைத் திட்பமாக அறிய வழிகாணல் ஒரு அரிய செயலாகும். அவ்வரிய செயலை எளிய செயலாகவும், இனிய செயலாகவும், பயனுடைய செயலாகவும் செய்ய வல்லவை அகராதிகள். கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுககு முன்னரே சொல்லையும் பொருளையும் பகுததுத் தமிழா உணர்த்தியுள்ளனர். பழம் பெரும் இலககணமாம் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் காணும் உரியியல் அரிய சொற்களுக்குப் பொருளுணாததும் துணைவனாகும். பொருளதிகாரத்தில் காணும் பல தொடர்கள் பொருட் செல்வப் பெட்டகங்களாக உள்ளன. தமிழ் மக்களின் அகத் துறை புறத் துறை பற்றிய பண்பாட்டுக் கதிர்களாக அவை ஒளி வீசி நிற்கின்றன. அவற்றை உணருமா வகையில் இளம்

பூரணர், சேனாவரையர், நச்சினார்க் கினியர், பேராசிரியர், தெய்வச் சிலையார் போன்ற அறிஞர்கள் பொருள் பொதிந்த உரை நலத்தால் மேலும் விளக்கம் காண உதவி செய்துள்ளனர்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் சொற்பொருள் அறிவதில் புதிய நெறி வளரத் தொடங்கியது. திவாகர், பிங்கலர், மண்டல புருடர் போன்றவர்கள் இயற்றிய நிகண்டுகள் சொல்லையும் பொருளையும் அறிந்து கவி வாணர்களாக விளங்குதற்கு ஏற்ற வகையில் பெருகத் தொடங்கின. கம்பனின் சொல்லாட்சியையும் பொருள் வீச்சையும் உணர்ந்தால் கி. பி. பததாம் நூற்றாண்டிற்குள் தமிழச் சொற் பெருக்கம் வளர்ந்த வளாச்சியைக் கண்டு வியப்பு மேலிடும்.

உலகின் மாற்றங்களைத் தமிழகத்திலும் தமிழ் மொழி வளர்ச்சியிலும் காண முடியும். குறிப்பாக அகராதிக் கலையைச் சதுரகராதி வாயிலாக வீரமா முனிவர் வேறு திசையில் மாற்றி அமைத்தார். ஓரளவு படித்தவர்களும் அறிவுப் பெருக்கத்திற்கும் விளக்கத்திற்கும் அகராதிகளைப் பயன்படுத்த வழி செய்தார். அதன் பின் எழுந்த மாற்றங்கள் பலபல ஒருமொழி அகராதிகள், இருமொழி அகராதிகள் பலமொழி அகராதிகள் எனப் பல்வேறு அகராதிகள் வெளி வரத் தொடங்கின. இள மாணவர்கள் முதல் முதியவர் வரை அறிவுப் பெருக்கத்திற்கு அவற்றைப் பயன் படுத்தத் தொடங்கினர். சிறுவாகள் ஆர்வத்துடன் புதிய மொழிகளைக் கற்கவும், புரிந்து கொளளவும் அவற்றைப் பயனபடுத்தவும் வழி கிட்டியது இந்திய மொழியுலகிலேயே ஆளும் பெருஞ் செயலாகச் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி வெளிவந்தது, அதற்கு முன் பணியாகப் பல அகராதிகளை அறிஞர் பலர் உருவாக்கித் தந்தனர்.

அகராதி என்பது நோக்கு நூல் ஆகும். ஒருமொழியிலுள்ள சொற்களைத் தொகுத்தளிக்கிறது. பொருள் விளக்கம், ஒலிப்பு முறை, எழுத்து வடிவநிலை, ஒப்புமைச் சொற்கள், இலக்கணக் குறிப்பு, பிறப்பியல் நிலை போன்ற செய்திகளை அளித்து மக்களின் அறிவைப் பெருக்கித் தக்க பொருளைக் கண்டறிய உதவுகிறது.

அகராதிக் கலை பற்றி அறிதற்குரிய முற்கோள்களாகச் சிலவற்றைக் கொள்ளலாம். அவையாவன :

1) ஒரு மொழியின் சொற்றொகை பற்றிய விளக்கமும் தெளிவுமே அகராதிக கலையின் நோக்கம் ஆகும்.

2) சொல்லின் வடிவையும் பொருளையும் அறிதற்கு அகராதிக் குரிய சொற்கூறே அடிப்படை அலகாக அமையும்.

3) ஒரு மொழியின் சொற்றொகையை முழுமையாகவோ அதன் ஒன்று அல்லது பல கூறுகள் பற்றி அகராதி விளக்கும்.

4) மொழியைப் பயன்படுத்திச் செய்தியைக் கூறுதற்குரிய நெறியை அகராதிக் கலை வளர்க்கும்.

5) பயன்படுத்துவோர் தேவைக்கு ஏற்ப அகராதி அமைவதால் அதனடிப் படையில் அகராதி மதிப்பிடப்படும்.

இவற்றில் முதலிற் கண்ட நான்கும் அகராதிக் கலையின் அகச் சூழலை ஒட்டியவை. கடைசியில் காணப் பெறுவது புற உறவை ஒட்டியவை. அகராதி பயன் படுத்துவோரை—பொது மக்களைச் சார்ந்தது. எல்லா அகராதி

களின் மதிப்பும் அவை எதற்காகத் தொகுக்கப் பெற்றன என உணர்வதிலும் எத்தகைய தேவைககுப் பயன்படு கிறது என அறிவதிலுமே அடங்கியுள்ளது.

எதற்காக அகராதி உள்ளது என்ற கேள்விக்கு உலகப் புகழ் பெற்ற அகராதிவாணர் ஜான்சன், பயன்பாட்டின் அடிப்படையிலேயே அகராதியை மதிப்பிட வேண்டும்; திறனாய்வாளர்க்கு இன்பமூட்டுவது மட்டுமன்று கற் போர்க்கு அறிவுறுத்தவும் வேண்டும் என்பார். இதில் அகராதியை அற நோக்கில் காணும் பார்வை புலப்படும். பரந்த தொரு பெரு நோக்குக் கொண்டதாக அகராதி அமைய வேண்டும் என ஜெர்மன் மொழியியலாளரும் இலக்கணியும் அகராதிக் கலை அறிஞருமான ஜேகோப் கிரிம கூறுவார். அண்மைக்காலத்தில் வெளிவந்த வெப்ஸ் டா அகராதியின் மூன்றாம் பதிப்பு பொது மகன் விரும்பும் மொழி பற்றிய முழுஉண்மை அளிக்க முயல்வதே அகராதி யின் நோககமாகக் கூறும். இவற்றையெல்லாம் எண்ணும் போது ஆக்சுபோர்டு அகராதிகள் வெள்ளம் போல் வெளி வந்து அகராதிக் கலையின் பல்வேறு பயன்பாட்டை நன்கு வெளிப்படுத்தும்.

அகராதிக் கொள்கையை வகுத்துக் கொண்டபின் அகராதிகளைத் தொகுப்பதா அல்லது அகராதிகளைத் தொகுத்தபின் அகராதி இயற்கொள்கைகள் தாமாக உருவாகுமா எனறு பலர் கேட்டவண்ணம் உள்ளனர். எண்ணற்ற மொழிகளில் கணக்கற்ற அகராதிகளை உரு சியா வெளியிட்ட வண்ணம் உள்ளது. நடைமுறையி லிருந்து கொள்கையை வகுத்துக் கொள்ளும் போக்கில் அகராதிக் கலை வளர்வதற்குரிய நெறி இதன் வாயிலாக நன்கு புலப்படுகிறது,

அகராதித் தொகுப்புக்குரிய திட்டங்கள் தீட்டுவது பெருஞ் செயலாகும். பல்கலைக் கழகங்கள், அறிவியல்

நிறுவனங்கள், பெருங்கழகங்கள் போன்றவை ஏராள மான அறிஞர் குழுவின் ஒத்துழைப்புடன் பெருந்தொகை செலவிட்டு அகராதிகளை உருவாக்க முடியும். காலம் என்பது இதில் தனியிடம் பெறுகிறது. பொதுவாக அக ராதி வரலாற்றைக் காணும்போது எந்த அகராதியும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் வர இயலாத நிலையே நன்கு தெரிகிறது. தன்னலமற்ற அகராதிவாணர்கள் பணி புரிந்தாலும் சொல் திரட்டும் பணி, பொருள் காணும் பணி, ஒப்பிட்டுச் செப்பனிடும் பணி போன்றவை எந்த நிலையில் எவ்வளவு காலம் எடுத்துக் கொள்ளும் என்பது எவர்க்கும் தெரியாது. அச்சுப் பிழை என்பது அகராதிக் கலையின் பெரும்பகைவன். அப்பிழையை வெற்றிகாண காலஎல்லை கருதாது உழைக்க வேண்டும் ஒரு அகராதி முடிந்தவுடன் அப்பணிக்கு முற்றுப் புள்ளி வைத்தல் கூடாது. அதை ஒட்டிப் பிற அகராதிப்பணிகள் தளிர்க்க வேண்டும்: அதுதான் பிற நாட்டு அகராதித் திட்டங்கள் காட்டும் நெறியாகும், இந்திய நாட்டிலும் சிறப்பாகத் தமிழகத்திலும் இத்தகைய நெறி பின்பற்றப் படுமாறு திட்டம் வகுக்கப்பெறின் அதுவே வெற்றிக்கு வலிகோலும்.

பொது ஆவணக் கூடங்கள் (Archive) அகராதிகளின் பாதுகாப்புக்கென அமைதல் வேண்டும். அப்போதுதான் அகராதிகளுக்கென எழுதப் பெற்ற சொற்செல்வம் வருங் கால ஆக்கத்திற்குத் துணையாக அமையும், இல்லையெனில் கடுமையாக உழைத்துத் திரட்டிய பல சொல்லட்டைகள் காலத்தின் கொடிய கரங்களுக்குக்கிரையாகி விடும். சென்னைப் பல்கலைக் கழகததில் பேரகராதிகென்த் (Lexcicon) திரட்டியவை நல்ல ஆவணக் கூடங்கள் இல் லாததால் அவ்வுழைப்பெல்லாம் காற்றிலே கரைந்த ஆற்ற லாக மாறிவிட்டன.

மாறாக ஆக்சுபோர்டு ஆங்கில அகராதிக்கெனத் (OED) தொடுத்த சொற்செல்வத்தை நன்முறையில் பாது

காத்ததால் தொடர்ந்து இரு ஆங்கிலோ சாக்சன் அகராதிகள் போன்ற பல்வேறு அகராதிகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இவற்றிற்கு மட்டும் ஏழு இலட்சம் அட்டைகள் கையால் எழுதப்பெற்று உரிய முறையில் காப்பாற்றப் பெற்றுள்ளன என அறியும் போது நல்ல தொடக்கம் மட்டும் ஒரு மொழியின் வருங்காலத்தைக் காப்பாற்ற இயலாது என்பது புலனாகும். செய்த செயலின் வேர்களும் அடிமரமும் பிறவற்றால் கேடு செய்ய இயலாவகையில் வேலியிட்டுக் காக்கவேண்டும்.

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு

(குறள் 1038)

என்பது உழவுக்கு மட்டும் கூறியதாகக் கொள்ளுதல் கூடாது. அறிவுப் பயிர் விளைவிக்கப்பாடுபடும் செயலுக்கும் ஏற்புடைய கருத்தாகும். காத்தல் என்ற வினைக்கு அடிப்படையாக விளங்குவது ஆவணக்கூடம். அதனை உருவாக்கிப் பழஞ் செல்வங்களைத் தனியாகத் தொல்பொருள் ஆய்வுத் துறை காப்பதுபோலப் பழைய நிகண்டுகள், அகராதிகள், சொல் தொகைகள், அறிவியல் சொல் திரட்டுக்கள். தனி நூலுக்குரிய சொல் தொகுப்புக்கள் போன்றவற்றையெல்லாம் பாதுகாப்பாக வைத்திருப்பின் எதிர் காலத்தின் ஆய்வாளர்க்கு வேண்டிய உதவிகளை விரைந்துதவுதற்கும் காலத்தை மிச்சப்படுத்துதற்கும் இயலும். இப்போது வந்துள்ள கணிப் பொறி இத்தகைய காப்பகப் பணிக்குப் பெரிதும் பயன்படும். சங்க இலக்கியங்களில் காணும் சொற் செல்வத்தைத் திரட்டிப் பாதுகாத்து வேண்டும் போது நமக்களிக்கும் நண்பனாக உதவும் வகையில் தமிழ்ப் பல்கலைக் கழகக் கணிப் பொறித் துறை பாடுபட்டு வருகிறது. இத்தகைய பணிகள் செவ்வையாக நடைபெறுமானால் எதிர் காலத்தில் அகராதிப்பணியை யாரும் துன்புறும் பணியாகக் கருதுவதற்கு இடமேற்படாது.

படித்து அறிவுபெறும் காலத்தை விடப் பார்த்து அறிவுபெறும் காலமாக எதிர்காலம் உருவாகப்போகிறது. வீடியோ பீடியோ (Videio-Paedio) போன்ற புதிய வரவுகள் அறிவுலகில் பெரும் புரட்சி செய்வதை எதிர்பார்க்கலாம் இந்நிலையில் அகராதிகளையும் இந்நிலைக்குக் காட்சி-கேள்வி வாயிலாக அறிவூட்டும் காலம்' வந்து 'கொண்டிருக்கிறது. இன்றைய நிலையில் அகராதிக்கலை தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிகிறது. இந் நூலாசிரியர் 1962 இல் கேரளப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் டாக்டர் வி. ஐ சுப்பிரமணியம் அவர்களிடம் தமிழ் மாணவராகச் சேர்ந்து பெரியபுராண இலக்கணம் பற்றி ஆய்வு செய்யும்போது பெரியபுராணம் சொல்லடைவை உருவாக்கிய காலம் முதல் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் பெருஞ் சொல்லகராதியின் முதல்தொகுதி 'அ' வெளிவரவும், தொகுப்பியல் துறைவாயிலாகப் பெரிய புராணச் சிறப்புப் பெயர் அகராதியும் (இடப் பெயர்) வெளிவரவும் பெருஞ் சொல்லகராதித் திட்டத்தின் முதன்மைப் பதிப்பாசிரியர் (பொ) பணிபுரிந்து பெருஞ் சொல்லகராதி முதற்றொகுதி (அ) வெளிவரவும் துணையாகவும் இருந்து இன்னும் சில அகராதித் திட்டங்களைச் செயல் படுத்தும் பணியில் இருப்பதால் அகராதிக்கலை பற்றிய கட்டுரைகள் பல எழுதும் வாய்ப்புக் கிட்டியது. அவற்றையெலலாம் தொகுத்து நூல் வடிவாக்க உறுதுணை புரிந்து வெளிவர ஊக்கம் தந்துதவியவர் டாக்டர் இ. சுந்தர மூர்த்தி (இணைப் பேராசிரியர் மொழித்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்). அவர்களுக்கு என்றும் நன்றியுடையவன்.

எதிர் கால வளர்ச்சிக்கு ஏற்ற களமாக விளங்குவது அகராதி-களஞ்சியம் போன்ற துறைகளாம். இவற்றிற்கு இடையறாமல் தேனீபோல் உழைககும் இளந்தமிழ் அறிஞர்கள் தோன்றிய வண்ணம் இருத்தல் வேண்டும். இதற்குக் காலமும களமும் தகுந்தவையாக விளங்கும் என்ற நம்பிக்கையில் எழுகிறது இந்நூல்.

தஞ்சாவூர்
1—10—89

தா. வே. வீராசாமி

# உள்ளுறை


அணிமுகம் ... 1

1. தமிழ் அகராதிக் கலை
ஓர் அறிமுகம் ... 9

2. அகராதி ... 23

3. அகராதியில் பொருள் வரையறை
அசை ... 77

4. அகராதித் திட்டத்தில்
சில சிக்கல்கள் ... 92

5. அரும்பத உரையும்
அகராதிக் கலையும் ... 104

6. பெரிய புராணச் சிறப்புப்
பெயரகராதியில் ஒரு பதிவு ... 144

7. தேவநேயப் பாவாணரின்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல்
பேரகர முதலி ... 152

நூலாரம் ... 177

பொருளாரம் ... 182

# தமிழ் அகராதிக் கலை ஓர் அறிமுகம்

அகராதி என்பது சொற்களை அகரம்முதலாக வரிசைப் படுத்தி அச் சொற்களுக்குரிய பொருளை விளக்கும் நூல் ஆகும். 'அகர வரிசை' 'அகர முதல்' என்பன போன்ற சொற்கள் அகராதியைக் குறிக்கும். பழைய காலத்தில் சொற்பொருள் கூறுபவையாக 'நிகண்டு'. 'உரிச் சொல்' 'உரிச் சொற் பனுவல்' 'கூட்டம்' போன்றவை உள்ளன. சொல்லுக்குப் பொருள் கூறும் முறையைத் தமிழ் இலக்கண நூலாக இன்று நமக்குக் கிடைத்துள்ள தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் உள்ள உரியியலில் காணலாம்.

## தொல்காப்பிய நிலை

இன்று அகராதி என்ற நூலில் காணும் பண்புகளைத் தொல்காப்பியத்தில் காண இயலாது. (அதன் நோக்கு வேறு) எனவே அகராதிக் கூறுகள் தொல்காப்பியத்தில் அமைந்துள்ளன எனக் கொள்வதில் பிழையில்லை. 'அகர முதல் னகர இறுவாய்' என்ற தொடரால் அகரவரிசையின் தொடக்கமும், முடிவும், அமையும் நிரல் வரிசையும் புலனாகும். மொழி முதல், மொழி ஈறு, இடைநிலை எழுத்துக்

கள் ஆகியவைபற்றிக் கூறுவது கொண்டு எழுத்து நிரல் பற்றி மேலும் சில உண்மைகளை அறிய இயலும். ஆயினும் தொல்காப்பியத்தில் சொற்பொருள் கூறும்போது அகர வரிசையைப் பின்பற்றி எல்லாச் சொற்களுக்கும் பொருள் கூறவில்லை.

**பல பொருள்**

வெளிப்பட வாராச் சொற்களில் காணும் இசை, குறிப்பு பண்பு என்பன அற்றின் அடிப்படையில் அமைந்த பொருளைக் கூறும். அவ்வாறு பொருள் காணும்போது ஒரு சொல் பல சொல் எனவும், பல சொல் ஒரு பொருள் எனவும் பகுத்து மரபு நிலை அடிப்படையை மறவாமல் பொருள் உரைத்துச் செல்வதைக் காண இயலும். இந் நிலையை மேலும் பகுத்துக் காணும்போது ஒரு சொல்லுக்கு ஒரே பொருள் அமைந்த நிலை, பல பொருள் அமைவதைக் கூறும்போது இரு பொருள், முப்பொருள், நாற்பொருள் முதல் பன்னிரண்டு பொருள் அமைந்திருப்பதைப் பார்க்க லாம்.

சீர்த்தி = மிகுபொருள் (தொல். சொல். 312 சேனா) நனவு = களம் (ஷை 376) விழுமம் = சீர்மை, சிறப்பு இடும்பை (ஷை 353) மதவு = மடன், வலி, மிகுதி, வனப்பு (ஷை 377, 378) கடி என்ற சொல்லுக்கு வரைவு முதல் கரிப்பு வரை பன்னிரு பொருள் உள. (ஷை 383; 384) இரு சொற்களுக்கு ஒரு பொருள் (செல்லல், இன்னல் = இன்னாமை ஷை 302) மூன்று சொற்களுக்கு ஒரு பொருள் (நொசிவு, நுழைவு, நுணங்கு நுண்மை ஷை 374) நான்கு சொற்களுக்கு ஒரு பொருள் (கம்பலை, சும்மை, கலி, அழுங்கல், ஆர்வம் ஷை 349) அமைந்திருக்கும் நிலையைக் கூறும் பொருள் கூறும் முயற்சியைக் காண்கிறோம். 'இதன் போக்கில் பலமுறைகளைக் கையாண்டு பொருள் காணும் வழியில் பல நெறிகளைக் காணலாம்.

**பொருண்மை**

தொல்காப்பியத்தில் உரியியல் மட்டுமன்றிச் சொல்லதிகார இடையியலிலும், பொருளதிகார மரபியலிலும் பொருள் கூறுவதையும், மரபு நெறியை உயர்த்துவதையும் காண முடியும். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' (ஷை 115) என்பது தான் தொல்காப்பியர் கொள்கை. அதன் வளர்ச்சியாகப் பொருண்மை தெரிதல், சொன்மை தெரிதல் எனவும் (ஷை 156) தெரிவு வேறு நிலையல், குறிப்பில் தோன்றல் எனப் பொருண்மை நிலையைப் பகுத்துக் காட்டுவதையும் (ஷை 157) அறிய முடிகிறது. பொருளுக்குப் பொருள் தெரியின் அது வரம்பின்றிப் பெருகும். மொழிப் பொருட்குக் காரணம் விளங்கத் தோன்றாது (ஷை 391, 394) என்று பொருண்மை எல்லை குறித்தும் சுட்டுவதை அறிய இயலும்.

சொற்களை மரபியல் அடிப்படையில் பகுத்துக் காட்டும் முறையில் ஆண்மை, பெண்மை, இளமை பல உயிரின் பாகுபாடுகள் என்பவற்றில் சிறப்புப் பெயர்களின் நால் வருண இயல்புகள், மரவகை உறுப்புகள், நூல் மரபு போன்றவை விளக்கப் பெறும்.

**பொருள் கூறு நெறி**

சொற்களில் இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் எனப் பகுக்கும் போது தொல்காப்பியம் சொல்லின் மூலத்தைக் காணும் நெறிமுறைக்கு முன் மொழியாக அமைகிறது. அகராதியியலார் புதிய சொல்லை ஏற்கும் வகையில் புதிய சொற்களை ஏற்க வழி செய்கிறது, (ஷை 117) அதுமட்டுமன்றி முன்னரே உள்ள சொற்களுக்குப் புதுப் பொருள் தோன்றுமாயின் அவற்றையும் ஏற்றுக் கொள்ள வழி வகுக்கிறது (ஷை 590) இவ்வாறு தொல்காப்பியம் தனக்குப் பின்னர்வரும் பொருள் காண் கருவி நூல்களுக்கு வழிகாட்டியாக அமைகிறது. தொல்காப்பியத்

திற்குப் பின்னர்ப் பொருள் விளக்கம் தருவதற்கு எனப்பல நூல்கள் தோன்றியிருத்தல் கூடும். எனினும் அவை பற்றிய செய்திகளை நாம் அறிய இயலவில்லை. இலக்கிய இலக்கணங்களுக்கு உரை எழுதிய பெருமக்கள் தனித் தனிச் சொற்களுக்கும் பொருள் கூறிச் செல்லும் நெறியும் அகராதிக் கலைக்கு உரிய துணையாக எழுந்தது.

சான்றாக இளம்பூரணர், தொல்காப்பியப் பொருளதி காரத்திற்கு உரை எழுதும் போது ''கைக்கிளை என்ற பொருண்மை யாதோ எனின் 'கை' என்பது சிறுமை பற்றி வரும். அது தத்தம் குறிப்பிற் பொருள் செய்வதோர் இடைச் சொல், 'கிளை' என்பது உறவு; பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்றவாறு; கைக்குடை, கையேடு, கைவாள், கைஒலியல், கைவாய்க்கால் எனப் பெருமை யில்லாதவற்றை வழங்குபவாதலின்'' எனக் குறித்துள்ளார்.

இதனைக் காணும் போது சொல்லமைப்புக் கொண்டு அதன் பகுப்பை உணர்த்துதல், அச்சொல் இலக்கண அடிப்படையில் எவ்வகையைச் சார்ந்தது எனக் குறித்தல், சொல்லின் பொருளை வரையறுத்துச் சுட்டல், வழக்கில் உள்ள பிற சொற்கள் அப்பொருளில் அமைந்துள்ளதைச் சான்றாகக் காட்டுதல் போன்ற முறையை மாணவர்க்கு ஆசிரியர் கற்பிக்கும்நெறியில் கூறிச் செல்வதைக் காண லாம். (தொல். பொருள். 1. இளம். )

சில தொடர்களுக்குப் பொருள் கூறும் பாங்கு பின்வருமாறு:

1. அடக்கமுடைமையாவது ஐம்புலன்கள் மேல் செல்லாமை அடக்குதல்.

2. ஒழுக்கமுடைமையாவது தங்குலத்திற்கும் இல்லறத் திற்கும் ஒத்த ஒழுக்கமுடையராதல்.

3. நடுவு நிலைமையாவது பகைவர் மாட்டும் நட்டார் மாட்டும் ஒக்க நிற்கும் நிலைமை.

4. வெஃகாமையாவது பிறர் பொருளை விரும்பாமை.

5. புறங் கூறாமையாவது ஒருவரை அவர் புறத்துரையாமை.

எனப் பொருள் கூறுவதுடன் அப்பொருண்மை நன்கு விளங்க முறையே குறள்களிலிருந்து சான்று காட்டுவார் உரையாசிரியர். (குறள் 126, 131, 118, 172, 181) இதனைக் காணும் போது தனி மனித நிலை, தனி மனிதன் சமூகத்துடன் ஒட்டி வாழும் நிலை, பொருள் உறவு நிலை, சூழ்நிலை ஆகியவற்றைக் கொண்டு பொருள் விளக்கம் செய்யும் நெறி புலப்படுகிறது. (தொல். பொருள். 75 இளம்)

**நிகண்டு நிலை**

தொல்காப்பியத்திற்குப் பின்னர்ப் பல நூற்றாண்டுகள் கழிந்த போதும் பொருள் கூறு முயற்சியில் ஈடுபட்ட நூல்கள் கிடைக்கவில்லை. எட்டாம் நூற்றாண்டில் சேந்தன் திவாகரம் எழுந்தது. அதற்கு முன் ஆதி திவாகரம் என்ற நிகண்டு நூல் இருந்து அழிந்திருக்க வேண்டும் என்பது சிலர் கருத்து. இந் நிகண்டில் விநாயக வணக்கம், சாளுக்கியர் பற்றிய குறிப்பு ஆகியவை உள்ளதால் இதனைக் கி. பி. 8 - ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கொள்வர். இந்நூலில் பன்னிரு பிரிவுகளில் பெயர்களைத் தொகுத்துத் தந்துள்ளார் ஆசிரியர். தெய்வம், மக்கள், விலங்கு, மரம், இடம், பல்பொருள் ஒரு பெயர் எனப் பகுக்கப் பெற்றுள்ளது இந்நூல். சொற்பொருளை நூற்பா அமைப்பில் கூறிச் செல்வதால் நல்ல கல்வியறிவுடையவரே இதனைப் பயன்படுத்த இயலும்.

தெய்வப் பெயர்களைக் கூறும்போது பெருந் தெய்வங்கள், சிறு தெய்வங்கள். தேவர், அரக்கர், சமயத் தெய்வங்கள், விண்ணகப் பொருள்கள், தெய்வமாகக் கருதப்பெற்ற இயற்கைப் பொருள்கள் ஆகிய யாவும் அமைந்துள்ளன. மக்கட் பெயரைக் கூறும்போது ஆண் பெண் பெயர்கள் கூறுவதுடன் மக்களின் உடல், உறுப்பு, உயிர்பற்றிய பெயர்களும் இணைக்கப் பெற்றுள்ளன. விலங்குப் பெயர்களில் பறவைகள் பெயரும் உள்ளன. அவற்றின் உறுப்புப் பெயர்களும் காணப்படுகின்றன, மரஞ் செடி கொடிகள் ஆகியவற்றின் உறுப்புகள்பற்றிய பெயருடன் பூங்காக்களின் பல்வேறு பெயர்களும், பூமாலையின் வேறு பெயர்களும் தொகுக்கப்பட்டுள்ளன, இடப்பெயர் பற்றிக் கூறும்போது வீட்டுலகம், தெய்வ உலகம், நரகம், நிலவுலகம், திசைகள் பற்றி அறிய முடியும்.

பலவகைப் பொருள்களின் பெயர்களில் உலோகப் பெயர் உணவு வகை பல எனப்பெயர்கள் உள்ளன. செயற்கை வடிவங்களாம் கூறை, ஆடை, அணி பற்றிக் காணலாம் பண்பு பற்றிய பல பெயர்களைத் தொகுத்துள்ளார். அவை போன்று செயல்பற்றிக் கூறும்போது மகளிர் விளையாட்டு விழாக்கள் கூத்துக்கள் பற்றிய சொற்களைக் கூறுவர். ஒலி பற்றிக்கூறும்போது ‘ சொல்லுதல் ’ பற்றிப் பல சொற்கள் உள. இவற்றின் தொடர்ச்சியாக ஒரு பொருள் பல் பொருள் தொகுதி (கடி' - 12 பொருள், அரி-23 பொருள்) பல பொருள்களை விளக்கும் இன்று தொகை அகராதியாக விளங்கும் வடிவில் பல் பொருள் ஒரு பெயர்த் தொகுதி உள்ளது. பின்னர்த் தோன்றிய பல நிகண்டுகளுக்கு இந் நிகண்டு முன்னோடியாக உள்ளது. அகராதிக் கலை வளர்ச்சி பெறும் காலத்தில் இந்நிகண்டின் இடம் குறிப்பிடத்தக்கதாகும்.

**நிகண்டு வளர்ச்சி**

இந் நிகண்டு சென்ற நெறியில் பிங்கல நிகண்டு ஏறத்தாழ 16,000 சொற்களுக்கு விளக்கம் கண்டுள்ளது. இதில் 10 பிரிவுகளே உள்ளன. அவை, வான், வானவர், ஐயர், அவனி, ஆடவர், அனுபோகம், பண்பிற் செயலின் பகுதி, மா, மரம், ஒரு சொல் பல் பொருள் என்பனவாம். இந்நூலும் நூற்பாவில் அமைந்துள்ளது. முன் நிகண்டில் காணும் சில பிரிவுகளைத் தொகுத்தும் வகுத்தும் நூல் செய்துள்ளார். சொல் எண்ணிக்கையில் பெருக்க நிலை தெரிகிறது.

இவ்விரு நிகண்டுகளுக்குப் பின்னர்ப் புகழ்பெற்ற நிகண்டாக விளங்குவது சூடாமணி நிகண்டாகும். சூடாமணிக்கு முன்னர்ப் பல நிகண்டுகள் தோன்றியிருந்தன எனக் கருதுவதற்குப் பல சான்றுகள் உள்ளன. எனினும் அவை கிடைக்காதவரை இதுகுறித்து எந்த முடிவும் செய்ய இயலவில்லை.

பதினாறாம் நூற்றாண்டில் இந்நிகண்டு, பிரிவமைப்பில் திவாகரத்தைப் பின்பற்றியுள்ளது. ஆயின் செய்யுள் வடிவம் விருத்தப்பாவாக அமைந்துள்ளது. இதன் பதினோராம் தொகுதியை மட்டும் பயிலும் முறை தமிழகத்தில் இருந்து வந்ததைக் காணும் போது படித்த மக்கள் ஒருசொல் பலபொருள் பற்றிய பயிற்சிக்களித்த முதன்மை நோக்கம் விளங்குகிறது. எதுகையை மெய்யெழுத்து வரிசையில் பதினெட்டு வகையில் காட்டியுள்ளது, இதில் அகர வரிசை முறையில் சொற்களை முறைப்படுத்தும் போக்கு ஒருவகையில் வெளிப்படுகிறது எனலாம். இவ்வகை முயற்சி பின்னர் மேலும் வளரத் தொடங்கியது. இவை யாவும் படித்த பெருமக்கட்குப் பயன்படும் முறையில் இருந்தது என்பதை மறத்தல் கூடாது. இந்நூலின் சிறப்பை இதன் தனியொரு பிரிவைப் பெருக்கி வெளியிட்டதாலும், உரை எழுதியமையாலும் உணர முடியும்.

அகராதி என்ற பெயரிலேயே அகராதி நிகண்டொன்று தமிழில் 16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வெளி வந்துள்ளது. ஒரு சொல் பல பொருள் தொகுதி அடிப் படையில் பத்துப் பிரிவுகள் உள்ளன. இதில் பண்டைய இலக்கியச் சொற்களுடன், வழக்கில் காணப் பெறும் சொற்களும், வடமொழி தெலுங்கு போன்ற மொழிச் சொற்களும் காணப்பெறும். இந்நூல் முதல் எழுத்தை ஒட்டி அகர வரிசைப் படுத்தியுள்ளது. இது ஒரு தனிச் சிறப்பு ஆகும்.

உரிச்சொல் நிகண்டு (17 ஆம் நூற்றாண்டு) வெண்பா யாப்பில் 12 தொகுதிகளாக வெளிவந்தது. இதில் பல பதிப்புகள் வெளிவந்தன. அடுத்து, கயாதரம் 11 இயலாக வெளிவந்தது. ஏறத்தாழ 11 000 சொற்களுக்குப் பொருள் காண இயலும். மேலும் இந்நூல் அந்தாதித் தொடையில் அமைந்திருப்பது மற்றொரு சிறப்பாகும். பல்பொருள் சூடாமணி நிகண்டு என்ற நூல் ஒரு சொல் ஒரு பொருள் ஒரு சொல் பல் பொருள், பல சொல் ஒரு பொருள் என மூன்று கண்டங்களாக உள்ளது.

கைலாச நிகண்டு (17 ஆம் நூற்றாண்டு) எழுத்தும் ஒற்றும் என்ற வருகை அடிப்படையில் ஓரெழுத் தொரு மொழி முதல் நாலெழுத்தொரு மொழி வரை பகுத்துக் காட்டும் பாரதி தீபம் (18 ஆம் நூ.) ஆசிரிய நிகண்டு (18 ஆம் நூ.) அரும் பொருள் விளக்க நிகண்டு (18 ஆம் நூ.) தொகை நிகண்டு (19 ஆம் நூ.) பொருள் தொகை நிகண்டு (19 ஆம் நூ.) பொதிகை நிகண்டு (19 ஆம் நூ,) ஆகியவை வெளிவந்தன. இவற்றில் பொதிகை நிகண்டு இரண்டாம் எழுத்திலும் அகர வரிசையைக் கருத்தில் கொண்டுள்ளது. நாமதீப நிகண்டு (19ஆம் நூ) வெண்பா யாப்பில் 16 தொகுதிகளாக உள்ளது. இது படலம், வர்க்கம் எனப்பிரிவும்உட்பிரிவும் கொண்டு திணைவிளக் கம் கூறும். இந்நிகண்டுகள் போலப் பல நிகண்டுகள் இக்

காலத்தில் எழுந்தன. பெயர்களை இவ்வாறு சுட்டியது போன்று மருத்துவம்; சோதிடம்பற்றிய செய்திகளையும் பகுத்துக் காட்டுவன சில நிகண்டுகள் இந்நிகண்டுகள் யாவும் நன்கு கற்ற அறிஞர்களுக்கே பயன்பட்டன.

**மாற்ற நிலை**

தமிழில் சொற் பொருள் கூறும் முறையில் செய்யுள் வடிவமே முதலிடம் பெற்றிருந்ததை ஐரோப்பியர் வரவு, என்பது முற்றிலும் மாற்றிவிட்டது. இந்நிலையில் பல மொழி அகராதிகள் தோன்றியமை மற்றொரு பெரு வளர்ச்சியாகும். இவ்விரண்டு நிலைகளும் அகராதிக் கலையில் பெரிய மாற்றத்தை விளைவித்ததுடன் அகராதி யியல் என்ற புதிய துறை வளர்வதற்கும் வழி செய்தன.

1712-இல் பார்த்தலோமிய ஜீகன்பால்கு தமிழ் அகராதியை எழுதினார். எனினும் பெஸ்கி எனும் வீரமா முனிவரின் சதுர் அகராதி (1732) தனிச் சிறப்புப்பெற்று விளங்கியது. அகர வரிசை முறையை முற்ற முழுக்கப் பின்பற்றிப் பொருள் கூறியது. இதில் பெயர். பொருள் தொகை, தொடை எனும். நான்கு அகராதிகள், உள்ளன. இதில் இறுதியிலமைந்த தொடையகராதி படித்தவர்கள் பயன்படுத்திச் செய்யுள் செய்வதற்குக் கருவியாக அமை கிறது, பழைய நிகண்டுகளிலிருந்து பொருள் காண்பதில் அகர வரிசையும் எளிய உரை நடையையும் பின்பற்றிய நெறி புதிய நெறி எனினும் எதுகை அகராதி அமைத்ததால் இது செய்யுள் கருவியாக அமைகிறது. இதனால் பழைய நெறியையும் இத்துடன் இணைத்ததை அறிகிறோம். இவரே பல மொழி அகராதிகளுக்கும் வழி வகுத்துத் தமிழ்—இலத்தீன், இலத்தீன்—தமிழ், தமிழ்—பிரஞ்சு, தமிழ்—ஆங்கிலம் போர்ச்சுக்கீசிய மொழி—இலத்தீன் தமிழ் ஆகிய வற்றின் அகராதிகளை வெளியிட்டார். அத்துடன் பொது மக்கள் பேசும் வட்டார வழக்குக்குத் தமிழ்ப் பொருள்களும் அகராதியும் எழுதியுள்ளார். படித்த உலகிலிருந்து பொது

மக்கள் உலகிற்கு அகராதிக் கலை தமிழுலகில் வளர்ச்சி பெறுவது இக்காலத்தில் தான். இது குறிப்பிடத்தக்க வளர்ச்சி நிலை எனலாம்.

இத்துடன் பாபிரிசியனின் தமிழ்—ஆங்கில அகராதி (1779) வெளிவந்தது. இவையெல்லாம் பொதுமக்களிடையே வெளி நாட்டவர் தம் சமயப் பணியைப் பரப்புதற்குரிய கருவியாகக் கொண்டனர் என்பதையும் மறத்தல் இயலாது. பல மொழி அகராதி வளர்ச்சியில் அகராதித் தமிழ் என்ற நூல் (1831) பிரஞ்சு-தமிழ், தமிழ்-பிரஞ்சு சொற்பொருள் விளக்கம் தருகிறது. தமிழகத்தில் பிரஞ்சுக்காரர் ஆட்சி செய்ததன் விளைவாக இதனைக் கொள்ளலாம். வின்சுலோவின் ஆங்கில-தமிழ் அகராதி (1842) விரிந்த முறையில் வெளிவந்து தமிழகத்தில் ஆங்கிலம்-தமிழ் கல்விப் பெருக்கத்திற்குத் துணை செய்தது.

பின்னர்த் தமிழ் ஆங்கில அகராதியும் வெளியிட்டார் (1862). இதில் ஏறத்தாழ 6800. சொற்கள் அமைந்து விரிந்த அளவில் உள்ளது போற்றத் தக்கது. வெளி நாட்டார் தமிழ் கற்க இது பெரும் உதவியாகும்.

இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் கதிரைவேற்பிள்ளையின் தமிழ்ச் சொல்லகராதி (1904) பெரிய அளவில் வெளிவந்தது. இத்துடன் சிறப்புப் பெயர் அகராதி (1906) தெய்வம், ஊர், நூல் முதலிய பல பொருள்களின் சிறப்புப் பெயரைத் தொகுத்துத் தந்துள்ளது. கலைக் களஞ்சிய நோக்கில் அபிதான சிந்தாமணி (1910) பொருள் விளக்கம் தருவதில் முதலிடம் தந்து விரிந்த அளவில் பொது அறிவு வளர்ச்சி பெற வெளி வந்துள்ளது. இந்நிலையில் தமிழ்ப் பேரகராதி (லெக்சிகன் — 1926 — 1938) பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை தலைமையில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் வெளிவந்தது. அகராதி இலக்கணம் பொருந்தும் வகையில் மிகுந்த பொருள்வளம் காட்டப்

பல்வகை இலக்கிய இலக்கண மேற்கோள்களுடன் வெளி வந்தது. ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட சொற்கள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் தமிழில் ஒரு மொழி அகராதிகள் பல வெளிவந்தன. இவற்றில் மதுரைத் தமிழ்ப் பேரகராதி (1937) குறிப்பிடத்தக்கது. வடமொழி, தமிழ் பற்றிச் சில அகராதிகள் வெளிவந்தமை மொழித்துறையில் இவ்விரண்டு மொழிகளும் கல்வித் துறையில் இணைந்து நின்ற நிலைமையைக் காட்டும். அகராதிக் கலை வளர்ச்சி எனக் காணும் வகையில் சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி (1938) எழுந்தது.

## கல்வித் துறையில் அகராதி

தமிழில் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற இயக்கம் எழுந்ததால் கலைச் சொல் அகராதிகள் படைக்கும் முயற்சி தோன்றியது. சிறுவர்க்குதவும் வகையில் கையகராதிகள் சில இக்காலத்தில் எழுந்தன. இது கல்வி பலநிலைகளில் எல்லார்க்கும் பரவி வந்த நிலையின் விளைவாகும். சிலர் போட்டிகள் வைத்து அதற்கேற்பத் தமிழ்ச் சொல்வடிவங் களைத் தர நினைத்துத் தத்தம் கருத்திற்கேற்பச் சில அகராதிகளை அளித்தனர். இந்நிலையில் இந்திய விடுதலைக்கு முன் தமிழ் அகராதிக்கலை வளர்ந்து வந்தது.

நாடு விடுதலை பெற்றபின் தாய் மொழி வளர்ச்சியில் பல முன்னேற்றங்கள் தோன்றின. குறிப்பாக அகராதிக் கலையில் குறிப்பிடத் தக்க முன்னேற்றங்கள் சில தோன்றி யுள்ளன. எனினும் இவை போதுமான வளர்ச்சி என நிறைவு கொள்ள இயலாது. டாக்டர் உ. வே. சாமிநாத அய்யரின் சிறந்த பதிப்புகளில் காணும் சொல்லடைவுகளும், செய்தித் தொகுப்புகளும் அத்துறையில் நல்ல அகராதிகள் வரவேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைந்தன.

திருக்குறள் பற்றிய தனி அகராதிகள் பல்வேறு வடிவங்களில் தனிநூல் பற்றிய அகராதி என்ற தலைப்பில் வெளிவந்துள்ளன. எல்லாச் சங்க நூல்களுக்கும் சொல்லடைவு வெளிக் கொணரும் பணியில் கேரளப் பல்கலைக் கழகம் ஈடுபட்டது. அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் இப் பணியில் செயல்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகம் திராவிட மொழியின் சொற்கள் பற்றிய அகராதித் தொகுப்பில் ஈடுபட்டதுடன் இருமொழி அகராதித்துறையிலும் (ஆங்கிலம் — தமிழ்) வெளியீட்டு முயற்சியில் ஈடுபட்டது. தமிழ் வளர்ச்சிக்கழகம் இப்பணியில் சிறப்பாக முயன்று கலைக் களஞ்சியம் (10 தொகுதி) சிறுவர் கலைக் களஞ்சியம் (10 தொகுதி) ஆகிய இரண்டு களஞ்சியங்களை வெளியிட்டு இந்திய மொழிகளின் வரலாற்றில் தனியிடம் பெற்றுள்ளது.

## இலக்கிய அகராதிகள்

சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பெரியபுராணம், பெருங்கதை, வில்லிபாரதம் போன்ற தமிழ்க் காப்பியங்களுக்கும் சொல்லடைவு தயாரிக்கப் பெற்றன. தேவார ஒளி நெறிமுறை போன்று சைவ நூல்களுக்கும், நாலாயிர திவ்வியப் பிரபந்த அகராதி போன்ற வைணவ நூல்களுக்கும் சமயநெறியில் அகராதிக்கலை வளர்ந்தது.

இவ்வாறு தனித்தனி நூல்களுக்கு அமைந்தது போலன்றித் தமிழிலக்கியங்களை முழுமையாகக் கண்டு இலக்கியத்தில் காணும் சிறப்புப் பெயர்கள், புலவர்கள், காலக்குறிப்புப் பற்றியவை வெளிவந்துள்ளன.

சில எழுத்து வேறுபாடு காட்டும் எழுத்து நிலையில் வெளிவந்துள்ளன. எனினும் சொல்லை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையே மிகுதி, சிலேடை, மக்கட் பெயர், இல்லப்பெயர், வேர்ச் சொல் போன்றவை பற்றிய

அகராதிகள் குறிப்பிடத் தக்கவை. வேர்ச் சொல்லை ஓரெழுத்து முதல் ஐந்தெழுத்து வரை பகுத்துப் பின்னர்த் தொகுக்கும் முயற்சியும் வெளிப்பட்டுள்ளது. வேர்ச் சொல் ஆய்வுடன் சொற்பிறப்பகராதியும் வெளிவந்துள்ளது. இத் துறையில் வெளிநாட்டவர்களும் ஈடுபட்டுள்ளனர். தொடர்களைத் தொகுத்துத் தரும் முயற்சியுடன் பழமொழிகளைத் தொகுத்துள்ளமையும் இக்காலத்தில் போற்றற்குரியது.

**பல்மொழி அகராதிகள்**

பன்மொழி அகராதிகள் இக்காலத்தில் பெருகி வருகின்றன. இம்முயற்சி பாராட்டிற்குரியது, குறிப்பாக ஆங்கிலம் பற்றிய அகராதிகள் பல வந்துள்ளன. இதற்கு அடிப்படையான காரணம் இன்னும் ஆங்கிலமே பல நிலைகளில் கல்வி மொழியாக அமைந்துள்ளமையேயாகும்.

---

**I தமிழ் + இந்திய மொழிகள்**

1) தமிழ் + இந்தி
2) தமிழ் + மராத்தி

**III இந்திய மொழிகள் + தமிழ்**

1) இந்தி + தமிழ்
2) நேப்பாளி + தமிழ்
3) மலையாளம் + தமிழ்
4) மராத்தி + தமிழ்

---

**II தமிழ் + பிறநாட்டு மொழிகள்**

1) தமிழ் + இலத்தீன்
2) தமிழ் + உருஷ்யன்

**IV பிறநாட்டு மொழி + தமிழ்**

1) ஆங்கிலம் + தமிழ்
2) உருஷ்யன் + தமிழ்
3) மலாய் + தமிழ்

---

இவ்வளர்ச்சி நிலையைக் காணும்போது தமிழ் மொழியில் அகராதிக்கலை ஆங்கில மொழியை ஒட்டிப் பரந்த அளவில் வளர்வதற்குரிய நிலையை உணர முடிகிறது. ஐரோப்பிய மொழிகளில் அகராதிக் கலையும், அகராதி இயலும் ருஷ்யாவில் பேரளவு வளர்ந்துள்ளன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அகராதிபற்றிய எண்ணம் பெரிதும் வளர்ச்சி பெற்று வருகிறது. உலக மொழிகளில் பல அகராதிகள் இங்கிருந்துதான் வெளிவருகின்றன. உருஷ்ய மொழியில் வந்துள்ள தமிழ் அகராதி பேரளவில் தக்க இலக்கணப் பின்னிணைப்புடன் உள்ளது. இந்நெறியில் தமிழிலும் அகராதிக்கலை வளர்ந்தால் அதன் எதிர்காலம் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

## எதிர்கால நிலை

கலைச் சொற்களின் அகராதிகளும், ஆட்சிச் சொல் அகராதிகளும் தமிழில் வெளிவந்துள்ளன. இவை பள்ளி நூல்கள் எழுதவும், அரசாங்கப் பணியில் தமிழாக்கம் உருப் பெறவும் துணையாகும். எனினும் பொதுமக்களிடையே இவை எளிய நிலையில் பரவி அன்றாடப் பயன்பாட்டிற்கு உதவும் வகையில் பல முயற்சிகள் உருவாகி வருகின்றன. தமிழ்ப் பல்கலைக் கழகம் 1981இல் தோன்றிய பின்னர் அறிவியல், கலையியல் கலைக் களஞ்சியங்கள், பேரகராதி, சிறப்பகராதிகள் ஆகியவை உருவாகப் பல முயற்சிகள் செய்து வருகிறது. இம்முயற்சிகள் அகராதிக் கலைத்துறை வளர்ச்சியில் சிறப்பிடம்பெற்று, வருங்கால முயற்சிகளுக்கு வழிகாட்டும்.

# 2

# அகராதி

அகராதி என்பது பலவகையாகப் பரந்துபட்ட பார்வை நூல்களைக் குறிக்கும். அடிப்படை நிலையில் அகராதி, சொல் தொகுதிகளை நிரல்பட அளிக்கும். பின்னர் அவற்றிற்குரிய பொருள்களைக் கூறும். இத் தொகுதி மொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் கொண்டிருக்கும். அன்றி, சொற்களில் ஒரு கூறாகவும் அமையும். புத்தகப் பின்னிணைப்பில் காணும் சிறு பட்டியலைச் 'சொற்றொகை (Glossary) என்பர். குறிப்பிட்ட ஒரு நூலுக்குச் சொல்லடைவு திரட்டும்போது சொல்லொப்பீடு காணலாம். சிறந்த பேரகராதி ஒப்பீட்டிற்குரிய சொற்பட்டியலைத் திரட்டித் தரும். ஆங்கிலத்தில் 'லெக்சிகன்' (Lexicon) என்பது 'சொற்றொகுதி' யைக் குறிக்கும். மொழியியலில் இது ஒரு மொழி அமைப்பிற்குரிய பகுப்புக் கூறுகளைக் குறிக்கும். இதனால், இலக்கியம் எழுத்து வடிவில் தோன்றுவதற்கு முன்னரே சொற்றொகுதிகள் இருந்தன என்பர். அவற்றின் பின்னரே அகராதிகள் உருவாயின.

**அகரநிரல்** : அகராதி தொகுக்கும் கலை அகராதிக் கலை. மொழியியலில் ஒரு கிளை அகராதி இயல். இது, அகராதிக் கலையில் எழும் சிக்கல்களைத் தீர்க்க அறிவியல் நெறியில் கொள்கைகளைக் கூறும். சொற்களை அகர நிரல்படி தொகுப்பது அகராதி முறை ஆகும். வேறு வகையில் சொற்களைத் தொகுத்தால் எளிதில் பயன் பெறலாம் என்ற கருத்துமுள்ளது. பொருளடிப்படையில்

தொகுத்த சொற்களஞ்சியத்தை இதற்கு எடுத்துக் காட்டாக உரைப்பர். அதிலும் ஒவ்வொரு பொருளையும் எளிதில் காண அகரநிரல் வேண்டும். இதனால் அகர நிரலின் சிறப்பு நன்கு புலனாகும்.

**அகராதியும், கலைக்களஞ்சியமும் :** அகராதிக்கும் கலைக் களஞ்சியத்திற்குமுள்ள வேறுபாட்டை அறிவது எளிது. அகராதி, சொற்களை விளக்கும். கலைக் களஞ்சியம் பொருள்களை விளக்கும். எனினும் நடைமுறையில் இவற்றைக் கண்டு உணர்வது அறிது.

ஒருமொழி அகராதியில் அம்மொழியில் சொற்பட்டிய லும், அதற்குரிய விளக்கமும் அந்த மொழியிலே அமையும் இருமொழி அகராதி, பன்மொழி அகராதி ஆகியவற்றில் ஒரு மொழிச் சொற்களுக்கு வேற்று மொழியிலோ மொழி களிலோ விளக்கம் அமையும். பொதுவாக அகராதி என்பதன் பொருளை அகரநிரலில் சொற்பதிவுகளமைந்த ஒப்பு நோக்கீட்டு நூல் எனலாம். இதற்கு வாழ்க்கை வர லாற்று அகராதிகள், கவின்கலை அகராதிகள் ஆகியவை தக்க சான்றுகள்.

**வரலாற்றுப் பின்னணி :** உலகில் அகராதிக் கலை மெதுவாக வளர்ந்ததுபோலத் தமிழ் அகராதிக் கலையும் மெதுவாக வளர்ந்தது. இதன் தொடக்க நிலையைத் தொல்காப்பியத்தில் (கி மு 3-நூ) காணலாம். மெல்ல வளர்ந்து இன்றுள்ள அகராதி வடிவினைப் பதினெட்டாம் நூற்றாண்டில் பெற்றது.

**தொல்காப்பியம் :** தொல்காப்பிய உரியியல் சொற் பொருள் பற்றிக் கூறும் தமிழிலக்கணப் பகுதியாகும். மேலும் இந்நூலில் இடையியல், மரபியல் ஆகிய இரு பகுதிகளும் சொற்பொருள் வழக்குப்பற்றிக் கூறும். எளிய சொற்களுக்குப் பொருள் கூறாமல் அரிய சொற்களுக்குரிய

பொருளைத் தொல்காப்பியம் கூறும். இக்காலத்தில் எளிதில் பொருள் விளங்கும் சொற்கள் (தீர்தல், தீர்த்தல்) அக்காலத்தில் அரும்பொருள் சொற்களாக அமைந்திருந்ததைக் காணலாம்.

நூற்பா வடிவில் சொற்பொருள் கூறும்போது எதுகை நோக்கிச் சொற்கள் அமைந்த பாங்கு உள்ளது. இதில் அகர நிரலோ வேறு அளவை நெறியோ காணப்பெற வில்லை.

பொதுவாகத் தொல்காப்பியம், சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகையாகப் பகுத்துள்ளது. இதனால் தமிழ்ச் சொற்றொகையின் களங்கள் பற்றி அறியலாம். சொற்பிறப்பியல் அகராதியியலின் சிறப்புக்கூறு. எனினும் அதனை அறிதல் கடினம் என்பது தொல்காப்பியக் கருத்தாகும். தொல்காப்பியத்தில் அகராதி இயற்கூறுகள் சில உள்ளன. பிற்காலத்தில் தோன்றிய நிகண்டுகளுக்குத் தொல்காப்பிய உரியியல் களம் அமைத்துத் தந்தது. தொல்காப்பியத்தின் பின்தோன்றிப் பெயரளவில் தெரிகின்ற சில நிகண்டுக் குறிப்புகள், இறையனார் களவியல் உரை போன்றவை கூறும் செய்திகள் கொண்டு அகராதிக்கூறுபற்றி ஓரளவு அறியலாம். எனினும் அகராதிபற்றிய இன்றைய கருத்து வடிவில் அவை அமைந்துள்ளன எனக் கூற இயலாது.

**நிகண்டின் தோற்றம்:** தொல்காப்பியத்திற்குப் பின் பல நூற்றாண்டுகள் கழித்துச் சமயத்தைப் பரப்புதற்கெனச் சமய இலக்கியங்கள் எழுந்தன. சமணம், பௌத்தம், சைவம், வைணவம்போன்ற சமயங்கள் தம் செல்வாக்கை நிலை நாட்ட முயன்றன. அப்போது தமிழில் வடசொற்கள் கலந்தன. இச் சமயச் செய்திகளை அறியவும் வடசொற்

பொருளைப் புரியவும் ஒப்புநோக்கீட்டு நூல்கள் தேவைப் பட்டன. இத்தேவையை நிறைவேற்றத் தொல்காப்பிய நெறியில் சொற்பொருள் விளக்கும் நிகண்டுகள் எழுந்தன. 'உரிச்சொல்', 'உரிச்சொற்பனுவல்' என்ற பெயரில் சொற் கூட்டம் என்ற பொருள் தரும் நிகண்டு சுட்டப்பெற்றது. காலவளர்ச்சியில் 'நிகண்டு' என்ற சொல்லாட்சியே நிலை பெற்றது.

**திவாகரம்:** முதலில் திவாகரர் (9—நூ.) இயற்றிய 'திவாகரம்' சொற்பெயர்களைத் தெய்வம், மக்கள், விலங்கு, மரம், இடம். பல்பொருள், செயற்கை வடிவம், பண்பு, செயல், ஒலி, ஒருசொல் பலபொருள், பல்பொருள் கூட்டத் தொருசொல் என்பனவற்றைத் தனித்தனியே பன்னிரு பகுதிகளில் பகுத்துக் காட்டும் கி பி. 1835-இல் வெளிவந்த இதன் முதற்பதிப்பில் பத்துத் தொகுதிகளே பதிப்பிக்கப் பெற்றன. பதிப்பாசிரியர் தாமாகச் சில நூற்பாக்களை இயற்றிச் சேர்த்துள்ளார். இவ்வாறு பிறர் சேர்த்தவை தவிர ஏறத்தாழ 9500 சொற்கள் இதில் உள்ளன. பின்னர் வந்த பதிப்பில் மேலும் புதிய சொற்கள் சேர்க்கப்பெற்றன. தொல்காப்பிய உரியியலை விட இது சொல் எண்ணிக் கையில் பலமடங்கு பெருகியுள்ளது.

**பிங்கலம்:** திவாகரப் பாகுபாட்டை ஒட்டியே பிங்கலம், சூடாமணி, உரிச்சொல், கயாதரம் முதலிய நிகண்டுகள் அமைந்துள்ளன. திவாகரத்தை அடுத்துப் பிங்கலரின் பிங்கலந்தை நிகண்டு (10 நூ.) வெளிவநதது. பலவழிகளில் இதன் சொல்வளம் பெருகியுள்ளது இதன் பத்துத தொகுதி களில் 14700 சொற்களுக்கு மேல் உள்ளன. பிற்காலத் தமிழிலக்கணமாம் நன்னூல் (நூ 460) இதன் சிறப்பைத் தனியே சுட்டும்.

**பெயர் தெரியா நிகண்டுகள்:** இவ்விரு நூல்களின் காலத்திற்கும் பதினாறாம் நூற்றாண்டுக்கும் இடையே பல

சொற்றொகை நூல்கள் எழுந்தன. எனினும் தொல்காப்பிய இளம்பூரணருரை (தொல். சொல். 390), யாப்பருங்கல விருத்தியுரை (1916. பக். 222), திவ்வியப் பிரபந்தவுரை ஆகியவை குறிப்பிடும் நிகண்டுகளும், அச்சேறாத வேறு சில நிகண்டுகளும் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவற்றால் பல நிகண்டுகள் காலவெள்ளத்தில் மறைந்தன என அறிகிறோம்.

பிங்கலந்தைக்குப் பின் தோன்றிய சிறுநூல் உரிச்சொல் நிகண்டு, இதனைக் காங்கேயர் (14 – நூ.) பத்துத் தொகுதி களில் 3200—க்குட்பட்ட சொற்கள் கொண்டு தொகுத் துள்ளார். இந்நூல் வெண்பா யாப்பில் அமைந்துள்ளது. பின் வெளி வந்த பதிப்புகளில் கடைசி இரு தொகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**கயாதரம்** : இராமேச்சுரத்தில் பிறந்த கயாதரர் (15—நூ.) கயாதரம் என்ற நிகண்டைக் கட்டளைக் கலித்துறை யாப்பில் இயற்றினார். இதில் பதினொரு தொகுதிகள் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. இதனால் இந்நூலை மனனம் செய்வது எளிது. இதில் 10500 சொற்கள் உள்ளன.

**சூடாமணி நிகண்டு**: நிகண்டு சூடாமணியை மண்டல புருடர் எனும் சமணர் (16—நூ.) தொகுத்தார். விருத்தப் பாவில் இந்நூல் உள்ளது. சோழப் பேரரசின் பின்வந்த குழப்ப நிலையில் தோன்றிய சொற்களையும் இதில் காணலாம். இந்நூலின் பன்னிரு தொகுதிகளில் 11 000 சொற்கள் உள்ளன. இதன் பதினோராம் தொகுதியை மாணவர்கள் மனனம் செய்து வந்தனர். இந்நிகண்டே மக்களிடம் நன்கு செல்வாக்குப் பெற்று விளங்கியது. நூற்றுக்கு மேற்பட்டு இதன் பதிப்புகள் வெளிவந்தமை இக் கருத்தை வலியுறுத்தும்.

**அகராதி நிகண்டு:** அகராதி நிகண்டு என்ற நூலைப் புலியூர்ச் சிதம்பர இரேவண சித்தர் இயற்றினார். அகரம் முதலாகச் சொல்நிரல் அமைவதை இவரே முதலில் நிகண்டில் எடுத்தாண்டார். முதல் எழுத்தை மட்டும் அகர வரிசையில் ஒழுங்குபடுத்தினார். இந்நிகண்டு தோன்றிய காலம். கி. பி. 1594. இந்நூலில் 3334 நூற்பாக்கள் உள்ளன. ஒருபொருள். இருபொருள் கொண்ட சொற்கள் 3368 தனியே தொகுக்கப்பட்டுள்ளன. இவர் அகர வரிசையில் நூற்பாக்களை இயற்றத் திருநாவுக்கரசரின் (7—நூ.) 'சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை' போன்றவை தூண்டியிருக்கலாம். அகரவரிசையில் எழுந்த முதல் ஒப்பு நோக்கு நூல் இதுவே. தமிழ் அகராதி வரலாற்றில் இது தனியிடம் பெறும் சிறப்புடையது. அகரவரிசை அமைப்பைச் சுட்ட இவர் பயன்படுத்திய அகராதி என்ற பெயர், இன்று அகராதிக்குரிய நூற்பெயராகவே அமைந்துவிட்டது.

**ஆசிரிய நிகண்டு** : ஊற்றங்கால் ஆண்டிப்புலவர் (17—நூ.) ஆசிரிய நிகண்டு எழுதினார். இவருக்கு முன்னர் வந்த எல்லா நிகண்டுகளிலுள்ள சொற்களை இந்நிகண்டு கொண்டுள்ளது. ஆசிரிய விருத்தத்தில் அமைந்த இந்நூலில் 12000 சொற்கள் உள்ளன.

**பல நிகண்டுகள்** : கைலாசநாதர் (17—நூ) என்பவர் நிகண்டைத் திவாகர நெறியிலிருந்து மாற்றிப் படைத்துள்ளார். இந்நூலின் 56 பகுதிகளில் ஏறத்தாழ 15000 சொற்கள் உள்ளன. திருவேங்கடபாரதி (17—நூ.) கலித்துறையில் அமைந்த 'பாரதி தீபம்' என்ற நிகண்டில் 13000 சொற்கள் அமையப் படைத்துள்ளார்.

சிதம்பரக் கவிராயரின் (18—நூ.) உசித சூடாமணி நிகண்டு விருத்தப்பாவில் அமைந்துள்ளது. அரும் பொருள் விளக்க நிகண்டு அருமருந்தைய தேசிகரால் (18—நூ.) விருத்தப்பாவில் 12000 சொற்களைக் கொண்டு இயற்றப்

பட்டது. பொதிகைநிகண்டின் ஒருபகுதி ஆசிரியப்பாவிலும் மற்றொரு பகுதி நூற்பாவிலும் சாமிநாதக் கவிராயரால் (18—நூ .) இயற்றப்பட்டது. முதல் ஒன்பதியல்களில் 14 500 சொற்கள் உள்ளன. திருநெல்வேலி வட்டார வழக்குச் சொற்களை இவற்றில் காணலாம். ஔவை நிகண்டு என்ற பெயர் மட்டும் தெரிகிறது. இதுபற்றி வேறு செய்திகள் தெரியவில்லை. இதுபோன்றே கி. பி. 19 — ஆம் நூற்றாண்டில் கந்தசுவாமியம், அபிதானச் செய்யுட் சிந்தாமணி பொதிய நிகண்டு ஆகியவை தோன்றின என்பர்.

**நாமதீப நிகண்டு** : சிவசுப்பிரமணியக் கவிராயர் (19—நூ .) பதினாறு இயல்கள் கொண்ட நாமதீப நிகண்டை 800 வெண்பாவில் இயற்றினார். இதில் 12000 சொற்கள் உள்ளன. சொற்கள் இலக்கண நெறியில் உயர் திணை, அஃறிணை எனவும் இறுதியில் பண்புப் பெயர்கள் எனவும் அமைந்துள்ளன.

**பல பொருள் ஒருசொல் நிகண்டுகள்**: பலபொருள் ஒரு சொற்களைத் தரும் நிகண்டில் பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி என்ற பிரிவுள்ளது. அறிவியலிலும் இலக்கியத்திலும் அமைந்த கலைச்சொற்கள் பொதுச் சொற்கள் ஆகியவற்றின் உட்பிரிவுகள் இவற்றின் பொருளாக அமையும். எண்வரிசைப்படி சில குழுக்கள் அமையும். திவாகரநிகண்டு இவற்றை இறுதிப் பகுதியில் காட்டும். கால வளர்ச்சியில் இப்பகுதியே தனி நூல்களாக வெளி வந்தது. இவ்வகையில் சுப்பிரமணியக் கவிராயரின் தொகை நிகண்டு ஒன்றாகும். பிறநூல்கள் கூறும் செய்திகளால் இது பற்றி அறிகிறோம். பொருட்டொகை நிகண்டு என்பது தொகைப் பெயர்களைத் தொகுத்துள்ளது. இதன் ஆசிரியர் குடுமியாமலைச் சுப்பிரமணிய பாரதி. இதைப் பதிப்பித்த ஆசிரியர் சேர்த்த 122 நூற்பாக்களுடன் இதில் 1000 நூற்பாக்கள் உள்ளன. வேதகிரி முதலியார் கி. பி.1849—

இல் இயற்றிய தொகைப் பெயர் விளக்கம் வெளிவந்தது. இந்நூலில் தொகைப் பெயர்கள் அகர வரிசையில் அமைந்துள்ளன.

இதற்குப் பல ஆண்டுகள் கழிந்தபின் இலக்கணத் திறவுகோல் தோன்றியது. இது எல்லாத் தொகைப் பெயர் களையும் ஒரே அகரவரிசைப் பட்டியலுள் தந்துள்ளது. இனப்பெயர்த் தொகுதிகள் இன்றைய சொற்கருவூலங் களோடும் தொகைப்பெயர்களோடும் ஒத்து நோக்குதற் குரியவை. காலப்போக்கில் இச்சொற்களின் எண்ணிக்கை மிகுந்தது. இத்தகைய வளர்ச்சியால் தனி நூல்கள் எழுந்தன. இவ்வளர்ச்சிக் கூறுகள் அகராதிக் கலையுள் அடங்குவன. இவ்வளர்ச்சியின் முடிவில் அகரநிலையைப் பின்பற்றத் தொடங்கினர்.

தொடக்க நிலையில் பல பொருள் ஒருசொல் தொல் காப்பியத்திலும், திவாகரத்திலும் தனித்த போக்கில் அமைந்துள்ளது. திவாகரத்தில் இவ்வகைச் சொற்கள் 384 உள்ளன. இவற்றைப் பதிப்பாளர்கள் அகரவரிசையில் தொகுத்தார்கள். பிங்கலந்தையில் இவற்றின் எண்ணிக்கை 1091 ஆயிற்று. இவற்றையும் அச்சுநூல்கள் அகரநிரலில் அளித்தன. ஓலைச் சுவடிகளில் இவ்வமைப்பு இல்லை. இச் சொற்களைத் தொகுப்பதில் தொல்காப்பியம், திவாகரம் ஆகிய நூல்களில் எதுகை பயன்பட்டது. மாறாக, எதுகை கொண்டு சொற்களை அறியும் வகையில் சூடாமணி நிகண்டு உருவாகியது இதில் சில குறைகள் நேர்ந்தன. இந் நிலையில் எதுகைக்காகக் கலந்த பிற சொற்களைக் கலப் பெதுகை எனப் பெயரிட்டுத் தனியாகத் தந்தனர்,

**நிகண்டின் நோக்கம்:** நிகண்டுகள் தொகுப்பதில் மனப் பாடம் செய்வதே முதல் நோக்கமாக இருந்தது. எளிமை யாக ஒப்புநோக்கிற்கென எம்முறையும் பயன்படுத்தப் படவில்லை. கயாதரத்தில அந்தாதித் தொடை பயன்

பட்டது. பலபொருள் ஒரு சொல்லுக்கெனத் தனிநூல்கள் எழுந்தன. இதற்கென முதலில் தோன்றிய அருமருந்தைய தேசிகரின் அரும்பொருள் விளக்க நிகண்டு (1763) குறிப்பிடத்தக்கது. இதில் 3200 பலபொருள் ஒரு சொற்கள் பலவகை எதுகை வடிவில் அமைந்துள்ளன. சொல் வளத்திலும் எதுகை நயத்திலும் இது உயர்ந்துள்ளது. இவ் வகையில் சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகு தியைப் புதுப்பித்து வேதகிரி முதலியார் வேதகிரி நிகண் டென அளித்தார் (19 நூ.) இதில் பலபொருள் ஒரு சொற்கள் 2526 உள்ளன. இத்துறையில் திருநெல்வேலி முத்துசாமி பிள்ளையின் நானார்த்த தீபிகை (1850) எழுந்தது. இது வடமொழிக்கே முதலிடம் அளித்தது. சிறந்த எதுகை அமைப்பில் 5430 பலபொருள் ஒரு சொற்கள் இதில் உள்ளன. இதில் தொடர்பற்ற ஒட்டுச் சொற்கள் நீக்கப்பட்டன. வடமொழியில் பலபொருள் ஒரு சொல்லுக் கென ஆரிய நிகண்டு தொகுக்கப்பெற்றது. வீரவநல்லூர் அருணாசல நாவலரின் விரிவு நிகண்டு (1900) இத் துறையில் உருவாயிற்று. இதில் வழக்குச் சொற்களும் தொழில்துறைச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. 3000 சொற்களுக்குப் பொருள் கூறும் சிந்தாமணி நிகண்டை யாழ்ப்பாணம் வைத்தியலிங்கம் பிள்ளை (1874) வெளி யிட்டார். இத்தகைய பலபொருள் ஒருசொல் அகராதிகளின் தனித்தன்மையை எதுகை அமைப்பில் காணலாம். இதனால் மனப்பாடம் செய்யும் நோக்கைக் காட்டிலும் ஒப்புநோக்கு முறை முதலிடம் பெற்றது. 1984 ஆம் ஆண்டில் மால்முருக னாரின் தமிழ் உரிச்சொல் பனுவல் இந்நெறியில் வெளிவந்தது

**அகரநிரல் வளர்ச்சி** : பதினெட்டாம் நூற்றாண்டில் அகரநிரல் பற்றிய கருத்து வளர்ச்சிபெற்றது. திவாகரத்தின் பதினோராம் பிரிவை அகரநிரலில் பலபொருள் ஒரு சொற் களை ஈற்றெதுகை நோக்கித் தொகுத்தனர். வைணவ உரையில் காணும் கடினமான மணிப்பிரவாள நடையில் உள்ள சொற்களுக்கு அகரவரிசையில் பொருள் கூறினர்.

இவ்வாறு தொகுத்த சொற்கோவை இருநூறு ஆண்டுகட்கு முற்பட்டது. கி.பி. 13, 14—ஆம் நூற்றாண்டுகளில் காணும் பேச்சு வழக்கை அறிய இது உதவும். இதில்சொற்களுக்குரிய விளக்கம் வடமொழியிலுள்ளது. அகரநிரல் பற்றிய ஆர்வம் அகராதிகள் உருவாவதற்குரிய வழிகளை வகுத்தது.

**சதுரகராதியின் தோற்றம்** : தமிழில் அகரநிரல்படி வீரமாமுனிவரின் (Father Beschi) சதுரகராதி (1732) எழுந்தது. அதற்குமுன் அகராதி ஓலைச் சுவடி ஒன்று அகராதி மோனைக்ககராதியெதுகை (17 நூ.) என்ற பெயரில் இருந்தது. அதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. சொல்லில் இரண்டாம் எழுத்து என்ற அளவிலேயே அகர நிரல் பின்பற்றப்பட்டது. இதில் 7500 சொற்கள் உள்ளன. உருபுகள், தொடர்கள், சிறப்புப் பெயர்கள் ஆகியவற்றைத் தொகுத்துள்ள இது நிகண்டு நெறியில் சொற்பொருள் கூறும்.

திவாகரம், உரிச்சொல் நிகண்டு, சூடாமணி, நாமதீப நிகண்டு ஆகியவற்றில் காணும் சொற்களை அகரநிரலில் பத்துப் பிரிவுகளாகத் தொகுத்துள்ளது, பத்துச் சொல் அகராதி. ஓரெழுத்துச் சொல்; ஈரெழுத்துச் சொல் போன்ற வற்றையும் தனியே தொகுத்துத் தந்துள்ளது.

**மேனாட்டார் செல்வாக்கு:** தமிழில் அகராதிக் கலை, வகைச் சொல், தொகை என்ற நிலைக்கு வளர்ந்தது. மனை நிலையிலிருந்து ஒப்புநோக்கு நிலைக்குச் சென்றது. இரண்டாம் எழுத்துவரை அகரநிரல் முறை உருவாகியது. இந்நிலையில் மேனாட்டார் செல்வாக்கும் தமிழில் பரவியது.

ஐரோப்பிய வணிகர்களுடன் தமிழகத்திற்குக் கிறிஸ் துவப் பாதிரிமார்களும் வந்தனர். இவர்களால் தமிழ் அகராதிக் கலை பெரிதும் வளர்ந்தது. இவர்கள் தம்

மதத்தைப் பரப்ப இந்நாட்டு மொழியையும் மக்களையும் நன்கு அறிய முதலில் முயன்றனர். முக்கிய ஊர்களில் தங்கித் தமிழர்களுடன் பழகி அவர்களின் பழக்க வழக்கங்களை நன்கறிந்தனர். தம் முயற்சிக்கு உறுதுணையாக அச்சகங்களையும் நிறுவினர். தமிழில் வெளிவந்த முதல் அகராதியாகத் தமிழ்-போர்ச்சுகீசிய அகராதியை, கி. பி. 1679-இல் அச்சிட்டனர். இதனை ஆந்தெம் டி புரோயென்கா (Antem de proenca) தொகுத்தார் என்பர். இதனைத் திப்புசுல்தான் ஆணையால் எரித்துவிட்டதால் இதுபற்றி வேறு செய்திகள் தெரியவில்லை. கி, பி. 1712-இல் பார்த்தலோமியா சீகன்பால்கு (Bartho-lmaeus Ziegenbalg). டிக்சனரியம் தமுலிகம் எழுதினார். இது அச்சாகவில்லை.

**வீரமாமுனிவர் பணி** : அக்காலத்தில் தமிழகத்தில் கிறிஸ்துவத்தைப் பரப்பி வந்த வீரமாமுனிவர் தமிழிலக்கியங்களை நன்குகற்றார். எல்லோரும் நம்பத் தக்க அகராதி ஒன்று தேவை என உணர்ந்தார். அதனால் சதுரகராதியைத் தொகுத்தார். அதற்கு நீண்ட நெடும் பெயரை வின்சன் (Vinson) அளித்தார். இவ்வகராதி பழைய நிகண்டுகளின் போக்கை மாற்றிப் புதிய வழியைக் காட்டியது. தெளிவு பெற வேண்டிச் செய்யுள் வடிவை நீக்கியது. அகரநிரலை முழுதும் பின்பற்றியது. கடினமான மிகப்பழஞ் சொற்களைக் கைவிட்டது. எளிய சொற்களை ஏற்றுக்கொண்டது. சதுரகராதி என்பது நான்கு அகராதி எனப்பொருள்படும். முதல் பிரிவு பெயர் பற்றியது. இதில் ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய பல பொருள்கள் உள்ளன. இரண்டாம் பிரிவு ஒரு பொருளுள்ள பலசொற்களைத் தொகுத்துள்ளது. மூன்றாம் பிரிவு பல்வேறு துறைக்குரிய கலைச்சொற்களைக் காட்டும். நான்காம் பிரிவு தொடை அகராதி ஆகும். நிகண்டு சூடாமணியில் காணும் பதினோராம் தொகுதியுடன் இதன் முதல், நான்காம் பிரிவுகள் ஒத்துள்ளன. பன்னிரெண்டாம் தொகுதியின் செய்திகளைக் கொண்டது மூன்றாம் பிரிவு. நிகண்டுகளில் காணும் சொற்களின்

அடைவாகச் சதுரகராதி விளங்குகிறது. அகராதி என்ற சொல்லின் பொருளுக்கேற்பத் தலைப்பில் அகராதி என்ற சொல்லைப் பெற்றிருப்பது சதுரகராதியே. இவ்வகராதியைப் பலமுறை திருத்தி வெளியிட்டனர். பொருளகராதியை எல்லிசு (Ellis) என்பவர், சிற்றம்பல ஐயர் உதவியுடன் கி.பி. 1819-இல் வெளியிட்டார்.

தாண்டவராய முதலியார், இராமச்சந்திரக் கவிராயர் மேற்பார்வையில் கி. பி. 1824-இல் சதுரகராதி முழுதும் வெளிவந்தது. அத்துடன் பிற்சேர்க்கையும் இணைத்தனர். சுமித் (Rev. Smith) கி. பி. 1835-இல் வெளியிட்ட இதன் இரண்டாம் பகுப்பில் பெயர்ப் பகுதி கொண்டுள்ள சொற்கள் மட்டும் 12400 ஆகும். முதல் நூலில் இவ்வளவு சொற்கள் இல்லை, இப்பதிப்புகளில் சொல்லின் பல பொருளும் அகர வரிசையில அமைந்துள்ளன. இது சுவடிகளில் காணப்பெறவில்லை.

**பல வகை அகராதிப் பணி:** வீரமாமுனிவர் 9000 சொற்களுள்ள தமிழ்-இலத்தீன் அகராதி (1742), தமிழ்-பிரஞ்சு அகராதி (1744), போர்ச்சுகீசிய-இலத்தீன்-தமிழ் அகராதி ஆகியவற்றைத் தொகுத்தார். இவர் இலததீன்-தமிழ் அகராதியும், கொடுந்தமிழ் அகராதியும் தொகுத்தார் என்பர். பின்னுள்ள மூன்று நூல்கள் கிடைக்கவில்லை. சதுரகராதியின் பல சுவடிகள் கிடைப்பதால் இதன் செல்வாக்குப் புலப்படும். இச்சுவடிகளில் முதல் நூலிலில்லாத பல புதுச்சொற்களைச் சேர்த்துள்ளனர்.

**தமிழ்-ஆங்கில அகராதி:** முதல் தமிழ்-ஆங்கில அகராதி கி. பி. 1779-இல் வெளிவந்தது. சாம் பிலிப்பெப்ரீசியசும் (Joham Philip) Fabricious), சான் கிறித்தியா பெரய் தாப்டும் (John Christian Breithaupt) இணைந்து இவ்வகராதியை உருவாக்கினர். தென்னகத்தில் கிறித்துவ மதம் பரப்ப வந்த திருச்சபையினர்க்கும், வணிகர்க்கும்

உதவுவதற்கு என இதனை வெளியிட்டனர். கிரந்தச் சொற்களைக் குறிக்க உடுக்குறி(*) இட்டிருந்தனர். பல மரபுத் தொடர்கள் அடங்கிய 9000 சொற்கள் இதில் இருந்தன. அக்காலத்தில் தமிழை ஐரோப்பியர் மலபார் மொழி எனக் குறிப்பிட்டதை இதன் முகப்புப பக்கம் கூறும். இது சிறிய அகராதி எனினும் பல அறிஞர்களை அகராதித் துறையில் ஈடுபடச் செய்தது. கி. பி. 1833-இல் யாழ்ப்பாணத்தில் அமெரிக்கத் திருச்சபையார் தமிழ்-ஆங்கில அகராதி உருவாக்கத் திட்டமிட்டனர். நைட் (Knight), காபிரியேல் திசேரா (Gabriel Tissera), பெர்சிவல் (Percival) என்போர், இதற்குரிய சொற்களைத் திரட்டினர். எனினும் இப்பணி இடையில் நின்றுவிட்டது பைபிள இறையியல் அகராதியை என்றிபவர் (Henry Power) கி. பி. 1841-இல் வெளியிட்டார்.

உரிய சொற்களின் துணை கொண்டு சந்திரசேகரப் புலவரின் தமிழ் அகராதி வெளிவந்தது (1832). இதனை யாழப்பாணஅகராதி எனவும் மாணிப்பாய் அகராதி எனவும் குறிப்பிடுவர். இதிலும் நான்கு பகுதிகள் இருந்தன. சொல் தொகுதி மிகுதியாக இதில் உள்ளது. அகர வரிசையில் 58, 500 சொற்கள திரட்டப் பெற்றன. வில்சன் (Wilson) வடமொழி அகராதியிலிருந்து சொற்களை இதில் சேர்த்தனர். தமிழ் மக்களின் பேச்சு வழக்கு, நாட்டு வழக்கு என்பவை மிகக் குறைவாகக் காணப்பெறும். பொருள் விளக்கமும் அகரவரிசையில் உள்ளது. இதனையடுத்து, கி. பி. 1850—இல் ஒரு சொற் பல பொருள் விளக்கம் என்னும் சிறு அகராதி வெளி வந்தது. விசாகப்பெருமாள் ஐயரின் வழியில் அண்ணாசாமி பிள்ளை இதைத் தொகுத்தார். சூடாமணியின் பதினோராம் தொகுதியில் காணும் சொற்களை இதில் காணலாம். தனித்து வழங்கும் சிறப்புடைய சொற்களை இது விரித்துக் காட்டும். இதற்கிடையே அமெரிக்கத் திருச்சபையின் பேரகராதி வின்சுலோவால் (Winslow) கி.பி. 1842—இல் வெளிவந்தது.

சுபால்டிங்கு (Spaulding) அதனை கி. பி. 1852—இல் திருத்தி வெளியிட்டார்.

**இராட்லெர் அகராதி** : இதற்குச் சற்று முன்னர் இராட்லெர் (Rottler) தமிழ் ஆங்கில அகராதியைத் (1830) தொகுத்தளித்தார். அதனை நால்வர் திருத்தம் செய்து கி. பி. 1834—இல் வெளியிட்டனர். இடையில் ஆசிரியர் மறைந்தார். டெய்லரும், வேங்கடாசல முதலியாரும் இதன் பதிப்பாளராயினர். முழுமையாக கி. பி. 1841—இல் இது வெளிவந்தது. சதுரகராதியில் காணும் சொற்களையும் பொருளையும் இது நன்கு பயன்படுத்திக் கொண்டது. வீரமாமுனிவரின் மற்ற அகராதிகளும், டிபோர்கசின் (De Bourges) தமிழ்—பிரஞ்சு அகராதியும் இதற்கு நன்கு பயன்பட்டன. சோதிடம், புராணம், அறிவியல் ஆகிய துறைச்சொற்கள் இதில் இல்லையென வின்சுலோ அகராதி முன்னுரை கூறும்.

**வின்சுலோ அகராதி** : முன்னர் நைட முதலியோர் தொகுத்த சொற்றொகுதியைப் பயன்படுத்தி வின்சுலோ தமிழ்—ஆங்கில அகராதி கி. பி. 1862—இல் வெளி வந்தது. இராமானுசக் கவிராயர், விசாகப்பெருமாளையர், வீராசாமி செட்டியார் போன்றவர்கள் இதற்குத் துணை புரிந்தனர். இதில் இலக்கியச் சொற்களும் பொதுமக்கள் வழக்குச் சொற்களும் உள்ளன. சோதிடம், புராணம், அறிவியல் துறை பற்றிய சொற்களும், ஆசிரியர், கவிஞர், வீரர் ஆகியோர் பெயர்களும் இதில் தொகுக்கப்பெற்றதால் சொல் அளவில் இது மிகப் பெரிய அகராதியாக விளங்கியது. ஏறத்தாழ 67,000 சொற்கள் இதில் உள்ளன. வடமொழிச் சொற்கள் 8,000—க்குள் தொகுக்கப்பெற்றன. இவ்வகராதி வினையின் வேர்ச்சொல் வடிவை முதன் முதலில் தருகிறது. தமிழ்ச் சொற்களிலிருந்து வடசொற் களை உடுக்குறி தந்து பிரித்துக் காட்டும். வேண்டுமிடத்து வில்சனின் வடமொழி அகராதி மேற்கோள்களைத் தரும்.

முதன்மைச் சொற்களுக்கு விளக்கம் கூறும்போது எடுத்துக் காட்டுகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தந்துள்ளது. இது பல வழிகளில் மக்களுக்கு நன்கு பயன் பட்டுப் பரவியது.

**சுருக்க அகராதிகள்** : கையடக்கத் தமிழ்—ஆங்கில அகராதியையும் மக்கள் பெரிதும் பெற விழைந்தனர். போப் (Pope) கி.பி. 1859—இல் வெளியிட்ட 'தமிழ்க் கையேட்'டில் தமிழ்—ஆங்கிலம், ஆங்கிலம்—தமிழ்ச் சொல்லடைவுகளை இணைத்துள்ளார். இவற்றைப் புதுக்கிப் பின் தமிழ்—ஆங்கிலச் சுருக்க அகராதி வெளிவந்தது. இது வடமொழி, அரபிச் சொற்களைத் தனியே எடுத்துக்காட்டுகிறது. வினையின் வேர்ச் சொல்லையும் தனியேகூறும். கல்வீத் துறையினர் கி. பி. 1870—இல் செவ்விய தமிழ்—ஆங்கிலச் சுருக்க அகராதியை வெளியிட்டனர். இதனைத் திருத்தம் செய்து விரிவாக்கி, கி. பி. 1888—இல் விசுவநாதபிள்ளை அளித்தார்.

யாழ்ப்பாண அகராதியைத் தொடர்ந்து அகராதிச் சுருக்கம் அல்லது தமிழ்க்கையகராதியை விசயரங்க முதலியாரும், இராசகோபால பிள்ளையும் கி. பி. 1883-இல் தொகுத்தனர். 3000 சொற்களுக்கு மேல் இதில் இருந்தன. பெயர், வினையாகப் பயன்படும் சொற்கள் பின்னிணைப் பில் உள்ளன. இவ்வகராதி மாணவர் நலத்திற்குப் பெரிதும் உதவியது. கையடக்கமான சுருக்க அகராதியின் தேவை பெருகவே, தரங்கம்பாடி அகராதி கி.பி. 1897—இல் வெளி வந்தது. வினைச் சொல்லின் கீழ் அதன் ஆக்கச் சொற்களும் தொடர்களும் அமைந்துள்ளன. வழக்கு வீழ்ந்த அருஞ் சொற்கள் இவ்வகராதியில் இடம் பெறவில்லை. 33, 000 சொற் பதிவுகள் இதில் அடங்கியுள்ளன.

**இரு மொழி அகராதிகளின் விளைவு:** இத்தகைய் இரு மொழி அகராதிகளால் ஒருமொழி அகராதி வளர்ச்சி

குன்றியது. யாழ்ப்பாண அகராதியை விரிவுபடுத்திப் பேரகராதி அல்லது விரிவகராதியாக அளித்தனர். ஆர்வத்தால் பல புதிய பதிப்புகள் வெளிவந்தன. அவற்றில் பிழை மிகுதியாக இருந்தது.

**நா. கதிரைவேற்பிள்ளை அகராதி:** இக்குறைக்கு அப்பாற்பட்டது நா, கதிரைவேற்பிள்ளையின் பதிப்பு. பொருள் அகராதியின் மிகுதியாக வேறு பலவற்றை இணைத்தார். சி. டபிள்யூ, கதிரைவேற்பிள்ளையின் அகராதியொன்று 1904-இல் வெளி வந்தது. இதனை அறிஞர்கள் பாராட்டினர். வடமொழிச்சொற்களை வரையறையின்றி இவர் தமிழகராதியில் சேர்த்தார். சாத்திரங்களில் காணும் எல்லாச் சொற்களையும் தொகுத்தளித்ததால், மற்ற அகராதிகளிலுள்ள சொற்களைவிட மிகுதியாகத் தர இயலும் என்று எண்ணியதன் விளைவாக இது நேர்ந்தது. மருத்துவம், தாவரவியல் போன்ற துறைச் சொற்களும் இதில் உள்ளன. இதில் சொல்லின் எண்ணிக்கை பெருகியது. வடமொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் சேர்க்க வேண்டுமென்று இவ்வகராதி தொகுத்தவர் விரும்பினார். பிற்காலத்தில் வெளிவந்த அகராதிகள் இந்நோக்கில் சொல்லெண்ணிக்கையைப் பெருக்க வடமொழி அகராதிச் சொற்களை அவ்வாறே எடுத்தாண்டனர். சி. டபிள்யூ, கதிரைவேற்பிள்ளை தமிழ் இலக்கியத்தைச் சிறப்பாகக் கற்று அதிலுள்ள சொற்களையும் தொகுத்தார். பொருள் விளக்கத்திற்குச் சிறந்த நூல்களிலிருந்து மேற்கோள்களை நன்கு எடுத்தாண்டனர். வடமொழிப் பொருளின் மூலத்தையும் காட்டியுள்ளார். பொருள் கூறுவதில் அகர நிரல் அமைந்துள்ளது. சொற்பிறபபும் இதில் காணப்பெறும். இவற்றையெல்லாம் தொகுத்த ஆசிரியர் இது அச்சில் வெளிவருமுன் மறைந்தார். இப்பணியை மதுரைத் தமிழ்ச் சங்கம் தொடர்ந்து மேற்கொண்டது. இது சங்கத்தகராதியாக வெளிவந்தது. முதல் தொகுதி வெளியாகிப் (1910) பதின்மூன்றாண்டுகள் கழிந்து இரு தொகுதிகள்

வந்தன. இம்மூன்று தொகுதிகளில் ஏறத்தாழ 63900 சொற்கள் உள்ளன.

யாழ்ப்பாணம் குமாரசாமிபிள்ளையின் இலக்கியச் சொல்லகராதி 1914-இல் வெளிவந்தது. நிகண்டுகள், காப்பியங்கள் போன்றவற்றிலுள்ள பெயர்களுக்கு இது சிறப்பிடம் தந்துள்ளது. புதிதாக 1500 சொற்களை இதில் சேர்த்துள்ளதாகக் கூறுவர்.

**அகராதி வளர்ச்சி :** தெளிந்த நல்லகராதிகள் உருவாக்கும் நோக்கம் மேலும் வளர்ந்தது. வின்சுலோ, தரங்கம்பாடி, சங்கம் ஆகிய மூன்று அகராதிகளின் நற்கூறுகளை உட்கொண்டு, குறிப்பிட்ட விதிமுறைகளில் பொருள் கூறி, மற்றவர்கள் புறக்கணித்த சொற்பிறப்புக்கு உரிய இடம் நல்கித் தமிழ்ச் சொற்களின் சொற்பிறப்பைக் கண்டறிந்து, தக்கமேற்கோள்கள் விளங்க ஒரு பேரகராதியை உருவாக்க எண்ணினர். இந்நோக்குகளின் அடிப்படையில் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி உருப்பெற்றது.

**சென்னைப்பல்கலைக்கழகப்பேரகராதி:** சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரடரிக் நிக்கல்சனால் (Frederik Nicholson) உருப்பெற்றது வின்சுலோ அகராதியைப் புதுக்கி வெளியிடவும், போப் திரட்டிய சொற் செல்வத்தைப் பயன்படுத்தவும் எண்ணினர். சென்னைப் பல்கலைக்கழகமும் சென்னை அரசும் ஒரு முதல்தர அகராதியை வெளிக்கொணரத் திட்டமிட்டன; நாடளாவிய தமிழறிஞர்களின் துணை இதற்குக் கிடைக்குமாறு ஆவன செய்தன. இடையில், போப் இதனை வெளிநாட்டில் பதிப்பிக்கச் செய்த முயற்சி நடைபெறவில்லை. போப் திரட்டியவற்றைச் சென்னைக்குக் கொண்டு வந்தனர். ஐந்தாண்டில் முடிக்கத் திட்டமிட்டனர். சென்னைப் பல்கலைக்கழக மேற்பார்வையில் அகராதி

உருவாகத் தொடங்கியது. முதலில் மதுரையில் தொடங்கிய இப்பணி சென்னைக்கு மாறியது. சாண்டலர் (Rev, Chandler) இதன் முதல் பதிப்பாசிரியர். இதன் முன்மாதிரிப் படிவத்தை வெளிநாட்டறிஞர்களுக்கு அனுப்பி அவர்களின் அறிவுரையைப் பெற்றனர். வின்சுலோ, போப், உ. வே. சாமிநாதையர் ஆகியோர் திரட்டிய சொற்களையும் மற்ற அறிஞர்கள் பல நூல்களிலிருந்து திரட்டிய சொற்களையும் சேர்த்தனர். பொதுமக்களின் உதவியையும் இதற்கெனப் பெற்றனர். அகராதி அமைப்பைப் பல்கலைக்கழகம் ஏற்று. விரைந்து பணியை முடிக்க எண்ணியது. சாண்டலருக்குப் பின் சிலகாலம் அனவரதவிநாயகம்பிள்ளை பதிப்பாசிரியர் ஆனார். இறுதியாக 1926—முதல் வையாபுரிப்பிள்ளை பதிப்பாசிரியர் ஆகியதால் பணி விரைந்து நடைபெற்றது, பல அறிஞர்களின் கருத்துரைகளை அறிந்து பொருள் விளக்கங்களைச் செம்மை செய்து, மொத்தம் 117762 சொற்கள் கொண்ட ஏழு தொகுதிகளாக வெளியிட்டனர். தேவநேயப்பாவாணர் போன்றவர்கள் இதன் குறைகளைச் சுட்டிக்காட்டினர். எனினும் இன்றுள்ள தமிழகராதியில் மிகச்சிறந்த தனி அகராதியாக இதுவே உள்ளது. இதன் சுருக்கத்தமிழ் அகராதி ஒன்று (1955) வெளிவந்தது.

**தமிழில் ஒரு மொழி அகராதிகள்** : தமிழ்ச் சொற்களுக்குத் தமிழில் பொருள்தரும் ஒருமொழி அகராதிகள், நூற்றுக்கும் மேற்பட்ட அளவில் வெளிவந்துள்ளன. இந் நூற்றாண்டில் இதன் வளர்ச்சியை நன்கு காண முடியும். சிறிதும் பெரிதுமாகத் தமிழகராதிகள், தமிழ்க்கல்வி ஆர்வம் பெருகுதற்கு ஏற்ப வெளிவந்தன. அவற்றுள் கா. நமச்சிவாய முதலியாரின் தமிழ் மொழி அகராதி (1918) அனவரத விநாயகம் பிள்ளையின் மாணவர் தமிழ் அகராதி (1921) பர்மாவிலிருந்து இராவுத்தர் (1922) நாகுமீரா (1923) வெளியிட்ட அகராதிகள், பவானந்தம் பிள்ளையின் தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி (1925) என்பவை குறிக்கத் தக்கவையாகும். அனவரதவிநாயகம்பிள்ளையின் மாணவர்

தமிழ் அகராதியில் (1921) 26000 சொற்கள் உள்ளன. பவானந்தரின் அகராதியில் 33000 சொற்களுக்கு மேல் உள்ளன. மாணவர்க்குப் பயன்படும் அளவில் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளையின் இளைஞர் தமிழ்க் கையகராதி (1928) 8500 சொற்களுடன் வெளிவந்ததை ஒப்பிடின் இவ்வுண்மை தெரியும். பகுத்தறிவுப் போட்டிக் கென வெளிவந்த ஆனந்தவிகடன் அகராதி (1935) தனிப் பட்ட அகராதி ஆகும். விக்டோரியா தமிழ்அகராதி (1934) சூபிலி தமிழ் அகராதி(1935)என்பவை ஆங்கில அரசுக்குரிய மரியாதையைத் தங்கள் பெயரிலேயே தெரிவித்தன. கிருட்டிணசாமி பிள்ளைஎன்பவர் நவீன தமிழ் அகராதியில் 20500 சொற்கள் அமையத் தொகுத்தார். (1935) இவரே 1939—இல் தமிழமிழ்த அகராதியையும் அளித்தார்.

**கையகராதிகள்:** கழகத் தமிழகராதி 12500 சொற் களுடன் 1940-இல் வெளிவந்தது. இது மாணவரிடையே செல்வாக்குப்பெற்ற அகராதி ஆகும். தமிழகராதிகள், இந்திய நாட்டு விடுதலைக்குப் பின் பல்வேறு வகையில் வெளிவந்தன. நடராசனின் கார்த்திகேயினி புதுமுறை அகராதியும் (1949) ந. சி. கந்தையா பிள்ளையின் செந் தமிழ் அகராதியும் (1950) வெளிவந்தன. சென்னைப் பல்கலைக் கழகத்தின் சுருக்கத் தமிழ் அகராதி 1955-இல் வெளிவரினும், கோனார் தமிழ்க்கையகராதி இதே ஆண்டில் வெளிவந்து பெரும் செல்வாக்குப் பெற்றது.

**குழு அகராதி:** தனி ஒருவர் அகராதி திரட்டிய நிலையி லிருந்து கழகப் புலவர் குழு திரட்டிய கழகத் தமிழகராதி 1964-இல் உருவாயிற்று. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையின் தமிழுக்குத் தமிழ்க்கையகராதியும் (1966) மாணவரிடம் பரவியது. லிப்கோ நிறுவனம் பெரிய, சிறிய அகராதிகளை வெளியிட்டது. மணிமேகலைத் தமிழகராதி

என்பது (1979) எளிய முறையில் தயாரிக்கப் பெற்றது. ஆகும். தமிழக அரசின் வெளியீடாகத் தமிழ்-தமிழ் அகர முதலி மு. சண்முகம் பிள்ளையால் 1985-இல் வெளியிடப் பட்டுள்ளது.

**தமிழ்ப் பல்கலைக்கழகப்பேரகராதித் திட்டம்:** இந் நிலையில் (1984) தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சையில் பேரகராதி ஒன்றை நான்காண்டிற்குள் முடிக்கத் திட்டம் தீட்டியது. மு. அருணாசலம் தலைமைப் பதிப்பாளராகப் பணியேற்றார். இப் பேரகராதி சங்க கால முதல் இன்று வரையுள்ள இலக்கிய வழக்குகளையும். வட்டார வழக்கு களையும் பல அறிஞர்களின் ஒத்துழைப்புடன் திரட்டி வருகிறது. இலங்கை, மலேயா, தென்னாப்பிரிக்கா ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் பயன்படுத்திவரும் சொற்களையும் தொகுக்கிறது. இப்போதைய நிலையில் சொற்பிறப்பைப் பற்றி எண்ணவில்லை. தேவநேயப் பாவணர் தொடங்கிய செந்தமிழ்ச் சொற்பிறப்பு அகர முதலியைத் தனியே தொகுக்கும் அரசு முயற்சியும் இந்நிலையில் நடந்துவருகிறது. இத்துடன் தனித் தமிழகர முதலி ஒன்று உருவாக வேண்டும் என்ற எண்ணமும் எழுந்து, அதனை உருவாக்கும் முயற்சியும் வளர்ந்து வருகிறது.

**தமிழில் இருமொழி அகராதிகள்:** தமிழில் இரு மொழி, பன்மொழி அகராதிகள் வெளிவந்துள்ளன. ஐரோப்பியமொழிகள், கிழக்காசிய, மேற்காசிய மொழிகள் இந்திய மொழிகள்ஆகியவற்றில் பொருள் விளக்கம் தரும் அகராதிகள் என இவற்றைப் பகுக்கலாம். ஐரோப்பியர் வரவால் அவர்கள் மொழிகளின் துணையுடன் தமிழகராதி கள் பலவெளிவந்தன. குறிப்பாக ஆங்கில ஆட்சி தமிழகத் தில் நிலைத்திருந்ததால் தமிழ்-ஆங்கிலம்-ஆங்கிலம்-தமிழ் அகராதிகளின் எண்ணிக்கை மிகுதியாக உள்ளன.

**தமிழ்-ஆங்கிலம் அகராதிகள்!** 19ஆம்நூற்றாண்டில் ஐரோப்பியரால் தமிழ்-ஆங்கில அகராதிகள் தொகுக்கப் பட்டன. ஒரு சில தமிழர்களும் அவற்றைத் தொகுத்தனர். இராட்லெரின் தமிழ்-ஆங்கில அகராதி எட்டு ஆண்டுகளில் (1834-1841) உருவாயிற்று. ஐரோப்பிய அலுவலரின் பயன்பாட்டிற்கெனப் பெர்சிவலின் இரு மொழி அகராதி உரோமன் எழுத்தில் கி. பி. 1861-இல் வெளிவந்தது. அடுத்த ஆண்டு வின்சுலோவின் அகராதி மக்கள் வழக்குத் தமிழையும் சேர்ந்து வெளிவந்தது. விசுவநாதப் பிள்ளை, இலக்கியத் தமிழ் ஆங்கில அகராதியை கி. பி. 1870-இல் உருவாக்கினார்; கி. பி. 1897-இல் பெப்ரீசியசின் இரு மொழி அகராதி வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ்-ஆங்கிலக் கையகராதியை 1900-இல் டூனேயும் சுபவாக்கியமும் தொகுத்தனர். அடுத்துக் கிருட்டிணசாமி ஐயரின் கையகராதி வந்தது (1921). லிப்கோவின் தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி 1966-இலும் பாலகிருட்டிணரின் அகராதி 1976-இலும் வெளிவந்தன. வின்சுலோவின் அகராதி மறுபடியும் 1983-இல் வெளியிடப்பட்டது.

**ஆங்கிலம்-தமிழ் அகராதிகள்:** ஆங்கிலம்-தமிழ் அக ராதிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இந்நூற்றாண் டின் மத்தியிலும் மிகுதியாக வெளிவந்தன. பெப்ரீசியசின் அகராதி கி. பி. 1786-இல் இரு தொகுதிகளாக வந்தது. கி. பி. 1847-இல் வீராசாமி முதலியார் 20500 சொற்கள் அகராதி வெளியிட்டார். பள்ளி மாணவர்களுக்கென இவை பயன்பட்டன.

போப் தொகுத்த இருமொழி அகராதி (1905-6) பல பகுதிகளாக இருந்தது. பேச்சு வழக்கையும் அகராதியில் சேர்த்து அவற்றைப் பயிலும் வெளி நாட்டினர் புரிந்து கொள்ள வகை செய்தார். சாமிநாதையரின் அகராதியில் சொற்கள் 12,800க்கு மேல் இருந்தன. அதனை மேலும் பெருக்கி வெளியிட்டனர் (1905). யாழ்ப்பாணத்திலிருந்து

ஆங்கிலச் சொல் தொடர்களுக்குரிய தமிழ்ச் சொற்களை முத்துத்தம்பிப் பிள்ளை 1907-இல் வெளியிட்டார். கொழும்பில் அடிப்படை ஆங்கிலம்-தமிழ் அகராதி உரு வாயிற்று. ஆங்கிலச் சொல்லுக்கு ஆங்கிலப் பொருள், பின்னர்த் தமிழ் என்னும் வகையில் சுப்பிரமணியனின் அகராதி 1948-இல் வந்தது. இதனை ஒட்டித் தங்கவேலு வின் மணி புதுமுறை மாணவர் அகராதி 1949-இல் வந்தது.

ஐம்பதுகளில் இத்தகைய போக்கில் சில அகராதிகள் வந்தன. கா. அப்பாதுரையின் கழக ஆங்கிலத் தமிழ்க் கையகராதி (1952) மிகுந்த செல்வாக்குடன் பரவியது. லிப்கோ நிறுவனம் சிறிய, பெரிய அகராதிகளை (1959) வெளியிட்டனர். கொழும்பில் நாகலக்குமி ஆங்கிலம்-ஆங்கிலம்-தமிழ் அகராதியை அளித்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் அ. சிதம்பரநாதஞ் செட்டியாரைத் தலைவராகக் கொண்டு ஆங்கிலம்-தமிழ் அகராதி மூன்று பகுதிகளாக முதலில் வெளிவந்தது. (1963-65) யாழ்ப்பா ணத்தில் வரதர் மாணவ அகராதி 1970-இல் நாகலக்குமி நெறியில் உருவாயிற்று. பார்ன்வெல் (Parnwell) முதலா னோர் உருவாக்கிய ஆங்கிலம்-தமிழ்அகராதி ஆக்சுபோர்டு நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. இதில் மிகுதியாகப் படங்கள் உள்ளன.

**தமிழ்—பிரெஞ்சு அகராதிகள் :** கி. பி. 1750-இல் உருவான பிரஞ்சு—தமிழ் அகராதி பாரிசில் சுவடி வடிவில் உள்ளது. மேலும் பிரஞ்சு—தமிழ் அகராதி பாரிசில் கி. பி. 1831-இல் வெளியிட்டனர். கி. பி. 1845-இல் பெசுகியின் அகராதி வெளிவந்தது. இலத்தீனையும் சேர்த்து மும்மொழி யில் பொருள் காணப் பாண்டிச்சேரியிலிருந்து கி. பி. 1846-இல் ஓர் அகராதி வெளியாயிற்று. டூபூய் (Duipuis) மூசே (Mousset) தயாரித்த பிரஞ்சு—தமிழ் அகராதி பாண்டிச் சேரியில் கி. பி. 1850-இல் வெளிவந்தது. பத்தொன்பதாம்

நூற்றாண்டில் பல பிரஞ்சு-தமிழ் அகராதிகள் வெளி வந்தன. பாண்டிச்சேரிப் பகுதி, பிரஞ்சு ஆட்சியின் கீழ் இருந்தமை இத்தகைய அகராதிகள் வரக்காரணம் ஆயிற்று. டூபூய், மூசே அகராதியின் பல பதிப்புகள் 1938-இலும் 1942-இலும் வெளிவந்தன.

**தமிழ்-உருசிய அகராதி:** தமிழ்-உருசிய அகராதியைப் பியாதி கோர்சுகி, உரூதின் ஆகியோர் 1960-இல் பதிப் பித்தனர். இதில் 38000 சொற்கள் உள்ளன. இத்துடன் அந்திரோனவ் எழுதிய தமிழ் இலக்கணச் சுருக்கமும் உள்ளது. 1965-இல் அந்திரோனவ், இப்ரகீமவ், யுனானவா ஆகியோர் உருசிய-தமிழ் அகராதியை வெளியிட்டனர். இது 1960-இல் வெளிவந்த தமிழ்-உருசிய அகராதியின் தொடர்ச்சியாகும். பலதுறைகளிலுள்ள சொற்களில் நடுத்தர, கடினமான சொற்களைத் திரட்டினர். இக்கால இலக்கியத்திலுள்ள சொற்களும் இதில் உள்ளன. இதில் ஏறக்குறைய 24000 சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

**தமிழ்-இலத்தீன் அகராதி:** தமிழ்-இலத்தீன் அகராதி கள் இரண்டு, வீரமாமுனிவரால் தொகுக்கப் பெற்றன. இவற்றுடன் குரி (Gury) அகராதியும் (1867) சுந்தர சண்முகனார் அகராதியும் (1970) குறிப்பிடத்தக்கவை.

**தமிழ்-போர்ச்சுகீசிய அகராதி:** தமிழ்-போர்ச்சுகீசிய அகராதி 1879-இல் உருவாயிற்று. ஆண்டெம்டெ புரொ யென்கா (Antam de Proenca) இதன் தொகுப்பாசிரியர். இதனை மலேசியாப் பல்கலைக் கழகம் 1966—இல் வெளி யிட்டது. ரொரதேசே நூலகத்தில் மதிப்புள்ள நூலாகச் செர் குராவின் (Cerquera) தமிழ்-போர்ச்சுக்கீசிய அகராதி (185) குறிப்பிடப்பட்டுள்ளது. இராபர்ட் டி நொபிலியன் (Robert de Nobile) தமிழ்—போர்ச்சுகீசிய அகராதி 1968-இல் வெளிவந்தது.

**இசுலாம் செல்வாக்கு:** மேற்காசியாவில் அரபு நாடு களுடன் கொண்ட வணிகத் தொடர்பும் தமிழகத்தில் இசுலாம் பரவியதும் அரபு-தமிழ் அகராதிகள் தமிழகத்தில் உருவாக வாயபபளித்தன. குலாம்காதிர் நாவலர் (1902), முகம்மது அப்துல்லா (1905) ஆகியோர் இத்துறையில் அகராதிகளை வெளியிட்டனர். உவைசு, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழிலக்கிய அரபுச் சொல் அகராதியை 1983-இல் தொகுத்துள்ளார்.

**கிழக்காசியா:** கிழக்காசியாவில் தமிழர்கள் பழங்காலந் தொட்டுச் செல்லவும் குடியேறவும் வாய்ப்பிருந்தது. புள்ளப்பச் செட்டியாரின் தமிழ்-பர்மா அகராதி (1905) குறிப்பிடத்தக்கது. சதாசிவம் பிள்ளை, தமிழ்-மலாய் அகராதியைத் (1938) தொகுத்தார். மலாய்-தமிழ் அகராதியைச் சாமி (1962) வெளியிட்டார். மாணவர் மலாய்-தமிழ்-ஆங்கிலம் ஆகிய மும்மொழி அகராதியை வேலுசாமி (1964) அளித்தார். தமிழ் சிங்களம் அகராதி யைக் கதுகோலிகே (1960) தொகுத்துள்ளார். தமிழ்-நிப்போங் அகராதியும், சப்பான்-தமிழ் அகராதியும் (1942) வெளிவந்தன.

**இந்திய மொழிகள்:** இந்திய மொழிகளுள் தமிழ்-வடமொழி அகராதியினை வெங்கடேச சர்மா தொகுத் தார். வடமொழி-தமிழ் அகராதிகள் பல வெளி வந்துள்ளன. சென்ற நூற்றாண்டில் வடமொழி திரவிய நிகண்டு (1857), பதார்த்த பாசுகரம் (1878) ஆகியவை வெளியாயின. இந்த நூற்றாண்டில் வடமொழி-தமிழ் அகராதிகளைச் சீனிவாச ஆச்சாரியார் (1928), வெங்கடேச சர்மா (1930), பாபநாசசிவம் (1962) ஆகியோர் தொகுத்து வெளியிட்டனர்.

தமிழ்-இந்தி கோசம் அரிகரசர்மாவால் (1926) தொகுக்கப்பட்டது. அந்தோணிப்பிள்ளை இந்தி-தமிழ்

அகராதியைத் (1878) தொகுத்தார். அரிகரசர்மாவின் இந்தி-தமிழ் கோசம் (1925), கா. அப்பாதுரையின் இந்தி தமிழ் அகராதி (1957) போன்றவை வெளிவந்தன. இரமாபாய்சோசியின் மராத்தி-தமிழ் அகராதி (1961) வெளிவந்தது. தமிழ்-தெலுங்கு அகராதி ஒன்றைச் சேசாசார்லு 1939-இல் வெளியிட்டார். தெலுங்கு-தமிழ் அகராதியைக் கிருட்டிணசாமி ஐயர் (1925) அளித்தார்.

பன்மொழி அகராதிகள் தமிழில் வெளிவந்துள்ளன. தமிழ்-ஆங்கிலம்-செர்மன் (1869), ஆங்கிலம்-மலாய் சீனம்-தமிழ் (1824), தமிழ்-இந்துசுதானி-பர்மீயம்-ஆங்கிலம் (1886), இந்தி-மராத்தி-தெலுங்கு-தமிழ் (1964), கன்னடம் தெலுங்கு தமிழ்-ஆங்கிலம்-இந்துசுதானி (1891) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. ஆறு மொழிகளின் சொற்றொகையும் வெளிவந்துள்ளது. (1884, 1896) பொதுவாகச் சென்ற நூற்றாண்டின் இறுதியில் பல மொழிச் சொற்றொகைகள் பெரிதும் வெளிவந்தன.

அகராதிகளாய்த் தொகுக்கப் பெற்று அச்சில் வெளி வராத நூல்கள் சென்னை உ. வே. சாமிநாதையர் நூலகம் போன்றவற்றில் உள்ளன. அவற்றுள் அகநானூறு அகராதி, தலக்குறிப்புகள், திருக்குறள் பரிமேலழகர் அரும்பத அகராதி, தேவார அருந்தொடரகராதி, புலவர் வரலாறு, வாகட அகராதி போன்றவை உள்ளன.

**பண்டைய அகராதி வளர்ச்சி:** மெசபடோமியாவில் கி. மு. ஏழாம் நூற்றாண்டில் அக்காடியன் (Akkadian) சொற்களின் சிறுபட்டியல் கிடைத்தது. கிரேக்கர்களிடையே அகராதி மரபு பழங்காலத்திலேயே உருவாகியிருந்தது. அலெக்சாண்டிரியா பாம்பிலசு (Pamphilus) அகராதிக்குப் (கி. பி. 1 நூ.) பின்னர்ப் பல கிரேக்க அகராதிகள் எழுந்தன. கி. பி. 2ஆம் நூற்றாண்டில் அட்டிசிசுட்டுகளின் (Atticists) அகராதிகள் சிறப்பாக உருவாயின. இலத்தீன்

மொழியைப் பலரும் மதிப்புள்ள மொழியாகப் பயன் படுத்தினர். அம்மொழி அகராதிகள் பிற்கால ஆங்கில அகராதிகளிடையே தம் செல்வாக்கை நிலைநாட்டின. கி. மு. முதல் நூற்றாண்டில் எழுந்த வாரோ (Varro) எழுதிய புத்தகத்தில் சொற் பிறப்புக்கு மேற்கோள் காட்டி யுள்ளது குறிப்பிடத்தக்க செயல் ஆகும். இடைக்காலத்தில் பலர் அகராதியில் ஆர்வம் செலுத்தினர். அகராதியைக் குறிக்க, 'காலெபின்' (Calepin) என்ற சொல் வழங்கியது. மக்கள் தங்கள் உடைமைப் பொருளில் மதிப்புடையதாக அகராதியைக்கருதித் தம் தலைமுறையினர்க்குச் செல்வமாக விட்டுச் சென்றனர். பள்ளிகளில் மாணவர் அறிவைப் பெருக்க அகராதிகள் இருக்க வேண்டும் என்றனர். கடினமான சொற்களுக்குப் பொருள் காண இருமொழிப் பட்டியலை இடைக்காலத்தில் பயன்படுத்தினர். நூலின் வரிகளிடையே சொற்பொருளைக் குறித்தனர். இத்தகைய சொற்பொருள்களைத் திரட்டிச் சொற் கோவையாக அளித்தனர். கி.பி. 7, 8-ஆம் நூற்றாண்டுகள் முதல் இவை வழங்கி வருகின்றன.

**ஆங்கில அகராதியின் தோற்றம்** : இருமொழிச் சொற்றொகையாகப் பிரஞ்சு-ஆங்கிலச் சொற்றொகை வெளிவந்தது. காக்சுடன் (Caxton) 1480-இல் இதனை அச்சிட்டோர். அடுத்து இலத்தீன்-ஆங்கிலச் சொற்றொகை யை, சான் இசுடான்பிரிட்சு (John Stanbridge) 1496-இல் வெளியிட்டார். குழந்தைகளுக்கென ஒரு சொற்களஞ்சியம் 1499-இல் ஆங்கிலம்-இலததீன் சொற்றொகையாக வந்தது. 1530-இல் வெளிவந்த பால்சுகிரேவின் (Palsgrave) ஆங்கிலம் பிரஞ்சு சொற்றொகை மிகவும் சிறப்பு வாய்ந்தது. எட்டாம் என்றி (Henry VIII) மன்னர் இலத்தீன்-ஆங்கில அகராதி வெளியிட ஆவன செய்தார். அதனால் 1538-இல் சர் தாமசு எலியட் (Sri Thomas Elyot) அதனை வெளியிட்டார். 1573-இல் ஆங்கிலம்— இலத்தீன்-பிரஞ்சு ஆகிய மும்மொழி அகராதியைச் சான்

பேரெடு (John Baret) தயாரித்தார். இதற்கு அவருடைய மாணவர்கள் உதவினர். முதல் எதுகை அகராதி (1570) பீடர் லெவன்சால் (Peter Levens) உருவாக்கப் பெற்றது. தனி ஆங்கில அகராதியைவிட இத்தகைய அகராதிகளில் ஆங்கிலச் சொற்கள் மிகுதியாக இருந்தன.

ஆங்கிலச் சொற்களுக்கு ஆங்கிலத்தில் பொருள் தந்த சொற்றொகை, மறு மலர்ச்சியால் மேலும் வளர்ந்தது. வேதாகமத்தை எளிய ஆங்கிலேயரும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இதன் அடிப்படை நோக்கம், சொல்வடிவச் சீர்திருத்தத்தைப் பற்றிச் சான் ஆர்டு (John Hart - 1569) எண்ணினார். பள்ளி ஆசிரியர்கள் அகராதி வளர்ச்சியில் ஆர்வம் காட்டினர்; பொது அட்டவணை என 8000 சொற்களை மட்டும் திரட்டினர். எட்மண்டு கூடே (Edmund Coote) என்பவர் 1596-இல் 1400 சொற்களடங்கிய பட்டியலைப் பலவகைப்படுத்தித் தந்தார். இது 'முதல் ஆங்கில அகராதி' எனப் போற்றப் பெற்றது. 1604-இல் ஆங்கில அகராதியொன்று வெளிவந்தது. இதன் அமைப்பு கூடேயின் அகராதியைப் பின்பற்றியது. புல்லோகர் (Bullokar) தாம்தொகுத்தஅகராதியில் (1610) பல பண்டை வழக்குகளை உடுக்குறியிட்டுக் காட்டியுள்ளார். 'டிக்சனரி' என்ற சொல்லை முதலில் தம் அகராதித் தலைப்பில் அளித்தவர் காகெராம் (Cockeram-1923) ஆவர். மற்ற அகராதிகளில் காணாத சொற்களை இவர் தந்துள்ளார்.

1702-இல் அகராதிக் கலையையே முழு நேரத் தொழிலாகக் கொண்ட சான் கெர்சியின் (John Kerscy) புதிய ஆங்கில அகராதி வெளிவந்தது. காலத்திற்கு ஒவ்வாத சொற்களை இது நீக்கியதால் பலரும் விரும்பி இதனைப் பயன்படுத்தினர். ஒலிப்பு முறை குறித்து 1727-இல் அகராதி இணைப்பு ஒன்று வெளிவந்தது.

**சான்சன் (Johnson) அகராதி:** பல இலக்கிய அறிஞர்கள் ஆங்கில அகராதியின் குறையை உணர்ந்தனர். அதைப் போக்கப் பல முயற்சிகள் உருப்பெற்றன. பல ஐரோப்பிய மொழிகள் தத்தம் மொழியில் அகராதிகளை வெளியிட்டன. பிரஞ்சு, இத்தாலி மொழிகளைப் போன்று ஆங்கிலத்திலும் அகராதிகளை உருவாக்க விரும்பினர். அதனைச் சாமுவேல் சான்சன் (Samuel Johnson) தம் அகராதிப் படைப்பால் (1755) நிறைவேற்றினார். அவர்தம் அகராதித் திட்டம் 1746-இல் தொடங்கியது. அடுத்த ஆண்டு அவர் தம் திட்டம் பற்றிய சிறு தொகுப்பு வெளிவந்தது. இன்னும் அது சிறந்த வழிகாட்டியாக இத்துறையில் விளங்குகிறது. பலஇலக்கியங்களைப் படித்துச் சொற்களைத் திரட்டினார். 43,500 சொற்களை அவர் புதிதாகச் சேர்த்தார். தக்க ஆசிரியர்கள் பயன்படுத்திய தக்க சொற்களை எடுத்தார். அவர் தொகுத்த அகராதியில் 118000 மேற்கோள்கள் உள்ள நிலையே அதன் சிறப்பைக் கூறும் அது சொற்களின் பரந்த பொருளை எல்லாம் தொகுத்துள்ளது. சில விளக்கங்கள் நீண்ட சொற்களால் அமைந்திருக்கும். ஆசிரியரின் விருப்பு வெறுப்பும் சில இடங்களில் புலப்படும். அவர் காலத்தில் அவரே திருத்திய பதிப்புகள் வெளிவந்தன. பல ஆண்டுகள் அவர் அகராதி தன்னிகரற்று விளங்கியது.

**அமெரிக்க அகராதிகள்:** சொல்லொலிப்புப் பற்றிக் குறிப்பிடத்தக்க அகராதியாகப் புசானன் (Buchanan) படைப்பு (1757) உருவாயிற்று. இதனைப் பலரும் பின்பற்றினர். அமெரிக்காவில் பென்சமின் பிராங்க்லின் (Benjamin Franklin) 1751 இல் பள்ளிகளில் அகராதியின் தேவைபற்றி வற்புறுத்தி எழுதினார். அங்குச் சான்சனின் அகராதி இருக்க வேண்டுமெனப் பலரும் விரும்பினர். அமெரிக்காவில் பள்ளி அகராதியை முதல் அகராதியாகச் சாமுவேல் சான்சன் (Samuel Johnson Jr ) 1798இல் வெளியிட்டார். அமெரிக்கப் புதுச்சொற்களைத் தொகுத்த கொலம்பியா அகராதி 1800-இல் வந்தது. அமெரிக்

கியத்தைக் கொண்ட மூன்று அகராதிகள் வெளியிட நோவாவெப்சடர் (Noah Webster) திட்டமிட்டார். அதன் படி பெரிய அமெரிக்க அகராதி (1800), சுருக்க அகராதி (1806) என்பவை வெளிவந்தன. 1823—இல் இவர் மிகப் பெரிய ஆங்கில மொழி அமெரிக்க அகராதியை அளித்தார். சொற்றொகுப்பும் பொருள் விளக்கமும் இதன் சிறப்பை நிலைநாட்டின.

**வரலாற்றுப் பார்வை:** பிரான்சு பாசோ (Franz Passow) என்பவர் 1812-இல் மேற்கோள்களைக் கால வரிசைப்படி தருவதை வற்புறுத்தி எழுதினார். ஐரோப்பிய மொழிகளில் சொற்பிறப்பியல் நன்கு வளர்ந்தது. கிரிம் (Grimm) உடன் பிறந்தவர்களின் செருமன் அகராதி முதற் பகுதி பெருமதிப்புடன் 1852-இல் வெளிவந்தது. இங்கிலாந்தில் வரலாற்றுப் பார்வை முதலிடம் பெறத் தொடங்கியது. வரலாற்று அகராதி தேவை என அறிஞர் கள் உணர்ந்தனர். 1842-இல் தோன்றிய சொற்பிறப்புக் கழகம் ஆங்கில அகராதியின் குறையைப் பல அறிஞர்கள் வாயிலாக உணர்த்தியது; ஒரு புதிய ஆங்கில அகராதியை உருவாக்கத் திட்டமிட்டது. 1879-இல் இதன் ஆசிரியராக முர்ரே (Murray) அமர்ந்தார் பலஅறிஞர்கள் இப்பணிக்குத் தாமே முன்வந்து உதவினர். அறுபது இலட்சம் பதிவுகளில் 18,27,306 பதிவுகளையே அச்சிட்டனர். 1884-இல் முதல் தொகுதி வெளிவந்தது. பிராட்லே (Bradley) கெரெய்கி (Grargie), ஆனியன்சு (Onions) ஆகியோரும் ஆசிரியராகி இதனை உருவாக்கினர். 1928-இல் முழுதும் வெளிவந்தது. பின்னிணைப்பு 1933-இல் வந்தது. இது மிகச் சிறந்த அகராதி என்ற உணர்வு நிலைநாட்டப் பெற்றுள்ளது. ஆக்சுபோர்டு ஆங்கில அகராதி என்ற பெயர், அகராதி உலகில் ஈடும் இணையுமின்றி விளங்குகிறது. பல தொகுதி களாக உள்ள இதனைச் சுருக்கி இரு தொகுதியாக்கித் துணைக்கு உருப்பெருக்கி ஆடியும் உடன் தந்துள்ளனர். இதுபோன்று மற்ற அகராதிகளும் (தேசிய அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு) எழுபதுகளில் வெளிவந்துள்ளன.

**அகராதிப் போர் :** 1828-க்குப்பின் அமெரிக்காவில் அகராதிப் பணி இடையீடின்றி வளர்ந்தது. 'ஒரு அகராதிப் போரே' நடைபெற்றது. வெப்சுடர் (Webster), உர்செசுடர் (Worcester) குழுவினர் இதில் முதலிடம் பெற்றனர். இறுதியில் வெப்சுடர் மதிப்பு உயர்ந்தது. உர்செசுடரின் அகராதியில் (1846) பல புது வழக்குகள் காணப்பட்டன. மெரியம் குழுமத்தார் (Merriam Co.) அகராதிப் போரில் ஆர்வம் பூண்டு திருத்தமுற்ற வெப்சுடர் அகராதியை எங்கும் பரப்பினர்.

சிறந்த அகராதிகளில் ஒன்றான விட்னேயின் (Whitney) செஞ்சுரி அகராதியின் 24 பகுதிகள் 1889 முதல் 1891 வரை வெளிவந்தன. இவ்வகராதி கலைக் களஞ்சியம் போன்று செய்திகளைக் கொண்டுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் காப்மன் பங்க் (Kauffman Funk) அகராதியையும் சேர்த்து நான்கு நல்ல அகராதிகளை அமெரிக்கா வெளியிட்டது.

**ஆக்சுபோர்டு** (Oxford) **ஆங்கில அகராதிகள்:** இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆக்சுபோர்டு ஆங்கில அகராதிப்பணி ஓரளவு முழு வடிவு பெற்றது. வணிக நோக்கில் இதன் சுருக்க அகராதி 1911-இல் வெளி வந்தது. கல்லூரி மாணவர்க்கெனப் பல ஆங்கில அகராதி கள் வெளிவந்தன. ஆக்சுபோர்டு ஆங்கில அகராதியின் வரலாற்றுக் கொள்கைகளைப் பல சிறப்பகராதிகளும் பின்பற்றின.

அமெரிக்க ஆங்கிலம் பற்றிய அகராதிகள் (1938-44) வெளிவந்தன. அமெரிக்க நாட்டில் நேர்ந்த மொழி மாற்றம் அடங்கிய அமெரிக்க ஆங்கிலச் சிறு அகராதி அமெரிக்காவில் உருவாகிய கலைச்சொற்களுடன் 1951-இல் தோன்றியது.

சிறப்பு அகராதிகளில் குறிப்பாக ஆங்கிலப் பேச்சு மொழி அகராதி, ஆறு தொகுதிகளாக (1898-1905) வெளி வந்தது. இசுகீடின் (Skeat) ஆங்கில மொழிச் சொற்பிறப்பு அகராதி, 1881-இல் வெளிவந்து 1907-இல் மேலும் செப்பஞ் செய்யப் பெற்றது. ஆக்சுபோர்டு ஆங்கிலச் சொற்பிறப்பு அகராதி ஆனியன் சால் 1966-இல் வெளிவந்தது. எர்னசுடு கிளெயின்சு (Ernest Kleins) வெளியிட்ட ஒப்பில்லா இரு தொகுதிகளில் ஆங்கில மொழிச் சொற்பிறப்பு விளக்க அகராதி 1966-67-இல் வந்தது. கனடா மொழிச் சிறப்புக் கூறுகளைத் தொகுத்து வால்டர் ஆல்விசு (Walter-Alvis) 1967இல் அளித்தார்.

**அமெரிக்க அகராதி வளர்ச்சி:** அமெரிக்காவில் இடைநிலை அகராதிகளில் 18000 முதல் 25000 பதிவுகளமையச் சில அகராதிகள் உருவாயின. இரண்டம் அவுசு (Randem House) அகராதி (1966) இதில் குறிப்பிடத் தக்கது. கல்லூரிக்கெனப் பெரும் பணம் செலவீட்டுப் பல அகராதிகள் அமெரிக்கப் பதிப்பாளர்களால் தயாரிக்கப் பட்டன. கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றின் கல்வி நிலைக்கேற்பத் தரமுள்ள அகராதிகள் உருவாயின. கிளாரென்சு பார்ன்ஆர்ட்டு (Clarance Barn hart) அமெரிக்கக் கல்லூரி அகராதி (1947) வெப்சுடா நியூ ஓர்ல்டு (Webster's New World) அகராதி (1953) போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'வெப்சுடர்' என்ற பெயர் பற்றிய வழக்கும் அமெரிக்காவில் நடைபெற்றது. பல அமெரிக்க அகராதிகள் பல்வேறு மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் வெளிவந்தன. 1961-இல் வெளிவந்த அமெரிக்க மரபுச் சொல் அகராதி அவற்றுள் ஒன்றாகும்.

**அகராதி வகைகள்:** தமிழகத்தில் கல்விமுறை ஐரோப்பியர் வருகையாலும் ஆங்கில ஆட்சியாலும் மாறியது. புதிய கல்வி முறைக்கு ஏற்ற துணைக் கருவியாக

அகராதி பயன்பட்டது. இவ்வகராதி மொழியகராதி, கலைக்களஞ்சியம் என இரு பிரிவுகளாகப் பகுக்கப்பெறும். சொற்பொருளை விளக்கும் மொழியகராதியை வரலாற்று அகராதி, இக்கால விளக்க அகராதி என இருவகைப் படுத்துவர்.

வரலாற்று அகராதி, சொல்வடிவம் பொருள் முதலிய வற்றின் வளர்ச்சிக்கு முதலிடம் தரும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குட்பட்ட சொல் வடிவிலும் பொருளிலும் காணும் மாற்றங்களைப் பதிவு செய்வது வரலாற்றுமுறைப் பொருள் அகராதி ஆகும். சொற்களின் பிறப்பைக் கண்டறிவது சொற்பிறப்பியல் அகராதி ஆகும்.

**வரலாற்று நிலை:** தமிழில் வரலாற்று முறைப் பொருள் அகராதியை உருவாக்கும் முயற்சிகள் தோன்றின. எனினும் அது முழுமை பெறவில்லை. பல்கலைக்கழகங் களும் ஒருசில தனிப்பட்ட அறிஞர்களும் இத்துறையில் ஈடுபட்டு வருகின்றனர். சொற்பிறப்பினைக் கண்டறிய உடன்பிறப்பு மொழிகளை ஒப்பிட்டு ஆய்வர். சில அகராதிகளில் இவ்வொப்பியல் பண்பிற்கு முதலிடம் நல்குவர். இன்றுள்ள ஒப்பியல் அகராதியில் பல்லாசு (Palias) தொகுத்த உலக மொழிகளில் ஒப்பியல் சொற்றொகை (1787-89), அகராதி (1790-91) என்பவை பழைமையானவை. 1868-இல் ஆசிய மொழிகளின் ஒப் பியல் அகராதியை அண்டர் (Hunter) வெளியிட்டார் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தில் கால்டுவெல் (Caldwell) சொற்பிறப்பு, ஒப்பியற் கூறுகளைக் கூறியுள் ளார். நீர்வேலி சங்கரபண்டிதரின் தாது மாலை (1908) வடமொழி வேர்களைத் தமிழில் காட்டும். காலின்சு (Collins) இவ்விரு கூறுகள் பற்றியும் ஆய்ந்துள்ளார் (1919-1926). தமிழில் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி இவ்விரு கூறுகளையும் சிறப்பாக விளக்கும் பெருமையுடையது எனலாம். உடன்பிறப்பு நிலையும்

அண்மை வழக்கும் இதில் விளக்கப் பெறும் உலக மொழிச் சொற்களின் வேர், தமிழில் உள்ளதென ஞானப்பிரகாசர், தேவநேயப் பாவாணர் போன்றவர் கருதினர். ஒப்பியல் கூறு வெளிப்பட இராமகிருட்டிணையாவின் (1944) நூல் வெளிவந்தது. இத்துறையில் பர்ரோவும் (Burrow) எமெனோவும் (Emeneau) 1961-இல் வெளியிட்ட திராவிட சொற்பிறப்பு அகராதி (DED) தனிச் சிறப்புடையது. இதுபற்றி ஆந்திரானேவ், ஆசர், பிலியோசா, மார் போன்றவர்கள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்தனர். இவ்வகராதியின் பின்னிணைப்பு 1968-இல் வெளிவந்தது. சொற் பிறப்புக் குறிப்புகள் 1972 இல் வெளிவந்தது. இதனால் இத்துறை நன்கு வளர்தற்கு வாய்ப்பேற்பட்டது. தமிழிலிருந்து ஆங்கிலத்திற்குச் சென்ற சொற்கள் பற்றி ஞானகிரி ஓர் அகராதி (1972) வெளியிட்டார். தேவநேயப் பாவாணரின செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம் உருவாகிவருகிறது (1985).

**விளக்க நிலை:** இக்கால விளக்க அகராதியைப் பொது, சிறப்பு என இரண்டாகப் பகுப்பர். எல்லாச் சொற்களுக்கும் பொதுவாகப் பொருள் வரையறுப்பது பொது அகராதி, சொல்லின் குறிப்பிடத்தக்க சிறப்புப் பகுதியை மட்டும் விளக்குவது சிறப்பகராதி.

பொது அகராதியில் தகுதி வழக்கை மட்டும் விளக்கும் அகராதியை நிலைமொழி அகராதி என்பர். ஒரு மொழியில் வழங்கும் கிளைமொழி, குறுமொழி திசைவழக்கு, கொச்சை வழக்கு, துறைவழக்கு ஆகிய எல்லா வழக்குச் சொற்களையும் விளக்குவது பெருவிளக்க அகராதி எனப் பகுப்பர்

அகராதி மோனைக்ககராதி எதுகை (17—நூ.) தமிழில் வெளிவந்த முதல் நிலைமொழி அகராதி ஆகும். நிகண்டுகளில் காணும் சொற்களை விளக்குவது பத்துச் சொல்

அகராதி, 1850-இல் அண்ணாசாமி பிள்ளையின் ஒரு சொல் பல்பொருள் விளக்கம் இவ்வகையில் குறிப்பிடத்தக்க அகராதியாகும். இதனைத் தொடர்ந்து யாகப்பப்பிள்ளையின் கடினசொல் அகராதி (19-நூ.), சுன்னாகம் குமாரசாமி பிள்ளையின் இலக்கியச் சொல்லகராதி (20.நூ.) ஆகியவை வெளிவந்தன.

17-ஆம் நூற்றாண்டில் எழுந்த வைணவவுரை அருஞ்சொல் அகராதி, பெருவிளக்க அகராதிக்குத் தக்க சான்று. ஐரோப்பியர் தமிழில் தொகுத்த அகராதிகளும், அவற்றைப் பின்பற்றி மற்றவர் தொகுத்தவையும் இத்துறைக்குரியன. வீரமாமுனிவர், பெப்ரிசியசு, இராட்லர் போன்றவர்களின் அகராதிகளில் அன்றாட வாழ்வில் வழங்கும் தமிழ்ச் சொற்களும், தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்களும் தொகுக்கப் பெற்றுள்ளன. இவ்வகை அகராதிகள் தமிழில் மிகுதியாக உள்ளன.

**சிறப்பகராதிகள்:** தமிழில் வெளிவந்துள்ள சிறப்பகராதிகள் பலவகைப்படும். இதுவரையில் வெளிவந்தவற்றைச் சொற்சேர்க்கை அகராதி, மரபுச் சேர்க்கை அகராதி, விதிப்பு நிலை அகராதி என மூவகைப் படுத்துவர்.

சொற்சேர்க்கை என்பது பேசுவோர் விருப்பிற்கேற்ப எவ்விதக் கட்டுமின்றி அமையும். இத்தகைய பண்பு கொண்டு அமையும் அகராதிகள் பலவாகும்.

**கிளைமொழி அகராதி :** ஒரு மொழியில் காணும் பல்வேறு கிளை மொழிகளை அடிப்படையாகக் கொண்டு மொழி வேறுபாட்டை விளக்கக் கிளை மொழி அகராதிகள் இத்துறையில் வெளிவந்தன. வீரமாமுனிவரின் தமிழ் இலத்தீன் அகராதி (1882), தமிழ்க் கிளை மொழிகளை விளக்கும். போப் தொகுத்த அகராதியின் ஒரு பகுதி

வட்டார வழக்குகளைத் தந்துள்ளது. கி.இராசநாராயணன் தொகுத்த அகராதி திருநெல்வேலி வட்டார வழக்கை விளக்கும்.

**கலைச்சொல் அகராதி:** பல துறைகளில் வழங்கும் கலைச்சொற்களைத் தொகுத்துக் கலைச்சொல்லகராதித் தொகைகள் தமிழில் வெளிவந்துள்ளன. அரசு அலுவலகக் கடிதப் போக்குவரவு பற்றிய தொகை அகராதியை இலங்கை அரசு (1894) வெளியிட்டது. அவ்வரசு இத்துறையில் இந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலும் சில நூல்களைத் தொகுத்துள்ளது. மர இனப் பெயர்கள் பற்றிப் பிரெஞ்சில் சென்ற நூற்றாண்டில் தமிழ்த் தொகைஅகராதி வெளிவந்தது மருத்துவம், விலங்குநூல், அளவை நூல் பற்றிய கலைச்சொல் தொகை அகராதிகள் இலங்கையிலும் தமிழகத்திலும் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது. லூசிங்டன் (Lushington) 1915-இல் தொகுத்த மர இனப் பெயர்களுள் தமிழில் உள்ளவற்றையும் காணமுடியும். புத்த மதச் சொற்களை 1900 இல் உ. வே. சாமிநாதையர் தனியாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

நாட்டு விடுதலை இயக்கத்தில் நாட்டு மொழிகள் வளர்ச்சி பெறும் இயக்கம் வளர்ந்ததால், தமிழில் கல்வி வளர வேண்டுமென்ற இயக்கத்தால், பல கலைச்சொல் அகராதிகள் எழுந்தன. கலைச்சொற்கள் தொகுதியைச் (1936) சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டது. சென்னை, தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் ஆட்சிச் சொல் அகரவரிசையை (1941) வெளியிட்டது. இந்திய விடுதலைக்குப் பின் மக்களாட்சி மலரத் தமிழ்நாடு அரசு பல கலைச் சொற்றொகைகளைப் பல துறைகளில் வெளியிட்டது. 'கலைக்கதிர்' வெளியீடுகள் அறிவியல் கலையியல் துறைகளில் கலைச்சொற்களைத் தமிழில் உருவாக்கின. இந் நூற்றாண்டு அறுபதுகளில் தமிழக அரசின் போக்குவரவு,

கூட்டுறவு, சட்டம், புள்ளிவிவரம், வருவாய், வேளாண்மை போன்ற துறைகளின் சிறப்புச் சொற்கள் துணை அகராதிகள் வெளிவந்தன. வி. டி. பண்டிதர் (1913), மத்தியாசு (1976), வேலாயுதம் (1940), இராமலிங்கனார் (1960) போன்ற தனிப்பட்ட அறிஞர்கள் முறையே தாவர இயல், கணிதம், பொதுவியல், ஆட்சியியல் துறைக்குரிய கலைச் சொற்களைத் திரட்டி வெளியிட்டனர். இவ்வாறு தனிப் பட்டவரும் தமிழக அரசும் சில நிறுவனங்களும் கலைச் சொற்களைத் தொகுத்துச் சிறப்பகராதிகள் வெளியிடப் பாடுபட்டுள்ளனர். தமிழ்ப் பல்கலைக் கழகம் அறிவியல் கலைச்சொல்லாக்கப் பணியில் ஈடுபட்டுள்ளது.

**நூல் அடைவுகள்:** சிறப்பான நூல்களில் பயன்பட்ட சொற்களைக் கண்டறிய நூல் அகராதிகள் தோன்றின. இவற்றில் ஒரு நூல் அல்லது பல நூல்கள், குறிப்பிட்ட காலத்தில் வெளிவந்த நூல்கள் அல்லது குறிப்பிட்ட வகை நூல்கள் பயன்படுத்திய சொற்களைத் தொகுப்பர். சொற்கள் மட்டுமன்றிக் கருத்துகளையும் அவை பயின்று வரும் இடக்குறிப்புடன் அளிப்பர். இந்நிலையில் காணும் அகராதிகளை முறையே சொற் குறிப்பு அகராதி, பொருள் குறிப்பு அகராதி என்பர். நூலில் காணும் பெயர்கள், அருஞ்சொற்கள் அவை பயன்பட்ட இடங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுவது சொல்லடைவு. 1886-இல் போப் திருக்குறளுக்குத் தனி அகராதியும் சொற்குறிப்பு அகராதியும் தொகுத்தார். இந்நெறியில் இவர் நாலடியாருக்கும் திருவாசகத்திற்கும் நூல்அகராதிகள் வெளியிட்டார். இத்தகைய அகராதிகள் வளர்வதற்குரிய செய்திகளை உ. வே. சாமிநாதையரின் பதிப்புகளில் காணும் அடிக்குறிப்புகள், அருஞ்சொல் அகராதிகள் ஆகியன அளித்தன. 1924-இல் மார்க்கசகாயம் செட்டியார் தொகுத்த திருக்குறள் சொற்குறிப்பு அகராதியைத் தொடர்ந்து, சாமிவேலாயுதம் திருக்குறள் சொல்லடைவை முழுமையாக அளித்தார். (1952) திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகத்தில் வி. அய்.

சுப்பிரமணியத்தின் நேர்ப்பார்வையில் பல சொல்லடைவு கள் உருவாக அவருடைய புறநானூற்றுச் சொல்லடைவு வழி காட்டியது. அதைப் பின்பற்றிச் ச. வே. சுப்பிர மணியத்தின் சிலப்பதிகாரச் சொல்லடைவும் இளைய பெருமாளின் ஐங்குறுநூற்றுச் சொல்லடைவும் வெளி வந்தன. கம்பராமாயணம் (வேலவன் கோவிந்தன்குட்டி), பெரிய புராணம் (வீராசாமி), பெருங்கதை (இளவரசு), வில்லிபாரதம் (குற்றாலம்), கல்வெட்டுகள் (பன்னீர்ச் செல்வம்) ஆகிய பெருநூல்களின் சொல்லடைவுகளும் வேறு பல தமிழிலக்கியங்களின் சொல்லடைவுகளும் அறுபதுகளில் தொகுக்கப்பெற்றன. அண்ணாமலை, மதுரை காமராசர் பல்கலைக்கழகங்களும் இத்துறையில் ஈடுபட்டன.

**பொருள் விளக்க அகராதிகள்:** பொருள் விளக்க அகராதிகளில் மேற்கோள் விளக்க அகராதிகள் சில வெளி வந்தன. தொல்காப்பியப் பொருளதிகாரம் (நாகமணி), திருக்குறள் (தாமோதரன்) ஆகிய நூல்களுக்கு இத்தகைய அகராதிகள் உருவாயின. தேவார ஒளி நெறி, திருவாசக ஒளி நெறி. திருக்கோவையார் ஒளி நெறி போன்றவற்றைப், பொருள் விளக்கம் பெறச் செங்கல்வராயபிள்ளை தொகுத் துள்ளார். மர்ரேக்குழுவின் பாட்டும் தொகையும் (1958) குறிப்பிடத்தக்கது. பல மாவட்டங்களின் ஊர்ப் பெயர் களைச் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொகுத்து வெளியிடுகிறது.

**மரபுச் சேர்க்கை:** மொழியில் நிலைத்து நிற்கும் மரபுச் சேர்க்கைகளைத் தொகுத்துத் தனி அகராதிகளை வெளி யிட்டனர். இத்துறையில் யாழ்ப்பாணப் புத்தகச் சங்கம் ஆங்கிலம்-தமிழ் மரபுச் சேர்க்கைகளைத் தொகுத்தளித்தது (1841). இதனை ஒட்டிக் கிறித்துவச் சங்க அச்சகம் ஆங்கிலம்-தமிழ் மரபுத்தொடர் கொண்ட நூலை 1881-இல் வெளியிட்டது. மொழிபெயர்க்க உதவும் வகையில் தமிழ் மரபுத் தொடர்களை இராமசாமி தீட்சிதர் 1900-இல்

வெளியிட்டார். உவமை அகர வரிசை, மரபுத்தொடர் அகர வரிசை எனும் நூல்கள் இத்துறையில் வெளிவந்தன. பூந்துறையானின் மரபுத் தொடர்களும், சொற்றொடர் களும் (1977) இங்குக் குறிப்பிடத்தக்க நூலாகும்.

**பழமொழி:** பழமொழி அகராதியைப் பெர்சிவல் 1842-இல் வெளியிட்டார். இது மேலும் திருந்திய நிலையில் வெளியிடப் பெற்றது. ஏகன் (Heaghen) என்பவர் தமிழ்-பிரெஞ்சு பழமொழி அகராதியைத் தொகுத்தார். (1858). பழமொழிகளைப் பலவகையாகப் பகுத்துச் சென்சன் வெளியிட்டார். இத்துறையில் இலாசரசு (Lazarus) வெளியிட்ட பழமொழி அகராதி (1894) சிறப்புடைய நூலாகும். மேலும் அனவரத விநாயகம் பிள்ளை, நீலாம்பிகை அம்மையார், கோலார் பெருமாள், திருமதி செயா மீனாட்சி சுந்தரம் போன்றவர்கள் இவ்வகை அகராதிகளை வெளியிட்டுள்ளனர். மாசுகோவிலிருந்து ஒரு பழமொழி அகராதி (1962) வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

**ஒருபொருட் பன்மொழி முதலியன:** ஒரு பொருட் பன்மொழி அகராதிகளில்-இராசகோபால முதலியாரின் தொகுப்பகராதி (1862), சங்கரநாராயண செட்டியார் தமிழ்-ஆங்கில மொழி அகராதி (1908), மணி அகராதி (1934) ஆகியவை இத்துறையில் குறிப்பிடத்தக்கன. எதிர்ச் சொல் அகராதி, அடுக்கு மொழி அகராதி; ஐம்பொறி அகராதி, பலதெய்வங்களுக்குரிய அடைமொழி அகராதிகள் போன்றவற்றை மு. சதாசிவம் அண்மையில் தொகுத்துள்ளார். எழுத்து வேறுபாடுகளைக் காட்டும் புதுமுறை அகராதியை நடராசன் வெளியிட்டார் (1949). சிலேடை அகராதியை இராமசாமிப் புலவர் (1960) வெளியிட்டார். மக்கட் பெயர், இல்லப் பெயர், முசுலிம் பெயர் ஆகியவற்றையும் தொகுத்துத் தனித் தனியாக வெளியிட்டுள்ளனர்.

**விதிப்பு நிலை:** விதிப்பு நிலை அகராதிகளைப் பயிற்று நிலை, வரிவடிவம், ஒலிப்பு, எதுகை மோனை என நான்கு வகைப்படுத்துவர். ஆங்கிலம்-தமிழ் ஒலிப்பு நிலை குறித்து அங்கடெல் (Anketell 1888) ஓரகராதி வெளியிட்டார். மார்ட்டினே (Martinat) என்பவர் தமிழ்-பிரஞ்சு ஒலிப்பகராதியைத் தொகுத்தார். (1890-97) தமிழ்-ஆங்கிலம், ஆங்கிலம்-தமிழ் ஒலிப்புப் பற்றிய அகராதி இலங்கையில் (1932) வெளிவந்தது. அப்பாய் செட்டியாரின் எதுகை மோனை அகராதி 1938-இல் தொகுக்கப் பெற்றது.

**அகராதி அமைப்பு:** அகராதியில் ஒரு மொழியின் சொற்கள் தொகுக்கப் பெறுகின்றன. சொற்களைப் பதிவு செய்யும்போது சொல் விளக்கக் கூறு முதலிலும் பொருள் விளக்கக் கூறு பின்னரும் அமையும்.

**சொல் விளக்கக் கூறு:** இதில் பதியப் பெற்ற தலைச் சொல், அதன் ஒலிப்பு முறை, இலக்கணக் கூறு, சொற் பிறப்பு, உடன்பிறப்பு மொழிகளின் ஒப்புமைக் கூறு ஆகியவை அமையும்.

**தலைச் சொல்:** பெயர் வினை ஆகிய சொற்களுக் குரிய அடிப்படை வடிவம் தலைச் சொல்லாக இடம் பெறும். தொடக்க நிலையில் இத்தகைய அடிப்படை வடிவம் தமிழ் அகராதிகளில் தக்க முறையில் அமையவில்லை. வின்சுலோ தமிழ்-ஆங்கில அகராதி (1862) நீண்ட சொற்றொடர்கள், முடியாத் தொடர்கள் போன்றவற்றைத் தலைச் சொல் லாகத் தந்துள்ளது. இக்குறை சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியில் நீக்கப் பெற்றது. தமிழல்லாத பிறமொழித் தலைச் சொற்களை உடுக்குறியிட்டுப் பெப்ரீசியது அகராதி (1779) காட்டும். ஒப்புருச் சொற்களைப் பிரித்துக் காட்ட அரபு எண்களைப் பயன்படுத்தினர் (மா$^1$மா$^2$ ...) பேரக ராதியே இம்முறைக்கு வழிகாட்டியது.

**ஒலிப்பு முறை:** ஒலிப்பு முறை பற்றி விளக்கமில்லா வீடினும் எழுத்துப்பெயர்ப்பு முறை சில அகராதிகளில் சுட்டப் பெறும்.

**இலக்கணக் கூறு:** இலக்கணக் கூற்றினை இராட்லர், வீன்சுலோ அகராதி போன்றவற்றில் காணலாம். வினைப் பகுப்புமுறையைப் பல நிலைகளில் தமிழ் அகராதிகள் பயன் படுத்தியுள்ளன. சதுரகராதியில் தொழிற் பெயர் வடிவமும், பெப்ரிசியசில், கிரால் முறைப்படி மென்மை, இடைமை, வன்மை வடிவங்களும் காணப்பெறும். இராட்லெரில் நிகழ் காலத்தை ஒட்டி மற்றக் காலத் திரிபுகள் அமைந்துள்ளன. வின்சுலோவில் வினைப் பகுதிகளை ஒட்டி முற்றெச்ச வடிவங்கள் காணப்பெறும். சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி வினையடிகளை 13 வகைப்படுத்திக் காட்டும். சொற்பிறப்பு முறையைப் பொருள் விளக்கத்தின் முன்னோ பின்னோ அளிப்பர். இது, வின்சுலோவில் பொருள் விளக் கத்தின் முன்னரும் காணப்பெறும்.

**பொருள் விளக்கம்:** தலைச் சொல்லின் பொருள் விளக்கப் பகுதியில் பொருள் வரையறை, மேற்கோள், குறிப்பீடு, படம் ஆகியவை இடம் பெறும.

**பொருள் வரையறை:** பொருள் வரையறை செய்யும் போது எல்லாவகையிலும் பொருள் நிறைவுடையதாய் அமைதல் வேண்டும். அது மிகைபடவோ குறைபடவோ அமைதல் கூடாது. எளிய சொற்களில் பொருளை அறுதி யிட்டுக் கூற வேண்டும். பொருள் வரையறையில் செப்ப முடைய அகராதியே சிறந்த அகராதி.

**மேற்கோள:** பொருள் தெளிவு பெறவும், சொல்வழக்கு உறுதி பெறவும் மேற்கோள் அமையும். இதற்கு இலக்கிய வழக்கும் பேச்சு வழக்கும் பயன்படும். வெளிநாட்டார் தமிழக மக்களுடன் பழகப் பேச்சுவழக்கிற்கே முதலிடம் அளித்தனர். சிறுபான்மை மேற்கோள்களை இலக்

கியத்திலிருந்து கொண்டனர். சங்க அகராதி விரிந்த அளவில் இலக்கிய மேற்கோள்களை அளித்தது. அதனையும் விஞ்சிய நிலையில் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி உள்ளது.

**குறிப்பீடு:** ஒரு சொல் எத்துறையைச் சார்ந்தது, எப் பகுதி மக்கள் அதனைப் பேசுகின்றனர் என்பன குறித்து அறியத்தக்க செய்திகளைக் குறிப்பது குறிப்பீடு ஆகும். பேச்சு வழக்கு, குறுமொழி, அருகியநிலை, வீழ்ந்த வழக்கு முதலியவற்றைக் குறிக்கும். இசை, மருத்துவம், விலங்கியல் போன்ற துறைகளுக்குரிய சொல் எனவும் குறிக்கும்.

**பட விளக்கம்:** பார்த்ததும் விளங்கும் வகையில் படங்களையும் சில அகராதிகள் பயன்படுத்தும். இராம நாதன் (1909) எதிராசுலு நாயுடு (1915) ஆகியோர் வெளி யிட்ட அகராதிகளில் சொல் விளக்கப் படங்கள் உள்ளன. இன்று மாணவர்க்கு வெளியிடும் சில அகராதிகளில் படங் கள் உள்ளன.

**சொல் வைப்பு நிலை:** சொல் வைப்பு நிலை அகராதி கள் பொதுவாக அகரநிரலில் அமையும். முதலில் உயிரும் பின் மெய்யும் கொள்வர். வின்சுலோ போன்றவர்கள் உயிரை அடுத்து உயிர்மெய்யைக் கொள்வர். சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி மெய்க்குப் பின்னரே உயிர் மெய்யைக் கொண்டுள்ளது.

**பொருள் வைப்பு நிலை:** பொருள் வைப்பு நிலை யிலும் அகர நிரலைப் பின்பற்றுவதும் உண்டு. இதனைச் சதுரகராதியில் காணலாம். வரலாற்று முறையிலும், அவ் வாறு இயலாத இடங்களில் அளைவை முறையிலும், பிற மொழிச் சொற்பொருளுரைக்க எது எளிய முறையோ அம் முறையிலும் சென்னைப் பல்கலைக்கழக அகராதி பொருள் உரைக்கும் நெறியைப் பின்பற்றியுள்ளது. ஆக்சுபோர்டு

வரலாற்று முறைப் பேரகராதி, டெக்கான் கல்லூரியில் உருவாகிவரும் வடமொழி வரலாற்று முறைப் பேரகராதி இம்முறைக்குத் தக்க எடுத்துக்காட்டுகளாம்.

**நிலைமொழிக் கூறு:** இடைக்காலத்தில் உரோமானிய மொழிகளில் இலத்தீன் சொற்கள் பல நிலைகளில் கலந்திருந்தன. மறுமலர்ச்சி ஏற்பட்ட பின் இந்நிலை மாறியது. தூய்மைப் போக்கும் பேச்சு மொழிப் போக்கும் குறிப்பாகக் கிரேக்க மொழியில் காணப்பட்டன. இருமொழி நிலை அரசியற் கொள்கைக் குறியீடாகவும் விளங்கியது. தூய்மைப்போக்கில் பழைமை உணர்வு பெருகியது. பெரும்பான்மை மக்கள் நிலை பேச்சுமொழிப் போக்கில் சென்றது. இவ்விரு வேறுபாடுகள் கிரேக்க அகராதிக் கலையிலும் தலைதூக்கின. பேச்சு வழக்குச் சொற்களைத் தனியே தொகுத்தனர். கிரேக்கப்பேச்சு மொழி வரலாற்று அகராதி 1933-இல் வளர்ச்சியுற்றது. செய்திப் பரிமாற்றத்திற்கு மக்கள் பேச்சு வழக்கையும் இணைத்தனர். இந்நிலைக்கு இருமொழி அகராதிகள் பெரிதும் உதவின (கிரேக்கம்-இத்தாலி 1709; கிரேக்கம்-பிரஞ்சு 1882).

செவ்வியல் (பைசாண்டைன்) மொழியினை அறிவியல், சட்டம், அரசியல், இதழ்கள் ஆகியவை பயன்படுத்தின. தூய்மைப்போக்கு மக்களின் பேச்சு மொழியிலிருந்து வேறுபட்டிருந்தது. சொற்கள், ஒலிப்பு முறை ஆகியவை வேறுபட்டிருந்தன. இதில் பேச்சு வழக்கு இலக்கிய வழக்கு என்ற மாறுபட்ட இரு நிலைகள் காணப்படுகின்றன. எழுத்து நிலையில் இலக்கியம், பண்பாட்டுநிலை ஆகியவற்றை மனத்தில் கொண்டு பல்வேறு எண்ணம், விருப்பம், உணர்வு இவற்றைச் சுட்டும் ஒருபொருள் பல சொற்களை அகராதி திரட்ட வேண்டும்.

நிலைமொழிக்கும் பேச்சு மொழிக்கும் அடிப்படையாக விளங்கும் கூறுகளை அறிந்து அச்சொற்களையும் தொகுக்க

வேண்டும். நிலைமொழி என்பது வட்டார மொழியுடன் வேறுபட்டு விளங்கும். இதனால் பேச்சுமொழி ஒன்றினைச் சரியானது என ஏற்கும் போது 'நிலைபேறு' உருவாகிறது. இதனால் ஒலிப்பு முறை, சொல்வடிவம்பற்றி அறியவும் நிலைத்த சொற்களை ஏற்கவும் இயலும்.

இக்கால அகராதியை இந்நிலையில் உருவாக்க எண்ணும்போது மரபையும் பழைய அகராதிச் சொற்களையும் கருத்தில் கொள்கின்றனர். பின்னர்ப் பேச்சு வழக்கில் காணும் சொற்கள் அகராதியில் உள்ளனவா என அறிந்து, மக்கள் வழங்கும் பழஞ் சொற்களை எவை எனத் தெரிந்து, பொதுச் சொற்களைத் திரட்டுகின்றனர்.

துருக்கிய மொழிச்சொற்களை அகராதிக்கெனத் திரட்டுதலிலும் சில சிக்கல்கள் ஏற்பட்டன. அதன் ஒலிகள் துருக்கிச் சொற்களுக்கும் பிறமொழிச் சொற்களுக்கும் என இரு முறைகளாக உள்ளன. பல அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டதால் இலக்கிய வழக்கு மறைய மக்கள் வழக்கு மிகுந்தது. பல மாற்றங்கள் ஏற்பட்டதால் பேச்சு நிலை மொழி ஒன்று உருவாயிற்று. கமால் குழுவினர் பழைய மரபை முழுதும் நீக்கினர். எழுத்து முறையிலும் மாற்றத்தை உண்டாக்கினர். புதிய சொற்கோவை உருவானதால் அவற்றை இதழ்கள் பயன்படுததின. புதிய சொற்களுக்கு எழுதப்பட்ட அடிக்குறிப்புகளின் துணையால் பொருளைப் புரிந்து கொண்டனர். 'கண் ஒன்றைப் பார்க்கப் பொருள் ஒன்று தோன்றும்' நிலை ஏற்பட்டது. எல்லா நிலையிலும் செயற்கை நெறியே தலை எடுத்தது. முதியோர்க்கும் இளையோர்க்கும் இடையே பெரிய பிளவு ஏற்பட்டது. வேண்டுமிடத்துச் சொற் பொருள் விளங்கப் பழைய தொடர்கள், வேற்றுமொழிச் சொற்கள் ஆகியவற்றைப் பெரிதும் கையாண்டனர்.

பழைய சொற்களையும் புதிதாகப் படைத்த சொற்களையும் கையாளும் நிலையிலும், பொருள் புரியும் நிலை

யிலும் சிக்கல் ஏற்பட்டது. இவ்வாறு குறுகிய காலத்தில் ஏற்பட்ட மாற்றம் அகராதிக் கலையில் பல சிக்கல்களைத் தோற்றுவித்தது. பழைய சொற்கள், பொருள் ஆகியவற்றை விட்டுவிடச் செய்தது. மரபு வழி வந்த அகராதி, படித்தோர்க்கு மட்டுமே பயன்பட்டது. பழைய எழுத்திலிருந்து இலத்தீன் எழுத்திற்கு மாற்றியதும் இக்கலையின் விளைவாகும். சொல்லின் எழுத்து வடிவம் சிதைந்தது. சில விதிகளுக்குட்பட்டுச் சொல்வடிவு உருவாக்குதல் பற்றிய சிந்தனை எழுந்தது. வேற்றுமொழிச் சொற்கள் பற்றிய வடிவச் சிக்கல் மேலும் பெருகியது. சொற்பொருள் காண்பதிலும் பல சிக்கல்கள் எழுந்தன. இதனைப் பொருளின் அகராதியாக உருவாக்கும்போது பல சிக்கல்கள் தீர்ந்தன. பொருளின் வடிவும் பொருளும் மாறாதிருப்பதால் அகராதிச் சிக்கலை இவ்வழியில் தீர்க்கும் முயற்சி நடைபெற்று வருகிறது.

இருமொழிச் சிக்கல் கிரேக்கம்போல் பெரும்பாலான நாடுகளில் காணப்பெறுகிறது. ஐரோப்பிய நாடுகளில் குறைவாகக் காணப்படுகிறது. நிலை மொழியைக் கற்பிக்கவும், கற்கவும் செய்வதால் இதன் சிக்கல் ஓரளவு தீரும். அதற்குரிய அகராதிகளைச் செவ்விய முறையில் உருவாக்க வேண்டும்.

வெப்சுடரின் மூன்றாம் பதிப்பு பிலிப் கோவ் (Philip Gove) என்பவரால் 1961-இல் வெளிவந்தது. எல்லா வழக்குகளையும் அதில் ஏற்றுக் கொண்டதால் பலரும் அதனை வன்மையாக எதிர்த்தனர். குறிப்பாக, எழுத்துலகைச் சார்ந்தவர்கள் எதிர்த்தனர். மொழி தொடர்ந்து மாறுவதால் எழுத்து வடிவைவிடப் பேச்சு வடிவின் மாற்றத்தை நன்குணர முடியும். கொச்சை, நிலைபேறில்லாதவை என்ற நிலையில் வெப்சுடர் அகராதி பல சொற்களை ஏற்றுக் கொண்டது. மொழியியலார்க்கும் பொதுமக்கட்கும் இது பற்றிய கருத்து பெரிதும் வேறுபட்டதாகும்.

நிலைமொழி குறித்து இலாரா (Lara) அகவிதி (Poiesis) ஒன்றை அமைத்தார். சமூகத்தில் ஒருசொல்லைப் புரிந்து வழங்குதற்கு இது வழி செய்தது. நிலைபேறில்லாதவற்றைப் பேச்சு வழக்கு, கொச்சை, பழம்வழக்கு எனக் குறியிட்டு அகராதியில் வழங்க எண்ணினார். எல்லா அகராதிகளும் அகவிதிகளைப் பின்பற்றின எனக் கூற இயலாது. சில அகராதிகள் சிறந்த நல்ல எழுததாளர்கள் பயனபடுத்திய வற்றை மட்டும ஏற்றுக் கொண்டன. பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில செர்மன் உயர்குடி மக்கள் பிரெஞ்சு மொழியை மிகுதியாகப் பயன்படுத்தியதால் அடிலங் (Adelung) காம்ப் (Campe) போன்ற அகராதிக் கலைஞர்கள் தூய்மை நெறியில் செர்மன் சொற்களைத் தொகுத்தனர். கடன் வாங்கிய சொற்களை நீக்கினர். புதிய சொற்களை உருவாக்கி அகராதியில் சேர்த்தனர்.

புதிதாகப் பயனபடுத்தற்குரிய பழம் சொற்கள், அவற்றில் பயன்படுத்த இயலாதவை, நல்ல அறிஞர்கள் பயன்படுத்தி வழக்கில் நிலை பெற்ற புதுச்சொற்கள், புதிய சொற்கள் எனினும் ஏற்க இயலாதவை. நல்ல எழுத்தாளர்கள் பயன்படுத்திய வட்டாரச் சொற்கள், அவற்றிலும் ஏற்க இயலாதவை, இழிவழக்கு, அவற்றில் பயன்படுத்தற்குத் தகுதியற்றவை, செய்யுள் வழக்கு, செய்யுளுக்கு மட்டுமுரிய புதியவழக்கு என அவற்றைப் பகுத்துள்ளனர்.

புதுவழக்கில் சில வேர்கொண்டுவிட்டன. ஆசிய ஆப்பிரிக்க அகராதிக் கலைஞர்கள் அடிலங், காம்ப் ஆகியோரைப் பின்பற்றிப் புது வழக்குகளைப் பயன்படுத்துகின்றனர். அகவிதிகளை ஒட்டிய நிலையில் பிரஞ்சுக் கழகம் (அகதெமி) செயல்பட்டது. அத்துடன் சமூக மொழியியல் பார்வையும் இணைந்திருந்தது. வேர்செயில்சிலுள்ள நீதிமன்ற மொழியை நிலைமொழி வழக்காக ஏற்க டி வாகெல (De Vauglas) முன்னின்றார். பிரெஞ்சு அரசு மொழித் தாக்கத்தை இது உணர்த்தும், இது உயர்குடி மக்களின் உயர்

வழக்கின் விளைவாகும். இக்கால அகராதிக் கலைஞர்கள் இதனைக் கருத்தில் கொள்ளார். சமூக மொழியியல் உணர்வு வெளிப்பட இரு எல்லைகளைக் காட்ட 'அரசு மொழி', 'குடியரசு மொழி' எனப் பிரஞ்சு அகராதி சுட்டும்.

இந்நிலையே பிராகு (Prague) மொழியியல் வட்டத்திலும் சாணப்பெற்றது. நிலைமொழி உருவாக அகவீதியும், சமூக மொழியியல் பார்வையும் இணைப்பதை என்னேயும் (Henne) ஏற்றார். அவர் கருத்துப்படி நிலைமொழி என்பது நிலப்பகுதியால் வரையறுக்கப்படாத மாற்று மொழி. பல்வேறு சமூகக் குழுவினர்க்கு எழுத்து வடிவில செய்தி பரிமாற உதவும். இதுவரை இதனைப பயன்படுத்தாதவர்களும் இதனைக் கேட்ட அளவில் புரிந்துகொள்ளும் வகையில் இதனை உருவாக்கியிருப்பர் மாற்று மொழி வடிவங்களைப் பேசுவோரும் பயன்கருதி இந்நிலை மொழியை விரும்பி ஏற்பர்.

**பதிவுகளைத் தேர்ந்தெடுத்தல்:** அகராதியில் சொற்களைச் சேர்க்கப் பல முறைகளைக் கையாளுகின்றனர். சில மொழிகளில் அடிச்சொல்லையும் பிற இணைப்புகளையும் சேர்ப்பர். சிலவற்றில் தொடர்களை அவ்வாறே ஏற்பர். பெயரடைகளையும், புற ஒட்டுகளையும் இணைத்தே சொற்களைத் தொகுப்பர். வடிவம், தொடரியல், பொருள், சொல் வருகை நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சொற்களை ஆய்ந்து கொள்வர்.

செர்ல் வருகை நிலையை அறியச் சொற்களின் சிக்கலான வடிவமோ பொருளோ துணையாகும். சில மொழிகளில்தான் சொல் வருகைப் பட்டியல் உள்ளது. இப்பட்டியல் கொண்டு இலக்கண மாற்றுருவங்கள் போன்றவற்றைப் பகுத்தறியலாம்.

இடைச்சொற்கள், வினையடைகள் போன்ற பயன் பாட்டுச் சொற்களையும் இடமறிந்து தொகுக்க வேண்டும்.

சொல்லுருவாக்க நிலையை அறிந்து அவற்றில் காணும் தொகைநிலை, ஒட்டுநிலை, பெயர்வினை நிலைகள், மறு பகர்ப்பு வடிவங்கள் கொண்டு சொற்களைத் தொகுக்க இயலும்.

பொருள் வகைப்பாட்டினையும் கருத்தில் கொண்டு பொருளின் நிலையில் சொற்களைப் பாகுபடுத்தும்போது முரண், பகரநிலை அடிப்படையில் சொற்பொருள் கண்டு தொகுக்கலாம்.

பண்பாட்டு வேறுபாடுகளை மனத்தில் கொண்டு சொற்களின் தகுதியையும் பொருள் வேறுபாட்டையும் உணர்த்தும் வகையில் சொற்களைத் தொகுக்க வேண்டும். இவ்வாறு அகராதிக்குரிய சொற்களை அறிந்து தொகுக்கும் போது அதன் பயன் நன்கு புலப்படும்.

அகராதிச் சொற்பதிவுகளை நல்ல அகராதிகளுக் கெனச் சிறந்த முறையில் தேர்ந்தெடுக்க முயன்றனர். அறிவியல் முறையில் பொருண்மை இயல் அகராதியில் தேர்ந்தெடுக்கும் சொல் வடிவையும் அதற்கேற்ற சூழலை யும் 1960 முதல் ஆராயத் தொடங்கினர். அத்துறையில் காட்சும்(Katz) பாடரும் (Foder) ஈடுபட்டுத் தக்க வடிவங் களைத் தேர்ந்தெடுக்க முயன்றனர்.

1. இலக்கணக் குறிச்சொல் (பெயர், வினை) 2. பொருண்மைக்குறிச்சொல்(உயர்திணை) 3. வேறுபடுத்தி என்பவற்றைப் பயன்படுத்தினர். இது பொருண்மைச் செய்தியால் விடுபட்டவற்றைப் பற்றி விளக்கும். இதற் கெனத் தனிக்குறிச்சொற்கள் இல்லாவிடினும் கருவிகளுக் குரிய நோக்கு விலங்குகள் பற்றிய சுருக்க விளக்கம் ஆகிய

வற்றைச் சுட்டும். இருமொழி அகராதிகளில் சொற்களைத் தேர்ந்தெடுக்கும் போர்து எளிதில் உணரும் வகையில் சொற்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். முறைப்படி வழங்காத சொற்கள் (பன்மைச் சொற்கள்) ஏவல், தொழிற்பெயர் போன்றவற்றையும் தொகுக்க வேண்டும். ஆலன் பீபர் (Alan Pfeffer) பதிப்பித்த 'செர்மன்-ஆங்கிலம், ஆங்கிலம்-செர்மன் அகராதி' இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. இக்கால நிலையில் பிறமொழியிலும் எழுதவும் பேசவும் தேவை ஏற்படுகிறது. பலர் வெளிநாட்டுக்குச் செல்கின்றனர். எழுதுதல் பேசுதல் எனும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்குரிய சொற்களை இருமொழி அகராதிகளில் இணைக்கலாம். அரபி மொழி குறித்து இந்நிலையில் சிக்கல் ஏற்பட்டது. எவ்வகை மொழிச் சொற்களைச் (மொரோக்கோ, ஈராக், சிரியா) சேர்ப்பது என எண்ணி, அரசியல் காரணங்களை எண்ணி ஆங்கிலம்-சிரிய அகராதிக்கு முதலிடம் தந்தனர். இவ்வாறு இருமொழி அகராதிக்குரிய சொற்களைத் தேர்ந்தெடுக்கும் போது பல காரணங்களை எண்ணிப்பார்த்து, அவற்றிற்கேற்பச் சொற்களைத் தொகுப்பர்.

சிலசமயம் 5000 சொற்கள் முதல் 10,000 சொற்கள் வரை இருமொழி அகராதிக்கென முதலில் தொகுத்துக் கொள்வர். பயன்பாடு கருதிச் சில சொற்களை நீக்குவர். பழைய பின்னிலை ஒட்டுகளையும் (தொடையல், சாக்காடு), சொற்றொடர்களையும், தொகை நிலைகளையும் விடாமல் சேர்ப்பர்.

வரவெண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு சிக்கலான வடிவங்களை ஏற்பர். ஒருசில மொழிகளே இத்தகைய வரவெண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு சொற்பட்டியல்களைத் தொகுத்துள்ளன. செயற்பாட்டுச் சொற்கள் (இடைச்சொல், வினையடை) சொல்லாக்க அமைப்புகள் (நல்கு-நல்குகை; இயக்கு-இயக்குநர்) உருவலி ஒட்டு (இடி

(பெ) ) இருபெயரிணைந்து புதுச்சொல்லாக்கம் (விண் கோள்) பண்பாட்டுக் கூறுகள் (வேம்பன்-பாண்டியன்) ஆகியவற்றை மனத்தில் கொண்டு மற்றவற்றைத் தொகுப்பர்.

மாணவர்க்கும் கணிப்பொறிக்கும் தேவைப்படும் இருமொழி அகராதியை உருவாக்கும் காலம் இது. ஒவ்வொரு அகராதியும் நேர்முக மொழிபெயர்ப்பு அகராதி ஆகும். கணிப்பொறியால் மொழிபெயர்க்க வேண்டியபோது எல்லா இலக்கணச் செய்திகளையும் அகராதிப் பதிவில் இணைத்துள்ள வகையில் திட்டமிட்டால், அது சொற்றொடர் ஆக்கும் தகைமைபெறும். தாய்மொழியாளர் தம் மொழியில் மிகுதியாகச் செய்திகளை அளிக்கமுடியும் என்பது உண்மை. எனவே மொழி பெயர்க்கும் இயந்திரத் திற்கும் ஏராளமான செய்திகளை அளிக்க வேண்டும். எதனை எங்குத் தேடிக்காணலாம் என அறிவுறுத்தும் வகையில் அகராதி அமைய வேண்டும். அன்றாடக் குறு மொழி வழக்குகளை அகராதி தவிர்த்துவிடும். இன்றியமை யாத சொற்களை மட்டும் தொகுக்க வேண்டும். அப்போது தான் சுருங்கிய அளவில் அகராதி நன்கு பயன்படும். மொழி பெயர்ப்பாளருக்குப் பொருள் தரும் வகையில் தேர்ந் தெடுக்கும் வாய்ப்பைப் பெருக்கியும், பொருட்பரப்பில் தெளிவை நல்கியும் அகராதி அமைய வேண்டும். அகராதி யில் ஏராளமாக ஒருபொருட் பல சொற்களைக் குவித்தால் பொருள் காண்பது கடினம். குறுக்கு நோக்கீடு இவ்வகையில் துணைபுரியும். பயன்படுமிடத்தைச் சுட்டிக்காட்டினால் பொருள் நன்குவிளங்கும். எடுத்துக்காட்டினைத் திறமிக்க புலமையாளர் தேர்ந்தெடுத்து எளிய வடிவில் அளிக்க வேண்டும். இருமொழி அகராதிகளில் அமைந்த இலக்கணம் குறிப்பையும் சுட்ட வேண்டும். வினை முற்றுகளையும் எச்சங்களையும் சுட்டும் போது மொழி மரபு வழியில் எளிய முறையைக் கருத்தில் கொண்டு தொகுக்கவேண்டும். சொற்றொடர்களைக் கூறும்போது தடையின்றிப் பொருள்

புரியும் வகையில் அளிக்கலாம். வேண்டுமிடத்து இன்றியமையாத இடைச் சொற்களைக் கூட்டியுரைத்தல் நல்லது. முதலில் உள்ளது உள்ளவாறே மொழி பெயர்ப்பைக் கூறிப் பின் வேண்டுமிடத்து விரும்பிய வகையில் மொழி பெயர்ப்பைத் தரலாம். தேவையானவை, முன்னுரிமை அளிப்பவை, விரும்புபவை எவை எனத் தனியே குறிப்பிடலாம். மரபு வழியில் மொழி பெயர்ப்பது எளிது. மொழிக்கு ஏற்ப மொழி பெயர்ப்பு முறைகளை ஏற்றால் இருமொழி அகராதிகள் செம்மையாக உருப்பெறும்.

**எழுதுமுறை:** ஒலிக்கின்ற முறையிலே சில மொழிகளில் சொற்களை எழுதுகின்றனர். காலப்போக்கில் எழுதும் மரபில் பல பிழைகள் நேர்ந்து விடும். மரபுவழியில் எழுதும் முறை சொற்பிறப்புப் பற்றி அறிய ஒருவகையில் உதவும். சிலர் ஒலிப்பு முறையையும், எழுதும் முறையையும் தனித் தனியாக அகராதியில் அமைக்கவேண்டும் என்பர். அகராதியைப் பயன்படுத்துவோர் ஒலிப்புமுறை, எழுதுமுறை ஆகியவற்றை அறிவர். அதனால் அகராதி வாயிலாகச் சொல்லின் ஒலி வடிவம், வரிவடிவம் இரண்டையும் அறிய இயலும். மொழிக்கு முதலில் வாராத எழுத்துகளையும் ஈற்றில் வாராத எழுத்துகளையும் உணர்த்தும் வகையில் எழுதுமுறை அமையும் (இராமன், காலின்சு).

**சொற்பிறப்பு நிலை:** ஆங்கில மொழியின் சொற்பிறப்புச் சுருக்கச் சிறப்பகராதியின் நான்காம் பதிப்பைச் சுகீட் (Skeat) 1890-இல் வெளியிட்டார். முன்னைய நூலை மறுபடியும் அவர் எழுதினார். அவர் கருத்தின்படி, உடன் பிறப்பு மொழிகளின் எடுத்துக்காட்டுகளைப் பொருளுடன் கூற வேண்டும். சிறப்பான இயல்களில் சொல் எப்போது பயன்பட்டது என வரலாற்றைக் கூறுவது நன்று. சொற்களின் பொருள், விளக்கம், ஒப்புநோக்கு ஆய்வுரை ஆகியவற்றைக் கொண்டு எம்மொழியிலிருந்து சொற்கள் உருவாயின என வரிசைப்படுத்திக் காட்ட வேண்டும். ஒலி

# 3

# அகராதியில்

# பொருள் வரையறை 'அசை'

பொருள் வரையறை செய்வது என்பது அகராதியில் தொகுக்கப்பெறும் சொற்களுக்குச் சரியான பொருளைத் திருத்தமாகவும். சுருக்கமாகவும் கூறுவதாகும். அகராதியில் காணப்பெறும் சொல் என்பது ஒரு குறிப்பிட்ட சொல் லாகவோ கலைச் சொல்லாகவோ கருத்துணர்வாகவோ இருக்கும். திருத்தமாகவும், சுருக்கமாகவும், தெளி வாகவும் பொருளை வரையறுத்தல் என்பது ஒவ்வொரு சொல்லின் பொருள் வரையறுப்பு நிலையிலும் அமைவது என்பது மிகக் கடினம். எனினும் திருத்தமும், சுருக்கமும் வரையறைபற்றிய கருத்துடன் ஒட்டியதாக அமையும் பண்புகளாகும். இப்பண்பு நலன்கள் அமைந்திராத பொருள் கூறும் அமைப்புகள் குறையுடையன எனத் தெளி வாகக் கூறிவிடலாம்.

கருத்துக்களை முறைப்படுத்தித் தெளிவாகக் கூறும் ஆற்றலையே வரையறை செய்தற்குரிய ஆற்றல் எனலாம். இதனால் ஒரு பொருள்பற்றி அகராதியில் தெளிவாகக் கூற இயலும். எனவே தெளிவின் அடிப்படையில் அமையாத கருத்துக்கள் குழப்பத்திற்கு வழி கோலும். தெளிந்த சிந்தனையின் துணையால் ஒரு சொல்லுக்குப் பொருள்

வரையறை செய்யும் முயற்சியே அகராதி ஆக்கத்திற்குப் பெருந்துணையாகும்.

இந்நிலையில் அசை என்ற சொல்லுக்குரிய பொருளைச் சங்ககாலம் தொட்டு இன்றுவரை வரையறுத்துக் கூறிய முயற்சியைக் காணின இன்றைய நிலையில் 'கொடி அசைந்ததும் காற்று வந்ததா, காற்று வந்ததும் கொடி அசைந்ததா' என்று கண்ணதாசன் கேட்ட கேள்விகட்குப் பொருள் தெளிவு பெற இயலும்.

புறநானூற்றுப் பாடல்களில் அசை என்ற சொல்லாட்சி மிகக் குறைவாகவே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இயக்கப்படுவதைக் குறிக்கும் நிலையில் வடநெடுந்தத்தனார் இச்சொல்லை எடுத்தாள்வார் (179.9). இதற்கு மாறுபட்ட தங்குதல் என்ற பொருளில் பிசிராந்தையார் (67.9), பரணர் (141.3) போன்றவர்கள் இச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். தளர்தல் என வினையாகவும் (361.17) தளர்ச்சி எனப் பெயராகவும் அசைவு (148.2) பொருள் படப் புறநானூற்றுப் பாடல்களில் வந்துள்ளது. இது ஏற்படக் காரணம் எனக் கூறும் வகையில் வருந்துதல் என்ற பொருளில் ஈரிடங்களில் ஔவையார் கையாண்டுள்ளார் (97:13, 98.6).

இவற்றைக் காணும்போது இயங்கும் வினை அதனுடன் தொடர்புடைய வகையில் தளர்தல், வருந்துதல் என்ற ஆட்சிகள் பெற்றுள்ளது. மேலும் இதனாலே மாறுபட்ட வினைப் பொருளில தங்குதல் என்ற பொருளும் புறநானூற்றுப் பாடல்களில் வெளிப்பட்டுள்ளது. இந்நிலையில் அசை என்ற சொல் வடிவம் பொருளை பல வகையில் வரையறுக்கக் காண்கிறோம்.[1]

புறநானூற்றுப் பாடல்களைக் காட்டிலும் அகநானூற்றுப் பாடல்களில் அசை என்ற சொல் மிகுதியாகப்

பயன்பட்டுள்ளது[2]. அங்குக் காணப்பெறும் அசை என்ற சொல்லின் பொருளை வரையறை செய்யும் போது,

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | இடம விட்டு இயங்குதல் | | | அசைவளி 102.4 |
| 2) | அ. | 1. | தங்குதல் | நிழல் அசைஇ 20.3 |
| | | 2. | கிடத்தல் | கோங்கமொடசைஇ 99.5 |
| | | 3. | இளைப்பாறல் | மெலிந்தசைஇ 120.11 |
| | | 4. | விட்டு நீங்கா திருத்தல் | அசையாநாற்றம் 272.9 |
| | ஆ. | 1. | பொருத்துதல் | முன்கை அணலசைத் தூன்றி 351.13 |
| | | 2. | உடுத்துதல் | அந்தழை அசைஇயும் 188:12 |
| | | 3. | கட்டுதல் | தாம்பசை குழவி 54.7 |
| 3) | | 1. | தளர்தல் | மெய்யன்றசைஇ 17.3 |
| | | 2. | மெலிதல் | உயிர்த்தசைஇ 55.7 |

என்பவை காணப்படுகின்றன.

வினை வடிவில் 'அசை' வரும்போது வரையறுத்த பொருள்களில் மிகக் குறைந்த அளவிலேயே பெயர் வடிவில் வருகின்றது. அவ்வாறு பயன்படுமிடங்கள்:

| | | |
|---|---|---|
| 1) | தளர்ச்சி | தொடங்கு வினை தவிரா அசைவின் நோன்தாள் 29.1 |
| 2) | தங்குகை | இரவும் எல்லையும் அசைவின்றாகி 255.3 |

இவற்றைக் காணும்போது அகநானூற்றில் அசை என்ற சொல் இன்று பெரும்பான்மையாகப் பயன்படும் இடம் விட்டு நகர்தல்/இயங்குதல் என்ற பொருளில் குறைவாகவே வந்துள்ளது எனலாம்.

இது அகப்பொருள் பற்றிய நூல் ஆதலால் தலைமக்கள் வினை பற்றிய கூடுதல் பிரிதல் அவற்றின் விளைவாகத் தளர்தல் தங்குதல் என்ற வினையில் பல்வேறு நிலைகள் (காண்க : 2 அ. ஆ. பிரிவுகள்) வெளிப்படுகின்றன. இவ்வாறு பொருள் காண் நிலையின் பெருக்கமாகப் பின்னர்த் தோன்றிய இலக்கியங்கள் சுட்டும். அவ்வாறு அவற்றில் பயன்படுத்தப்பெற்ற பொருள்களைத் தொகுக்க நிகண்டுகளும் அகராதிகளும் முயன்றன.

இனிச் சங்க நூல்களில் சிலவற்றில் அசை என்ற சொல்லின் வழக்காற்றைக் காண்போம்:

| | | குறுந்தொகை | ஐங்குறு நூறு | பதிற்றுப் பத்து | பரி பாடல் | பத்துப் பாட்டு |
|---|---|---|---|---|---|---|
| I | அசைதல் | √ | √ | — | — | √ |
| | செல்லல் | — | √ | — | — | — |
| | பெயர்தல் | — | — | — | — | √ |
| | மாறுதல் | — | — | √ | — | — |
| | கெடுதல் | — | — | √ | — | — |
| II | தங்குதல | √ | √ | — | √ | √ |
| | இருத்தல் | — | — | — | — | √ |
| | கிடத்தல் | — | — | — | — | √ |
| | பொருந்துதல் | — | √ | — | — | — |
| | கட்டுதல் | — | — | √ | — | √ |
| | இட்டுவைத்தல் | — | — | — | — | √ |
| | இளைப்பாறுதல் | √ | — | — | √ | √ |
| III | ஒய்தல் | — | √ | — | — | √ |
| | தளர்தல் | √ | — | √ | — | √ |
| | மெலிதல் | √ | — | — | — | — |
| | இளைத்தல் | — | — | — | — | √ |
| | வருத்தல் | — | √ | — | — | √ |

பொதுவாக மேற்கண்ட பதினான்கு நூல்களில் அசை என்ற சொல்லுக்கு மூன்று வகைப்பட்ட பொருள்கள் வரையறை செய்யப்படுகின்றன. புடைபெயர்தல் ,நிலையில் தங்கல், விளைவு என்ற நிலையில் I, II, III ஆகிய பிரிவுகள் உள்ளன.

முதல் பிரிவில் புடைபெயர்தலுக்கு ஏற்பஅசைதல் என்ற பொருளையே பெரிதும் அளிக்கக் காரணம் எளிமையில் அச்சொல்லை யாவரும் பொருளுணர்ந்தமையே ஆகும்.

புறப்பொருள் நிலைக்கேற்ப அசை என்பதற்கு மாறுதல் கெடுதல் என்பவை முறையே/அசைவில் கொள்கையர் (பதிற். 69.11) அசையா (பதிற். 82.15) பயன்பட்டுள்ளன.

இரண்டாம் பிரிவில் தங்குதலின் பிற நிலைகளாக இருத்தல், கிடத்தல், பொருந்தல் என்பவை பொருள்களின் தன்வினைப் பொருளாக விளங்குகின்றன. ஒன்றனை மற்றொன்றின் மீது இருக்குமாறு செய்யும் செயலாகக் கட்டுதல், இட்டுவைத்தல் அமைந்துள்ளன. தங்கிய பின் பெறும்பயனாக இளைப்பாறுதல் அமைகிறது. இவ்விரண்டு எண்ணங்களைச் செறிந்த நிலையில் காட்டும் குறுந்தொகையில் அசைவடிவங்கள் வெளிப்பட்டு நிற்கின்றன.

பொதுவாக இப்பிரிவில் காணும் பெரும்பான்மைப் பொருட் பகுப்புகளைப் பத்துப்பாட்டில் காண முடிகிறது. நீண்ட நெடும்பாட்டாக அவைகள் அமைந்துள்ளதாலும் பரந்து பட்ட எண்ணங்களின் விரிவாலும் இவ்வாறு பொருள் வரையறைப்படுதற்கு இடமேற்பட்டது எனலாம்.

மூன்றாம் பிரிவு தளர்ச்சியும் அதன் வளர்நிலையும் பயனுமாகப் பொருள் வரையறை அமைந்துள்ளதைக் காணலாம். இங்கும் இதன் பெரும்பான்மை ஆளுகை பத்துப்

பாட்டிலே அமைந்துள்ளது. இந்நிலையும் முன்னர்க் கொண்ட கருத்தை வலியுறுத்துவதாக அமைகிறது.

பொருள் காண் நிலை மாறுபடுதற்கேற்ப இதன் பிரிவுகள் மாறுபடுதற்கு இடமுள்ளது.

புறம் அகம் என்ற நிலையிலிருந்து அறங்கூறல் என்ற நிலையில் குறளில் இச்சொல் மிகமிகக் குறைந்த அளவில் பயன்படுத்தப் பெறுகிறது. காமத்துப் பாலில் அசை என்ற சொல் நெகிழ்ச்சியைச் சுட்டும் வகையில் நுடங்கிய எனும் பொருளில் (அசையியற்குண்டாண்டோரே எர் - குறள் 1098) வந்துளது.

மற்ற இடங்களில் (குறள் 371, 1040), சோம்பல், மடி எனும் பொருளிலும் தளர்ச்சி (குறள் 594) என்ற பொருளிலும் காணப்பெறுகிறது. இதனால் நல்வாழ்வுக் குதவாத சோம்பலையும் அதனால் விளையும் தளர்ச்சியை யும், பொருளாட்சியாகப் பெற்று விளங்குகின்றது. மேலும் அகப்பொருள் நிலையில் பரந்துபட்ட கிளைப் பொருள்கள் வழக்குப் பெறாமல அறம் கூறுதற்குரிய வரையறுத்த மெய்ம்மையியல் பொருள்கூறு நோக்கு இதன் வழி வெளிப் படுகிறது எனலாம்.

அசை என்பது இலக்கண நிலையில் பயன்படும் கலைச் சொல்லாகவும் விளங்குகிறது. இது குறித்துத் தொல் காப்பிய இடையியலில் 'தமக்கு இயல்பில்லாது பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும் இடைச் சொல் பற்றி விரித்துரைக்கும்போது அசை நிலைக் கிளவி பற்றி அறியலாம் (தொல். சொல். இடை. 2- மர்ரே பதிப்பு 1960).[3] அசை நிலைக்கிளவி -ஆகு வழி அறிதல் எனவும் காணமுடிகிறது (முன். 23)

செய்யுளிலக்கணத்தில் மற்றொரு வகை அசை வழங்கப்பெறுகிறது. செய்யுள் உறுப்புப் பற்றிக் கூறும் போது 'அசை வகை எனாஅ' என்றும் (தொல். பொருள். செய்யுள். 1) நேர் அசை நிரை அசை எனவும் (முன். 3) நேர்பு அசை நிரைபு அசை எனவும் சிலவற்றில் முன்னிரண்டை இயலசை எனவும் பின்னிரண்டை உரியசை எனவும் (முன். 5) தொகுத்துரைப்பர். செய்யுளில் எழுத்தால் அமைந்தது அசை எனவும் அதுவே சீருக்கு உறுப்பாக வரும் எனவும் காணலாம் (முன். 10). மேலும் 'அசை கூன் ஆகும்' (முன். 46) என்ற நிலையையும அறியலாம். இவை யெல்லாம் இலக்கணக் கலைச்சொல்லாக அசை பயன்படும் போது பொருள் படு பாங்காகும்.

சங்க இலக்கியங்களில் அசை நிலைப்பொருளில் பயன் படும் சில சொற்கள் வருமாறு:

| | அதை | அம் | அரோ | ஆங்க | ஆங்கு | ஆர் | ஆல் | இன் | உம் | ஏ | ஐ | ஓர் | ஓரும் | தெய்ய | மார் | மாதோ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதிற்றுப் பத்து | — | — | — | | — | — | √ | — | √ | — | √ | — | | — | — | — |
| பரிபாடல் | √ | — | √ | | √ | √ | — | — | — | — | — | √ | | = | — | √ |
| பத்துப் பாட்டு | — | √ | — | | — | — | — | √ | — | √ | — | — | | — | √ | √ |

இதனைக் கண்டவுடன் அசைச்சொற்கள இசைப் பாடலாம் பரிபாடல்களில் இசையின பொருட்டு மிகுதி யாகப் பயன்பட்டு வந்தன எனலாம். நெடும்பாட்டு வகை யைச் சார்ந்த பத்துப்பாட்டில அம், இன், ஏ, மார் போன்ற புதிய சொற்களே இடம பெற்று நிற்பதை உணரலாம். மேலும் ஆழ்ந்து ஆராயின் சில உண்மைகள் வெளிப்பட வாய்ப்புளது.

சொல்லிலக்கணத்தில் காணப்பெறும் அசையின் வடிவங்களைச் சீவக சிந்தாமணி கூறுவனவற்றின் அடிப்படையில் அசையின் செயலினைப் புரியும் சில சொல் வடிவங்களைக் காணலாம், இது குறித்து ஆராய்வதற்குத் தற்போது எடுத்துக்கொண்ட நூல் உ. வே. சாமிநாதையர் பதிப்பித்த சீவகசிந்தாமணியின் ஐந்தாம் பதிப்பாகும் (1949). இது அசை பற்றி 67 இடங்களைக் காட்டும். ஆயினும் அவற்றை முழுதும் சோதித்துப் பார்த்ததில் 8 இடங்களில் இவ்வாட்சி காணப்பெறவில்லை. (சிந்தாமணி எண்கள் 543, 819, 844, 1882, 2314, 2378, 2610, 2963) மாறாக 1914, 2290 என்ற பாடல்களில அசை பயன் படுத்தப்பட்டுள்ளது. இதுபற்றி மேலும் கூர்ந்து ஆய்வு செய்யும்போது வேறு பல கருத்துக்களும் கிடைகும் என ஊகிக்க இடமுளது.

அசையாக வந்த சொல்வடிவங்களாக அ, அம், இ, இன், உம், என்ப, ஐ, ஓரும், கள், குரைய, மற்று, மா, வாழி முதலியவை குறிப்பிடப் பெற்றுள்ளன. இவற்றில் 'இ' என்பது இங்குச் சுட்டிய 67 இடங்களிலும் காணப்பெற வில்லை. ஆனால் புதிதாக அம்ம, ஆங்க, ஆன், ஏ, வாழிய என்ற வடிவங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் அம், அம்ம என்பவற்றையும் வாழி, வாழிய என்பவற்றை ஒரு பொருளசையின் துணை வடிவங்களாகக் கொண்டால் இப்பகுதிக்குரிய அளவில் சீவகசிந்தாமணியில் காணும் அசைகளின் எண்ணிக்கை 15 ஆகும். (13+5=18—1-2=15) இதனைக் காணும்போது பொருள் வரையறை செய்வதற்கு நச்சினார்க்கினியர் போன்றவர்கள் எழுதியஉரைகள் உதவும் நெறி புலனாகிறது.

இன்றுள்ள நல்ல பதிப்புக்களும் பொருள் வரையறை செய்வதற்கு ஓரளவே உதவுகின்றன. அவற்றின் துணையைத் தக்க அளவில் பயன்படுத்திக் கொள்வதுடன் பொருள் வரையறை செய்யப்பட்டது சரியா என முழுமை

யாகச் சோதித்துப் பார்த்த பின்னரே ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்பதும் இதனால் உறுதிப்படுகிறது.

அசையாகச் சீவகசிந்தாமணியில் வருவனவற்றை இந் நிலையில் வருகை விழுக்காட்டைக் கணித்துப் பார்ப்பின் அவை வருமாறு :

| | |
|---|---|
| ஐ | 12 |
| அ | 11 |
| இன் | 8 |
| அம் | 7 |
| மா | 7 |
| ஒரும் | 4 |
| கள் | 4 |
| வாழி | 3 |
| உம் | 2 |
| என்ப | 2 |

மற்றவை ஒரோவொன்று என்ற அளவில் இப்பகுதி ஆய்வில் இடம் பெற்றுள்ளன. இவற்றைக் கொண்டு சங்க இலக்கியம், நீதி இலக்கியம் போன்றவற்றிலிருந்து விருத்தப் பாவிலமைந்த காப்பியநிலையில் அசைகள் புதிதாகத் தோன்றியவை எவை எனவும், பெருகிய வழக்கில் உள்ளவை எவை எனவும், அருகிய வழக்கில் அமைபவை எவை எனவும் வழக்கற்றுப் போனவை எவை எனவும் தெளிவாக அறியலாம்.

குறிப்பாக இவ்வரவெண்ணிக்கை ஆய்வில் ஐ, அ, இன் அம், மா என்பவை திருத்தக்க தேவரின் ஆட்சியில் அசை

பற்றிய பொருளினை வரையறை செய்வதற்கு இம்முறை துணைபுரியும். வேற்றுப் பொருள் தருவதா அன்றி அசை நிலையில் அமைந்துள்ளதா எனப் பொருள் வரையறை செய்ய இம்முடிவின் துணையை மேற்கொள்ள இடமுளது.

நங்கள் (சிந்தா. 1334, 1392) என்ற வடிவு வந்த இடங்களில் கள் என்ற சொல் நம் என்ற முதனிலையோடு ஒட்டியிருப்பது இலக்கண நெறிப்படி இயையுமா என ஐயுற வாய்ப்புளது. எனவே இவ்வாட்சி வந்துள்ள இடத்தை நோக்கியபின் (திங்களும் மறுவுமெனச் சேர்ந்தது நங்களன்பென நாட்டி/1334/, நங்கள் என்பினின் ஆவி நீங்க இறுவதும் எளிது/1392/). கள் என்பதை அசை எனக் கொண்டு நச்சினார்க்கினியரின் உரை முடிவை ஏற்க இடமேற்படுகிறது.

இங்ஙனம் பொருள் வரையறை செய்தற்கு இலக்கண ஆட்சி எந்த அளவு துணை செய்கிறது என்றும் அதற்கு அளவீட்டு முறையினை மேற்கொள்வது எந்த அளவு பயன்படுகிறது என்றும் காணமுடிகிறது.

வீரமாமுனிவர் தம் சதுரகராதியில் (1824 பதிப்பு:ப.3) அசை என்பதற்கு முதன் முதலாக அசைநிலை என்றும், அசை என்னும் ஏவல் என்றும் பொருளைக் குறித்துள்ளார். அதை ஒட்டிச் செய்யுளுறுப்பில் ஒன்று என்ற செய்யுளுக்குரிய சிறப்பிலக்கணப் பொருளைத் தந்துள்ளார். மேலும் பொருள் வரையறை செய்யும் வகையில் அசைதல், ஆடல், உலாவல், சோம்பல், தங்கல், துவளல் என்ற பொருள்களை அகரவரிசைப்படுத்தி அளித்துள்ளார்.

பொருள் வரையறை செய்வதில் சுருக்கமும், பொருள் கூறுவதில் அகர வரிசையை மேற்கொள்வதும், பொது இலக்கணத்தை முதலில் கூறிச் சிறப்பு இலக்கணத்தை

இறுதியில் கூறுவதும் வீரமாமுனிவரின் பொருள் வரையறை செய்து அகராதி அமைக்கும் நெறியாகக் கொள்ளலாம்.

அசைதல் என்ற சொல்லுக்குரிய பொருளை வரையறை செய்யும் தமிழ்ச் சொல்லகராதியில் (1905). (1) ஆடுதல் (2) இயங்குதல் (3) இருத்தல் (4) இணைத்தல் (5) இளைப்பாறுதல் (6) உலாவல் (7) ஓய்தல் (8) கலங்கல் (9) கிடத்தல் (10) செல்லுதல் (11) சோம்பலாயிருத்தல் (12) தங்குதல், சஞ்சரித்தல் (13) தடுமாறுதல் (14) துவளல் (15) பயப்படல் (16) புடை பெயர்தல் எனும் பொருள்களை அகரவரிசைப்படி கதிரைவேல் பிள்ளை கொடுத்துள்ளார். அவர் 'இதுதான் பொருள்' என வரையறை செய்தமைக்குச் சான்றாகப் புறநானூறு, பத்துப்பாட்டு, திருக்குறள், சிந்தாமணி, பாரதம், கந்தபுராணம், ஞானவாசிட்டம் தாயுமானவர் பாடல்கள் போன்றவற்றிலும் வின்சுலோ அகராதியினின்றும் எடுத்துக்காட்டியுள்ளார். அகராதி தொகுக்கும்போது புரிந்துகொள்வது, புதுமை மேற்கொள்வது என்ற அடிப்படையில் இப்பொருள்களை வரையறுத்துத் தந்துள்ளார்.

இதன் பெயர் வடிவில் அசைப்பு, அசைவு என இரு சொற்களைத் தனித்தனியே தந்துள்ளார். அசைப்பு என்பதற்கு (1) அசைத்தல் (2) இறுமாப்பு (3) சொல்லு (4) சொல்லுகை என நான்கு பொருள்கள் காணப்பெறுகின்றன. அசைவு என்ற சொல்லுக்கு மிகுதியான பொருள்கள் உள்ளன. (1) அசைந்து தாங்கும் ஒரு தாங்கி (2) ஆட்டம், எழுச்சி (3) சலநசக்தி (4) சலநம் (5) சோம்பலாகிய பாடற் குற்றம் (6) சோர்வு (7) தலைதவறுகை (8) புடை பெயர்ச்சி (9) மடிதல், பின்னிடுதல் (10) மநக் கலக்கம் (11) முன்னிலைமை கெட்டு வேறொருவராகி வருந்துதல் (12) வருத்தம் என்னும் பொருள்களை மேலும்

தொல்காப்பியம் நாலடியார், சிலப்பதிகாரம், கல்லாடம், காஞ்சிப் புராணம் முதலிய நூல்களிலிருந்து சேர்த்துள்ளார்.

இதிலிருந்து தொல்காப்பிய கால முதல் தம் காலம் வரை உள்ள நூல்கள் பல்வேறு வழக்கு ஆகிய நிலையிலிருந்தும் அசை என்ற சொற்பொருளை வரையறுப்பதுடன் இலக்கணப் பொருளையும் தனிப்பதிவாக வரையறுத்துக்காட்டுகிறது இவ்வகராதி.

சென்னைப் பல்கலைக்கழக அகராதியின் முதல் தொகுதியில் அகரவரிசையின் முதற்பகுதி 1924இல் வெளிவந்தபோது அதில் மட்டும் 7511 சொற்கள் இருந்தன. அவற்றில் அசை என்ற சொல்லின், செயப்படுபொருள் குன்றிய வினை வடிவாக அசைதலும், செயப்படுபொருள் குன்றா வினை வடிவாக அசைத்தலும் பெயர் வடிவாக அசையும் தொகுக்கப் பெற்றுள்ளன.

அசையை ஒட்டி உருவாகிய சொற்றொடர் வடிவில் உள்ள சொற்கள் மிகுதியாகப் பயன்பட்டதை அசை கம்பு, அசைகொம்பு, அசைபோடுதல், அசைவு செய்தல் போன்ற 20 சொற் பதிவுகள் உள்ளன. சங்க இலக்கியங்களில் காணப்பெறும் பொருள் வரையறையுடன் இதனை ஒப்பிட்டுக் காணும்போது சோம்புதல் என்ற பொருள் அறவிலக்கிய வளர்ச்சியின் விளைவாக வெளிப்படக் (குறள் 1040) கூத்தாடுதல் என்ற பொருள் பிங்கலந்தை நிகண்டின் துணையால் வெளிப்படுகிறது.

செயப்படுபொருள் குன்றா வினை வடிவில் புதிதாக ஆட்டுதல், தாக்குதல், தட்டுதல், சொல்லுதல் போன்றவை காணப்படுகின்றன. கலித்தொகை போன்ற நூல்களில் காணப்பெறும் இத்தகைய சொல்வழக்குகளை நன்கு கண்டு விடுபட்ட பொருள்களை மேலும் நன்கு வரையறை செய்ய

வாய்ப்புண்டு. இதன் சீர்மை நலம் பெருகுதற்குப் பண்டைய நூல்களின் சொல்லடைவுகளும், வட்டார வழக்குச் சொல் திரட்டும், புதிய கலைச்சொல்லாட்சித் தொகுப்பும் துணை புரியும்.

தேவநேயப்பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி (1985) அசைபற்றி விரிந்த பொருள் வரையறை செய்துள்ளது (பக். 86-89). அல்→அலை→அசை என்ற சொல் வருநிலை காட்டுவதுடன் பிற திராவிட மொழிகளில்

(ம: அயவு; க, அசி; தெ. அசியாடு;
து. அசலெ; குரு. அசர்னா)*

எனக் காட்டப்பெறுவது சொற்பிறப்புப் பற்றி மேலும் ஆராயத் துணைபுரியும்.

சங்க அகராதியில் அசைத்தல் என்னும் சொல்லிற்கு இறுமாப்பு எனக் குறிப்பிட்டுள்ளது, அத்துணைப் பொருத்தமாகத் தோன்றவில்லை எனக் குறிக்கும் இதனால் இது முன்னர் வெளிவந்த அகராதிப் பொருள்வரையறைகளை மீண்டும் ஆய்தல் வேண்டும் என்ற உணர்வைத் தூண்டுகிறது

அண்மையில் சூலை 1988இல் இக்கட்டுரையாளர் முதன்மைப் பதிப்பாசிரியராக இருந்து வெளிவந்த தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பெருஞ்சொல்லகராதி. பொருள் வரையறை செய்வதை விரிவாகவும். விளக்கமாகவும், கூர்மையாகவும், அதே சமயம் சுருக்க நிலையைக் கருத்தில்

---

*ம-மலையாளம், க-கன்னடம், தெ-தெலுங்கு. து-துளு

கொண்டு வெளியிட்ட பகுதியில் அசை என்ற பதிவில் மட்டும் 18 பகுப்புக்கள் உள்ளன. பொருள் அடிப்படையை இவ்வகராதி கொண்டுள்ளதால் தலைச் சொற்களில் எண்ணிக்கையும் பொருள் விரிநிலையும் பன்மடங்கு பெருகியுள்ளன. அசை என்ற செயப்படு பொருள் குன்றிய வினையில் பதிவுகள் உள்ளன; பொருள் வரையறை செய்யும்போது அசை-தல் என்ற பதிவைமட்டும் காணின் 1) (காற்று முதலியன மெல்ல) இயங்குதல் 2) (மென்மையாக) ஆடுதல், அலைதல், நுடங்குதல் 3) கூத்தாடுதல், நடனமாடுதல் 4) (மெள்ளச்) செல்லுதல் 5) உலவுதல் 6) விட்டுப் போதல், நீங்குதல் என அமைந்துள்ளன: (மற்றவற்றை அங்குக்காணின் பொருள் விளக்கப்பெருக்கம நன்கு புலப்படும் )

| | |
|---|---|
| செயப்படுபொருள் குன்றியவினைப் பொருள் $6+7+2+1+1=17$ | 29 |
| செயப்படுபொருள் குன்றாவினைப் பொருள் $2+5+2+3=12$ | |

பெயராக வரும் அசை என்ற சொல்லின் பொருள் வரையறைக்கேற்ப 9 பல்வேறு பொருள்கள் சுட்டப்பெறுகின்றன.

பொருள் விளக்கம் காண்பதில் பல்வேறு குழல்களால் இப்பகுப்புக்களை மேலும் பெருக்கவும் வகைப்படுத்தவும் முடியும். இதனால் எதிர்கால அகராதிக் கலைஞர்களுக்கு விரிந்த களம் உள்ளது என்பதில் ஐயமில்லை.

அசை என்ற சொல்லின் பொருள் வரையறைப் போக்கை இதுவரை பார்த்ததால் காண்பவை.

(1) பொருள் வரையறை செய்யும்போது தெளிவும் திருத்தமும் சுருக்கமும் முதலிடம் பெறவேண்டும்.

(2) சொல்லும், சொற்குரிய பொருளும் முழுமையாகத் தொகுக்கப் பெறவேண்டும்.

(3) பண்டைய நூலாசிரியர்கள், உரையாசிரியர்கள் எழுதிய பொருள் விளக்கங்களை நன்கு கண்டறிந்து அவற்றின் வளர்ச்சிக்கூறுகளைப் பொருள் வரையறை செய்தற்குப் பயன்படுத்தல் நலம் பயக்கும்,

(4) களத்தைப் பெருக்கும்போது புதிய பொருள் அமையும் பாங்கினை அறிந்து அவற்றை எடுத்தாளும்போது பொருட் குழப்பம் நேராமல் தெளிவை மனத்தில் கொண்டே வரையறை செய்தல் வேண்டும்.

(5) நுண்பகுப்புக்களைப் பொருள் வேறுபாட்டின் அடிப்படையில் பகுக்கும்போது தெளிவையும் சுருக்கத்தையும் பின்பற்றுவது நலம்.

(6) வேண்டுமிடங்களில் பொருட் தெளிவு கருதித் தக்க சில சொற்களைப் பெய்வதால்பொருள் வரையறை மேலும் செப்பமுறும்.

---

1) V. I Subramaniam, Index of Purananuru, Dept. of Tamil, University of Kerala, Trivandrum, 1962.
2) S. V. Subramanian, Grammar of Akanaanuuru with Index, Dept of Tamil, University of Kerala, Trivandrum, 1972, p. 3.
அகநானூறு (மூன்று தொகுதிகள்) ந. மு. வேங்கடசாமி நாட்டார், ரா. வேங்கடாசலம் பிள்ளை உரை) கழக வெளியீடு, சென்னை.
I 1968, II 1964, III 1969.
3) தொல்காப்பிய நூற்பாவின் எண்கள் இப்பதிப்பை ஒட்டி அமையும்.

# 4

# அகராதித் திட்டத்தில் சில சிக்கல்கள்

தனிமனிதர்கள் தத்தம் பரந்த அறிவாலும் தொடர்ந்த உழைப்பாலும் தனித்த அகராதி செய்த காலத்திலிருந்து மாறி, பல மனிதர்கள் கூடித் தொடர்ந்து தொகுப்பியல் கலை அறிவின் அடிபபடையில் திட்டமிட்டு, அகராதியைத் தொகுப்பது இககாலத்தின் வளர்ச்சியாகும். வீரமா முனிவரின் சதுரகராதியும் குண்டர்ட்டு, கிட்டெல் போன்றவர்களின் அகராதிகளும் தனிப்பட்ட அறிஞர்களின் பெரு முயற்சியின் விளைவாகும். அவர்களும் தம் பணியின் செம்மையைக்கருதி வேறு சில அறிஞர்களை நாடினர் என்பது உண்மை; எனினும், அவர்கள் உழைப்பு தனி மனிதரின் ஆற்றலையே பெரிதும் நம்பியிருந்தது. ஆனால், கால வளர்ச்சியில் பேரகராதிகள் உருவாகும் நிலை ஏற்பட்டது. சான்றாக ஆக்சுபோர்டு ஆங்கில அகராதி அறிஞர்கள் பலர் 40 ஆண்டுகள் கூடிக் கூட்டாக உழைத்ததின் விளைவாக உருவாக்கம் பெற்று வெளிவந்தது. பொதுமக்களில் நூற்றுக்கணக்கானவர் அவ்வகராதியின் தொகுப்புப் பணியில் பெரிதும் ஈடுபட்டனர் என்பதையும் இங்கு மறக்க இயலாது. ஒரு மொழியின் தேன் கூடாக அகராதிப் பணி பல மக்களின் உழைப்பில் இன்று உருவாகும் வளர்ச்சியைப் பெற்றுள்ளது. எனவே கூட்டுழைப்பு செவ்விய நிலையில் உருப்பெற்று முடிவுறத்

திட்டமிடல் என்பது மிகமிக இன்றியமையாத பணியாகும்.

திட்டத்தைத் தீட்டுவது மட்டும் பயனைத் தாராது. இன்றைய நிலையில் தீட்டிய திட்டம் ஆக்கநிலையில் செயல்பட்டுத் திறம்பட எல்லா ஏற்பாடுகளையும் முடித்துக் காட்டும் ஒழுங்கமைவில்தான் வெற்றி பெற வாய்ப்புண்டு. செயலாண்மை செம்மை நெறியில் உருவானால்தான் முடிவு இனிய முடிவாக அமையும். இத்தகைய தொடர் செயல்களின் இயைந்த இணைப்பின் வடிவே அகராதிப்பணி.

கூட்டுப் பணியெனக் குறிப்பிட்டாலும் தனிப்பட்ட அறிஞர் தம் காலத்தை எந்த அளவுக்கு அகராதிப் பணிக்குச் செலவிடுகிறார் என்பதை முதலில் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அகராதிப் பணியாளர் தம் காலத்தை எந்த அளவு, இத்துறைக்கு என ஈடுபாட்டுடன் செலவு செய்கிறார் என்பதைக் கொண்டே இப்பணியின் வெற்றி உறுதி பெறும். திட்டமிடும் போது சிறு அகராதி ஒன்றை உருவாக்க எண்ணினால் சிறிதளவு காலத்தைக் கொண்டே அதனை முடிக்க முடியும். ஆனால் பேரகராதி ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டால் அதற்கேற்பப் பல ஆண்டுகள் தேவைப்படும். தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்று நீண்டகாலம் நிலைபெற்று இலக்கிய வளம் பெற்று வளர்ந்துவரும் மொழிகளில் அகராதி தொகுக்கத் திட்டமிடும்போது வரையறுத்த காலம் என்பது பணிபுரிவோரின் வாழ்நாள் முழுதும் அமையும்.

இடைவிடாது பெரும்பணி ஆற்றும் உணர்வோடு காலங் கருதாது கடமையைச் செய்யும் நிலை உருவாக வேண்டும்.

பொதுவாக அகராதித் திட்டத்திற்கெனச் செலவிடத் திட்டமிடும் அளவு ஒரு எல்லையுள் அடங்குவது அரிது.

1905ல் சென்னைப் பல்கலைக் கழகம் தான் திட்டமிட்ட அகராதியை வெளியிட முதலில் மூன்றாண்டுகட்கு என அளித்த தொகை ரூ. 10,500 மட்டுமே, அத்தகைய அகராதியை ஆக்சுபோர்டு முதலில் வெளியிட ஒப்புக்கொண்டாலும் டாக்டர் போப் அளித்த செலவுத் திட்டத்தைக் கண்டு பின் வாங்கியதால அது செயற்படவில்லை. அதன் பின் 1911ல் சில அறிஞர்களின் துணையுடன அகராதியைத் தொகுக்கும் பணியை முடிக்க அன்றைய சென்னை அரசிடம் 5 ஆண்டுச் செலவுத்தொகையாக ஒரு இலட்சம் ரூபாய் கேட்டது. அதை ஏற்ற சென்னை அரசு அன்றைய இந்திய அரசுக்கு அத் திட்டத்தையனுப்பி வேண்டுகோள் விடுத்தது. அக்கால அரசு அதனை ஒப்புக்கொண்டு தொகையை அளித்து அத்துடன், இத்தகைய திட்டங்கள் எப்போதும் எதிர்பார்க்கும் செலவுத்தொகையைக் கடந்தே செல்லும் என்பதையும் சுட்டிக் காட்டியது. அதற்கிணங்கவே அகராதித் தொகுதிகளுக்கென வரையறுத்த கால எல்லையும் செலவுத் தொகை அளவும் பெருகின. தமிழ் மணம் கமழும் மதுரைச் சூழல் அகராதித் தொகுப்புக்கு உயர்ந்ததாக இருக்கும் என எண்ணி 1913இல் அப்பணி அங்குத தொடங்கியது; பின்னர் 1915இல் வேலை மேற்பார்வையை முன்னிட்டுச் சென்னைக்கு வரப்பெற்றது. இவ்வாறு ஆக்சுபோர்டில் உருவாக இருந்த தமிழ் அகராதி மதுரையில் தொடங்கி சென்னையில் உருவாகி வெளி வந்தது இப்பணியில் ஏற்பட்ட கால இடச் சிக்கலும், செலவுத் தொகையில் உண்டாகிய மாற்றமும் அப்பணியின் போக்கினைத் தெளிவாக எடுத்துக்காட்டும்.

அகராதிப் பணியிலீடுபடும் தொகுப்பாளர்கள் பற்றியும் முதற்கண் திட்டமிடும்போது கருததில கொளளவேண்டும். மற்ற இலக்கியப பணிகள் போன்று அகராதிப்பணி எபபோதுமே இனிமைதரும் இன்பப்பணி அன்று. எதிர் பாராத வகையில அவர் பல இடையூறுகளில சிக்கிக் கொளள நேரிடலாம். ஆய்வில் ஆர்வமுள்ள இளைஞர்கள்

இப்பணியில் பங்குபெறும் வாய்ப்புக் கிடைத்து ஈடுபடும் போது அவ்வாய்வுக்குரிய நேரம் கிடைக்குமா என்பது பெரிதும் ஐயமே. எனினும் அகராதிக்கலை பற்றிய ஆய்வினை மாற்றுப்பணியர்கக் கொள்ளும் வாய்ப்பிருக்கு மாயின் அஃது ஒரு வகையில் நன்மை தரும். இத்தகைய அகராதிச் செயலை மையமாகக் கொண்ட ஆய்வுத் தலைப்பு களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் அதனைத் திட்ட அமைப்பாளர்களின் ஒப்புதலைப் பெறவும் வேண்டும். இத்தகைய நிலை அகராதிப் பணியாளர் முன் உள்ள சிக்கலாகும். பணியின் தொடக்கத்திலேயே ஆய்வுத் தலைப்பைத் தக்கவாறு தேர்ந்தெடுத்துக்கொண்டு ஏற்ற வழிகாட்டியின் துணையைப் பெறும்போது இச் சிக்கல் தீர்க்கப் பெறும்.

அகராதித் தொகுப்பில் பலவகை அகராதிகளைத் தொகுப்பதற்கு வழியுளது. எந்த மொழியில் எத்தகைய அகராதியைத் தொகுக்க உள்ளோம் என்பதைப் பொறுத்துத் திட்டத்தை அமைத்துக் கொள்ளலாம். நிலைத்த இலக்கிய வளமும் நீடித்த வரலாற்று வளர்ச்சியும் கொண்ட தமிழில் பெரும்பாலும் வளர்ச்சி பெறா மொழிக் குரிய அகராதித் தொகுப்பாளர்க்கு ஏற்படும் சிக்கல்கள் ஏற்படா. தமிழின் அகர நிரல் தொன்று தொட்டு வருவது கொண்டு அதனையே பின்பற்றுவது தொகுப்பாளர்க்கு எளிதாகிவிடும்.

அகரவரிசையில் மொழிக்கு முதலில் வரும் எழுத்து களின் வரிசை முறையில் சொற்களை முறைப்படுத்தும் போது உயிர்க்குப் பின் எந்த எழுத்தைத் தேர்ந்தெடுப்பது என்ற சிக்கல் அகராதிப் பணியாளர்க்குத் தோன்றியது. முதல் அகராதியாளர் வீரமாமுனிவரும், அவர்க்குப் பின் வந்தவர்களும் இரண்டாம் எழுத்தாக உயிர்மெய்யை முதலில் பெய்தனர். மெய்யெழுத்தை ஈற்றில் இட்டனர். ஆனால் தமிழ்ச் சங்க அகராதியில் இம்முறை மாறியது.

மெய் முன்னர் வர, உயிர்மெய் அதன் பின்வரும் வகையில் முறைப்படுத்தப்பெற்றது. இந்நெறியையே இந்த நூற்றாண்டு அகராதிகள் பின்பற்றி வருகின்றன. இவ்வாறு அகரநிரல் உயிர்மெய்க்குப் பின் மெய்யா, மெய்க்குப்பின் உயிரா என்ற சிக்கல் எழுந்தபோது பின்னது இன்றைய நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அச்சிக்கல் தீர்ந்துளது. எனினும் அவ்வக்காலத்தில் எழுத்துச் சீர்திருத்தங்கள் தோன்றும்போதும் கணிப்புப்பொறி போன்ற கருவிகளின் செயற்பாட்டுள், அகரநிரல்களில் ஏற்படும் சீர்திருத்தம் ஆகியவற்றைப் பொறுத்தும் புதிய சிக்கல்கள் எழ வாய்ப்புண்டு. அவ்வக் காலத்திற்கேற்பவும் மிகுபயன் நோக்கியும் அறிவியல் நெறி முறையைப் பின்பற்றியும் அச்சிக்கல்கள் தீர்க்கப்படும் என நாம் எதிர்பார்க்கலாம்.

இரு மொழி அகராதிகளைத் தொகுக்கும் போது இன்றைய சூழலில காணப்பெறும் பல்வேறு வரலாற்று நிலைகளுடன அகராதிப் பணியாளர் தம் சூழலையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஆங்கிலம்-உருசிய மொழி, செர்மன், பிரஞ்சு, சீனம் போன்ற பெருமொழிகளில் இரு நிலைகளில் உருவாகும் வாய்ப்புப் பெரிது. போர்ககாலத்தில் அந்தந்த நாட்டு மொழியைக் கற்கும் கல்வியும் அதற்கு ஏற்ற இருமொழி அகராதிகளும் பெருகின. தத்தம் கொள்கையைப் பரப்பும வகையில் சமயம அலலது அரசியல் நோக்கில் எண்ணி இருமொழி அகராதிகள் உருவாகும் வாய்ப்பு எழுகின்றது. தாய்மொழி மாறறுமொழி என இரண்டையும பார்த்து அதற்கேறப அகராதியைத் தொகுப்பா. இந்தியா போன்ற பல்வேறு மொழிகள் பேசும் நாடுகளில் இருமொழி பன்மொழி அகராதிகள் தோன்றும் வாய்ப்பு மிகுதி. இபபணியில் ஈடுபடுமபோது பலதிறப்பட்ட பண்பாடுகளையும நாகரிகக்கூறுகளையும் மனத்தில் கொண்டு அந்நிலைக்கு ஏற்பப் பல மக்களுடன் தொடர்பு கொண்டு வேண்டுவன செய்தால் இத்துறையில் ஏற்படும் பல சிக்கல்களை நீககு இயலும். இருமொழி அகராதிகளில்

மொழிப்போர்களையும் இனப்போர்களையும் தூண்டிவிடும் பொருட்புலப்பாடுகளை மிகக் கூர்ந்து பார்த்து நட்பு வளர்க்கும் வகையில் சொற்களைக் கையாள வேண்டும். இல்லை எனில் அது அவ்வகராதியின் அடிப்படை நோக்கிற்கே கேடாய் முடியும்.

இந்திய நாட்டளவில் சிறுசிறு அளவில் இருமொழி அகராதிகள் பலவற்றைத் தொகுக்கும் வாய்ப்பு பேரளவில் உள்ளது. அங்ஙனம் திட்டமிட்டுச் செய்யும் போது குறைந்த கால அளவிலும் செலவிலும் இருமொழி அகராதிகள் பலவற்றை வெளியிட இயலும். அதனால் இந்திய மக்களில் ஒரு மொழியினர் மற்றைப்பகுதி மக்களை அவர்களின் மொழி வாயிலாக அறியவும் அதனால் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும் உறவு நிலையை வலுப்படுத்தவும் முடியும். இந்நிலையில் பொதுச் சொல் பட்டியல் ஒன்றை எளிதில் தயாரித்துக் கொண்டு அதனைப் பயன்படுத்திக் குறிப்பிட்ட மாற்றுமொழியின் பொருளறியச் சொற்களைத் தொகுக்கும்பணி எளிதாகி விடும்.

வெளிநாட்டு உறவும் வணிகத் தொடர்பும் பண்பாட்டு நெருக்கமும் வளரும் இன்றைய சூழலில் அந்த அந்த நாட்டு மொழிகளைக் கற்கவும் இருமொழி அகராதியின் துணையை நாடலாம். உருசிய நாட்டிலிருந்து இத்தகைய இருமொழி அகராதிகள் வெளிவந்துள்ள வழிகளை நன்கு அறிந்து அவற்றை இத்துறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு நல்ல வாய்ப்புளது.

பிற துறைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அகராதித் துறையில் செலவு மிகுதியாகும் என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். ஆக்சுபோர்டு, வெப்ச்டர் போன்ற அகராதிகள் நீண்ட கால மரபாக்கத்தால் தங்கள் அகராதி வெளியீடுகளாலேயே தங்கள் செலவைச் சரிக்கட்டிக் கொள்ளவும், ஊதியம் பெறவும் முடியும். ஆனால் இது

எல்லா நிலையிலும் உண்மை எனக்கொள்ள இயலாது. டாக்டர் சாமுவேல் சான்சனை முதலில் ஏற்றுக்கொண்ட ஒப்பந்த நிலை பின்னர் அதிலிருந்து நீங்கிக்கொண்டது. காரணம் அகராதிக்கென ஏற்பட்ட செலவின் விளைவு. எனவே இவ்வுண்மையை உணர்ந்துபெரும்பாலான அகராதித் திட்டங்களைக் கலைக்கதிர் போன்ற தனி நிறுவனங்களும் பிரஞ்சுக் கலைக் கழகம் போன்ற கல்விக்கழகங்களும் தமிழ்ப்பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக் கழகங்களும் இத்தகைய பெரும் பணிகளில் பொருளூதியங் கருதாமல் ஈடுபடுகின்றன. அதனால் பிற்காலச் சமூகத்திற்குப் பயன் விளைதலைக் காணலாம்.

வணிக நோககில் வெளிவரும் சிற்றகராதிகளும் சில வகை அகராதிகளும் தவிர்க்க இயலாதவை, ஆனால் அகராதிக் கலையில் அடிப்படை நெறிமுறைகள் துலங்குவதற்கு வாய்ப்பில்லை.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அகராதிகளைத் தொகுப்போர் திட்டமிட்டுச் செயல்படும்போது அச்சமின்றிப் பணிபுரியும் ஆற்றல் ஏற்படும். அந்நிலையில் காலம் பணம்பற்றிய சிக்கன உணர்வும் இயல்பாக ஏற்பட்டு அதற்குகந்த வழியில் செயல்படுத்த வழி காணவும் இயலும். இவ்வகை இடையூறுகளின்றி அகராதிப் பணியைத் தொடர்ந்து செய்ய வாய்ப்புக் கிடைத்தால் அபபணி நிறைவேறும் எல்லையை வெகு விரைவில் அடையலாம்,

அகராதிப் பணியாளர்களாம் பதிப்பாசிரியர்கள் சொற்பதிவுகளை உருவாக்குவது என்பது தலையாய பணியாகும். இப்பணிக்கு ஏற்ற விதிமுறைகளை யாவரும் அறிந்திருத்தல் வேண்டும். அவ்வப்போது சிற்சில விதிமுறைகள் மாற்றப்படும் சூழல் ஏற்படலாம். அவை எவை என்பது குறித்து உடனுக்குடன் பதிப்பாசியர்கட்கும் அவர்கட்கு அடுத்த நிலையில் பணிபுரியும் துணைப் பதிப்பாசிரியர்கள்,

சொல் திரட்டுநர் போன்றவர்க்கும் அறிவித்திட வேண்டும். இல்லையெனில் புதிய மாற்றங்களை அறியாமல் பழைய விதிமுறைகளைப் பின்பற்றிச் செல்லுவதால் எல்லா நிலையிலும் பல்வேறு குழப்பங்களும் பிழைகளும் ஏற்படும். அடிக்கடி, பதிப்பாசிரியர்களும அகராதிப்பணியில் துணை புரிவோர்களும் கூடித் தங்கள் பணிபற்றிக் கலந்துரை யாடல் மேற்கொண்டால் பல வழிகளில் தெளிவுகிடைக்கும. தெளிவு பெறுவதுடன் அகராதிப் பணியில் ஏற்படும் பிழைகள் எவை என அறியவும, அவ்வாறு அறிந்து பிழைகளை நீக்கவும் இயலும். கூடிப் பேசிப் பணிபுரியும் போது பணியாளர்கள் தங்களிடையே ஒத்துணர்வேற்பட்டு அகராதிச் சிக்கல்களைப்பற்றி ஒருவர்க்கொருவர் நன்கு புரிந்துகொள்ளலாம். அந்நிலையில் அவற்றை நீக்குதற் குரிய நெறிகளையும் அவற்றிற்குரிய விதிகளையும் நன்கு கண்டறிய வாய்ப்பு ஏற்படும்.

தமிழ்ப் பேரகராதி தொகுக்குமபோது சங்க இலக்கியங் லிருந்து மேற்கோள் காட்டும்போது எவ்வாறு அதனை அமைப்பது என்பது பற்றிய ஐயம் எழும். அப்போது பத்துப் பாட்டில் காணும் நூல்களுக்குரிய பெயர்ச் சுருக்கத்தை எழுதி முற்றுப் புள்ளியிட்டுப் பின்னர் அதைத் தொடர்ந்து வரி எண் அல்லது எண்களைக் குறித்தால் போதும் எனற விதியை வகுததுக்கொண்டால் அதனை மற்றுமுள்ள பதிப்பாசிரியர்கள அறியும் வகையில் எடுத் துரைக்க வேண்டும். ஆயின மற்றுமுள்ள வேறு சங்க நூல்களில் காணும் வேறு அமைபபுகளைப் பார்த்தவுடன் அவற்றிலிருந்து மேற்கோள்களை எவ்வாறு சுட்டுவது என்ற ஐயம் எழுவது இயற்கையே. அப்போது அந்தந்த நூலின் சிறப்பமைப்புக் கருதிப் பாடல் எண்களை மட்டும் அடிகளில் சிறு அளவுகொண்ட ஐங்குறு நூறு, குறுந் தொகை போன்ற நூல்களுக்குப பாட்டின் எண் மட்டும் கொடுப்பது என்றும் நீண்ட பாடல்களைக்கொண்ட அகநானூறு பரிபாடல் போன்ற நூல்களின் பாடல்

எண்ணை எழுதி அதற்கடுத்துக் காற்புள்ளி இட்டபின்னர் பாடல்வரி எண்ணையும் கொடுக்க வேண்டும் என்றும் வகுத்துக்கொள்ளலாம். இவ்வாறின்றி வேறு வகையிலும் விதிமுறைகளை வகுத்துக்கொள்ள அகராதிக் குழுவிற்கு உரிமையுண்டு. ஆனால் எவ்விதிகளை வகுத்துக்கொண்டனர் என்பதைக் குழுவினர் யாவரும் அறிந்து அவற்றைத் தங்கள் பணியில் பின்பற்ற வேண்டும்:

கருத்து வேறுபாடுகளைக் குழு உறுப்பினர் வெளிப்படையாக எடுத்துரைப்பதில் பிழை ஏற்படாது. பலரும் கலந்துரையாடிய பின் மேற்கொள்ள எடுத்துக்கொண்ட விதிகள் எவை என யாவரும் தெளிவாக அறிந்து கொள்வதுடன் அவற்றைத் தங்கள் பணியில் உடனடியாகவும் பின்பற்றுவதற்கு முயலவேண்டும். இதில் எக்காரணத்தைக் கொண்டும் ஒதத்திவைப்புக்கு இடமில்லை. இதில் குறிப்பிட்ட நூலின் சிறந்த பதிப்புகளில் எந்தப் பதிப்பைப் பின் பற்றுகின்றோம் என்பதை முதலிலேயே வரையறை செய்து அந்நூலில் காணும் எண் வரிசை முறையையே குழு பின்பற்றுவதுதான் ஏற்புடைத்து.

எடுத்துக்காட்டுள் எதனை எடுத்துக்கொள்வது என்பதில் பதிப்பாசிரியர்களுள் வேறுபாடு எழுதற்கு இடமுண்டு. பொருத்தமுள்ளவை, பொருத்தமற்றவை, சரியானவை, தவறானவை என்பவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தற்குரிய காலம் சிலசமயங்களில் ஏற்படும். குழுவில் ஒரு பிரிவினர் ஒன்றையும் மற்றொரு பிரிவினர் வேறொன்றையும் அகராதியிலிட விரும்புவர். இந்நிலையில் பிறர் கருத்திற்கு மதிப்பளித்தும் பொறையுடைமையைப் போற்றி ஒழுகினால் தெளிவு பெறவும், உரியதைத் தேர்ந்தெடுக்கவும் சிக்கலின்றி முடிவு செய்யவும் வாய்ப்பேற்படும். சீனம் போன்ற மொழிகளில் விரைந்து ஒரு முடிவுக்கு வருவது கடினம் என்று கூறுகின்றனர் ஆய்வாளர்.

ஆதலால் அகராதியின் குறிக்கோள் நோக்கம், விருப்பம் பற்றி நன்கு அறிந்தவர்களாகப் பதிப்பாசிரியர் குழு அமைய வேண்டும். அப்போது தான் அகராதிக் குழு செய்யும் பணியின் ஒவ்வொரு செயலும் அவற்றை வளர்க்கும் நிலையில் உருப்பெறும்; நோக்கம் நிறைவேறும் வரை இத்தகைய நடைமுறைகள் தொடர்ந்து செயல்பட்ட வண்ணம் இருத்தல் நலம் பயக்கும்.

அகராதிப் பணியாளரின் நாற்பெரும் பணிகளாக விளங்குபவை 1.தொகுப்பு 2.தேர்வு, 3. அமைப்பு, 4. சீர்மை. இவற்றில் உண்மையாகப் பயிற்சி பெறும்போது பணியாளர்கள் பல்வகையான சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். குறிப்பாக அமைப்புநிலை பற்றி மிகவும் கூரிய நோக்குடன் செயல்பட வேண்டுவது இன்றியமையாததாகும். அமைப்பினைப் பற்றி மீண்டும் மீண்டும் சரி பார்க்கும்போது தேர்வு பற்றிய தெளிவும் சீர்மைபற்றிய சிந்தனையும் வளர்ந்து அகராதிப் பணியின் நிறைவுக்கு உறுதுணை புரிதல்வேண்டும்.

முதல் படிவத்தை எந்த அளவு திரும்பத் திரும்பப் பார்க்க முடிகிறதோ அந்த அளவுக்கு அதில் காணும் பிழைகளை நீக்குதற்கு வாய்ப்புளது. அதற்காக அகராதியின் பதிவு அமைப்புகள் எல்லாம் முடியும் வரை காத்திருக்க வேண்டும் என்பதில்லை. பதிப்பாசிரியர் எழுதிய பதிவுகளை முதன்மைப் பதிப்பாசிரியர் பார்த்து உரிய திருத்தங்களைச் செய்வது முதனிலையாக அமையும். இரண்டாம் முறை படித்துப் பார்க்கும் போதுதான் உண்மையில் பதிவுப்பணி செப்பம்பெறும் என்பர். பதிவுகளை மேலோட்டமாகப் படித்துக் கொண்டு போவதில் எதிர்பார்க்கும் நன்மை விளையாது. பதிவு அட்டைகளின் துணை கொண்டு வேண்டுமிடங்களை ஒப்பிட்டுப் பார்த்து உரிய மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

மீள்பார்வையிடும்போது உண்மையில் சில மாற்றங்கள் செய்ய நேரிடும். சில வேளை பதிவின் முழுவடிவையே மாற்ற வேண்டிவரும் அல்லது அதன் வைப்பு முறைபற்றி எண்ணிப் பார்த்து அதற்கேற்ப உருவாக்கம் கொடுக்க வேண்டியிருக்கும். இவ்வேலை செய்யும்போது எல்லையற்ற துன்பமும் மனச்சலிப்பும் ஏற்படும் என்பது தவிர்க்க இயலாது. எனினும் அகராதிச் சீர்மையைக் கருத்தில் கொண்டு அப்பணியை மேற்கொள்ள வேண்டும். இதில் அடிப்படை மாற்றம் ஒன்று செய்யும் நிலை ஏற்படின், அது இலக்கணக்குறிப்பாகவோ சுருக்க நிலைப்பற்றிய நெறி முறையாகவோ இருக்கலாம். அதனை அகராதி முழுதும் மேற்கொள்ளுவது இன்றியமையாதது ஆகும். இத்தகைய விதி மாற்றங்கள் பற்றிய செய்தியை அகராதிப் பணியாளர் அனைவர்க்கும் தெரிவிப்பது அப்பணியின் செம்மைக் குதவும்.

சில வேளைகளில் அரசியல் ஆணைகளின் விளைவாக எழுத்துச் சீர்த்திருத்தங்கள் ஏற்படும். அத்தற்கேற்ப அகராதியில் எழுத்துவடிவம் மாறுவதற்கு ஆவன செய்யவேண்டும். இவையெல்லாம் அகராதியின் அச்சுப்படியில் செய்யவும் கூடும். ஆயினும் அவற்றைக் கருத்தில்கொண்டு எவ்வித விடுபாடும் இன்றி மேற்கொள்ள வேண்டும். அச்சகத்தாரும் மெய்ப்பைப் பார்ப்போரும் பல்லாண்டுகாலப் பட்டறிவு பெற்றவராகவும், தொடர்ந்து அகராதிப் பணியில் ஈடுபட்டு அப்பணிக் குழுவினரின் செயல் முறைகளை நன்கு அறிந்தவராகவும் இருப்பின் அகராதி வெளியீடு செப்பம் பெறும். அச்சுக் கலை பற்றிய முடிவு எடுக்கும்போதும் அத்துறை வல்லுநர் ஒருவரின் துணையைக் கொள்வது நலம் பயக்கும். தலைச்சொல் பெரிய எழுத்திலும் இடமுகம் அதனினும் சிறிய எழுத்திலும் இருப்பதை யாவரும் ஏற்பர். முதலிலிருந்தே இச் சிக்கலை மனத்தில் கொண்டு செயல் படின் அகராதிப் பணி நன்கமையும்.

பொருள் நிலை எடுத்துக்காட்டுப் போன்றவை இடை நிலையில் ஏற்றவாறு அச்சிடப்பெறும். இவற்றையெல்லாம் சொல்வது எளிது. ஆயினும் செயல்படுவது கடினம், எனவே அச்சகத்தாருடன் கலந்து அந்தந்த மொழியின் எழுத்து நிலைக்கு ஏற்ப அச்சுக்கலை அமைப்பைக் கொள்வது அகராதி வெளியீட்டின் சிக்கலை நீக்க உதவும்.

இத்தகைய சிக்கல்கள்கொண்ட அகராதிப் பணியை உண்மையில் இன்பமூட்டும் அறிவுப் பணியாகக் கொள்வர் பேராசிரியர் உல்பார்ட் போன்றவர்கள். ஏனெனில் பெரும் பாலான அகராதிப் பணி முடிவடையும் போது தொகுப் பியல் அறிஞர்களுக்கு நற்பயனை நல்கத் தவறுவதில்லை. இத்துறையில் ஒவ்வொருநாளும் சிக்கல்கள் தோன்றிய வண்ணம் இருக்கும். அவை மற்றத் துறைகளில் எழும் சிக்கல்கள்போல மிகப் பெரிய சிக்கல்கள் போல இங்குத் தோன்றா. அவை இனிய எளிய சுவை பயக்கும், சிக்கல் களாக-அகராதிப் பணியின் - தோழர்களாக-வந்தவண்ண மிருக்கும், ஆயின் அந்த அந்த நாளின் முடிவில் அவை பெரிதும் நீங்கிவிடும். நலமிக்க களைப்பு, நிறைவுற்ற நெஞ்சம் முன்னேற்றப் பணியில் முன்னடியிடும் ஊக்கம் ஆகியவை நிறைவுற அகராதிப் பணி தொடர்ந்து செல்லும்.

# 5

# அரும்பத உரையும் அகராதிக் கலையும்

## முன்னுரை

மொழியில் காணும் தனி மொழி, கிளை மொழி, நிலை மொழி ஆகிய முக்கூறுகளும் ஒவ்வொரு நிலைக்குரிய அகராதிகளை நமக்களித்துள்ளன, நிலை மொழி என்பது படித்த மக்களிடையே மதிப்புடையதாகக் காணப்பெறுகிறது. இதன் வளர்ச்சிக்குப் படித்தலர்களும், பண்பட்ட இலக்கியமும் துணை புரிவதை நாம் அறிவோம், இதற்கிணையாகத் தனிப்பட்ட ஆசிரியர் படைப்பில் பயன்படுத்திய சொற்களைக் கொண்டு அகராதிக் கலை முறையை அறிய இயலும்.[1] இக்கருத்தின் அடிப்படையில் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளின் சொல் வளத்தை உணர, அக்காப்பியத்திற்கு உரை எழுதிய அரும்பதவுரையாசிரியரின் பணி துணை புரிகிறது. ஹோமர் பயன்படுத்திய சொற் செல்வத்தை அறிதற்கு அரிசுடார்கசு (கி, மு. 220-145) துணை புரிந்தது இங்கு நினைத்தற்குரியது.[2]

தமிழ் நூல்களுக்கு உரைஎழுதிய உரையாசிரியர்களை, இலக்கிய உரைாசிரியர்கள், இலக்கண உரையாசிரியர்கள், ஞான சாத்திர உரையாசிரியர்கள் எனப் பகுப்பர். சில

உரையாசிரியர்கள் இவற்றில் ஒன்றிற்கு மேற்பட்ட பிரிவில் அடங்குவர். நச்சினார்க்கினியர் இலக்கியம், இலக்கணம் போன்ற இரு பிரிவுகளுள் அடங்குவர். அரும்பத உரை யாசிரியர் சிலப்பதிகாரக் காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர். வேறு இலக்கண நூல்களுக்கு இவர் உரை எழுதவில்லை. எனவே இலக்கிய உரையாசிரியர் என்ற பிரிவில் மட்டும் இவர் அடங்குவர்.

இவருடைய இயற் பெயர் தெரியவில்லை. ஆயினும் இவர் எழுதிய உரையடிப்படையில் இவர் பெயரைச் சிலப்பதிகாரத்தின் மற்றொரு உரையாசிரியரான அடியார்க்குநல்லார் தம் உரையில் (5.157-160) 'அரும்பத வுரையாசிரியர்' எனக் குறிப்பர்.

இவர் பெயரை 'ஜெயங்கொண்டான் கவிச் சக்கிர வர்த்தி' எனத் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் குறிப்பர்.[5] அக்கருத்தைப் பலரும் ஏற்காததால் அரும்பதவுரையாசிரியர் என்ற பெயரே நிலைத்துவிட்டது. இவர் காலம் பதினொராம் நூற்றாண்டு என்பர். இவர்க்குப் பின்னர்ச் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்குநல்லார், ந. மு. வேங்கடசாமி நாட்டார், ஆர். கே. சண்முகம் செட்டியார் ஆகியோர்க்கு இவருரை நல்வழிகாட்டியாகும். அரும்பதவுரையாசிரியர்க்கு முன்னரும் ஒருரை இருந் திருத்தல் கூடும் என இவ்வுரை வாயிலாக அறியினும் அது நமக்குக் கிடைக்கவில்லை.

இவருரையின் இயல்புகளை எடுத்துக் கூறும்போது அருஞ்சொற்களை எடுத்துக் காட்டிப் பொருள் கூறல், ஒரே வழித் தொடர்களின் முதல் இறுதிகளையேனும் முதலை மட்டுமேனும் காட்டிப் பொருளுரைத்தல், இன்றியமையாத இலக்கணங்களைக் குறித்தல், சொற் பொருள் முடிவு

காட்டுதல், நீண்ட தொடர்கட்குப் பொழிப்புரை கூறிப் பின் அவற்றின் பகுதிகளைத் தனியே எடுத்து விளக்குதல் ஆகியவற்றைக் குறிப்பார் ந.மு. வேங்கடசாமி நாட்டார்.[6]

அடியார்க்குநல்லார் உரைபோல இது கற்றோரிடையே பெருஞ் செல்வாக்குப் பெறவில்லை. சிலம்பு முழுவதிற்கும் உள்ள முதல் உரை இதுவே. இவர் சிறப்பாக இசை நாடகப் பகுதிக்குக் கூறிய உரையை அடியார்க்குநல்லார் தழுவிச் சென்றுள்ளார். அடியார்க்குநல்லார் உரையாற் புலப்படாத சில விஷயங்கள் இவ் வரும் பதவுரையால் விளங்குகின்றன' என்ற உ.வே. சாமிநாதையர் குறிப்பால்[7] இதன் சிறப்பு நன்கு புலப்படும்.

சிலம்பில் பல சமயங்கள் பற்றிய செய்திகள் உள்ளன. அவற்றிற்கு அரும்பதவுரையாசிரியர் எவ்வித விருப்பு வெறுப்புமின்றி உரையெழுதிச் செல்கிறார். இத்தகைய நடு நிலைப் பண்பு அகராதிக் கலைஞர்க்கு வேண்டப்படும் பண்பாகும்.

அரும்பதவுரை என்ற பெயருக்கேற்ப இதில் அரும் பதம் என்ற நிலையில் ஏறத்தாழ ஐந்நூற்றைம்பது சொற்களுக்குப் பொருள் கூறியுள்ளார். அரங்கேற்று காதை, கானல்வரி ஆகிய காதைகளில் இசை, கூத்துப் பற்றியும், கடலாடு காதையில் அணிகள் பற்றியும், ஊர் காண் காதையில் பலவகை மணிகள் பற்றியும் கூறும் செய்திகள் விரிவாகக் கலைக்களஞ்சியப் போக்கில் அரும்பதவுரையில் அமைந்துள்ளன. இது பிற்கால அகராதிக் கலைஞர்கள் அறிதற்குரிய பல கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

அரும்பதவுரைப் பகுதிகளில் முப்பதிற்கும் மேற்பட்ட இடங்கள் ஏடுகளில் சிதைந்த நிலையிற்காணப்படுகின்றன. இவற்றை உணர்ந்து இப்பகுதிகளைக் கூர்ந்து தொகுக்க வேண்டியுள்ளது. இனிவரும் பதிப்பாய்வாளர்கள் சிலப்பதி

கார அரும்பதவுரையின் நல்ல ஏட்டினைத் தேடிக் கண்டு பிடித்தால் அகராதிக் கலைக்குரிய புதியசொற் செல்வம் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது.[8]

உ.வே. சாமிநாதையர் பதிப்பித்த சிலப்பதிகாரத்தில் காணும் குறிப்புப்படி அழற்படு காதையிலுள்ள 16—33, 37—50, 67—84, 89—96 அடிகளில் கூறும் நாற்பூதம் பற்றிய பகுதிகள் சில ஏட்டுப் பிரதிகளில் இல்லை என அறிகிறோம். ஆயினும் 16 – 33 அடிகளிலுள்ள ஆதிப்பூத மாம் பிராமண பூதப் பகுதிக்கு மட்டும் அரும்பத உரைக் குறிப்புகள் சில கிடைக்கின்றன. அரசர், வணிகர், வேளாளர் பூதம் பற்றிய மூன்று பகுதிக்கும் உரை காணப்பெறா நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும்.

முதற் பகுதிக்குரிய உரை அரும்பத உரையா அல்லது பின்னர் வந்தவர்களால் சேர்க்கப் பெற்றதா என ஐயமேற் படுகிறது. இத்தகைய ஐயங்கள் நீங்கும் வகையில் இனிமேல் பதிப்புக் கலை ஆய்வாளர்கள் துணை புரியின் நல்ல பதிப் புகள் வெளிவரும். அவற்றால் அரும்பதவுரையின் நல் வடிவம் கிடைக்கவும், புதிய சொற்களும், பொருளும் கிடைக்கவும் வழிஏற்படும்.[9]

அரும்பதவுரையாசிரியர் தம் விரிந்த பரந்த இலக்கிய, இலக்கண அறிவைக் கொண்டு பொருள் விளக்கம் கூறும் போது அதற்கு உறுதுணையாகச் சில நூல்களை உரிய அளவில் பயன்படுத்துகிறார். சங்க நூல்களாகிய புறநானூறு (10.137), கலித்தொகை (3.6), நற்றிணை (7.43), பத்துப்பாட்டு (24.(20)), ஆகிய நூல்களும் அற நூலாகிய குறளும் (23.128), காப்பியமாகிய சிந்தாமணியும் (20.30), இலக்கண நூல்களாகிய அகத்தியம் (8.24), தொல் காப்பியம் (7(34)), புறப்பொருள் வெண்பாமாலை (7(48), செயிற்றியம் (3.125.128) ஆகிய நூல்களும் அரும்பத வுரையில் எடுத்தாளப் பெறுகின்றன. வேண்டுமிடத்தில்

சிலப்பதிகாரத்தையும் தம் உரைக்குச் சான்றாகக் கொள்ளுவதைக் காணமுடிகிறது. (29 உரைப் பாட்டு மடை). புராணக் கதைகளை நன்கறிந்து அவற்றின் செய்திகளைச் சுருக்கமாக இவ்வுரை கூறும் (17(5), (31)). இதனையும் அடியார்க்குநல்லார் உரையையும் ஒப்பிடின் 'அரும்பதவுரை' என்பதற்கேற்பப் பிற நூல் மேற்காட்டல் குறைவாகவே உள்ளது. குறிப்பாகத் தொல்காப்பிய இலக்கண மேற்கோள் காட்டல் மிகக் குறைவாகவே உள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

அரும்பதவுரையாசிரியர் தாம் உரை எழுத மேற் கொண்ட நூலாசிரியராம் இளங்கோவடிகள் பற்றிப் பல செய்திகளைத் தம் உரையகத்துக் கூறிச் செல்கிறார். இளங்கோவடிகள் துறந்திருந்து இக்காவியம் செய்தல் (பதி. 2), துறத்தற்குரிய சூழல், இக்காப்பியம் தோற்றற்குரிய சூழல், ஆசிரியரின் அகவெழுச்சி (பதி.90). 'அறம் செய்ம் மின்' என உலகத்தார்க்கு அறங் கூறும் பாங்கு (16-வெ) நூலினகத்து ஆசிரியரின் கூற்று (30.173-182) ஆகியவற்றை நுணுகி உணர்ந்து உரை கூறிச் செல்வதால் நூல் ஆசிரியர் பற்றி உரையாசிரியர் நன்கறிந்து உரை செய்த போக்குப் புலனாகிறது.

முன் கதை நிகழ்ச்சிகளைக் காப்பியத்தில் நினைவூட்டும் வகையில் ஆங்காங்கே அரும்பதவுரை குறித்துச் செல்லும் (19. 36 19. 72). காப்பியச் செய்யுள் நடையில் காணும் உரையாடலை எளிய உரைநடைப்படுத்திக் கூறுவதுடன் அவ்வுரை யார் கூற்று என அறியும் வகையில் சுட்டிச் செல்லும் (26. 19-24).

## 1. அரும்பதவுரை

சிலப்பதிகாரத்தில் பொருள் தெரியாத அரும்பதங் களுக்கு மட்டும் உரை கூறும் நோக்கம் நூல் முழுவதும்

அமைந்துள்ள அரும்பதவுரையால் நன்கு தெரிகிறது. இவ்வுரையில் அரும்பதவுரையாசிரியர் பொருள் கூறு தற்கென எடுத்துக் கொண்டுள்ள பதிவுகள் மட்டும் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆகும். கலைக்களஞ்சிய நோக்கில் விரித்துப் பொருள் கூறும் பதிவுகளைத் தவிர்தது இங்கு ஆய்வுக்கென எடுத்துக்கொள்ளப் பெற்ற பதிவுகள் ஏறத்தாழ ஆயிரத்தெண்ணூறு ஆகும்.

இவ்வுரையையும் அடியார்க்குநல்லார் உரையையும் முழுமையாகக் காணும் போது பொருள் கூறுவதில் எளிமையே அரும்பதவுரையின் தலையாய நோக்கமாக வுள்ளது. சிலம்பைப் பயில்வோர் எளிமையாக நூலினை அறிதல் வேண்டும் என்ற நோக்கினை இவ்வுரையில் காணும் பதிவுகளால் அறியலாம்.

காலந்தோறும் தமிழ்ச் சொற்களின் வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களை அரும்பதவுரையாசிரியர் 'தொழி லாளர்கள்-மந்திரிகள்' (11-60) எனக் கூறியதை இன்று அச்சொல்லுக்குரிய பொருளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நன்கு அறிய முடிகிறது.

அரும்பதவுரை பற்றிய ஆய்வு தமிழாய்வுலகில் மிக அருகிய நிலையிலேயே நடைபெற்றுள்ளது, குறிப்பாக இவ்வுரையிலமைந்த அகராதிக் கலைக் கூறுகள்பற்றி ஆயும் முயற்சியில் இதுவே முதல் முயற்சியாகும்.

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதும் போது அரும்பத வுரையாசிரியர் அந்நூலின் தொடக்கம் முதல் முடிவு வரையுள்ள காதைகளுக்கு அவை அமைந்துள்ள நேர் கோட்டு நிலையிலேயே உரை கூறிச் செல்கிறார். இப் போக்கில் நூலிலமைந்த சொற்களுக்குப் பொருள் கூறு வதில் அகர நிரல் முறையை எதிர்பார்க்க இயலாது. தமிழில் அகர நிரலுக்குரிய அறிமுக முயற்சியை, கி. பி.

1594-இல் சிதம்பர இரேவண சித்தர் தொடங்கிவைத்தார். இவர்க்கு முன்னர்த் தோன்றிய இவ்வுரையில் பின்னர்த் தோன்றிய வளர்ச்சியை எதிர்பார்த்தல் நன்றன்று.

## 2. அகராதிக்கலைக் கூறுகள்

தாம் எடுத்துக்கொண்ட நூலில் உள்ள கடினமான, பொருள் தெரியாத சொற்களுக்கு உரை எழுத மேற்கொண்ட அரும்பத உரையாசிரியர் முயற்சியில் அகராதிக் கலையின் தொகுப்புக் கூறுகள் நன்கு புலப்படுகின்றன. தாம் இந்நூலைக் கற்கும்போது எதிர்ப்பட்ட அரும்பதங்களைக் காதை வழியே கண்டு நேர்படப் பொருள் எழுதிச் செல்கிறார். சில சமயங்களில் அரும்பதம், அவற்றிற்குரிய பொருள் ஆகிய இரண்டையும் குறிப்பர். சில சமயம், அவற்றைக் குறிக்காமல் பொதுவாகப் பொருளைமட்டும் சுட்டிச் செல்வார். (1-31-33).

தலைச் சொல்லைத் தனியே எடுத்தாள்வதில் சில சமயம் எச்ச வடிவில் உள்ள சொற்களுக்கு முழு வடிவைத் தேர்ந்தெடுக்கும் பாங்கு தெரிகிறது. பிற்கால அகராதிகளில் வினைச்சொல் வடிவம் தருவதில் இத்தகைய போக்கைப் பின்பற்றுவதற்கு இது முன்னோடியாகவுள்ளது.

அகராதி வகைக்கு ஏற்பத் தலைச்சொல்லிற்குரிய இலக்கணக் குறிப்பு எழுதிச் செல்வது அகராதிக் கலையில் காணும் வழியாகும். அரும்பத உரையாசிரியர் எல்லாவற்றிற்கும் இலக்கணக் குறிப்புக் காட்டாமல் சிலவற்றிற்கு வேண்டுமிடம் நோக்கி வினைக்குறிப்புப்பெயர் (1.54—59), இடைச்சொல் (8.109), ஆகுபெயர் (10 8) போன்றவற்றைச் சுட்டுவர்.

பொருள் கூறும் போது சுருங்கிய நிலையில் நேர் பொருள் எளிமையில் விளங்கும் வகையில் பொருள் கூறும்

நோக்கமே அரும்பதவுரை முழுதும் காணப்படும் பண்பாகும். மிகவும் அருகிய இடங்களில் மேற்கோள் காட்டித் தாம் கூறும் பொருளை நிறுவும் போக்குக் காணப்படுகிறது.

ஒரு பொருள் பல சொற்கள் வருமிடம் நோக்கி அவற்றிற்குரிய பொருளைமட்டும் சுருக்கமாகக் கூறிச் செல்வர். ஒரு சொல்லுக்குப் பல பொருளிருப்பின் தாம் எதற்கு முதன்மை தர நினைக்கிறாரோ அதனை முதலில் கொடுத்து அதன்பின் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைப் பொருள்களையும் கூறுவர்.

பொருள் எழுதிய பின் அதற்கும் காப்பிய மாந்தர்க்கும் பொருள் தொடர்புகள் இருப்பின் அவற்றைக் குறிப்பர். இதன் காரண காரியத் தொடர்ச்சி மேலும் பொருள் விளக்கம் பெற உதவுவதாக அமையும்.

பிறமொழிச் சொற்களைப் பொருள் விளக்கத்திற்குப் பயன்படுத்தத் தயக்கம்கொள்ளவில்லை. வேண்டுமிடத்துக் கிரந்த எழுத்துக்களையும் மேற்கோள்களைச் சுட்டப் பயன் படுத்தியுள்ளார். எனவே உரை எழுந்த காலத்தில் அகராதிக் கலையில் தூய்மை வாதம் அமைதல் பற்றிய கருத்து எழவில்லை. பொதுவாகப் பழைய மரபை ஒட்டியே உரை செல்கிறது.

அகராதிச் சொற்களின் பொருள் பற்றி ஆய்வது பொருண்மை இயல். இதன் விதிகளை நன்கறிந்து பயன் படுத்தின் அகராதிக் கலை நுட்பங்கள் நன்கு விளங்கும். தமிழ்க் காப்பியத்தின் அரும் சொற்களுக்குப் பொருள் எழுதும்போது அதன் பின்னணியாகப் பல மரபுக் கொள்கைகள் அகம், புறம் சார்ந்து அமைந்துள்ளன. அவற்றையெல்லாம் வேண்டுமிடத்துச் சுருக்கமாகக் காட்டும்போது மரபு வெளிச்சம் நன்கு கிடைக்க முடியும். (கானல்வரி).

நேர் பொருளைக் கூறிச் செல்லும்போது கடினமான அரிய சொற்களுக்குப் பொருள் காணும் முயற்சியே அரும் பதவுரை ஆசிரியரின் முயற்சியாகவுள்ளது.

நூல் முழுவதும் ஒரு நோக்கில் காணும்போது குறிப்புப் பொருளைக் காப்பியக் கதையுடன் ஒட்டிய இடங்களில் காரண காரிய இயைபுடன் வெளிப்படுத்தும். (1.29.8.வெ).

## ஏ. தொல்காப்பிய மரபு

தொல்காப்பிய உரியியலில் முழு அளவில் அகராதிக் கூறு அமைந்துள்ளது எனக் கூறுவோருமுளர்.[10] தொல் காப்பியத்தை நன்கு பயின்ற அரும்பதவுரையாசிரியர் தம் முறையில் தொல்காப்பியர் கூறிய பொருளை அவ்வாறே ஏற்றுச் சொல்லும் போக்குக் காணப்படுகிறது. 'புலம்பே தனிமை' (தொல். சொல். 331. சேனா.) என்ற நூற்பாவின் பொருளுக்கேற்பச் சிலம்பில் அந்திமாலைச் சிறப்புச் செய் காதையில்,

'விலங்கி நிமிர் நெடுங்கண் புலம்பு முத்துறைப்ப (4.71)

என்ற வரியில் காணும் 'புலம்பு' என்ற சொற்குத் 'தனிமை' என்று பொருள் கூறுவர். இதுபோன்றே காடுகாண் காதையில் காணும்,

'அந்தில் அரங்கத் தகன் பொழி லகவயின்' (11,6)

என்ற அடியில் காணும் 'அந்தில்' என்பதை அசைநிலை என்பார். தொல்காப்பியம்,

'அந்தில் ஆங்கே அசைநிலைக் கிளவியென்று
ஆயிரண் டாகும் இயற்கைத் தென்ப'
(தொல். சொல். 267. சேனா.)

எனக் கூறும் நூற்பாவுடன் இது ஒத்துள்ளது.

சில இடங்களில் தொல்காப்பியம், ஒரு சில சொற்களுக்கு விரித்துப் பொருள் காட்டிச் செல்லும். இதற்கு மாறாக அரும்பதவுரையாசிரியர் சுருக்கமாகப் பொருளுரைப்பர். சான்றாகக் 'காஞ்சி' என்ற சொற்குத் தொல்காப்பியம்,

'காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறியானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே
(தொல். பொருள். புறத். 18. இளம்.)

என்று விரித்துரைக்க இவர் 'நிலையாமை' என ஒரே சொல்லில் சுருக்கமாகப் பொருள் கூறுவர். (25.132).

தொல்காப்பியர் கூறாத புதுப் பொருள், நூலில் காணப்படின் அதனைத் தனியே அரும்பதவுரை எடுத்துக் காட்டும்.

'மல்லல் வளனே' (தொல். சொல். 303. சேனா.) என்று ஒரு பொருள்மட்டும் உரியியல் கூறும். ஆனால் கால வளர்ச்சியில் இச்சொல்லைச் சிலம்பு, 'வலிமை' என்ற பொருளில் கையாண்டுள்ளது. தொல்காப்பியம் இப் பொருளைக் குறிக்காததால் தானும் ஏற்காமல் விட்டுவிடவில்லை. மாறாக இதற்குரிய புதுப் பொருளாம் 'வலிமை'யை உணர்த்தத் தவறவில்லை. இப்போக்கு அகராதிக் கலைஞர்கள் காலந்தோறும் எழும் புதுப் பொருள் திரட்டுவதற்குரிய விழிப்புணர்வைக் காட்டும்.[11]

சில சொற்களைத் தொல்காப்பியம் வெறும் சொல் என்ற அளவில் குறித்துச் செல்லும். கால வளர்ச்சியில் அச்சொற்களுக்குரிய பொருள், நுண்மை நிலை எய்தும். அதை உணர்ந்து அதற்கேற்பச் சொற்பொருளை அரும்பதவுரை குறிக்கும். 'காட்சி' என்பதை முன்னுரையாசிரியர்

(போர்க்களத்துப்பட்ட வீரனைக் கல் நிறுத்தற் பொருட்டுக் கற்) காண்டல்" என்பர். (தொல்: பொருள். புறத்.5 இளம்). காப்பிய கால வளர்ச்சிக்கேற்பச் சொற்களின் பொருளைக் கூறும் வகையில் 'கற்கொள்ள மனத்தால் நிச்சயித்தல்' எனக் காட்சிக் காதை இறுதியில் இச்சொற் பொருளை நுண்மை நிலையில் அரும்பதவுரை கூறும்.

இதனால் தொல்காப்பியம் கூறியதை முழுதும் ஏற்றல், அது கூறாத புதுப்பொருளைச் சுட்டல், கால வளர்ச்சியில் காணும் நுண்மை நிலை காணல் ஆகிய நெறிகளை அரும் பதவுரையில் காண முடிகிறது.

## 4. பாட வேறுபாடு

சிலப்பதிகாரப் பதிப்பில் அடியார்க்கு நல்லார் தம் உரையில் கொண்ட பாடத்தையே உ.வே. சாமிநாதையர் தம் பதிப்பில் பின்பற்றியுள்ளார். அதற்கும் அரும்பத வுரையாசிரியர் கொண்ட பாடத்திற்கும் ஏறத்தாழ எழுபது வேறுபாடுகள் உள்ளன. வரலாற்று முறைப்படி அகராதி தொகுக்கும்போது காணும் பாட வேறுபாடுகள் மிகக் குறைந்த அளவே (5.7%) காணப்படுகின்றன.

தொகை நிலையில் வினைத் தொகை வடிவிற்கு அடியார்க்குநல்லார் முதலிடம் நல்க அரும்பதவுரை அதற்கு மாற்று வடிவையே கொள்ளும்.

| **அரும்பதம்** | **அடியார்க்கு நல்லார்** |
|---|---|
| வரிக்கோலம் | வரிகோலம் (5.226) |
| மலர்ப்பலி பீடிகை | மலர் பலி பீடிகை (12.43) |

வினை முற்றிறுதியாக-அம், -அர் போன்ற விகுதிகளை யுடைய வினைச்சொற்களை அரும்பதவுரை காட்ட அவற்

றிற்கு - ஏம், - ஓர் போன்ற விகுதிகளையுடைய சொற்களையே பெரும்பாலும் அடியார்க்கு நல்லார் உரை காட்டும்.

பெயர் வடிவில் காணும் பாட வேறுபாடுகளே மிகுதியாக உள்ளன. ஒரு பெயரை இரு பெயர் வடிவம் ஆக்கல் (மலயம், மலயகம் 14.81), புதுப் பெயர் வடிவு காணல், (கணவன், துறைவன் 17(22), வம்ப மாந்தர், வம்பப் பரத்தர் 16.63. பொன் செய் புலவர், பொன் செய் கொல்லர் 5.31)

வேற்றுமை உருபு மாறிய வடிவங்களைக் காட்டல். (மாக்கட்கு/மாக்களை 16 164)

சொல்லடுக்கு நிலை, (காணிகா காணிகா. 18.46 அடியார்க்குநல்லார் உரையில் 'காணிகா' மட்டும் உள்ளது. அடுக்கி வரவில்லை.)

புதிய சொற்கள் காணும் நிலை (அடியார்க்கு நல்லாருரையில் காணாத 'வானவருணா', அரும்பதவுரையில் (10.144) இருத்தல், ஆகியவற்றைப்பாட வேறுபாடுகளாக அறிய முடிகிறது.

இருவுரைகளில் காணும் சொற்கள் சிலவற்றில் எழுத்து மாற்றங்கள் உள்ளன.

(எ-டு) ஐ > அ (உயிர்) : குடைகால் (அரும்)
குடக் கால் (அடி) 6.138

ல > ள (மெய்) : வால் (அரும்)
வாள் (அடி) 16.25

இவை போன்றவற்றைக் காணும் போது அகராதிக்குத் தேர்ந்தெடுக்கும் சொற்களின் இரு வேறு வடிவங்கள் கிடைத்தற்கு வாய்ப்புளது.

சுவடி மரபில் நுண்ணிய ஆய்வின் துணை கொண்டு நம் நூல்களை நம்புதற்குரியனவாக ஆக்காதவரை நம் அகராதிகள் மதிப்பற்றுப்போகும்.[12] எனவே எதிர் காலத்தில் அகராதிகள் மதிப்புப் பெறும் வகையில் அரும் பதவுரை காட்டும் பாட வேறுபாடுகளை நுணுகிக் கண்டறிந்து அகராதிக்குரிய செவ்விய வடிவங்களைத் தொடர், சொல், எழுத்து ஆகியவற்றின் துணை கொண்டு கண்டறியலாம்.

## 5. வேற்றுமை

வேற்றுமைப்பொருளைச் சுட்டும்போது அரும்பதவுரை எழுவாய் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, விளி வேற்றுமைகளை அறியும் வகையில் அமைந்துள்ளது.

பிற வேற்றுமைப் பொருள் கொள்ளாமல் எழுவாய் எது என தெளிவுறக் காட்டுவதில் அரும்பதவுரை முன்னிற் கிறது. சில இடங்களில் வேற்றுமை உருபை மட்டும் குறித்துப் பின் அதன் பொருளைச் சுட்டும்.

(எ-டு) ஓதம் — எழுவாய்7 (28)[13]
ஒடு — உடனிகழ்ச்சி 3.27

வேற்றுமைப் பொருள் விளங்கும் வகையில் பொருள் தெரிந்த பெயரும் சாரியையும் உள்ள இடத்து வேற்றுமை உருபை மட்டும் அரும்பதவுரை விரித்துக் காட்டும்.

(எ-டு) மரபின்-மரபால் 22.65

பொருள் தெரியாப் பெயரும் சாரியையும் வரின் பொருளறியும் வண்ணம் தெரிந்த சொல்லையும் வேற்றுமை உருபையும் விரிக்கும்.

(எ-டு) ஓதையின்-ஆரவாரத்துடனே 5.75

அரும்பதவுரை விளி வேற்றுமைப் பொருளை நன்கு வெளிப்படுத்திக் காட்டுகிறது. இதனைக் கூறும்போது பெயரில் விளி பெறும் நிலையை விரித்துக் காட்டும்.

(எ-டு) நங்கை-நங்காய் 16—14

விளி பெற்ற சொல்லின் பொருள் வெளிப்படத் தெரியாமல் மயங்கும்போது சொற்பொருள் சுட்டாமல் வேற்றுமைப் பொருளை மட்டும் கூறும்.

(எ-டு) செய்குவாய்-விளி 12(23)

அண்மை விளி நிலையையும் (19.67) சில இடங்களில் கூறும். இத்தகைய பொருள் கூறுநிலை குறிப்பிட்ட நூலின் குறிப்பிட்ட பகுதிக்கு வேற்றுமைப் பொருள் காண உதவும். மாறாகப் பொது அகராதிக்கு இது பயன்படாது.

### 6 அசைச்சொல்

சொற்களின் ஈற்றிலே வரும் அசைச்சொற்களை 'அசை' 'அசை நிலை' எனக் குறிப்பதுடன் அவற்றின் பொதுத் தன்மை வெளிப்பட 'இடைச்சொல்' எனவும் அரும்பதவுரை கூறும். அவற்றுள் சில வருமாறு :

| | |
|---|---|
| அந்தில் | 11.6 |
| ஆ | 19.42 |
| ஏ | 7 (14), (16) |

| | |
|---|---|
| ஐ | 20.49 |
| ஓ | 7. (11), (32), (34) |
| தான் | 20.7 |

இவ்வசைச் சொற்கள் குறிக்கின்ற வியப்பு (7.(11)) ஒழியிசை 7.(32) என்ற பொருளையும் படிப்போர் உணரும் வகையில் உரை கூறிச் செல்லும்.

சிலப்பதிகாரத்தில் இவ்விடைச் சொற்கள் பெற்றுள்ள பொருளை உணருமாறு அரும்பதவுரை இவற்றைத் தனியே இடம் சுட்டி எடுத்துரைக்கும்.

(எ-டு) ஆ—அசை 19.42

அந்தில்—அசை நிலை 11.6

மேலும் இவை வரும் சொற்களையும் தனியே எடுத்துக் கூறுவதும் உண்டு.

(எ-டு) மகளை—ஐ, இடைச்சொல் 8.109

செய்கோ—ஓகாரம் : ஈற்றசை 7 (34)

இங்ஙனம் சொல்லையும் ஈற்றசைச் சொல்லையும் சுட்டிக் காட்டுவதால் ஐகாரம் வேற்றுமை உருபன்று, ஓகாரம் பொருளுள்ள தனிச்சொல் அன்று எனவும் உணர்ந்திட வாய்ப்பளிக்கிறது.

இதனை உணர்ந்து, இவ்விடைச் சொற்கள் சிலப்பதிகாரக் காப்பியத்தில் வழங்கிய நிலையை இன்றைய அகராதிக் கலைஞர்கள் சொல்வடிவங்களையும், பொருள் வேறுபாடுகளையும், வரலாற்று நோக்குடன் கண்டு தேர்ந்தெடுத்துத் தம் அகராதியில் தொகுக்க இயலும்.

## 7. பெயர்

ஒரு சொல்லின் வடிவம் அதற்குரிய இயற்பொருளைத் தராமல் வேறு பொருள் தரின் அச்சொல்லின் இயல்பான வடிவை மட்டும் கூறிப் பொருள் அறிய உதவும்.

(எ-டு) படம்-படங்கு (இடு திரை) 27.152

தனிச்சொல்லுக்குப் பொருள் கூறும் போது மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் எளிய சொற்களைக் கூறும்.

(எ-டு) மடல்-பூ (பதி 69)
முருடு-மத்தளம் (1.46)

ஒரு பெயர்க்குரிய வேறு பெயர் கூறுவதுடன் அதன் இனத்தையும் சுட்டி விளக்கம் தரும்.

(எ-டு) அத்திரி-கோவேறு கழுதை.
அஃதாவது குதிரையில் ஒரு சாதி (6.119)

ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் இருப்பினும் அது பயன்பட்ட இடத்திற்கேற்ப உரிய பொருளை மட்டும் கூறும்.

(எ-டு) கலம்-யாழ் (7-(24))

இச்சொல் கொண்ட வேறு பொருள் 'ஆபரணம்' (6-20) 'மரக்கலம்' (6-130), பாத்திரம் (16.20).

நூலினகத்தே காணும் (1) ஒரு பொருள் குறிக்க வரும் ஒரு சொல்லுக்கும் (2) வேறுபட்ட சொற்களுக்கும் பொருள்

கூறும்போது அதற்குரிய ஒரே சொல்லை மாற்றாமல் எடுத்துரைக்கும்.

(எ-டு) (1) மாலை-ஒழுங்கு (12.28.21.49)
(2) மறவர்-வீரர் (5.55)
வாளோர்-வீரர் (13.144)

பொதுப் பெயரடிப்படையில் தோன்றிய பெயர்களின் பொருள் விளங்கும் வகையில் இடத்திற்கேற்ப அவற்றின் சிறப்புப் பெயரைக் கூறும்.

(எ-டு) நூலோர்-சிற்பர் (14-97)

ஊரின் அமைப்பினை விளக்கப் பயன்படும் சொற்களின் பொருள் கூறும் போது அவற்றின் அமைப்பையும் அவற்றில் காணும் வேறுபாடுகளையும் அடுத்தடுத்தறியும் வகையில் பொருள் கூறும்.

(எ-டு) அந்தி-முச்சந்தி (14.213)
சதுக்கம்-நாற்சந்தி (14.213)
கவலை-பலவாய் ஒன்றான முடுக்கு (14-214)
மறுகு-குறுந்தெரு (14 214)

இதுபோன்றே போர்க் கருவிகளில் பலவகைகளை விளக்குவதில் இப்போக்குக் காணப்பெறுகிறது. (14,172-173)

சிலப்பதிகாரத்தில் ஆறுகளின் பெயர்கள் குறைவாகவே காணப்படுகின்றன. இவற்றை அரும்பதவுரை எடுத்துக் கூறும்போது பொது நிலையில் 'யாறு' எனச் சுட்டும்.[14] மேலும் விளக்கம் தரும் வகையில் பஃறுளி யாற்றைக் குறிக்கும்போது, 'குமரிப் பக்கத்ததோர்யாறு'' என அது அமைந்த இடத்தையும் சுட்டிக்காட்டும்.[15]

மலைகளின் பெயர்களுக்குப் பொருள் கூறும்போது இவ்வுரை பின்பற்றும் முறைகளாவன :

ஒரு வகையிலும் சிறப்பில்லாத சிறுமலை (11.85) போன்றவற்றைக் குறிக்கப் பொதுவாக 'ஒரு மலை' எனக் கூறும்.

இயற்கை அழகு விளங்கச் சிலப்பதிகாரம் குறிக்கும் மலைகளுக்குரிய பெயர்களை மக்கள் அறிந்த பெயர் கொண்டு 'வேங்கட மலை' (8.1), 'சுவாமி மலை' (24(8)) என்று உரைக்கும். புராணத்தில் காணப்பெறும் பெயர்க்குரிய பொதுப் பெயரைக் கொண்டு குருகு பெயர்க்குன்றம் என்று காப்பியம் குறிப்பதைத் தம் கால மக்கள் எளிதில் அறியும் நிலை கருதிக் 'கிரவுஞ்ச பருப்பதம்' (24 (10) என வடமொழிப் பெயரால் குறிக்கும்.

சிலப்பதிகாரத்தில், தமிழ் நாட்டிலுள்ள பல ஊர்களின் பெயர்களும், தமிழகத்து அப்பாலுள்ள ஊர்களின் பெயர்களும் காணப்படுகின்றன. ஓர் ஊர் பற்றிச் சிறப்பாகக் கூறுவதற்கு இடமில்லாதபோது 'ஓர் ஊரின் பெயர்' (23.119) எனப் பொதுவாக அரும்பதவுரை கூறும்.

ஓரூரிற்குரிய அரிய பெயர்கள் நூலின்கண் காணப்படின் மக்கள் அறிந்த பெயர் கொண்டு அதனைக் குறிக்கும் சான்றாகக் 'கயவாய்' என்ற ஊரினை மக்களறிந்த 'புகார்' என்ற பெயர் கொண்டு விளக்கும் (10.107). சில ஊர்ப் பெயர்கள் அடைமொழியின்றி இயல்பாக வரும்போது அவை ஊரின் பெயரா அல்லது வேறு பெயரா எனத் தெரியாமல் மயங்க நேரிடும். அதை நீக்கும் வகையில் 'தங்கால்' என்பதனைத் 'திருத்தங்காலூர்' எனப் பெயர் முன் அடையும் ஈற்றில் ஊர் என்ற சொல்லும் சேர்த்துக் கூறும் (23.75).

நூலின்கத்து ஊரின் பெயர் மரூஉப் பெயராகவரின் அதன் இயற்பெயரை அரும்பதவுரை விரித்துக் கூறும். சான்றாகக் 'கொடும்பை' என்பதனைக் 'கொடும்பாளூர்' எனக்குறிக்கும் (11-71).

ஊரின் பெயர் பொருள் மயக்கம் தரும்போது நூலாசிரியரே அடை கொடுத்து அதன் பொருளை வெளிப் படைப் பொருளாமாறு உணர்த்துவர். அதை உணர்ந்து அரும்பதவுரை 'பூவா வஞ்சி' என்பதன் அடைமொழியைக் கொண்டு பூக்கின்ற வஞ்சிக் கொடியன்று எனக்கொள்ளும் வகையில் ஊர் எனத் தெளிவாக அறியக் 'கருவூர்' (25.148) எனப் பொருள் கூறும்.

'ஆடகமாடம்' என்ற ஊரை அரும்பதவுரை 'திருவனந்தபுரம்' என முதலில் கூறும். அதைச் சிலர் ஏற்காதது அறிந்து அவர்கள் கருத்தைப் பிறர் அறியும் வகையில் 'இரவி புரம்' என்பாரும் உளர் என்ற கருத்தையும் (26.62) இணைத்துக் கூறும்.

இவ்வாறு சிலம்பிலுள்ள ஊர்ப் பெயர்களுக்கு அரும்பதவுரை கூறும் முறை கொண்டு ஊரின் பொதுப் பெயர் சுட்டுதல், ஊர்ப் பெயரின் முழு வடிவைக் கூறுதல், மக்கள் அறிந்த ஊர்ப் பெயர்களைத் தருதல், ஒரு பெயர்க்குரிய பல ஊர்களையும் குறித்தல் ஆகியவற்றை அகராதித்தலைஞர்கள் பொருள் கூறப் பயன்படுத்த இயலும்.

சிலப்பதிகாரக் காப்பியத்தில் காணும் கதை மாந்தர்களின் பெயர்கள்பற்றிப் பொருள் குறிக்கும்போது தனிச் சொல் வடிவிலுள்ள பொதுப் பெயர்கள் சிக்கலைத் தருகின்றன. அதனை நீக்க அரும்பதவுரை அவை வழங்கி வரும் இடமறிந்து பொருள் கூறும்.

(எ-டு) அடிகள் கோவலன் 16 18

பொதுவாக அடிகள் என்ற சொல் இக்காப்பியத்தில் கவுந்தியடிகள், அறவணவடிகள் போன்றவர்களைக் குறித் தற்குரியது. இங்குச் 'சாவக நோன்பிகள் அடிகளாதலின்' என வருமிடம் நோக்கிக் கதை மாந்தர் யார் எனப் பெயர் சுட்டிக்காட்டும் அரும்பதவுரை.[16]

சில சமயம் 'மாதவி' என்ற பெயர் நூலில் வரும்போது இச்சொல் கதை மாந்தரைச் சுட்டாமல் வேறு பொருளைச் சுட்டும் போது அப்பொருள் எது என உணரும் வகையில் அதன் பெயரை எடுத்துக் கூறும்.

(எ டு) மாதவி-குருக்கத்தி 5.190

ஒரு பெயர், கதை மாந்தர்க்குரிய பெயரா, அல்லது குடிக்குரிய பொதுப் பெயரா என ஐயம் வருமிடத்துத் தெளிவாக அது எது என அரும்பதவுரை சுட்டும். சான் றாகக் கோவலன் தந்தை பெயர் 'மாசாத்துவான்' (1.33) என்பதைக் 'குடிப் பெயர்' என உரைக்கும் (இவ்வுரையுடன் மாறுபட்டு இப்பெயரை 'இயற்பெயர்' என அடியார்க்கு நல்லார் உரை குறிப்பிடுவதை ஒப்பிட்டுக் காணலாம்.)

'கவுசிகன்' என்ற கதை மாந்தர் தம் பெயர்ப் பொருள் கூறும் போது முதலில் கோத்திரத்தைக் காட்டும். இரண் டாம் நிலையில் மனிதர்க்குரிய பெயராக அமையும். அத் துடன் நில்லாமல் அவன் செய்யும் பணியைப் படிப்போர் அறியும் வகையில் 'மாதவி கடையாயினான் ஓரந்தணன்' (13.47) என வாழ்வு நிலையையும் வரையறுத்துக் காட்டும்.

இவ்வாறு விரிந்த பொருள் தருவதுடன் காப்பியத்தில் குறிப்பிட்ட மாந்தரின் பணி நிலையையும் சுருக்கமாகக் காட்டிப் படிப்போர் பயன்பெறச் செய்யும் அரும்பதவுரை.

பெயர்த்தொடர்கள் பொது நிலையில் காப்பியத்தில் காணும் போது அத்தொடர்களால் சுட்டப் பெற்றோர் யார் எனவும், கதை மாந்தர்களுடன் அவர்கள் கொண்டுள்ள உறவு எத்தகைய உறவு எனவும் இவ்வுரை காட்டும்.

(எ-டு) 'பெருமனைக் கிழாள்'—கோவலன் மாதா (13.57)
'இளங்கோ வேந்தன்'—தென்னவன் தம்பி (16.193)

சில சமயம் அவர்களின் தொழிற் பிரிவுகளைக் காட்டித் தெளிவு பெறச் செய்யும்.

(எ-டு) 'எட்டி சாயலன்'—
ஒரு வாணிகன் (15.163)
'கோவலர் மடந்தை'—
இடைச்சியான மாதரி (15.219)

புராணம், இராமாயண பாரத இதிகாசங்கள் ஆகியவற்றில் காணப்பெறும் கதை மாந்தர்களின் பொதுப் பெயர்கள் காப்பியத்தில் வந்துள்ளன.

மேற்குறித்த கதைகளை அக்கால மக்கள் தம் அன்றாட வாழ்வில் நன்குணர்ந்ததின் காரணமாக அப்புராண இதிகாச மாந்தர்களின் சிறப்புப் பெயரை மட்டும் சுட்டுவது அரும்பதவுரையின் போக்காக உள்ளது. இங்ஙனம் பொருள் கூறும் நிலை அப்பெயர்கள் வரும் இடச்சூழலையே பெரிதும் சார்ந்துள்ளது.

(எ-டு) புராணம்

இந்திர சிறுவன்—சயந்த குமாரன் 3.2

இராமாயணம்
பெருமகன்—தயரதன் 13.63

பாரதம்
ஆள்வோன்—அருச்சுனன் 22.52
மன்னர்—துரியோதனாதிகள் 22.56

இவற்றில் முன்னது தவிர மற்ற பெயர்த் தொடர்க்குரிய பொருள் விளக்கம் **இந்நூலுக்குரிய சிறப்பகராதிக்கு ஏற்றது.**

கடவுளர்களைச் சுட்டும் பொதுப் பெயராகத் தெய்வம் என்ற சொல் தொல்காப்பியம் முதற் கொண்டு வழங்கி வருகிறது. சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரம், மணி மேகலை போன்ற காப்பியங்களிலும் அச்சொல் பயன் படுத்தப் பெற்றுள்ளது. இக்காப்பியங்களில் இதன் ஆட்சி மிகுதி என்பர். உரிச்சொல் நிகண்டாசிரியர் காங்கேயர் (11 நூ) தேவப் பெயர்த் தொகுதி என்று தம் நிகண்டின் முதற்றொகுதிக்குப் பெயரிட்டிருப்பதும் அரும்பதவுரையில் தேவர் எனும் சொல் மிகுதியாக ஆளப்பட்டிருப்பதும் இங்கு எண்ணிப் பார்த்தற்குரியது.

'பெரியோன்' (5.169), 'மறைமுது முதல்வன்' (12.(24) என்பன சிவனைக் குறிக்கின்றன. இவற்றின் பொருளை 'மாதேவன்', 'மகாதேவன்' என முறையே பண்படிப்படை யிலும், பழ மரபு பற்றியும் கூறும்.

திருமாலைக் குறிக்கும் பெயர்களுக்குப் பொருள் கூறும் போது, நிலத் தொடர்பு கருதி, அங்கு வழங்கும் சிறப்புப் பெயரை எடுத்துரைக்கும்.

திருமால் (குன்றம்)-அழகர் (திருமலை) 11.91
நெடுமால்-ஸ்ரீ இருந்த வளமுடையார் 18.4
(மதுரை வையைக் கண்ணிருக்கும் திருமால்)

'மாயவன்' என்ற சிறப்புப்பெயர் பொதுவாகத் திருமாலைக் குறித்தாலும் ஆய்ச்சியர் குரவைக் கூத்தில் குரல் நரம்பு (17.(15)), மாயவன் வேடம் பூண்ட பெண் (17.(16) எனப் பாகுபடுத்திக் காட்டித் தெளிவு பெறச் செய்யும்.

கண்ணனின் (திருமாலின் அவதாரம்) உடன் பிறந்தவராகக் கூறப்பெறும் பலதேவனுக்கு உரிய பெயர், நிறம், கருவிகள் கொண்டு

'வால்வளை மேனி வாலியோன்' (5.171),
'வெள்ளை நாகர்' (9.10)
'மேழி வலனுயர்ந்த வெள்ளை' (14.9)

எனச் சிலம்பு கூறும். அவற்றிற்குச் சுருக்கமாக நேர் பொருள் துலங்கப் 'பலதேவன் (ர்), எனக் கூறும்.

இது போன்றே படைப்புக் கடவுளின் இருப்பு நிலை, காரண நிலை ஆகியவற்றால் குறிக்கப் பெறும் தொடர்களுக்கு ('பூமேலோன்' (12(9), வேதமுதல்வன் (22 35) நேர் பொருள் துலங்கப் 'பிரமன்' என்றே பெயர் சுட்டும்.

வேறு தெய்வங்களின் பெயர்களை இளங்கோவடிகள்

| | |
|---|---|
| 'உச்சிக் கிழான்' | (9.11) |
| 'நிலா' | (9.13) |
| 'கரியவன்' | (10.102) |
| 'புகைக் கொடி' | (10.102) |

எனத் தமிழில் பயன்படுத்தியிருப்பினும் அரும்பதவுரை இவற்றை முறையே 'சூரியன்', 'சந்திரன்', 'சனி', 'தூமகேது' என்று பொருள் கூறும். சொற் சுருக்க நிலையில் வடமொழியில் கூறியதன் நோக்கம் இவர் கால மக்கள் இவ்வடமொழிப் பெயர்களை எளிதாக அறிந்து கொள்வர் என எண்ணியதின் விளைவாகும்.

பெண் தெய்வங்களில் மிகுதியாகக் கொற்றவையின் பெயர்கள் காணப்படுகின்றன. கொற்றவை என்பதைக் குறிக்க 'ஐயை' 12(5) என்று கூறிப் பின் 'ஐயை'க்குத் துர்க்கை (23.107) எனவும், மற்றோரிடத்துப் 'பத்திரகாளி' (20.37) எனவும் வடமொழிப் பெயர்களைக் காட்டும். இந் நெறியைப் பின்பற்றித் திருமகளைக் குறிக்கப் 'பொன்' (19.61), 'மாமகள்' (22 வெ.) என்ற தமிழ்ச் சொல்லையும், தொடரையும் விளக்கச் 'சீதேவி' என்ற வடமொழித் தொடரைக் கூறும்.

சமணக் கடவுளைக் குறிக்கும் 'அறிவன்' என்ற சொற் பொருளாக 'உறையூர் ஸ்ரீ கோயில் நாயனார்' (11.4) என அக்கடவுள் எழுந்தருளியுள்ள ஊரும் பெயரும் வெளிப்பட விரிவாக விளக்கிக் காட்டும்.

பௌத்தக் கடவுளின் பெயராம், 'போதியறவோன்' என்ற தொடர்க்குப் 'புத்தன்' (15.103) என ஒரு சொல்லில் சுருக்கமாகப் பொருள் கூறும்.

இவ்வுரை, தெய்வப் பெயர்களைப் படிப்போர் உடனடியாகப் புரிந்து கொள்ளச் சுருங்கிய அளவில் ஒரு சொல் வடிவங்களை மொழி வேறுபாடு கருதாது பயன்படுத்துவதுடன் தெளிவு வேண்டுமிடத்து விரித்தும் கூறும் நெறியைக் கொண்டுள்ளது.

## 8 வினை

அரும்பத உரையில் காணும் சில வினை வடிவங்கள் அடியார்க்குநல்லார் கொண்ட வினை சார் வடிவங்களோடு மாறுபடுகின்றன. இவற்றில் சில பொருள் மாற்றம் கூறுவதுமுண்டு. சில பொருள் மாற்றம் பெறாமலிருப்பதும் உண்டு. இந்நிலையைக் கீழ்க்காணும் வரைபகுப்பு விளக்கும்.

| வ. எண். | பயன்படுத்திய சொல் வடிவம் | | பொருள் மாற்றம் | |
|---|---|---|---|---|
| | அரும்பதவுரையாசிரியர் | அடியார்க்குநல்லார் | உண்டு | இல்லை |
| 1. | வினை | வேறுவினை | — | + |
| 2. | வினை | பெயர் | + | — |
| 3. | வினையாலணையும் பெயர் | பெயர் | + | — |
| 4. | தொழிற் பெயர் | வினையெச்சம் | + | — |
| 5. | பெயரெச்சம் | வினையெச்சம் | — | + |
| 6. | வினையெச்சம் | வினையெச்சம் (அளபெடை) | — | + |

(எ-டு) 1) தடுக்கும்—தாங்கும் 11.146
2) காணேன்—தோழி 18 20
3) எடுக்குநர்—எட்டுக்கு 14.138
4) உரைத்தல்—உணர்த்தாங்கு 13.95
5) பொருத்திய—பொத்தி 14 122
6) கூவி—கூஉய் 15.63

அகராதிக்கலைஞர் இவ்வினைச் சொற்களுக்கும் வினை சார்பாக எழுந்த வடிவங்களுக்கும் உள்ள வடிவம், பொருள் ஆகிய வேறுபாட்டை உணர்ந்து அவற்றைத் தொகுக்கும் போது அகராதிச் சொல்வளம் பெருக வழியேற்படும்.

### 9 பிறமொழிச் சொற்கள்

சிலப்பதிகாரத்தில் வேற்றுமொழிச் சொற்க்ள், குறிப் பாக வடமொழிச் சொற்கள், தமிழ் மொழிக்கேற்ப மாற்று வடிவம் பெற்று வந்துள்ளன. அவ் வட சொற்களுக்குப் பொருள் எழுதும் போது தமிழில் தனிச் சொற்களையே பயன்படுத்துகிறது அரும்பதவுரை.

(எ-டு) 'சுந்தரம்'—அழகு (4.42)
'சலம்' —பொய் (9.69)

சில இடங்களில் விளக்கம் கருதி விரித்துரைக்கும்.

(எ-டு) 'சஞ்சயன்' தூதரில் தலையாயவன் (26 137) இவ்விரு நிலைகளிலும் ஒரு சொற்கு ஒரு சொல் என்ற எளிய நிலையில் பொருள் கூறிச் செல்லும் போக்கே பெரிதும் தென்படுகிறது.

இதற்கு மாறாகத் தமிழ்ச் சொற்களுக்கு வட சொற் களைக் கூறிப் பொருள் சுட்டும் பாங்கும் உள்ளது.

(எ-டு) 'செவ்வணம்'—வாத செபம் (6.172)
'கோடு' —தந்தம் (14.176)
'விழா' —உற்சவம் (28.232)

இங்ஙனம் கூறும் சொற்கள் பெரும்பாலும் சமயச் சார்புடைய சொற்களாக உள்ளன. சமயக் கடவுள்கள், சடங்குகள், உயர்ந்த பொருட்கள் ஆகியவற்றை இவை

ஒட்டியுள்ளன. தெளிவாகப் பொருள் சுட்ட வேண்டிய இடத்தில் மட்டுமே தொடர் விளக்கம் காணப்பெறுகிறது. (11.4).

'பரத்த'ரைக் குறிக்கத் 'தூர்த்தர்' (5.200) எனவும், யானைக் கொம்பினைக் குறிக்கத் 'தந்தம்' (14.176) எனவும் பொருள் கூறும், அதனால் அவ்வட சொற்களை அன்றாடம் மக்கள் பயன்படுத்தலை அறிந்து அவற்றை அரும்பதவுரை எடுத்தாண்டுள்ள நிலை புலப்படுகிறது.

வட சொற்களுக்குப் பொருள் கூறும்போது மற்று மொரு வடசொல்லையே கையாளும் முறையையும் அரும்பத வுரையில் காணமுடிகிறது.

(எ-டு) 'மண்டிலம்'—ஆதித்தன் (14.104)
'ஆசான்' —புரோகிதன் (22.8.28.222)

மேலும் விளக்கம் தரும் பொருட்டுத் தமிழடை மொழி சேர்த்து உரைக்கும் போக்கு சில இடங்களில் உள்ளது.

(எ-டு) சதுக்கம்—நாற்சந்தி (14.213)
உத்தரம்—வடபூமி (26.179)

வேற்றுச் சொற்களுக்கு அரும்பதவுரை காணும் இம் முறையைக் கீழ்க்காணும் வாய்பாட்டிலடக்க முடியும்.

வே = த/(அ) வே
(வே—வேற்றுச் சொல்
த—தமிழ்ச் சொல்
அ—அடை மொழி)

அரும்பதவுரை வேற்று மொழி வடிவைக் கூறி அது நூலில் திரிந்து வந்துள்ள வடிவையும் எடுத்துரைக்கும்.

அத்துடன் அதன் நிலைக்களத்தையும் எடுத்துரைக்கும். இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகக்,

(கற்பம், கப்பம் என நின்றது.
பிராகிருதம் (11.154)

என்பது அமையும்.

இங்ஙனம் வேற்று மொழிக்களம் எது என அரும் பதவுரை மிக அருகிய நிலையில்தான் சுட்டிச் செல்லும். இத்தகைய உரை நிலைக்குப் பிற மொழிச் சொற்களுக்குரிய நிலைக்களங்களைக் காட்டுதல் அத்துணை இன்றியமை யாததன்று எனக் கருதியிருத்தல் கூடும்.

பொதுவாக அரும்பதவுரை பிற மொழிச் சொற்களைக் குறிக்கும் போது தமிழ் நெடுங்கணக்கில் எழுதிச் செல்வது வழக்கமாக உள்ளது. மிகவும் அருகிய இடங்களில் மட்டுமே கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தியுள்ளது.

'பந்தம்'—ஸம்ஸாரம் (10.213)
'வாரணம்'—ஸ்ரீ வாரணாசி (15.178)

இவ்வெடுத்துக் காட்டுகளைக் கூர்ந்து காணும்போது சமயச் சார்பான பொருளைச் சுட்டும் நோக்கமே இதன் வாயிலாகப் புலப்படுகிறது, பெரும்பான்மையான இடங் களில் இங்ஙனம் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்த நினைத்திருந்தால் பயன்படுத்தியிருக்க முடியும். பல இடங்களில் அவற்றிற்கிணையான தமிழ் ஒலியன்களையே பயன்படுத்தியுள்ளது.

(எ-டு) பொன் - சீதேவி (19.61)
வாழ்தல்—சீவித்தல் (20.59]

வேண்டுமிடத்துப் பிற மொழியில் அமைந்த கருத்துக் களை அவ்வாறே எடுத்துரைக்கிறது. இவ்வாறு பஞ்ச தந்திர நூலிலிருந்து எடுத்துரைக்கும்போது, வட மொழி வாசகமாவது ஒரு கிரந்தம் ; அது.

"அபரீக்ஷ்ய நகர்த்தவ்யங் கர்த்தவ்யம் ஸீபரீக்ஷிதம்.
பஸ்சாத் பவதி ஸ்ந்தாபம் ப்ராஹ்மணீ நகுலம்யதா"

என்பது (15.58) எனக் குறிக்கும்.

எனவே தமிழ் வரி வடிவில் கிரந்த எழுத்தைக் கலந்து எழுதும் கொள்கை அரும்பதவுரையின் வரி வடிவைக் கொள்கையாகக் கொள்ளலாம்

## 10. ஒரு சொல் பல பொருள்

சிலப்பதிகாரத்தில் 'வரி' என்ற சொல் பல பொருளில் பயன்படுத்தப் பெற்றுள்ளது. 'வரி' என்பதற்கு 'நடம்' எனவும் (8.108), 'பாட்டு' (13.38) எனவும் பொருள் கூறும் போது ஒரு சொல் பல பொருள் பெற்று வரும் நிலையை உணர முடிகிறது. ஒரு சொல் ஏற்றுக்கொள்ளுதற்குரிய எல்லாப் பொருளையும் ஒரு சொற் பல பொருள் என்பர்.[18] 'வரி' என்ற சொல்லே இசைத் துறையில் கலைச் சொல் லாகப் பயன்படும்போது அதன் பொருளை அதற்கேற்ப விளக்கமாக அரும்பதவுரை கூறும்[19].

'பீடிகை' என்ற சொல் நூலின் பல இடங்களில் காணப் பெறுகிறது. அச்சொல் பயன்படும்போது இடம் நோக்கி உரிய பொருளை வேண்டுமிடத்தில் அரும்பதவுரை கூறும்

(எ-டு) பீடிகை-1. வணிகர் தெரு
(பதி 21; 22.77)
2. பலி பீடம் (5.78)

3. கோட்டம் (12.43)
4. சிங்காதனம் (26 156)

இந்நான்கு பொருள்களைக் காணும் போது 2,3 என்பனவற்றைச் சமயம் என்ற அளவில் ஓரளவு உறவுள்ள பொருள்கள் எனக் கொள்ளலாம். மற்ற பொருள்கள் உறவற்ற நிலையில் பல் பொருள் தனிச் சொல்லாக அமை வதைக் காணலாம். பல பொருள் படைத்த சொற்களை இவ்வாறு உறவுடையன எனவும், உறவில்லாதன எனவும் கண்டறிந்து அவற்றின் பொருளை அகராதியில் (சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி தனியே அரபு எண்களிட்டுக் குறிப்பது போலக்) காட்டுதல் பயன் தரும்.

பல பொருள் தனிச் சொற்களை அரும்பதவுரை பல வழிகளில் கூறிச் செல்கிறது.

விலங்குப் பெயர்: கோட்டுமா: 1) பன்றி 2) எருமை (15.98)

எண்ணுப் பெயர்:
ஐந்து கேள்வி : 1) திதி, வாரம், நக்ஷத்திரம் யோகம், கரணம்
2) நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசக்கோள் (26,26)

போர்க் கருவி :புதை.: 1) அம்புக் கட்டு
2) மண்ணிற் புதைத்த இரும்பாணி(15.212)

மக்கட் பெயர்: காழியர் : 1) பிட்டு விற்பார்
2) வண்ணார் (5.24)

பெயர்ப் பொருளில் பல பொருள் தனிச் சொற்களில் மக்கட் பெயர்கள் நூலில் ஐந்தாம் காதையிலும், போர்க் கருவிகளின் பெயர்கள் பதினைந்தாம் காதையிலும் மிகுதி யாகக் காணப்படுகின்றன. இதன் காரணமாக நகரப்

பகுதியில் தொழில் வளர்ச்சியும் கருவிப் பெருக்கமும் ஏற்பட்டதைக் கூறலாம்.

## 11. சொற்பொருள்

'வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்' (6.11) என்ற அடியில் காணும் சொல்லுக்கு விரிந்த விளக்கம் தருகிறது அரும்பதவுரை.

'வஞ்சம்-இருளாக வரவிட்ட வஞ்சம்' என முதலில் வஞ்சம் எது எனச் சுட்டிக் காட்டும். ஆயின் அந்தத் தொடர்ப் பொருள் விளங்கும் வகையில் 'என்பது அந்த காரத்தைப் பண்ணி வருவதோர் ஆயுதம்' எனக்கூறி அவ்விருள் பழைய புராணங்களில் கூறப்பட்டுள்ள 'தாமசாத்திரம்' என்று அதற்குரிய புராணப் பெயரையும் சுட்டும். இதனால் சொற்பொருள் விளக்கம் பெறுவதுடன் புராண மரபுப் பெயர் பற்றிய சிறப்பு அறிவும் பெற வழி ஏற்படுகிறது.

ஒரு பொருளின் அமைப்பு நிலையை விளக்கமாகக் காட்டும் பாங்கு அப்பொருள் பற்றிய முழுமையான வடிவம் பற்றி அறியத் துணை செய்கிறது. சான்றாகக் 'காமர் கண்டிகை தன்னொடு பின்னிய தூமணித் தோள் வளை' (6.89-90) என்பதை ஒருவகை ஆபரணம் எனக் கூறினால் அது பற்றிய பொருள் எது என அறியலாம். ஆயின் அரும்பதவுரை, 'கழுத்து வடத்தின் பின் தாலிக்கு இரண்டு பக்கமும்பகுத்துப் போந்து வாகுவலயத்தோடு தொடங்கிக் கிடப்பதோர் ஆபரணம்' என விரித்துக் குறிப்பிட்டு பொருளைத் துல்லியமாக வடித்துக் காட்டும்.

சொற்றொடரின் பொருள் விளக்கம் எழுதும் பொழுது தொழிலுக்குரிய கருவி, பயன் ஆகியவற்றை முதலில் விளக்க

மாகக் கூறும். ஒரு தொடரில் ஏதேனும் சொல்லிற்குப் பொருள் வரையறை செய்து காட்டும். அவ்வாறு பொருள் காண்பதற்குரிய வேறு இலக்கியச் சான்றை எடுத்துக் கூறிப் பொருள் காண்பதற்குத் தக்க குறுக்கு நோக்கீட்டிற்குரிய வற்றைக் கூறும்.

(எ-டு) மண்ணீட்டாளர் : சுதையாற் பாவையுள் ளிட்டன பண்ணுவார்: மண்-சுதை; 'மண்ணோடியைந்த மரத்தனையார்' (குறள் 576) என்றாராகலின்' (5.30) என உரைப்பர். இத்தொடர்க்குக் 'குயவர்' என்ற நேர்பொருளு முண்டு, அதையும் உணர்ந்து அரும்பதவுரை ஏற்கும்.

தொடர்களின் அமைப்பை முன் பின்னாக மாற்றிப் பொருள் கூறும் முறையை அரும்பதவுரையில் பத்து இடங் களில் காண முடிகிறது.[20] தொடர்களின் அமைப்பைக் காணின் அவை,

| 1 | 2 |
|---|---|
| பெயர் 1 | பெயர் 2 |
| வினை | பெயர் |
| அடை | பெயர் |

என அமைந்துள்ளன. உரை கூறும் போது (1), (2), என்ற நிலை (2), (1), என மாறும் நிலையில் பொருள் சுட்டிக் காட்டும்.

(எ-டு) நடுவூர் (மன்றம்) —ஊர் நடு (மன்றம்) (12.11)

இவ்வாறு இடம் மாற்றம் செய்யும் போது வேண்டும் உருபுகளையோ பொருள் தரும் சொற்களையோ இணைததுப் பொருள் கூறுதலுமுண்டு.

(எ-டு) உறைமலி—மலி உறையாமல் (7.(8), கடவுட் பத்தினி-பத்தினியாகிய கடவுள் (27.2).

இத்தகைய இடமாற்ற நிலையில் இருபொருள் கூறிச் செல்லுமிடமும் உள்ளது (14.118)[21].

இவ்வாறு பொருள் காணும் முறையை அறிவது வேறு இலக்கியத் தொடர்களில் ஏற்படும் சிக்கலை நீக்கவும், தொடர்ப் பொருள் அறியவும் அகராதிக் கலைஞர்க்குப் பயன்படும்.

பிறர் அறியாமையின் அடிப்படையில் இன்பம் காண விரும்பும் போது அவர் அறியா வகையில் அவர் மேல் தேள் போன்ற பொருளை இட்டு அவரை அச்சத்தால் கலங்கச் செய்வர். அறியா நிலையில் பொய்த் தேளை மெய்த் தேளென நம்பியவர் அஞ்சி நடுங்குதல் இயல்பு. இவ்வாறு இடும் பொருளை 'இடுதேள்' (9.48) என்று சிலம்பு குறிக்கும்.

இத்தகைய பெயர்கள் உட்கோள் கற்பிக்கப்பெற்றவை. இதற்கெனக் குறிப்பிட்ட ஒரு வடிவம் உள்ளது. இது குறிக்கும் பொருள் எது என்பதைக் காட்டுதற்குரிய, மொழிக்கு அப்பாற்பட்ட கூறுகள் துணை செய்கின்றன, இந்நிலையில் 'மொழிப்புலத்தூண்டல்' நனவு நிலையில் செயல்பட்டுத் 'தனிப்பொருள் தூண்ட'லாகிறது இதன் விளக்கம் தரும் வகையில் அரும்பதவுரை 'இடுதேளிட்டு' என்ற தொடர்க்குப் பொருள் கூறும் போது.

'தேள் கொட்டப் படுவார் காணாமல்
தேளல்லாத வொன்றை மறைய
மேலே போகட்டுப் பயப்படப் பண்ணுதல்'

என விளக்குகிறது.

பின்னர் மேலும் தெளிவுறுத்தும் வகையில் 'தேளென்று பொய்யே ஒன்றை இட்டால் ஒப்ப' என்று கூறுவதால் புலனறிவுக்குத் தேள் என்று எண்ணத் தக்க வகையில் தேள்

வடிவப் பொய்ப் பொருளை ஒருவர் மீது இட்டதும் அவர் அதனை உண்மையான தேளென நம்பிப் பயப்படுவார்.

இங்ஙனம் உட்கோள் கற்பிக்கப்பட்ட 'இடுதேளிட்டு' என்ற தொடர் தனக்குரிய பொருளையும், இட்ட சூழலையும் அதன் தொடர்ச்சியாக அச்ச முறுவதையும் சுட்டும். இதனால் 'சொல் தோற்ற வளர்ச்சித் தூண்டும் நிலை' யிலிருந்து 'கருத்துணர்வு வளர்ச்சித் தூண்டும் நிலைக்கு' மாறியதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் அரும்பதவுரை சொற்பொருள் கூறும் நிலையில் காட்டுகிறது.

சில சமயம் நூலில் காணும் தொடர்களில் மெய்ப் பொருள் பற்றிய செய்திகள் சுருங்கிய அளவில் அமைந் திருக்கும். அவற்றை அரும்பதவுரை விரித்துக் கூறிப் பிற துறைப்பொருளை அறிய வகை செய்யும் சான்றாக,

'உம்மை வினைவந் துருத்த காலைச்
செம்மையிலோர்க்குச் செய்தவ முதவாது (23.171-172)

என்னும் அடிகளுக்கு

'உம்மையிற் செவ்விய மனமில்லாதோர்க்கு அக் காலத்துச் செய்தவினைவந்து பலிக்குங் காலத்து முன்பு செய்த நல்வினை யாதும் உதவாது; 'இத்தீவினை வந்து கொடுப்பதற்கு முன்னே வந்துதவுதல் பின்புதவுதல் செய்யுமித்தனை: அந்நல்வினையும் உதவாமற் போகாது; பாவமானதும் தனியே அனுபவிக்க வேண்டும்'

என விளக்கமாகப் பொருள் கூறும்போது, ஒரு மனித னுக்கு அவன் முன் செய்த தீவினை வந்து துன்பம் தரும். அப்போது அவன் முன்செய்த நல்வினை அவனுக்கு அத்

தீவினையிலிருந்து தப்பும் வகையில் வந்து உதவாது. ஆனால் அது அதற்கு முன்னோ பின்னோ அவனுக்கு உதவலாம். எனவே, ஒருவன் தான் செய்தபாவத்தை அனுப வித்தே தீரவேண்டும் என்ற உண்மையை தெளிவாக அரும் பதவுரை விளக்குகிறது. இவ்வாறு பொருள் விளக்கம் செய்வது இலக்கியமல்லாத பிற துறைக்குரிய பொருள் பற்றி அறிய வழி செய்கிறது.

## 12. பண்பாடு

சமுதாயத்தில் அமைந்துள்ள பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் சில சொற் களுக்குப் பொருள் கூறப் பெறும். வெறும் சொற்களை மட்டும் காணும்போது அவை அப்பொருளைத் தருவ தில்லை. இதனால் அவற்றை வழங்கும் சமுதாயம் அப் பொருளை ஏற்றுக் கொண்டிருப்பதை அரும்பதவுரை வாயி லாக அறிய முடிகிறது.

(எ-டு) புண்ணிய திசை—வடக்கு (5.94)

'வாகை தும்பை மணித்தோட்டுப் போந்தையோ
டோடை யானையி னுயர் முகத் தோங்க, (26.70-71)

என வரும் அடிகளுக்குரிய பொருளைக் காணும்போது அரசர்க்குரியனவற்றை யானைக்குச் சூட்டியது எங்ஙனம் என்ற ஐயம் எழும். அதனை நீக்கும் வகையில்,

'அரசன் சூடுவன யானைக்குஞ் சூட்டுதலின் வாகையும் தும்பையும் போந்தையொடு நின் யானை முகத்து ஓங்கித் தோன்ற என்றார்'

என அக்காலத்தில் நடைபெற்ற பழக்கத்தைக் கூறிப் படிப்போரின் ஐயத்தை நீக்கும் அரும்பதவுரை.

'நீரணி விழவு' பற்றிய செய்தி நாடுகாண் காதையில் (10.22) சமயப் பொருள் பற்றிய சூழலில் கூறப் பெறுகிறது. இதன் பொருளினைக் கூறும்போது,

(1) 'திரு அபிடேக விழவு' என முதலில் கூறிப்பின்,

(2) 'அயனம்', (3) 'சங்கிரபம்'; (4) 'புதுப்புனலாட்டு'

எனவுமாம்' என்று மற்ற மூன்று பொருள்களையும் சமயப் பின்னணி விளங்கக் கூறும்.

இதற்கு அடியார்க்குநல்லார் இப்பொருளை (1) இரண்டாம் நிலையிற் கூறி அரும்பதவுரை கூறிய இரண்டாம் பொருளை முதற் பொருளாக்குவர். மற்ற பொருள்களைக் குறிப்பாகச் சுட்டுவர். இதனால் பொருள் கூறும்போது அரும்பதவுரை சுருங்கிய நிலையிலிருப்பினும் சமயச் சார்பில் பலபொருள் கூறும்போது விரிவாகக் கூறும் என்பதை அறிய முடிகிறது.

பல பொருள் ஒரு சொல்லுக்குரிய அடைகளைக் கொண்டு விளக்கம் கூறுவதுடன் வேண்டுமிடத்து அக் காலத்தில் வழங்கிய நாட்டார் கதைகளையும் இணைத்துப் பொருள் விளக்கம் செய்யும்.

'வாரணம்' என்ற சொல்லுக்கு 'யானை' 'கோழி' என்ற பொருள்கள் உண்டு. 'முறஞ்செவி வாரணம்' (10.247) என்ற தொடரால் குறிக்கப் பெறும் யானைபற்றி விளக்கம் கூறவில்லை. மாறாகப் 'புறஞ் சிறை வாரணம்' (10.248) என்ற தொடர்க்குப் பொருள் கூறுமிடத்து,

'யானையைக் கோழி முருக்கலால் கோழி என்ற பெயராயிற்று. யானையைச் சயித்த கோழி

> தோன்றியவிடம் வலியுடைத்தென்று கருதி அவ்விடத்து அதன் பெயராலே சோழன் ஊர் காக்கின்ற பொழுது சிறையும் கழுத்துமாக ஆக்கியவதனால் புறம்பே சிறையையுடைய கோழியென்றாயிற்று'

என விளக்கமாகக் கூறும்.

## 13. உவமை உருவகம்

உரையெழுதும்போது பயில்வோர் இன்புறும் வகையில், அருகிய இடங்களில் அரும்பதவுரை உவமைகளைக் கையாளும் (23.3). தொடர்ப் பொருளை உணர்த்தற்கும் உவமையைப் பயன்படுத்தும் (3.16,23,48,25.5). உவமையை விட மிகக் குறைந்த இடங்களிலேயே மரபுக்குட்பட்ட உருவகங்களை உரையகத்துக் காண இயலும் (29. உரைப் பாட்டு மடை).

## 14. முடிவுரை

இதுகாறும் கண்டவற்றால் அறிவன: அகராதிக் கலைஞர்க்குப் பரந்த அறிவும் ஆழ்ந்த அறிவும் தேவை. அத்துடன் நடுநிலைப்பண்பு அவர்க்குப் பெரிதும் வேண்டப் படும்.

பல்வேறு பாட பேதங்களைத் தொகுத்துத் தரும் நல்ல பதிப்பைப் பயன்படுத்தின் ஒரு மொழியிலுள்ள சொல் வளத்தைச் சிறந்த முறையில திரட்ட முடியும்.

தொல்காப்பியம் முதற் கொண்டு கால வளர்ச்சியில் தோன்றிய சொல் வடிவங்களையும் அவற்றின் பொருள் வேற்றுமைகளையும் கூர்ந்து கண்டறிவது வரலாற்று அகராதிக்குப் பெரும் பயனாகும்.

உருவாக்க நினைக்கும் அகராதியின் வகைக்கு ஏற்பச் சொற்களின் பொருள் விளக்கம் தருதல் சுருக்கமாகவோ விரிவாகவோ அமைதல் வேண்டும.

வேண்டுமிடத்து விளக்கம் கருதி உவமைகளையும் பயன்படுத்தலாம்.

இவ்வுரையும் இதுபோன்ற பிறவுரைகளும் பயன் படுத்திய பிறமொழிச்சொற்களைத் தனியே தொகுத்து அவற்றைக் கொண்டு இருமொழி அகராதி போன்றவற்றை உருவாக்கலாம்.

தனிப்பட்ட ஆசிரியர்க்குரிய சொற்பொருள் விளக்கம் காணும் இம்முயற்சியைத் தொடர்ந்து பல முயற்சிகள் எழவும் அந்தந்த ஆசிரியர்களின் நடைவளம் பற்றி அறியவும் வழி ஏற்படும்.

## குறிப்புகள்


1. Katre S. M., **Lexicography**, Annamalai Nagar, Annamalai University, 1965, p.16.
2. Collison R. L. **A History of Foreign Language Dictionaries**, London, Andre Deutsch 1982 p. 27,
3. அரும்பதம் என்ற சொல் வழக்கைச் சமண சமயத்தாரும் வைணவ சமயத்தாரும் முறையே 'அரும்பதமிட்ட அழகு' எனவும், 'ஜீயர் அரும்பதம்' எனவும் குறிப்பிடக் காணலாம்.
4. **சிலப்பதிகாரம்**. உ. வே. சாமிநாதையரின் 1978ஆம் ஆண்டுப் பதிப்பை ஒட்டி இங்கு எண்கள் குறிப்பிடப் படுகின்றன. முதல் எண் சிலப்பதிகாரக்காதை எண்ணினையும் அடைப்புக் குறிக்குள் உள்ள எண்கள் காதையிலுள்ள பாடல் எண்ணினையும் குறிக்கும். வெ—வெண்பா.
5. ஆபிரகாம் பண்டிதர், **கருணாமிர்த சாகரம்**. தஞ்சாவூர், 1917, ப. 7.
6. **சிலப்பதிகாரம்**, ந.மு. வேங்கடசாமி நாட்டார் உரை, சென்னை, தி. தெ. சை. நூ. கழகம். 1959. பக் 29-34
7. **சிலப்பதிகாரம்**, உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகம். 1978 ப. XX
8. உரையில்காணும் குறைப்பகுதிகளில் சில: 16, 69-70, 125-6, 173; 18 5, 11; 23-36, 43; 27, 177; 30. 49-52, 202.
9. உ. வே. சாமிநாதையரின் தனிக் குறிப்புகளில் சில: 22.60; 25. 137-140; 26, 11, 12
10. சுந்தர சண்முகனார், **தமிழ் அகராதிக் கலை**, புதுவை, பைந்தமிழ்ப் பதிப்பகம் 1965. ப. 18.
11. இதுபோன்றே 'வம்பு' என்ற சொற்குத் தொல்காப் பியம் 'நிலையின்மை' என்ற பொருள் கூறும் (தொல்.

சொல். 327. சேனா) சிலப்பதிகாரவுரையில் அச்சொல் 'புதுமை' என்ற பொருளில் பயன்பட்டதை அரும்பதவுரை காட்டும் (10.219). இச்சொற்கு நான்கு பொருள் அமைந்திருப்பதை 'மணமு நிலையின்மையும் பாடரும் புதுமையும் முலையின் கச்சும் படினும் வம்பே' எனப் பிங்கலந்தை (4026, கழக வெளியீடு, 1978) கூறும்.

12. "Unless our texts have been authenticated by a careful study of the manuscript tradition our lexicon will prove to be a little value". **Lexicography,** S.M. Katre, 1965. p. 14
13. சிலம்பு 11.5; 12 (19)
14. சிலம்பு 11.108; 25.22
12. ,, 11.19
16. ஒப்பிட்டுக் காணற் குரியன.
    குரவர் — கவுந்தியடிகள் 13.14
    முனிவன் — அகத்தியன் 15.14
17. அடியார்க்குநல்லாரின் சிலப்பதிகார உரையில் ஆரிய மொழி (15.48). குடநாட்டார் வழக்கு (4. 6; 15 48; 17 (27)) பற்றிய குறிப்புகள் மிகுதியாக இருப்பது இங்கு ஒப்பிட்டு நோக்கத் தக்கது.
18. Zgusta, Ladislav, **Manual of Lexicography,** The Hague, Mouton, 1971. p. 61.
19. இனி வரிப் பாடலாவது:— பண்ணும் திறமும் செயலும் பாணியும் ஒரு நெறியன்றி மயங்கச் சொல்லப்பட்ட எட்டனியல்பும் ஆறனியல்பும் பெற்றுத் தன் முதலும் இறுதியும் கெட்டு இயல்பும் முடமுமாக முடிந்து கருதப் பட்ட சந்தியும் சார்த்தும் பெற்றும் பெறாதும் வரும். அதுதான் தெய்வம் சுட்டியும், மக்களைப் பழிச்சியும் வரும். (கானல்வரி)
20. சிலம்பு 5.61; 6.87; 7 (8); 7.(22); 12.6; 11, 44, 14.118; 205; 27.2.
21. உருவக் கொடியோர்—கொடி உருவத்தினோார், வல்லியாக எழுதும் கொடியுமாம் (14.118).

# 6

# பெரியபுராணச் சிறப்புப் பெயரகராதியில் ஒரு பதிவு

கங்கை ஆறு வடநாட்டில் ஓடும் ஆறாக இருப்பினும் அதுபற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் பரவலாகக் கிடைக்கின்றன.[1] அச்செய்திகளால் கங்கை தோன்றும் இமயச்சூழல், கங்கையின் வளம் கடலில் கலக்கும் காட்சி ஆகிய இயற்கை அழகைத்துய்த்த நிலையை அறிய முடியும். அதனைக் கடக்கும் அரிய செயலை வியத்தகு முறையில் காணலாம். வற்றாத நீர் வெள்ளத்தைக் கண்டு மகிழ்ந்த நிலையையும் உணரலாம். அவற்றைப் பார்க்கும்போது சங்கப் பாடல்கள் அகம் புறம் ஆகிய நிலையை விளக்குமிடத்து வள்ளல்களின் வற்றாத வள்ளண்மை, அரசர் தம் பெருமைபற்றிக் குறிக்கவும், வள்ளல்களில் ஈகைப் பெருக்கத்தை வெளிப்படுத்தவும் கங்கை பயன்பட்டதை அறிகிறோம்.[2]

இம்மரபுச் செல்வத்தைக் கொண்டு பெரிய புராணத்தில் கங்கைபற்றிய செய்திகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது கங்கைபற்றிய செய்திகளின் நிலை பல நெறிகளில் புதிய கலவைகள் கலந்துள்ளதை அறிய முடிகிறது. எனவே பெரிய புராணச் சிறப்புப் பெயரகராதியின் கங்கை என்ற பதிவினை ஏற்கும்போது இம்மரபுச் செய்திகளை மனத்தில் கொண்டு விளக்கம் எழுதும்போது பதிவின் பொருட்செறிவு மேலும் வலிவுபெற வாய்ப்பேற்படுகிறது.

மூவர் தேவாரத்தில் கங்கைபற்றிப் பல குறிப்புகள் இருப்பினும் 'உரை'ச் சான்றாகச் சிலவற்றைக் காணும் போது'[3] கங்கையைச் சிவபெருமான் தரித்துள்ள செய்தியை அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும் பொதுவாகக் கூறிச் செல்வர். கங்கையை இறைவன் சடையுள் கரந்து வைத்ததுபற்றி அப்பரும், சம்பந்தரும் கூறும்போது பகீரதன் வானிலிருந்து கங்கை கொணர்ந்தபோது சிவன் அதனை அருளால் தாங்கிய செய்தியை 'மன்னிய பகீரதற்கு வெஞ்சின முகங்களாகி விசையொடு பாயுங்கங்கை செஞ்சடை ஏற்றார்' என்ற அப்பரின் திருச்சேறைப் பதிகத்தின் 4ஆம் பாடல் வாயிலாக அறிகிறோம்.[4] மேலும் கங்கையைச் சடையுள் வைக்கக்கண்டு உமை ஊடியதாக அப்பர் திருமறைக்காட்டு 'தேரையு மேல் கடாவி' என்று தொடங்கும் பதிகத்தில் குறிக்கும்போது அகத்துறை ஊடல் நிகழ்ச்சி சங்க மரபில் கற்பனை வடிவு கொள்கிறது. ஆயினும் அதைத் தொடர்ந்து, அப்பர் பாவநாசத் திருக் குறுந்தொகையில் 'கங்கையாடிலென்......எங்குமீசனெனா தவர்க்கில்லையே' எனக் கூறும்போது கங்கை நீர் புனித மானது , அதில் ஆடின் பாவம் அழியும் என்ற கருத்து, பரவி வந்த செய்தியை உணர முடிகிறது. இக்கருத்துச் செல்வம் சங்க காலத்திலிருந்த நிலையிலிருந்துபெற்ற வளர்ச்சி நிலையாகும். இதனையும மனத்தில்கொண்டு காணும்போது பெரிய புராணத்தில் பயின்ற கங்கை என்ற சொற்பதிவைச் சிறப்புப் பெயரகராதியில் எங்ஙனம் விளங்குவது என்பது இன்னும் தெளிவாக அமையும்.

பெரிய புராணச் சிறப்புப் பெயரகராதியில் 'கங்கை' என்ற சொல்பற்றிப் பார்ப்போம். இதுவே பவானந்தம் பிள்ளையின் 'தற்காலத் தமிழ்ச் சொல்லகராதியில் (1925) 'கங்கை ஒரு நதி' என்று தொகுக்கப்பட்டுள்ளது. சென்னைப் பல்கலைக் கழகம் தொகுத்த பேரகராதியில் (1939) இச் சொல்லுக்கு 1. ஒரு நதி 2. நதி 3. நவச்சாரம் ஆகிய மூன்று பொருள் காணப்பெறும். அவையாவும் பெயர்களே, அப்

பெயர் அடிப்படையில் வடநாட்டில் இமயத்தில் தோன்றி கிழக்காகச் சென்று பின் வங்கக் கடலில் கலக்கும் கங்கை என்ற பெயருள்ள ஒரு தனிப்பட்ட ஆற்றைக் குறிக்கும் சிறப்புப் பெயராக முதலில் அமைந்தும், பின் எல்லா ஆறுகளையும் பொதுவாகக் கங்கை எனக் குறிக்கும் பொதுப் பெயராக அடுத்து அமைந்தும் உள்ளது ஒரு நிலை. அடுத்து உலோகங்களை ஒட்டவைக்கும் பற்றாசாம் நவச்சாரத்திற்கும் இது பெயராக அமையும் நிலையையும் காணமுடிகிறது. கங்கைக் குணன் என்ற பெயர் கங்கை என்ற அளவிலே நின்று இப்பொருள் படுவதால் இதனைப் பல பொருள் ஒரு சொல்லாகக் கொள்வோம்.

கங்கை என்ற பெயரைப் பல நிகண்டுகள் பல பெயர்களில் குறித்துள்ளன.

| | திவாகரம் (9நூ) | பிங்கலம் (10நூ) | கயாதரம் (15நூ) | சூடாமணி (16நூ). |
|---|---|---|---|---|
| 1 கங்கை | ★ | ★ | ★ | ★ |
| 2 இடைச்சுரசிந்து | — | — | ★ | — |
| 3 உமைசுரநதி | — | ★ | — | — |
| 4 சானவி | ★ | ★ | ★ | ★ |
| 5 சிரநதி | — | ★ | — | — |
| 6 சுரநதி | ★ | ★ | — | ★ |
| 7 தசமுகநதி | — | ★ | — | — |
| 8 திரிபதகை | ★ | ★ | (திரிபதை) | ★ |
| 9 தெய்வநதி | — | ★ | — | — |
| 10 பகாதி | ★ | ★ | (பாகீரதி) | ★ |
| 11 மந்தாகினி | ★ | ★ | ★ | ★ |
| 12 வரநதி | — | ★ | ★ | ★ |
| 13 வானதி | — | ★ | ★ | — |
| 14 விமலை | — | ★ | ★ | — |

பெரியபுராணத்தில் 'கங்கையைப் பற்றிய குறிப்புக்கள் 61 இடங்களிலும்[5] 'சுரநதி' என்ற பெயர் இருஇடங்களிலும் காணப்பெறுகின்றன.[6]

முதலில் இவற்றைத் தொகுத்தபின அவற்றின் செய்திகளின் அடிப்படையில் விளக்கம் எழுத வேண்டியுள்ளது. முழுமையும் காணும்போது கங்கை பற்றித் தமிழில் வழங்கும் பதினான்கு சொற்களில் பெரிய புராண ஆசிரியர் இரண்டைமட்டும் பயன்படுத்தியுள்ளார். மற்றவை இந்நூலில் வழங்கப்பெறவில்லை என்ற உண்மை புலனாகிறது. இவற்றில் 'இசைசுர சிந்து' மடல் இந்நூலுக்குப் பின்னர் வந்த கயாதரத்தில் காணப்பெறுவதால் அதனைப் பிற்கால வழக்கு எனக் கொள்வதற்கு இடமுண்டு. எனவே பெரிய புராண ஆசிரியர் அதனைப் பயன்படுத்த வாய்ப்பில்லை எனக் கூறினும் உமைசுரநதி, சானவி, சிரநதி, தசமுக நதி, திரிபதகை, தெய்வ நதி, பாகீரதி, மந்தாகினி, வரநதி, வானதி, விமலை ஆகிய பெயர்கள் வழங்கப் பெறவில்லை என்ற பொதுவுண்மை அடிப்படையில் காணும்போது தமிழகத்தில் சங்க காலந்தொட்டு வழங்கும் கங்கை என்ற பெயர்க்கே ஆசிரியர் முதலிடம் கொடுப்பது நன்கு புலனாகிறது. எனவே இதனையே தலைச் சொல்லாகக்கொண்டு விளக்கம் எழுதும்போது 'சுர்நதி'யை இதன் மற்ற பெயராக ஏற்க முடிகிறது.

இந்திய நாட்டில் இமயத்தில் தோன்றிப் பாயும் ஆறு என்பதைப் பொதுவாகக் குறிக்கும் வகையில் ஓர் ஆறு என்று குறிப்பது முதல்நிலை (பின்னிணைப்பில் 1. 0-இல் காண்க). ஆனால் பெரியபுராணப் போக்கிற்கேற்ப இது 'வானப் பேராறு' என்ற புராணக்கருத்தைச் சுட்ட வேண்டியது அடுத்த நிலையாகும் /1.1/.[7] மண்ணில் ஓடும் ஆறு என்பது உண்மைநிலை. ஆயினும் அது விண்ணிலிருந்து மண்ணிற்குக் கொண்டு வரப்பெற்றது என்பது புராணக் கருத்து.

பகீரதன் என்ற மன்னன் தன் மூதாதையர்க்கு ஏற்பட்ட சாபம் நீங்க வானதியாம் கங்கையை மண்ணில் கொணரும் போது அதனைச் சிவன் தன் செஞ்சடையில் ஏற்றார் என்ற செய்தியைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் மூவர் தேவாரம் கூறுவதை முன்னர்க்' கண்டோம். ஆயின் பகீரதன் கதைக் குறிப்பே பெரியபுராணத்தில் காணப் பெறவில்லை (இதன் காரணத்தை ஆய்வது இங்குப் பொருத்தமன்று. சங்ககாலத்தில் சிபியின் கதை தக்க இடம் பெற்றிருந்தும் பிற்கால வழக்கில் அது அருகி வழங்கியதை இத்துடன் ஒப்பிட்டுக் காணலாம்.) பெரியபுராணப் பெருங்கடவுளாம் சிவபெருமானின் முடியில் கங்கை அமையப் பெறுதல், கங்கையின் புனிதத்தன்மை, சிவன் அதில் ஆடுதற்குரிய பெருமை ஆகிய நிலையும், பண்பும் கூறிக் கங்கையைப் பற்றிக் குறிப்பிடும் நிலை அடுத்து அமைகிறது. /1, 2/.

இல்லையெனில் பெரியபுராணத்தில் 1 முதல் 4281 பாக்கள் வரை (சி. கே. சுப்பிரமணிய முதலியார் பதிப்பின் படி) உள்ள கங்கை பற்றிய செய்திகளை அவ்வாறே தரின் அதில் செய்தி நல்வடிவம் பெறாமல் நேர்கோட்டு நிலையில் எவ்விதத் தொடர்புமின்றிப் புலப்படும். அதனைத் தவிர்க்க மேற்கண்ட செய்திகள் முன்னர் வைக்கத் தேர்ந்தெடுக்கப் படும் நிலை பொருத்தமாகும்.

சிவனடியார்களில் கங்கையினை நேரே கண்டு அதில் நீராடியவர்கள் அப்பரும் திருமூலருமாவர். அடியார்களுடன் நேர் உறவை மனத்தில் கொண்டு இவ்விரு அடியார் செயலும் முறையே வைக்கப்பெறும் போது பெரிய புராணத்தில் மூவர் முதலிகளில் மூத்தவராகவும் இபபுராண அமைப்பில் முதலிடம் பெறுபவராகவும் விளங்கும் அப்பர் கங்கையைக் கண்டு நீராடிப் பின் அதன் கரையில் கயிலை நோக்கிச் சென்ற செய்தி முதலிலும் /2. 1/ அடுத்துத் திருமூலர் செய்தியும் தொகுக்கப்பெறும் /2. 2/. பெரிய புராண

அமைப்பையும் அடியவர் நிலையையும் கருத்தில் கொண்டு இவ்விருசெய்திகளும் முன் பின்னாக வைக்கப்பெற்றன.

புண்ணிய நதியாம் கங்கை தமிழகத்தில் உள்ள திருவையாறு /3. 1/ குடமூக்கு /3. 2/. ஆகிய தலங்களுக்கு மற்ற தெய்வ நதிகளுடன் வந்து நீராடும் செய்தி அமைகிறது. 'புண்ணிய கங்கை' (671) தன் பாவத்தையும் அதைப் போன்ற பிற தெய்வ நதிகளின் பாவத்தையும் போக்கிக் கொள்ளும் வகையில் தமிழகச் சிவதீர்த்தங்கள் உள்ளதைப் பெரியபுராணம் சுட்டும். இதனை உணரும் வகையில் அடுத்த பகுதி விளக்கப் பெறுகிறது.

காப்பிய நோக்கில் கங்கை உவமையாகப் பயன் படுகிறது. காவிரி, கெடிலம் ஆகிய ஆறுகள் கங்கை ஆற்றுடன் ஒப்புமை ஆவது ஒத்த நிலையின் அடிப்படையிலாகும். காஞ்சி வீதிகள் உவமையாவது பண்டைய சங்க மரபின் அடிப்படையிலாகும், இவ்வாறு ஒத்தநிலையிலும், மரபுநிலையிலும் உவமையாகும் நிலை முதலில் அமைகிறது /4. 1/.

அடுத்து அருவ நிலையில் அடியார்களின் மகிழ்ச்சி ஆரவார ஒலிக்குக் கங்கை ஆர்ப்பு உவமை ஆவது புலன் நிலையிலமையும் உவமையாகும் /4. 2/.

ஆயின் சம்பந்தரின் இரு செயல்களுக்குக் கங்கை உவமையாவது இல் பொருள் நிலையில் வியப்பூட்டும். பாண்டி நாட்டில் வராத கங்கையை வந்தது போலக் கூறி அமண் இருள் நீக்கும் செயலை அறிவுறுத்தும் /4. 3 /.பொன் மயமான இமயமலையிலிருந்து கங்கை விலகிச் செல்வது இயல்பு. ஆயின் கங்கையே அதனுள் புகுவது இயற்கையில் காணப்பெறாத இல்பொருள் நிலை இதனை உவமையாக வடித்துப பொன்மாளிகையில் புகும் சம்பந்தரைப் பொன்னியமலையில் கங்கைக் கொழுந்து புகுந்தது எனக் காட்டும்போது /4. 4/ அணிநயநதை அழகுபடுத்தும் அமைப்பு அடுத்து வைக்கப்பெறும்.

இறுதியாகக் கங்கை நீரின் தூய்மை கண்ணப்பர் திரு வாய் நீருடன் ஒப்பிடப்பெற்று அதன் பெருமை விளங்கக் கங்கையின் புனிதப் பண்பு தாழ்கிறது /4. 5/.

இதனால் சிவனடியார் நிலை கங்கை நிலையிலும் உயர்ந்தது என்று கருதும் பெரிய புராண அடிப்படை நோக்கம் புலனாகும். இதுவே இந்நூலின் தலையாய கொள்கை ஆதலின் கங்கை அதனை உணர்த்த ஒரு கருவி ஆகிறது என்பதை /5.0/ அறிவுறுத்த இப்பதிவு துணை செய்யும் வகையில் விளக்கப்பெற்றுள்ளது.

இப்பதிவு கொண்டு சிறப்புப் பெயரகராதியை உரு வாக்குதற்குரியவற்றைப் பின்வருமாறு அமைக்க இயலும்:

1 சிறப்புப் பெயர் பற்றிய வரவுகள் அனைத்தையும் ஒன்று விடாமல் முதலில் தொகுக்க வேண்டும்.

2 தொகுத்த செய்திகளை நிரல்பட அமைக்கும்போது பொதுச் செய்திகளுக்கு முதலில் இடம் தரவேண்டும்,

3 மரபுச் செய்திகளில் கூறப்படும முதன்மைநிலை, அகராதிக்கென எடுத்துக் கொண்ட நூலில் உள்ளதா என ஒப்பிட்டுப் பார்த்து அதற்கேற்ப நூல் மரபை அறிந்து விளக்கம் எழுதிச் செல்லவேண்டும்.

4 பருப்பொருள், நிகழ்ச்சி ஆகியவற்றின் சிறப்பைக் கருதி முன்பின் வரிசைப்படுத்தலாம்.

5 எடுத்துக்கொண்ட பொருளின் இயல்பு நிலை, அணி நிலை ஆகிய இரண்டையும் பகுத்தறிந்து இயல்பு நிலைக் கேற்ப உண்மைகளை வெளிப்பட உரைக்க வேண்டும். அணிநிலை பற்றி விளக்கம் தரும் போது எடுத்துக் கொண்ட பொருளின் அடிப்படை நோக்கம் சிறந்திட, விளக்கம் மரபுநிலை உணர்ந்த வகையில் அமைய வேண்டும்.

6 சிறப்பகராதிக்கு மொழிப்பண்பாட்டுச் சூழல் பெரிதும் துணை செய்வதால் பண்பாட்டடிப்படையில் காணும் செய்திகளை வேண்டுமளவு தெளிவாக அகராதிக் கலைஞர் அறிவது இன்றியமையாததாகும்.

## குறிப்புகள்

1. அகம். 265: நற்றிணை 189, 369; பட்டினப்பாலை 190; பதிற்றுப்பத்து. 5. பதி; பரிபாடல் 16; புறம் 161; பெரும்பாண் 429-431; மதுரைக் காஞ்சி 694-697.
2. சங்கப் பாடல்களில் கங்கை, தா. வே. வீராசாமி, பதினாறாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை தொகுதி 1, இ. ப. த. மன்றம், அண்ணாமலைநகர் 1984 பக். 524.
3. மூவர் தேவாரம் திருப்பனந்தாள் பதிப்பு, ஸ்ரீவைகுண்டம் 1968. பக்கம் 36, 93, 373, 408, 617, 709, 837, 866, 869; 948, 1051, 1373, 1405, 1498, 1502.
4. பகீரதன் கங்கை கொணர்ந்த கதை பற்றிய தேவாரக் குறிப்புகள்:

   அப்பர்-4.73.4, 4.65.7, சம்பந்தர் 3.121.3

   சுந்தரர் - 7 57.7 திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரப் பதிகங்கள் (1973) திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரப் பதிகங்கள் (1973) சுந்தர மூர்த்தி சுவாமிகள் தேவாரப் பதிகங்கள் (1973). கயப்பாக்கம் சதாசிவம் செட்டியார் பதிப்பு, கழகம், சென்னை.
5. கங்கை: 22, 45, 55, 147, 233, 235, 245, 311, 388, 516, 518, 671, 830, 837, 848, 897, 1036, 1096, 1108, 1143, 1167, 1399, 1601, 1618, 1642, 1945, 2086, 2202, 2221, 2302, 2307, 2353, 2365, 2469, 2549, 2882, 2975, 3023, 3128, 3160, 3216, 3307, 3316, 3386, 3450, 3495, 3523, 3566, 3567, 3788, 3826, 3860, 3893, 4067, 4096, 4151, 4174, 4250, 4256, 4273,
6. சுரநதி 1227, 2429.
7. சாய்வுக் கோட்டகத்து உள்ளவை இதன் பின்னிணைப்பில் காணும் எண்கள்.

# 7

# தேவநேயப்பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி

அகராதிகள் பலவகைப்படும். சொற்பிறப்பு அகராதி, வரலாற்று அகராதி, பேச்சு மொழி அகராதி என்பவை பெரிதும் இருமொழி அகராதியாக அமைதற்கு வாய்ப்புளது. ஞா. தேவநேயப்பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பிறப் பியல் பேரகர முதலி (செ. சொ. பி. அ) இருமொழி அகராதியாக வெளிவந்துள்ளது. இத்தகைய அகராதிகள் பேரறிஞர்கள் பயன் படுத்துதற்கெனவே பெரிதும் வெளி வருபவையாகும்.

சொற்பிறப்பு, ஒப்பியல் ஆகிய துறைகளில் வெளிவந்த ஒருமொழி, இருமொழி, பன்மொழி அகராதிகளின் துணை யுடன் பாவாணரின் அகராதி உருவாகியுள்ளது. கீற்று (Skeats, *1968*), ஆனியன்சு (Onions, *1969*), கிளெயின் (Klain *1971*) ஆகியோரின் ஆங்கிலச் சொற்பிறப்பு அகராதி கள் இதில் பெரிதும் பயன்பட்டுள்ளன. மோனியர் வில்லி யம்சின் (Monier Williams, *1981*) வடமொழி அகராதி ஆல்பர்டு தௌச முதலியோர் (Albert Dauzat et.al 1971) தொகுத்த பிரஞ்சு அகராதி எனும் ஒருமொழி பற்றிய சொற்பிறப்பு அகராதிகளும். தாவீதின் சிங்களம்-தமிழ், பெல்சாரேவின் (Belsare, *1981*) குசராத்தி-ஆங்கிலச் சொற் பிறப்பகராதி ஆகிய இருமொழிச் சொற் பிறப்கபராதிகளும்

பர்ரோ-எம்னோவின் (Burrow and Emeneau 1961) திராவிடச் சொற்பிறப்பகராதியும் பயன்படுத்தப் பெற்றுள்ளன. சீற்றின் (1892) ஆங்கிலச் சொற்பிறப்பு விதிகளின் செல்வாக்கு இவ்வகரமுதலியில் உள்ளது (ப. சஉ)*

சிறப்பாகச் சொல்லியலுக்குப் பயன்பட்ட அகராதிகளில் பெரிதும் பயன்பட்டது சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதியே (செ. ப. க. அ). "இருபத்தாறாண்டாக இடைவிடாது தொகுத்த பல்லாயிரக்கணக்கான சொற்களும், அவற்றின் பெரும்பாற் பொருள்களும், அவற்றிற்குரிய மேற்கோள்களும், அம்மேற்கோளின் இடங்களும் ஏற்கனவே குறிக்கப்பட்டிருப்பது செந்தமிழ்ச் சொற்பிறப்புப் பேரகர முதலிப் பணியாளராகிய எமக்குக்கால வகையிலும் மறக்கொணாப் பேருதியமாகும்" என்று தம் நன்றிக்கடனை முன்னுரையில் பாவாணர் சுட்டியிருப்பது (ப, ரு,சா) ஏற்புடையதாகும். மேலும் சாம்பசிவம் பிள்ளை தமிழ் ஆங்கில அகரமுதலி இதனகத்து நன்கு பயன் பட்டுள்ளது என்பதைப் பல சொற்பதிவுகள் இதனகத்துக் காட்டி நிற்கின்றன (பக். 17, 72, 153, 242, 349, 430, 513, 574).

இவ்வகரமுதலியின் முதல் 112 பக்கங்களில் பாவாணரின் முன்னுரை, இப்பேரகரமுதலி அமைப்புத் திட்டம், (பக் க-ஙஉ), பதிப்புரை, சொற்பிறப்பியல் அகர முதலி வரலாறு, உலக மொழிக் குடும்பங்கள் பற்றிய செய்திகள், சுருக்கக் குறியீடுகள், நூற்பட்டியல் ஆகியவை இதனைப் பற்றி அறியவும், கையாளவும் உதவும் வகையில் அமைந்துள்ளன. இதில் 'அ' முதல் 'அனோபகம்' வரை 574 பக்கங்களில் ஏறத்தாழ 6400 சொற்கள் தொகுக்கப் பெற்றுள்ளன.

---

*(அடைப்பில் காணும் பக்க எண்கள் செ. சொ.பி. அகர முதலியில் உள்ளவை)

பாவாணரின் முன்னுரை தமிழின் தொன்மையை முதலில் புலப்படுத்தி, ஆரியத்திற்கு முந்திய மொழி என்பதுடன் மூலமொழி என்பதை நிறுவக் கால்டுவெல் கூற்றுக்களை எடுத்து மொழிகிறது. இவற்றின் தமிழ் மொழி பெயர்ப்பை அளித்து ஆங்கிலப் பகுதியை அடிக்குறிப்பில் கொடுத்திருப்பின் படிப்போட்டம் தடைப்படாது.(பக்-உ-)

தமிழ் வேர்ப் பொருள் காட்டும் மொழி எனத் தொல் காப்பியச் சான்று காட்டித் தமிழின் தனித்தன்மையையும் சிறப்பையும் விளக்குகிறது இவ்வகராதி.

இந்நூலில் மூலவாய்களாகச் சொல்லியல் சொற்பிறப் பியல் பற்றிக் கையாண்ட அகராதிகள், மொழிநூல், வர லாற்று நூல்கள் பற்றிய குறிப்புள்ளன. ஆயினும் உலக வழக்குச் சொற்கள் என்ற தலைப்பின் கீழ் (ப.சா) எவ்விதக் குறிப்பும் இல்லை. எனினும் பின்னர்க்காணும் நூற்பட்டி யலில் பொறியியற் கல்லூரிகளிலிருந்து பெற்ற கலைச் சொல்கையேடு (ப. எரு) பார்மரின் கொச்சை வழக்குப் பற்றிய அகராதி (ப.எசா) சில கையெழுத்துப் படிகள் ஆகியவற்றின் பெயர்கள் உள்ளன அவற்றிலிருந்து இவற்றைத் தொகுத்ததாகக் கொள்ளலாம்.

இதன் சிறப்பியல்புகளைக் குறிப்பிடும்போது எல்லார்க்கும் பயன்படும பொதுவகையான சொற் பொருளகர முதலியும் இணைந்துள்ள இருவகைப் பாட்டினைக் கூறுகிறது. இதன் பின்வகைக்குச் சான்றாக அ (பக் 1-5), அக்கா (பக் 18-20), அம் (பக் 242-243), அன் (ப. 559), அடியிணைப்புத் தொடை (ப. 142) அவரை (பக் 453-456) போன்ற சொற்பதிவுகள் அமைந்துள்ளன.

தமிழ்ச் சொல்லின் வளம் அறிதற்குத் தமிழ்ச் சொற் களும், அயற்சொற்களும் முதன்முதலாக இதில் பிரிக்கப் பட்டுள்ளன. அவை பத்தாவது மடலத்தில் கூறப்பெறும்

எனக் குறிப்பிடப் பெறுகிறது. எனினும், 'சாம்பசிவம் பிள்ளையகராதி, வைத்திய மலையகராதி, பச்சிலை மூலிகை யகராதி போன்றவற்றில் உள்ள சொற்கள் அமைந்துள்ளன. தமிழுக்கு இன்றியமையாத சொல்லாயின் இடம் பெறும் (ப. அ) எனும் இந்நூற்கூற்று இவற்றை ஏற்றற்குரிய காரணத்தைக் காட்டும்.

எழுத்துப் பெயர்ப்புப் பற்றிய முன்னுரையின் கருத்தை ஒலியியலாளர்கள் ஏற்பது கடினம். (சங்கு Sangu பாம்பு Pambu) செ. ப. க. அ. யில் பயன்படுத்தியுள்ள எழுத்து முறையே இன்று பெரும்பான்மை நூல்களில் பயன்படுத்தப் பெறுகிறது. அதன் குறையைப் பெரிதாகக் கருதினால் உலக ஒலியியல் குறியீடுகளை உரோமன் எழுத்திற்கு மாறாகப் பயன்படுத்தியிருக்கலாம்.

பிற அகராதிகளில் இடம் பெறாத உலக வழக்குச் சொற்களை இது ஏற்றுக் கொண்டுள்ள பாங்கு போற்றற் குரியது. குறிப்பாக உடல் உறுப்பு, தொழிற்கருவிகள், பல் வகை உணர்வை வெளிப்படுத்தும் சொற்கள் ஆகியவற்றை இதனுள் (பக் 320, 77, 398, 554, 71) காணலாம். சொல் வளம் முழுதும் காண இதுபயன்படும் என்பதில் ஐயமில்லை.

செ. ப. க. அ. வில் விடுபட்டுள்ள சொற்கள் நா. கதிரை வேற்பிள்ளை அகர முதலியில் காணப்பெறும். அவற்றுள் ''ஆகண கைக்கிளை'', ''ஆகணதாரம்'' (ப.அ) போன்ற வற்றை இது சேர்த்துக் கொண்டுள்ளதால் சொற்களைத் தொகுப்பதில் காட்டும் ஆர்வப் பெருக்கு புலப்படுகிறது. இதன் செறிவை உணருமாறு 'முதன் மடலத்தில் விடுபட்டுப் போன சொற்களெல்லாம் ஒன்பதாம் மடலத்தில் இடம் பெறும்' என்று உறுதியளிக்கப் பெறுகிறது.

இதனகத்துப் பொருள் பற்றிய தலைப்பில், பிற்கால வினைகள் பேரறிஞராற் செய்யப்படின், முற்கால வினை

களிலும் சிறந்தனவாக இருக்கும் என்ற கூற்றில் அறிவியல் பார்வையில் கூர்தலறம் வெளிப்படுகிறது. முன்னகராதிகள் நூற்களின் பட்டியலை ஒப்பிட்டுப் பார்க்கும் போது செ. ப. க. அ. இல் 541 உள்ளன. இங்கு அவற்றில் சில விடுபட்டும் புதிதாகச் சில சேர்க்கப் பெற்றும் உள்ளன. தமிழ் நாடகத் தொடக்க காலத்தில் எழுந்த காசி விசுவநாத முதலியாரின் ''தாசில்தார் நாடகம்'', இக்காலத்தில் கணபதி ஸ்தபதி எழுதிய ''சிற்பச் செந்நூல்'' போன்ற பலதுறை நூல்களைப் பயன்படுத்தியுள்ளது சொல்வளப் பெருக்கிற்குத் துணை யாகும்.

இதிலும் பிற்கால வழக்குகளே பெரிதும் காட்டப் பட்டுள்ளன. வரலாற்று முறையில் சொற்களுக்குப் பொருள் காணும் முறையை மேற்கொள்ளாததால் தமிழ்ச் சொற் பொருள் வளர்ச்சியை அறிய இயலாமல் ''இயற்கையை யொட்டியே ஏரண முறைப்படி'' (ப.சா) குறிக்கப்படுவதால் இதில் காணும் மூலத்தின் தொன்மையை அறிவது கடின மாக உள்ளது

பொருள் சுட்டும்போது முன்னுள்ள அகராதிகளில் குறிக்கப் பெறாதவற்றைக் குறித்தல், தவறான பொருள் திருத்தப் படுதல் இனப்பொருட் பெயர்களும்-வகைப் பொருட் பெயர்களும் ஒருங்கு குறிக்கப்படுதல் போன்ற நெறிகள் இதில் பின்பற்றப்பட்டுள்ளன.

மூலம் பற்றிக் கூறும்போது ''உலகில் முதன் முறையாக வரலாற்றடிப்படையிலும், மொழி நூலடிப்படையிலும் வெளிவரும் அகரமுதலி இதுவே'' (ப. ய) என்று குறிப் பிடுவது நீண்ட நெடுங்காலம் பலதுறை அறிஞர்கள் ஆராய்ந்தறிந்த பின் முடிவுக்கு வருவதற்குரிய கருத்தாகும். தென்சொல்லை வடசொல் எனக் காட்டும் கட்டுக் கதை களை அறிவியல் முறையில் மறுத்ததாகக் கூறுவதை அறிதற்கு ''உத்திராக்கம்'' என்னும் சொல்லைக் காணு

மாறு இது கூறும். இங்கு "அக்கம்²" (பக் 13-15) என்ற சொல்லின் கீழ் இது பற்றிய ஓரளவு செய்தியும், படத்தாள் 2-இல் அக்கமணி பற்றி ஏழு படங்களும் உள்ளன. எனினும் இது பற்றிய முழு உண்மையை அறிவதற்கு முதன்மடலத்தின் நான்காம் பகுதி வெளிவர வேண்டும்.

தென் சொல் வட சொல்லாவது (இடைகழி) அதன் பின் அதை வட சொல் எனல் (உவணம்) அதை இயற்கைக்கு மாறாகப் பகுத்துப் பொருந்தப் பொய்த்தல் (செவந்தி), பொருந்தாப் பொய்த்தல் (பள்ளி), வேர்ப்பொருளை வேறு படுத்திக் கூறல் (வடலை) என்ற முறையில் பகுத்துக் காட்டியுள்ளமை எதிர்கால ஆய்வாளர்க்குத் துணைபுரியும்.

அமைப்பொழுங்கில் பன்னிரு மடலங்களும் எவ்வாறு அமையும் எனக் காட்டியிருப்பது நன்குள்ளது. ஆயினும் 12-ஆம் மடலம் வெளிவந்த பின்னரே இச்சொற்களின் சொற்பிறப்பு நெறிமுறைகள் புலப்படும் எனக் கூறுவதால் அவற்றை முழுதும் அறியாமல் இச்சொற்களின் பிறப்பு நிலை பற்றித் திறனாய்வு செய்தல் இயலாது.

செ. ப. க. அ. முக்காலங்களில் வினைகள் வேறுபட்டு வழங்கும் 13 வாய்பாடுகளை நிகழ்வு, இறப்பு, எதிர்வு, எச்சம் என்ற நிலையில் காட்டும். இதில் செயப்படு பொருள் குன்றிய வினையில் 22, குன்றா வினையில் 19, பொது வினை 2, பிற வினை 2 என 45 பிரிவாகக் காட்டியிருப்பது வினைச் சொற்களின் புடைபெயர்ச்சியை நன்கு அறிய வகை செய் கிறது. அத்துடன் இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனத் தந்துள்ளது நூலில் முதலிற் கண்ட ஏரண முறை வைப்பின் விளைவு எனலாம். நன்கு தமிழ் கற்ற அறிஞர்களுக்கு இம்முறை எளிது. தொடக்க நிலையில் உள்ளவர்கள் இவ் வைப்பு முறையில் கற்கப் பெரிதும் இடர்ப்படுவர்.

பதிவின் அமைப்பொழுங்கில் பெயர், வினை, இடை ஆகிய மூன்று சொற்களும் எங்ஙனம் அமைக்கப்பட்டுள்ளன

என்பதைத் தெளிவாக இது காட்டுகிறது. இம்முறை இதன தனிச் சிறப்பாகும்.

இதன் அமைப்புத்திட்டத்தை விளக்கும்போது இதில் எல்லாச் சொற்களும் (உலக வழக்கு, இலக்கியவழக்கு, தொழில், கலை, அறிவியல்) இயன்றவரை சேர்க்கப் பட்டுள்ளன என உரைக்கும். அயற் சொல் இடம் பெறு தற்குத் தமிழுக்கென உழைத்த அறிஞர் பெயர் வடமொழி யில் அமைந்த தமிழ் நூற்பெயர் ஆகியவற்றைப் பார்த்த வுடன் விளங்கும் வகையில் தரப்பெற்றுள்ளன. இரு பிறப்பி களாம் கூட்டுச் சொற்கள் நிலைச்சொல்லின் மொழிப்படி பிரிக்கப் பெற்றுள்ளன. ஐயுறவுக்குரிய சொற்கள் அயற் சொல் மடலத்தின் இறுதியில் தனியாகக் குறிக்கப் பெறும் என்று கூறும். இருமொழியில் வழங்கும் தொகையுறுப்புகள் (ஐம் பொறி, பஞ்சேந்திரியம்) போன்றவற்றில் தமிழில் உள்ளதை மட்டும் கூறும்.

இவ்வாறு நெறிமுறைகளை வகுத்துக் கொண்டு மேலே செல்வது இவ்வகர முதலியின் தலைப்புக்கு அரண் செய் வதாகவுள்ளது.

தலைப்புச்சொல் பற்றிக் கூறும்போது "ஆச்சு", "கண்ணாலம்" போன்ற கொச்சை வடிவங்கள் தனிப் பாடல்களிலும், பனுவல்களிலும் வந்துள்ளமை பற்றி இதில் எடுத்தாண்டுள்ளதாகக் கூறும். அதன் வழியில் இக்காலத் தமிழ் இலக்கியங்களில் புதிதாக எழுந்துள்ள படைப்புச் சொற்களும் இதில் இடம் பெற வேண்டும் என்ற எண்ணம் எழுதற்கு இடமுண்டு.

தெலுங்கு, கன்னடம் முதலிய திராவிட மொழித் திசைச் சொற்கள் தமிழ்ச் சொற்கள் போன்றே தனிச்சொற களாகக் கொள்ளப்பட்டுள்ள போக்கு அகராதி ஆக்கத் திற்குப் பொதுவாகத் துணை செய்வதாகும்.

கூட்டுச் சொற்களை எண் வகையாகப் பகுத்து இந் நூலினகத்துத் தரப்பெற்றுள்ளமை (ப. 22) நற்பயனளிக்கும் முயற்சியாகும். சான்றாக அடையடுத்த வாகுபெயர் (ப 165) அமையும். கூட்டுச் சொற்கள் பற்றி ஏழு வகையிலான பாவாணர் பட்டியல் ஒன்று அடிக்குறிப்பில் தரப்பெற் றுள்ளது. இதனினும் முன்னர்க் காணும் எண் வகையே நுண்ணிய பகுப்பாகவும் பொருளுணர்வுக்கு எளிதாகவும் உள்ளது.

தலைப்புச் சொல்லை மேலும் பல வகையாகப் பகுத்துக் காட்டும்போது 'மணி' என்ற சொல் பிறப்பதற்கு முன் மள், மண், மல் என நான்கு வேர்களைக் காட்டும். முன் என்பது சிறியதைக் குறிக்கும் வேராக அமைவது எவ்வாறு எனத் தெரியவில்லை.

இதில் வினைச் சொற்களை ஏவலொருமை வடிவில் குறித்திருப்பது சொல்லாக்கத்திற்குத் துணை செய்யும் மரபு நெறியாகும். 'அள்ளு', 'எண்ணு'ப் போன்ற உகரமேற்ற வழக்கு வடிவையும் மேற்கொண்டுள்ள நெறி தக்கதாகும்.

'கள்' என்னும் பன்மை ஈறு வன்றொடர்க் குற்றிய லுகரத்தோடு புணர்வது பற்றிய கருத்து வேறுபாட்டை யாப்பருங்கல விரிவுரையாளர் முதல் சிவஞானமுனிவர் வரை எழுதிய கருத்துரைகளை விரிவாகக் காட்டிப் பின் உறழ்வுப் புணர்ச்சியை நெறியிட்டுக் காட்டுவதில் இக்கால வளர்ச்சியை இவ்வகரமுதலி ஏற்கும் நிலை தெரிகிறது.

அயற்சொல் வழக்குப்பற்றிக் கூறும் போது ஆழ வழக் கூன்றியனவும் தமிழுக்குத் தேவையானவுமான அயன்-மொழிச் சொற்களே இங்குச் சேர்க்கப்பெற்றுள்ளன எனக் கூறிப் பின் அவற்றை உதறிவிட்டுப் பழந்தமிழ்ச் சொல்லை யோ புதுப் புனைவுச் சொல்லையோ நாளடைவில் ஆள வேண்டும் என்ற கருத்து வற்புறுத்தப் பெறுகிறது. இது

எதிர்கால நெறியை எங்ஙனம் வகுத்துக்கொள்ள வேண்டும் என்பதை விழிப்பாகச் சுட்டுகிறது.

அயன்மொழிச் சொற்கள் இயன்ற அளவு நெருங்கிய தமிழ் எழுத்துக்களால் குறிக்கப் பெற்றுள்ளமை, பழமரபு காக்கும் நெறியாகும்.

இயல் வரையறை பற்றிக் கூறும் போது 'பொருள்களின் இயல்பும், வினைகளும், நிகழ்முறையும், இயன்றவரை நிறைவாக வண்ணிக்கப்பட்டுள்ளன' எனக் கூறினும் இப் பகுதியை முழுமையாகப் பார்க்கும் போது அக்கருத்து நிறைவுருப் பெற்றதாகக் கூற இயலவில்லை.

பொருட்பாடு என்ற தலைப்பில் பல்வகை வழக்கு நெறிகள் சுட்டப்படுகின்றன. பழைய வழக்கு, இடைக்கால வழக்கு, இக்கால வழக்கு என்பவற்றை வரலாற்று நெறியைப் பின்பற்றும்போது நன்கு காட்ட இயலும், எனவே இவ்வழக்குகளைக் குறித்திருப்பினும் அவற்றைத் துல்லியமாகக் குறிக்கும் நிலையில் இல்லை.

மரபு வழக்கைத் தனிச்சொல், இணைச்சொல், கூட்டுச் சொல், தொடர்ச் சொல் என நான்காய்ப் பிரித்திருப்பது சொற்பொருள் காண்பதற்குத் துணைபுரிவதாய் உள்ளது. 'கொடித்தட்டல்' என்பதன் பொருளான ''நல்ல பாம்பு கடித்தல்'' - நெல்லையில் வழங்குவதாகக் குறிக்கப் பட்டுள்ளது (ப. ௯௧). இதனால் வட்டார வழக்கு என வழங்கப்படுவதை இதன் உட்பிரிவாகக் காட்ட வேண்டும்.

இனச் சொல் பற்றிக் குறிப்பிடும் போது தமிழும் அல்லது தென்மொழி (தமிழும் திராவிடமும்) ஆரியத்தோடு தொடர்புடையதென்பது உலக அறிஞரால் ஒப்புக் கொள்ளப்படவில்லை என்று கூறுவதன் உண்மை காண, 10-ஆம் மடலம் வெளிவரும்போது வழியேற்படும். கால்டு

வெல் தமிழத்தைத் தவறாகச் சித்திய மொழிக் குடும்பத்தின் இனமாகக் கூறியதைத் தவறு என ஆய்வாளர்கள் கண்டுள்ளதாகக் கூறுவதை (ப. ௩௨) வலுவூட்டும் வகையில் விரித்து எழுதியிருப்பின் நலம்.

இனமும் வகையும் என்ற தலைப்பில் சுட்டியுள்ளது போல 'அவரை' (பக். 453-456) பெருவிளக்கம் பெற்றுள்ளது. அதன் வகைகள் பதினைந்தும் அகவினமாக மூன்றும் உள்ளன. அதன் புறவினமாக நான்கு காணப்படுகின்றன. கொழுப்பவரைக்கும், காட்டவரைக்குமுள்ள ஆறு வேறுபாடுகள் விளக்கம் தருகின்றன. திராவிட மொழிகளில் உள்ள அவரை பற்றிய பெயர்கள் மேலும் ஒப்பிட்டு வளர்ச்சி காண உதவுகின்றன. 'அம்முதல்' = ''அமுங்குதல்'' என்பதிலிருந்து சொற்பிறப்புச் சுட்டப் பெறுகிறது. இத்துடன் கொச்சை வடிவங்கள், ஈரிலக்கிய வழக்குப் பெயர்கள், அவரையின் பல பண்பு நலங்கள், பழமொழிகள் வேறு சில குறிப்புகள் ஆகியவெல்லாம் கலைக்களஞ்சிய நோக்கில் விரிந்த அளவில் தரப்பெற்றுள்ளன. தனியே மூன்று வண்ணப்படத்தாள்களில் 21 அவரைப் படங்கள் உள்ளன. சொற்பதிவின் கீழ் குறிக்கப் பெறாத பதினொரு அவரைப் பெயர்கள் காணப்பெறுகின்றன. அவையெல்லாம் 9-ஆம் மடலத்தில் பிற்சேர்க்கையாக அமையும் எனலாம்.

இப்பகுதியில் அவரை போன்றே, 25 வகை மீன்கள், 12 வகை அறுகுகள் விரிந்த அளவில் இடம் பெற்றுள்ளன. இது பொருளறிவு பெறப் பெருந்துணையாகும்.

பதிப்புரை வாயிலாக இவ்வகர முதலியின் தோற்றம் பற்றிய உண்மைகள் புலப்படுகின்றன. செ.ப.க.அ. உருவாகி அரை நூற்றாண்டுக்காலம் கடந்தபின் பெருகி வளர்ந்துள்ள சொல்வளத்தை வெளியிடுதல் என்பது இன்றியமையாத பணி என்பது நன்கு வலுப்பெறுகிறது. இந்நூற்பகுதி வெளிவருமுன் பாவாணர் மறைந்ததால் அவர் வாழ்வும்

பணியும் பற்றிய சுருக்கமும், அவர் பின்பற்றிய கொள்கை யாம் வேர்மூலச் சொற்பிறப்பு முறை, வடிவ மீட்டமைப்புச் சொற்பிறப்பு முறை ஆகியவை பற்றியும் குறிக்கிறது. இதன் விரிந்த கருத்துருவை வெளியிடும் வரை இக்கொள்கை பற்றி நன்கு அறியவோ துல்லியமாக மதிப்பிடவோ இயலாது.

புதிதாகத் தமிழ்ச் சொற்களை நாட்டுப்புறச் சொல் லாட்சி, கல்வெட்டு, ஓலைச்சுவடி, மருத்துவம் முதலிய துறைகளில் வழங்கும் சொற்களைத் தொகுக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று கூறும் இதன் கொள்கை அகராதி வளர்ச்சிக்கு ஏற்றதாகும்.

சொற்பிறப்பியல் அகரமுதலி வரலாறு இந்நூல் பற்றிய முன்னறிவு பெறத் துணை செய்கிறது. ஒரு சொல்லுக்கு மூலங் காட்டி அச்சொல் பிறந்து வளர்ந்த வரலாற்றை விளக்குவது சொற்பிறப்பியல் அகர முதலியின் நோக்கம் என்பதைக் காட்டிப்பின் இருவகையாகப் பகுத்துள்ளது கீற்று (Skeat) கூறிய பத்து நெறிமுறைகளை எடுத்துக் காட்டிப் பொதுவாகவுள்ள எண் வகை உன்னிப்புச் சொற் பிறப்பு முதல் பொருந்தாப் புகல்வுடன் தாமே கண்ட வேர் மூலம், வடிவமீட்டமைப்பு முறைகளையும் சேர்த்துள்ளமை இவ்வகராதியின் பகுதிப் பொருளை அறிதற்குத் துணை செய்கின்றன. ஒரு சொல்லின் மூலம் உறுதிப்படாத போது 'ஒருகால்' என முன்னடை அளித்துத் தெரியாத மூலமாயின் 'மூலம் தெரியவில்லை' எனக் குறித்துள்ளது செயற்பாட்டில் மேற்கொள்ளும் நேரிய மனப்பாங்கை வெளிப்படுததுகிறது.

உலக மொழிகளில் வெளிவந்துள்ள சொற்பிறப்பியல் அகரமுதலிகள் பற்றிய செய்திகளைக் காணும்போது இத் துறையில் முதல் நூல் 1662இல் தோன்றியுள்ளது என்பர். தமிழில் இதற்கான கரு 1856இல் உருவாகித் தவத்திரு ஞானப்பிரகாசரின் ஆறு சிறு பகுதிகள் (அ முதல் உருள்

வரை) 1938இல் வெளிவந்தன. இந்நிலையில் இது வெளி வந்துள்ள வரலாற்று நிலையில் இதன் தனித்தன்மையும் சிறப்பும் நன்கு விளங்கும். இதனால் சொற்பிறப்பியல் அகரமுதலி இல்லாப் பெருங்குறையை இவ்வெளியீடு நீக்க முன் வந்துள்ளமை பாராட்டிற்குரியது. பிற அகராதிகள் (ஆக்சுபோர்டு) வெளிவந்துள்ள வரலாற்றைக் காணும் போது இதன் மற்ற மடலங்கள் வெளிவர வேண்டுமெனில் தக்க அறிஞர் குழு, தெளிவான திட்டம், களப்பணியாளர் கள், பன்மொழித் தொகுப்பாளர், கருவி நூல்கள், நெறி முறைகள் என்று இது சுட்டியுள்ள தேவைகள் நிறைவுற வேண்டும்.

பாவாணரின் சிறப்புக் கொள்கைகளாக வேர்மூலம், மீட்டுருவாக்கம் என்பவற்றின் வேறுபாடு நன்கு புலப் படுகின்றது. மேலும் இனிவரும் மடலங்களின் வாயிலாக அவருடைய உயிர்க்கொள்கையாக விளங்கும் தமிழ் திரா விடத்தின் தாய், ஆரியத்தின் மூலம், ஞாலத் தொன்மொழி என்பவை நிறுவப் பெறும் முயற்சிகள் மேற்கொள்ளப் பெறின் அவை குறிதத உண்மை விளக்கம் பெற வாய்ப்பு கிடைக்கும்.

இவ்வகரமுதலி பல்வேறு சொற்பிறப்புச் சிக்கல்களை எடுத்து விளக்கிப் பின் அவை எங்கிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்ற பிறப்பு நிலை கூறி வேண்டுமிடத்துத் தமிழ், மற்ற திராவிடமொழிகள், வடமொழி, மேனாட்டு மொழிகள் ஆகியவற்றில் வழங்கும் சொற்கள் போன்ற வற்றைத் தொகுத்தளிக்கிறது.

தொடக்கத்தில் 'அ' என்ற எழுத்துப் பற்றிச் சுட்டும் போது (பக் 1-5) உயிர்க்குறில், சுட்டு வகை மூன்று, பெயர், வினை, எச்சம் போன்ற பல நிலைகளை முதலில் கூறும். பின் சாரியை நிலை போன்றவற்றைக் கூறிச் சிவன், திரு மால் ஆகியோரைக் குறிக்கும் உவமையாகு பெயராக ஆளப்

படுவதையும் சுட்டும் (ப.3) சிலவற்றின் குறியாக ஆளப் படுவதை மிக விரிவாகக் கூறுவதுடன், அகாலம் என்பதை உலக வழக்கு எனச் சுட்டித் 'தொல்காப்பியத்திற்கு முந்தின இலக்கண இலக்கியப் புலவியம் அனைத்தும் அழிக்கப்பட்ட தால் இன்று சான்று காட்ட இயலவில்லை' எனக் கூறும். இங்ஙனம் ஊகித்தல் தக்கதா என எதிர்காலத்தில் கிடைக்கும் தரவுகளே முடிவு செய்ய இயலும்.

'அஃகேனம்' (பக் 7-9) பற்றி யாப்பருங்கல விரிவுரையில் (விருத்தி) பிழையாக அச்சிட்டதை அறியாமல் செ.ப.க.அ. 'அக்கேனம்' எனக் குறிப்பிட்டது தவறு என்பதை யாப் பருங்கல நூலிலேயே காட்டியுள்ள பிழையும் திருத்தமும் என்ற பகுதியைச் சான்று காட்டியுள்ளது கூரிய பார் வையைப் புலப்படுத்துகிறது.

சாரியை நிலையில் அக்குப் (பக் 25-28) பற்றித் தொல் காப்பிய 'இன்னே வற்றே' (தொல். எழுத். புண.17 இளம்.) 'எப்பெயர் முன்னரும்' (தொல். எழுத். புண.26 இளம்.) எனும் நூற்பா முதலியவற்றை எடுத்துக்காட்டி, அதன் வரையறையை வெளிப்படுத்தும் நன்னூல் வளர்ச்சியில் அக்குச் சாரியை கொள்ளப்படாமையும் மதுரைச் சங்கத் தமிழ்ச் சொல்லகராதியில் 'அக்கு' கொள்ளப்படாமையும் காட்டி இங்கு 'அக்கு' சாரியையாகக் கொள்ளப்படாமைக் குரிய காரணங்களை விரித்துரைப்பது கொள்ளத்தக்கது.

பெயர்ச்சொல் பற்றி இந்நூல் பல்வேறு நிலைகளில் தன்னாற்றலை வெளிப்படுத்தியுள்ளது.

'அந்தி' பற்றிக் கூறும்போது (பக். 226-228) 'அந்தி' 1 இல் முச்சந்தி முதல் பாலையாழ்த்திற வகை வரை பத்துப் பொருள் கூறும். 'உம்முதல்' என்பது 'கூடுதல், பொருந்துதல்' என்ற அடிப்படையில் அது, அந்து என மாறியதாகக் கூறும் போது ஒப்பு நோக்காக உகை என்பது அகை என ஆகிய

நெறியைக் கூறும். அந்தி, சந்தி ஆனது போல் அந்து, சந்து ஆகியதாகக் காட்டும். பின்னர் முச்சந்தி, நாற்சந்தி போன்ற வழக்குப் பெருக்கை எடுத்துக் கூறி ஸம்-தி எனும் வடசொல் வடிவை மூலமாகக் கொள்வது பொருந்தாது எனக் காட்டும். சொல் மாற்றமும், வழக்குப் பெருக்கமும் வேர்ச் சொல் காணுவதற்கு இங்கு உறுதுணையாக உள்ளன.

'அமிழ்து' என்ற சொல்லுக்கு (பக். 277-280) "உணவு, முலைப்பால்" போன்ற சொற் பொருள் கூறி

மம்மம் → அம்மம்

அம்முதல் — உண்ணுதல்

தமிழ் → அம்முது → அமுது → அமுதம் எனக் காட்டி யிருப்பதுடன் குறட்பாக்களையும் பின்னர்ச் சான்றாகக் காட்டும். ளகரம் போன்று அதற்கினமான ழகரம் ரகரமாகத் திரியும் (ப. 278) எனக் காட்டி அமிழ்து→அமிர்து→ அமிர்தம் ஆகும் என மெய்த்திரிபுகள் பற்றிக் கூறியுள்ளது ஒலியியலார் உடன்படும் வரை தனியே நிற்கும்.

திருப்பாற்கடல் கடைந்த தொன்மக்கதையைப் பகுத்தறிவுப் பார்வையில் மறுக்கும். பொருளால், அம்புரோசியா எனும் கிரேக்கச் சொல் வடசொல்லாம் 'அம்ருத' என்பதுடன் நெருங்கியதாக இருப்பது, ஆயினும் அச்சொல் ஆரியச் சொல் என்பதற்குச் சான்றாகாது என மறுக்கும். தான் மேற்கொண்ட பொருளுக்கியைபாகக் குறளிலிருந்து அமிழ்து-உயிர் மருந்து எனக் காட்டப் பல சான்றுகள் தரும். இவையெல்லாம் சிந்தனை விருந்தாகும். இதன் இறுதியில் பெயரீற்றுகரம் பெருமைப் பொருள் கருதாவிடத்தும் அம்மீறு பெறுவது இயல்பு எனக்கூறும் அம்மீறு பெருமைப் பொருள் தரும் குறிப்பு 'அம்' என்ற பதிவில் (பக். 242-243) காணப் பெறவில்லை.

மேலும் பெயர்பற்றிய விரிந்த விளக்கங்கள் கொண்டவையாக அருணம் (பக். 377-378), அறுதொழிலோர் (பக். 542-544) உள்ளன.

'அருணம்' என்பதை உல்லின் அடிப்படையிலிருந்து காட்டும்போது சொல்லின் பெரும் பரப்பையெல்லாம் உள்ளடக்கிக்கொள்கிறது. மோனியர் வில்லியம்சின் அகர முதலியில் 'அருண' என்ற சொற்குச் சிவப்பு என்ற பொருளுடன் தொடர்பில்லை எனக் கூறிப் பல தமிழ்ச் சொற்கள் வட மொழியின் நூற்றுக் கணக்கான சொற்களுக்கு அடிப்படைச் சொல்லாக உள்ளதென்பதை வலியுறுத்தும். மேலும் அத்தி மரத்தைக் குறிக்க 'உதும்பர' என்ற சொல் புனையப்பட்டதென்பதற்கு மோனியர் வில்லியம்சு கூற்றையே சான்றாகக் காட்டும். இவ்விரு கருத்தடிப்படையில் மேலும் ஆய்வு தொடர வழியுண்டு.

'அறுதொழிலோர்' பற்றிய விளக்கத்தில் பண்டைத் தமிழ் மக்கள் வாழ்க்கையில் கல்விக்கும் தொழிலுக்கும் உள்ள உறவு நிலையைப் புறப்பாட்டு, நாலடியார்போன்ற பண்டை இலக்கியங்கள் வாயிலாகவும் திவாகர நிகண்டு வாயிலாகவும் நிறுவும். கல்வியின் குலப் பொதுமையைப் பண்டைப் புலவர்கள் பெயர் சுட்டி வலியுறுத்தும். இதனடிப்படையில்'அறுதொழிலோர்'என்பது பிராமணரை விதந்து கூறியிருக்க முடியாது என இக்காலப் பகுத்தறிவு இயக்க நோக்கிற்கேற்ப விளக்கம்கூறும். மேலும் அந்தணர் நூல் என்பது வீட்டு நூல் என உரைக்கும். இதன் விளக்கத்தை, மேலும், நூல் என்னும் உருப்படியில் காண்க எனக் குறிக்கும். இதில் ஆரியக் கொள்கையை மறுக்கும் பாங்கு நன்கு புலப்படுகிறது.

வினைபற்றிய விளக்கங்கள் தக்கவண்ணம் இந்நூலின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை சீர்மையாகவும், விரிவாகவும் அமைந்துள்ளமை பாராட்டிற்குரியது. சான்றாக

''அடித்தல்'' (பக், 119-123) என்ற சொல்லின் செயப்படு பொருள் குன்றிய வினையில் 49 பொருளும், செயப்படு பொருள் குன்றா வினையில் 64 பொருளும் காட்டியிருப்பது பொருள்பற்றிய எல்லையில், ஆழ்ந்த முயற்சியை வெளிப் படுத்தியுள்ளது.

பொதுவாக யாப்பிலக்கணத்தில் பயன்படும் சொற் களுக்கு விரிந்த விளக்கங்கள் இதில் உள்ளன. சான்றாக அராகம் (பக். 347-348) அளவடி (பக். 505-506) உள்ளன. அளவடியில் நாற்சீரடி பற்றிக் குறிக்கும் குறளடி சிந்தடி போன்றவற்றை விளக்கியபின் அவற்றிற்குரிய மேற்கோ ளாகத் தொல்காப்பிய நூற்பாக்களை முழுவதும் தராமல் எண் சுட்டியிருப்பின் சாலும். (இந்நெறியில் அம்மானை (பக். 260-261) என்ற பதிவின் கீழ்க்காணும் பாடலும் பொருள் விளக்கமும் சொல்கிறது).

அரசியலில் உறுப்பாக விளங்கும் 'அமைச்சன்' (பக். 288-290)) என்ற சொற்கு நான்கு பொருள் கூறிய பின் வியாழன் என்ற பொருள் கூறுவது தொன்மக்(புராண) கூற்றில் ஏற்பட்ட மயக்கம் என்று காட்டுவதும் மோனியர் வில்லியம்சு அகரமுதலியில் காணும் ''அமாத்யா'' என்னும் வட சொல்லின் 'அமா' என்னும் மூலம் உழையன் என்னும் சொல்லுடன் ஒத்தது என்று காட்டுவதும் எண்ணிப் பார்க்கத்தக்கன. இவ்விரிவு ''உழையன்'' என்ற பதிவில் தருவதற்குரியது.

கலைத்துறைக்குரிய அறுபத்து நாலு கலை (பக். 545-548) பற்றிக் கூறும்போது அறுபத்து நாலு கலை ஞானம் என்பது ஆரிய இலக்கியப் பாகுபாடு என்பதைச் சுட்டிப் பின் அவை எல்லாம் தமிழர்க்கு உரியனவும் ஆரியக்கலை கட்கு முந்தியனவும் இங்குத் தரப்பட்டதாகக் காரணம் காட்டும். இதில் ஆரிய இலக்கியப் பாகுபாட்டில் அமைந் துள்ளதை இவ்வகரமுதலி ஏற்கும் நிலை ஏற்புடைத்து, இக்

கலைகள்பற்றிய இரு பட்டியல்களைச் செ. ப. க. அ. கொடுத்திருப்பதை அவ்வாறே ஏற்றுத் தமிழ் வடிவில் தந்த துடன் காம சூத்திரத்தில் காணும் பட்டியலையும் ஆங்கி லத்தில் தந்துள்ளது. இதனால் பொருள் விளக்கம் தருவதில் உள்ள ஆர்வ நிலையையும் வட சொல் தவிர்க்கும் போக்கை யும் ஆங்கிலத்தை தற்போது ஏற்கும் நிலையையும் உணர லாம். நெசவுத் தொழில் இவற்றில் விடுபட்டுள்ளதைச் சுட்டுவது நுண்ணிய பார்வையாகும்.

செ. ப. க. அ.யைக் காட்டிலும் இதில் மிகுதியாகச் செந்தமிழ்ச் சொற்கள் திரட்டப் பெற்றுள்ளன. இது கால வளர்ச்சியில் எழுந்த விளைவாகும். 'அங்' எனத் தொடங் கும் சொற்களைமட்டும் ஒப்பிட்டுக் காணும்போது பின் வரும் முடிவுக்கு வர இயலும்.

| | | |
|---|---|---|
| (1) | செ. ப. க. அ.இல் 'அங்கக்களரி முதல் 'அங்஦னம்' வரை மொத்தம் உள்ளவை | : 150 |
| | இவற்றில் வட சொற்கள் (உடுக்குறி யிட்டவை) | : 119 |
| | சொற்கள் தமிழ்ச் சொற்கள் | : 31 |
| (2) | செ. சொ. பி. அ: இல் மொத்தம் திரட்டிய தமிழ்ச் சொற்கள் | : 109 |

'தமிழுக்கு இன்றியமையாத சொல்லாயின் தமிழ்ச் சொல் மடலத்திலேயே இடம் பெறும்' என்ற கூற்றிற்கேற்ப அவை எவை என அறிய இயலவில்லை. இங்குள்ள எண்ணிக்கையைக் காணும்போது 'அங்கங்கு' (ப. 64) 'அங்கிட்டு இங்கிட்டு' (ப. 69) போன்ற தொடர்கள் சேர்க்கப் பெற்றுள்ளன. சாம்பசிவம் பிள்ளை அகராதியில் காணும் 'அங்கடத்தன்' - ''பாசிப்பயிறு'' (ப. 64) - 'அங்க

பாதி' - 'முடக்கொற்றான்' (ப. 66) போன்ற சொற்கள், தோற்றம்பற்றிய குறிப்பின்றி அளிக்கப்பெற்றுள்ளன.

'அங்கதச் செய்யுள்', 'அங்கதப் பாட்டு', 'அங்கதம்' போன்ற சொற்கள் அனைத்தும் வடமொழி என செ.ப.க. அகராதி குறித்திட இவ்வகர முதலி தொல்காப்பிய நூற்பாக்களைக் கொடுத்து (தொல். பொருள். செய். 125) (ப. 65) (தொல். பொருள். செய். 120-122)-(ப.66) இவை தமிழ் எனக் கருதுமாறு 'அங்கதம்' - 'வளைதல்' என்ற பொருளை அத் தலைச்சொல்லின் கீழ்த் தந்துள்ளது. இது மேலும் சொற்பிறப்பாய்வுக்கு இடம் தருகிறது.

புதிதாகச் சொற்களைச் சேர்க்கும் போது 'அங்கணேல் தல்' (ப. 65) 'அங்குற்றை', 'அங்கையில் வட்டாதல்' (ப.70) போன்றவற்றை முறையே பெருங்கதை, சைவ மடங்களில் காணும் வழக்கு, திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றைத் தழுவி மேற்கொண்ட பாங்கு எதிர்கால அகராதித் துறைக்கு வழிகாட்டியாகும்.

சொற்களைத் திரட்டிப் பொருள் கூறியும், மேற்கோள் காட்டியும், ஆங்கில மொழிப் பொருளுரைத்தும் இது செல்லும் போது முன்னர் வந்த அகராதிகளின தாக்கம் பின்னர் வந்ததில் அமைவது இயற்கை. அத் தாக்கத்தைப் பின்வரும் பதிவுகள் கொண்டு நன்கு அறிய முடிகிறது.

| சொல் | செ.ப.க.அ. (பக்க எண்) | செ.சொ பி.அ. (பக்க எண்) |
|---|---|---|
| 1. அகமுகமா(கு)தல் | 13 | 51 |
| 2 அங்கதர் | 19 | 66 |
| 3. அசலா | 30 | 81 |
| 4. அஞ்சலர் | 36 | 92 |
| 5. அடை குறடு | 56 | 160 |

| சொல் | செ.ப.க.அ. (பக்க எண்) | செ சொ.பி அ. (பக்க எண்) |
|---|---|---|
| 6. அணுக்கு | 63 | 186 |
| 7. அதிமதுரம்[1] | 75 | 215 |
| 8. அம்பினடி | 97 | 250 |
| 9. அயிர்[2] | 111 | அயிர்[1] 296 |
| 10. அருளாளப் பெருமாள் | 136 | 392 |
| 11. அலையேறு | 149 | 447 |
| 12. அவிழகம் | 158 | 464 |
| 13 அழிகுநன் | 163 | 479 |
| 14 அளவர் | 169 | 506 |
| 15. அறக்களவழி | 173 | 518 |
| 16. அன்றுதல் | 184 | 563 |

இவற்றில் 2,3 என்பனவற்றில் இரு நூல்களும் பயன் படுத்திய பதிப்புகள் வேறுபட்டிருப்பதால் திருமுறை எண் களில் சிலமாறுபாடுகள் உள்ளன. 4-இல் காண்டப் பெயர்ச் சுருக்கம் பற்றிய குறிப்பு புதிதாக உள்ளது. முன்னையதி லிருந்து பின்னையது எடுத்தாண்ட மேற்கோளில் இம்மாற் றங்கள் காணப்படுகின்றன. எனினும் இவ்வாறு எடுத் தாண்டதை வெளிப்படையாக ஏற்றிருப்பின் அகராதி அறம் நிலை பெற்றிருக்கும்.

பொருள் தருவதில் ஒரு சொல்லுக்கு மற்றொரு சொல் லைத் தரும்போது படிப்போர்க்கு அது விளக்கம் தருவதாக அமைய வேண்டும். சான்றாக 'அக்கணா' (ப 13) என்பு தற்குத் 'தான்றி' என்ற சொல்லைத் தருவதால் 'அக்கணா' வின் பொருள் எது எனத் தெரியவில்லை அதன் மறு வடிவங்களாக

| | |
|---|---|
| 1) அக்கத்தான் | 4) அக்காடுதி |
| 2) அக்கந்தம் | 5) அக்காத்தான் |
| 3) அக்கம் | 6) அக்காந்தி |

என ஆறு வடிவங்கள் தரப் பெற்றுள்ளன. பொருள் விளக்கத்திற்காக அவற்றை முறையே பக். 13,15,21,22 ஆகியவற்றில் இவற்றைப் பார்த்தால் 1,2,3 ஆகியவற்றில் 'காண்க அக்கணா' என்றுள்ளது. 4-இல் "தான்றி" என்ற சொல் மட்டும் உள்ளது ஒப்பிட்டுக் காணும் வகையில் குறிப்பிடவில்லை. 'அக்காந்தி'யில் 'தான்றி' எனும் பொருள் தந்து 'அங்கந்தம்' 'அக்காத்தான்' ஆகிய இரண்டுடன் 'அங்காத்தான்' என்ற புதுச்சொல்லையும் மறு வடிவமாகச் சேர்த்துள்ளது. ஆயின் 'அக்கணா' என்ற குறிப்பில்லை 'அங்காத்தா'வில் (ப.68) 'தான்றி' என்ற பொருள் தந்து 'அக்காந்தி' பார்க்க என உள்ளது. அதற்கு முதலில் கண்ட 'அக்கணா' பற்றிய குறிப்பில்லை. இதனால் ஒப்பிட்டு நோக்கும்போது முதற் சொல்லும் பிற சொல்லும் விடுபடுகின்றன. எவ்வாறு முயலினும் 'அக்கணா' பற்றிய பொருள் விளக்கம் கிடைக்கவில்லை.

ஒரு சொல்லுக்கு உரியபொருளைத் தவறு என இதற்கு முன்னர் வெளிவந்த அகராதி குறிப்பிட்டிருப்பதை எடுத்தாண்டு 'அது கவனிக்கத் தக்கது' எனக் கூறும் வழக்கத்தை 'அணோக்கம்' என்ற சொல்லின் கீழ்க் காணமுடிகிறது (ப.161). இது முன்னகராதியாளர்க்குத் தரும் மதிப்பைப் புலப்படுத்தும்.

'அன்மயம்' (பக். 560-561) என்ற சொல்லின் கீழ் வை. மு. கோபால கிருட்டிணமாசாரியார் உரையில் 'அன்வயம் என்று பாடம் கொண்டு "பொருத்தம்" எனப் பொருளுரைத்தமையைக் கூறிப் பின் 'அன்மையம்', 'அன்மயம்' என்பன பாட வேறுபாடுகளாகக் காட்டப்பட்டுள்ள செய்தி குறிக்கப் பெற்றுள்ளது. இதனால பாட வேறுபாடு

கொண்டு சொல் வடிவங்களைக் கூறிப் பல சொல் வடிவங்களை நாடும் போக்கினை அறிய முடிகிறது.

மேலும் 'அரசர் பக்கம்' (பக். 308-309) என்ற பதிவின் கீழ் பொருள் விளக்கம் கூறிப் பின் இறுதியில் 'அவ்வகை மரபினரசர் பக்கமும்' என்று மாற்றிப் பாடமோதுவதே தக்கதாம். இங்ஙனம் ஓதின் பொருள் நிரம்புவதொரு தொல்காப்பியமும் வழுவதலின்றாம்' எனக் கூறும்போது தொகுப்பாசிரியரின் தனி விழைவு மட்டுமே வெளிப்படுகிறது. பாட வேறுபாட்டின் உண்மை நிலையைத் தக்க சான்றுகளடிப்படையில் அதுதான் என முடிவு செய்ய முடியவில்லை.

சிறப்பாக, 'அகத்தியன்' (ப. 40) என்ற சொல்லுக்கு இலத்தீன் மூலத்திலிருந்து வந்த 'வணங்கப்படத் தக்கவன்' என்ற பொருள் சுட்டுவது அம்மொழியில் தொகுப்பு ஆசிரியர்க்குள்ள புலமைக்குச் சான்றாகும்.

மேலும் விருத்தம் என்று சொல்லப்படும் தமிழ் யாப்பு வகைகள் அனைத்தையும இனி மண்டிலம் என்றே வழங்க வேண்டும் .(ப. 57) எனத் தம் விருப்பை வெளிப்படுத்துகிறார்.

பொருள்களின் தோற்றமும் வளர்ச்சியும் புதுச் சொல்லாக்கத்திற்கு வழி வகுக்கும். மக்கள் வாழ்க்கையில் அம் மாற்றங்கள் நிகழ்வதை நன்கு கூர்ந்து கண்டறிந்ததால் அஞ்சற்பணி பற்றிய 'அஞ்சல்' முதல் 'அஞ்சல் தலை' வரை 27 பதிவுகளை இதனகத்துக் காண முடிகிறது. அத்துடன் புதிய வகை அஞ்சற்பெட்டியின் படத்தையும் இணைத்துள்ளது. புதிய கல்வி இயக்கமாம் அஞ்சல்வழிக் கல்வி (ப. 91) பற்றிக் குறிப்பிட்டிருப்பது சிறப்புக்குரியது

இந்நெறியில் அச்சுக்கலை பற்றியும் 26 பதிவுகள் உள்ளன. இதுவும் இன்றைய வளர்ச்சி நிலையின் விளைவாகும்.

அக்கம்[2] (ப. 13-15) பற்றிய சொல்லாராய்ச்சியைவிடப் புராணப்புரட்டை வெளிப்படுத்துவதன் நோக்கமே இப் பகுதியில் வெளிப்படுகிறது 'அக்கம்' பனிமலையடிவார நேபாள நாட்டின் இயற்கையாக விளைவது எனக்கூறுவதால் (ப. 14) நேபாள மொழியில் அதற்குரிய சொல் வழங்குகிறதா என்று கண்டறிவது சொற்பிறப்பைக் காண வழி செய்யும்.

'அசுர குரு' தொல் பழங்கதையிலுள்ள மாந்தர் பெயரைப் பதிவாக ஏற்கும்போது (ப. 83) 'அங்கதன்' போன்ற இராமாயணக் கதை மாந்தர் பெயர்களும் இதில் சேர்த்திருப்பின் நலம் பயக்கும்.

சொற்பிறப்பு அகராதி தொகுக்கும்போது ஒரு சொல் திராவிடச் சொல்லா வட சொல்லா என்பது பற்றிப் பல அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறுவர். புடல் (புடவை) என்ற சொல்பற்றிய ஆய்வு இதற்குத் தக்க சான்றாகும். (செ. ப. க அகராதி ப. 2751, தாவீதடிகளின் சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி 1970 ப. VI செ. சொ. பேகர முதலி 32, 33).

சொற்பிறப்பினைக் காணும்போது தொல் திராவிட முதல் மொழியை முதலாகக்கொண்டு ஏனைய-ஆசிய ஐரோப்பிய மொழிகள் விரிந்தன என நல்லூர் ஞானப் பிரகாசர் கூறுவர். அக் கருத்தை மேலும் சில அறிஞர்கள் பெருக்குவர்.[1] இந்நெறியில் தமிழ் மொழிக்கும் உலக

---

(1) சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி - முதலாம் பாகம், உ ற. கி. தாவீதடிகள், யாழ்ப்பாணம், 1970.

மொழிகள் பலவற்றிற்குமுள்ள உறவைக்காண முயல்வர். இதனால் ஒவ்வொரு சொற்பிறப்பகராதியின் நோக்கமும் ஒவ்வொரு வகையில் வளர்ந்துள்ளது என அறியமுடிகிறது. இவ்வாறு ஒப்பியலாய்வில் பல கருத்துக்கள் அவ்வப்போது கிடைக்கும் செய்திகளின் பெருக்கத்திற்கும் விளக்கத்திற்கும் ஏற்ப அமையும் என அறியலாம்.

கால்டுவெல் முதல் (1856) யூல் பிளாக்வரை (1946) தமிழில் சொற்பிறப்பகராதி தேவை என்பதைக் கூறிச் சென்றுள்ளனர். அத்தேவையை எண்ணி இவ்வகரமுதலி வெளிவந்துள்ளது. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணக் கல்வி ஓரளவே வளர்ந்துள்ளதால் இத்தகைய அகராதி களின் தோற்றம் வருங்கால ஆய்வாளர்க்குத் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை. இதன்தோற்றத்தால் மற்ற திராவிட மொழிகளில் சொற்பிறப்பகராதிகள் தோன்றவும் புதிய மாற்றங்கள் ஏற்படவும் இயலும்.

இத்தகைய அகராதிகளின் நிலைபேற்றை வருங்காலம் தான் உறுதிப்படுத்தும். ஈ முல்லர் (E. Muller) போன்ற வர்கள் தொகுத்த அகராதியில் காட்டிய கவனமும், சீரிய பார்வையும் அவற்றைக் கையாளும் மக்களின நம்பிக் கையைப் பெருக்கின. அத்தகைய முயற்சி இத்தகைய சொற்பிறப்பகராதிகளில் காணப்பெறவேண்டும.

இயன்றவரை எல்லாச் சொற்களின் வேர்களையும், பொருள் மாற்றத்தையும் தெளிவாகக் குறிக்க வேண்டும். பழைய நூலாட்சியும் இக்கால ஆட்சியும் காட்டல் நலம்.

தலைச் சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற் கொப்பான உறவு மொழிச் சொற்களையும அளிததால் ஒபபீட்டறிவு வளரும். அதற்கென அந்தந்த மொழிகளில் கிடைக்கும் நம்பிக்கைக்குரிய சிறந்த அகராதிகளைப் பயன் படுத்த வேண்டும.

பதிப்புப் பணியில் அகரநிரல் முறையைப் பின்பற்றின் அம்முறை தவறாமல் பிழையின்றிச் சொற்களை அச்சிடுதல் நன்மை பயக்கும். சொற்பொருள் விளக்கங்களும் நேரிய இனிய விளக்கங்களாக இருத்தல் வேண்டும். குறிப்பாக இக்கால எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தும்போது பல முறை சரிபார்த்தபின் தொகுத்தல் நலம் பதிவினகத்து அவை ஆளப்பெற்ற இடமும், களமும் தெளிவாகச் சுட்ட வேண்டும். பல பொருள் ஒரு சொற்களுக்கு வேர்ச்சொல் கூறும்போது வடிவொப்புடைச் சொற்களுக்கு எனத் தனித்தனி எண்களைச் சொல்லிறுதியில் அளிப்பது படிப்போர்க்குப் பெருந்துணையாகும்.

சொற்பிறப்பகராதிப் பணிக்கெனச் சில விதிகளை வரையறுத்த பின்னரே பல மொழிகளில் இத்தகைய அகராதிகள் அந்நெறி வழியே உருவாயின. தொல் வடிவச் சொல்லைத் தொகுத்தல், வரலாறு-நிலவியல்அடிப்படையில் கடன் வாங்கிய சொற்களைக் கணித்தல், ஒலி விதிகளின் அடிப்படையில் சொற்களை ஒப்பிடல். சொல் வருகை எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளுதல், வினை வடிவங் களைக் காணுதல், ஒப்படைச் சொற்களை உறவு மொழி அடிப்படையில் ஆய்தல் போன்றவை இந் நிலையில் உதவுவன.

இவ்வாறு, தொகுப்பியல் கலை அறிவியல் நெறியில் வளர்வதற்குப் பலவகை அகராதிகள் தமிழில் வெளிவர வேண்டும். இந்நெறியில் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலியும் வெளிவந்திருத்தல் வேண்டும் என எதிர் பார்ப்பது இயல்பே. பெரிதும் சென்னைப் பல்கலைக் கழக அகராதியின் நிழலிலேயே இது சென்றுள்ளது. எல்லாச் சொற்களுக்கும உரிய சொற்பிறப்பைக் காண முயல வில்லை. இக்காலத் தமிழின் பலதுறை வளர்ச்சி நிலையை-சிறப்பாக அறிவியல் வளர்ச்சியை-இது கருத்தில் கொள்ள வில்லை. சொற்பிறப்பியலுக்குரிய விதிகளையும் வகுத்துக் கொள்ளவில்லை. இவை அமைந்திருப்பின் இதன் பெருமை மேலும் உயர்ந்திருக்கும். ○

# நூலாரம்


| | |
|---|---|
| அரவிந்தன் மு. வை. | உரையாசிரியர்கள், சிதம்பரம், மணிவாசகர் நூலகம், 1968 |
| அருணாசலம் மு. | தமிழிலக்கிய வரலாறு, பதினோராம் நூற்றாண்டு, திருச்சிற்றம் பலம், காந்தி வித்தியாலயம், 1971 |
| | தமிழிலக்கிய வரலாறு, பன்னிரண்டாம் நூற்றாண்டு II பாகம், திருச்சிற்றம்பலம், காந்தி வித்தியாலயம், 1973 |
| ஆபிரகாம் பண்டிதர் மு. | கருணாமிர்தசாகரம் என்னும் இசைத் தமிழ் நூல், தஞ்சாவூர் 1917 |
| இளங்கோவடிகள் | சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லார் உரையும். உ. வே.சாமிநாதையர் பதிப்பு. சென்னை, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 1978 |
| | சிலப்பதிகாரம், ந. மு. வேங்கடசாமி நாட்டார் உரை, சென்னை, தி. தெ. சை. நூல் கழகம், 1959 |
| சண்முகம் பிள்ளை மு. | நிகண்டு சொற்கோவை, தெய்வப்பெயர்,மதுரை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 1982 |
| சுந்தர சண்முகனார் | தமிழ் அகராதிக்கலை, புதுவை, பைந்தமிழ்ப் பதிப்பகம், 1965 |
| சுப்பிரமணியன் ச. வே. | அடியார்க்கு நல்லார் உரைத்திறன், சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், 1976 |

தேவநேயப்பாவணர் — செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் பேரகர முதலி, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1985

தொல்காப்பியர் — தொல்காப்பியம், சொல்லதிகாரம் சேனாவரையம், சென்னை, தி. தெ. சை. நூல் கழகம் 1956

தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணம் சென்னை, தி. தெ. சை. நூல். கழகம், 1961

வீராசாமி தா. வே.. — பெரிய புராணச் சிறப்புப் பெயரகராதி, தஞ்சாவூர், தமிழ்ப்பல் கலைக் கழகம், 1986

வீராசாமி தா. வே. — (தொகுப்பு) அகராதிக் கலைக் கருத்தரங்குத் தாள்கள், தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழகம். 1985

(முதன்மைப் பதிப்பாசிரியர்) பெருஞ் சொல்லகராதி, தொகுதி I தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழகம் 1988

வையாபுரிப் பிள்ளை எஸ் — இலக்கிய மணி மாலை, சென்னை, தமிழ்பபுத்தகாலயம், 1957

ஜெய தேவன் — தமிழ் அகராதியியல், சென்னை, அன்பு நிலையம், 1977

தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, சென்னை, வாழ்வியற் களஞ்சியம்- தொகுதி I தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம், 1986

Borko and Bernie, C. L., **Indexing : Concepts and Methods,** New York, Academic Press, 1978

Collins, R. L., **A History of Foreign Language Dictionaries,** London WCI, Andre Deutsch, 1982

Cruse, D.A., **Lexical Semantics,** Cambridge University Press, 1986.

Courie Anthony, **The Dictionary and the Language Learner,** Verlag Tubinger, Mase Niemeyer, 1987

Doroszeuskiwitolov, **Elements of Lexicography and Semantics,** The Hague, Mouton, 1973

Dubois, J, **Models of the dictionary : Evolution in dictianary design,** Applied Linguistics 2, 3, 236-249, 1984

Hartman, R.R.K. **Dictionaries and Their Users,** Exeter University, 1979

**Lexicography : Princi-peles, and practices** London, Academy Press Inc, 1983.

Houn holder and Sdporta (Eds) **Problems in Lexicography,** Bloomington, Indiana University Press, 1962

Johnson, S., **The Plan of a Dictionary of the English-Language,** Menston, Scholar Press, 1970

Katre S. M., **Lexicography,** Annamalai University, Annamalai nagar, 1965

Lemmens Mariel, **Learners' Dictionaries,** Tublinger, Masc Niemeyer, 1986

Misra B. G., (Ed), **Lexicography in India,** CIIL, Mysore 1982

Murray. KME·, **Caught in the Web of Words, James A. H. Murray and the oxford English Dictionary,** New Haven, connectiant Yale University Press, 1977

Quemada, B., Lexicology and LEXICO-GRAPHY In Current Trends in Linguistics, Vol 9, pp 395-475, (TA Sebeok etal eds) The Hague, Moutan. 1972

Subramanian S. V., **Cilappatikaram-Descriptive Grammar with Index,** Nagar Coil, Jayakumari Stores, 1965

Subramoniam V. I, **Index of PuRananuRu,** University of Kerala, Trivendrum, 1962

Underbill. A, **Use your Dictionary**, Oxford University Press, Oxford, 1980

Vaiyapuri Pillai S, **History of Tamil Lexicography**, Tamil Lexicon Vol I, PP XXV—XILV, University of Madras, Madras. 1982

Veerasami V., **Grammar of Periyapuraanam with Index**, Unpublished Ph. D. Thesis, University of Kerala, *Trivandrum, 1966*

Zgusta Ladislav etal, **Manual of Lexicography**, The Hague, Mouton, 1971

(Ed)., **Theory and Method in Lexicography**, *Colombia*, Hombean Press Inc, 1980

# சொற் பொருளாரம்


அகரநிரல் வளர்ச்சி 31
அகராதி அமைப்பு 61-72
அகராதிக் கலைக் கூறுகள் 110
அகராதித் திட்டத்தில் சிக்கல்கள் 92-103
அகராதி நிகண்டு 28
அகராதிப் போர் 52
அகராதியியல் 75
அகராதியில் 'அசை' 77
அகராதியும் கலைக் களஞ்சியமும் 24
அகராதி வகைகள் 53
அகராதி வளர்ச்சி 39
அசைச் சொல் 117
அபிதான சிந்தாமணி 18
அமெரிக்க அகராதிகள் 50
அமெரிக்க அகராதி வளர்ச்சி 53
அரபுச்சொல் அகராதிகள் 46
அரும்பதவுரை 104
அரும் பொருள் விளக்க நிகண்டு 31
ஆக்சுபோர்டு ஆங்கில அகராதிகள் 52
ஆங்கில அகராதியின் தோற்றம் 48
ஆங்கிலம் தமிழ் அகராதிகள் 43
ஆசிரிய நிகண்டு 28
ஆபிரகாம் பண்டிதர் 105
இராட்லெர் அகராதி 36
இருமொழி அகராதிகள் 37
இலக்கணக் கூறு 62
இலக்கிய அகராதிகள் 20
இளங்கோவடிகள் 104-108
இளம்பூரணர் 12
உரையாசிரியர்கள் 104-105
உவமை உருவகம் 140
எழுது முறை 72
ஒருசொல் பல பொருள் 132
ஒருபொருட் பன்மொழி அகராதி 60
ஒலிப்பு முறை 62
கதிரைவேற் பிள்ளை 18, 38
கயாதரம் 27
கலைச்சொல் அகராதி 57
கால்டுவெல் 174
கிளைமொழி அகராதி 56
குழு அகராதி 41
குறிப்பீடு 63
கையகராதி 41
கைலாச நிகண்டு 28
கோபால கிருட்டிணமாசாரியார் 174
சதுரகராதியின் தோற்றம் 32
சாமிநாதையர் உ. வே. 19
சான்சன் அகராதி 50
சிந்தாமணி நிகண்டு 31
சிறப்பகராதி 56

சுப்பிரமணியன் எஸ். வீ. 91
சுப்பிரமணியன் வி. ஜ. 91
சுருக்க அகராதிகள் 37
சூடாமணி நிகண்டு 27
செந்தமிழ்ச் சொற் பிறப்பியல் பேரகர முதலி 152
சென்னைப் பல்கலைக் கழக அகராதி 39, 88
சொல் விளக்கக் கூறு 61
சொல் வைப்பு நிலை 63
சொற் கோவைப் புள்ளியியல் 73
சொற் பிறப்பு நிலை 72
சொற் பொருள் 134
தமிழ் ஆங்கில அகராதி 34-35,43
தமிழ் இலத்தீன் அகராதி 45
தமிழ் உருசிய அகராதி 45
தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரகராதித் திட்டம் 42
தமிழ் பிரெஞ்சு அகராதிகள் 44
தமிழ் போர்ச்சுக்கீசிய அகராதி 45
தமிழ் வடமொழி அகராதிகள் 46
தமிழில் ஒருமொழி அகராதிகள் 40
தமிழில் இருமொழி அகராதிகள் 42
தலைச் சொல் 61
தாவீதடிகள் 173
திவாகரம் 26
தேவநேயப்பாவாணர் 152
தொகுப்பியல் கலை 175
தொல்காப்பியம் 9, 11, 112
நாமதீப் நிகண்டு 29
நானார்த்த தீபிகை 31
நிகண்டின் தோற்றம் 25
நிகண்டுகள் 13-17
நிலைமொழிக் கூறு 64
நூல் அடைவுகள் 58
பட விளக்கம் 63
பண்டைய அகராதி வளர்ச்சி 47
பண்பாடு 138
பதிவுகளைத் தேர்ந்தெடுத்தல் 68
பரிமேலழகர் 12, 13
பலபொருள் 10
பலபொருள் ஒருசொல் நிகண்டுகள் 29
பலமொழி அகராதிகள் 21
பழமொழி அகராதி 60
பாடவேறுபாடு 114
பாபிரிசியன் 18
பாரதிதீபம் 28
பிங்கலம் 26
பிறமொழிச் சொற்கள் 129
புறநானூறு 78
பெயர் 119
பெயர் தெரியா நிகண்டுகள் 27
பெரியபுராணச் சிறப்புப் பெயரகராதி 144-150
பெருஞ் சொல்லகராதி 89

பேரகர முதலி 89
பொதிகை நிகண்டு 29
பொருண்மை 11
பொருள் கூறு நெறி 11
பொருள் வரையறை 62
பொருள் விளக்க
அகராதிகள் 59
பொருள் விளக்கம் 62
பொருள் வைப்பு நிலை 63
மதுரைத் தமிழ்
பேரகராதி 19
மரபுச் சேர்க்கை 59
முல்லர். ஈ., 174
மேற்கோள் 62
யூல் பிளாக் 174
வடமொழி - தமிழ்
அகராதிகள் 46, 47
வரலாற்று நிலை 54
வரலாற்றுப் பார்வை 51
விரிவு நிகண்டு 31
விளக்க நிலை 55
வின்சுலோ 18
வின்சுலோ அகராதி 36
வினை 127
வீரமாமுனிவர்
17, 32, 33, 86

# ஆசிரியரின் நூல்கள்

**படைப்பு**

பொன்குஞ்சு (நாடகம்-பரிசுபெற்றது 1970)

**கட்டுரை**

உழைப்பின் வெற்றி (1962)

வெற்றியின் இருமுகம் (1969)

ஆய்வுக் கதிர் (1975)

**திறனாய்வு**

★ பட்டறையிலே பாரதிதாசன் (1971)

தமிழ் நாடக வரலாற்றில் பாரதிதாசன் (1981)

பாரதி இலக்கியம்-ஒரு பார்வை (1982)

தமிழ்க் காப்பியக் கொள்கை (1988)

★ தமிழ் நாவல் முன்னோட்டம் (1973)

கல்கி அகிலன் படைப்புக் கலை (1977)

தமிழில் சமூக நாவல்கள் (1978)

தமிழ் நாவல் இயல் (பரிசுபெற்றது 1986)

**பதிப்பு**

தொல்காப்பியம் அகத்திணை இயல் உரைவளம் (1976)

தமிழ் இலக்கியக் கொள்கை (1975)

தந்திவனப் புராணம் (1981)

Cultural Hertiage of the Tamils (1982)

**அகராதி**

பெரிய புராணச் சிறப்புப் பெயரகராதி - ஊர்ப் பெயர்கள் (1986)

பெருஞ்சொல்லகராதி-தொகுதி 1 (1988) (முதன்மைப் பதிப்பாசிரியர்)

★ அகராதிக் கலை (1989)

**மொழி பெயர்ப்பு**

புத்த தேவ போஸ் (1982)

**மொழி பயிற்றல்**

தமிழ்ச்சுடர் (1970)

Tamil An Intensive Course (Co - Author 1973)